# காதல் வெண்புறா கையில் சேருமோ



விஜி பிரபு

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : காதல் பெண்புறா.... கையில் சேருமோ... |
| ஆசிரியர் | : விஜி பிரபு |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர் 2014 |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 304 |
| பைண்டிங் | : சாதா அட்டை பைண்டிங் |
| தாள் | : 11.6 வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து | : 12 புள்ளிகள் |
| நூல் வெளியிடுவோர் | : ஆர்.ஆர். நிலையம் 62/1, முத்து தெரு, இராயப்பேட்டை, சென்னை – 14 |

**விலை ரூ. 140.00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : பிரைம் பிரிண்ட் சிஸ்டம் போன் : 9080030030 |
| அச்சிட்டோர் | : உதயம் ஆப்செட் சென்னை |




# காதல் பெண்புறா...
# கையில் சேருமோ...

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| காதல் வரம் கேட்டேன் | 110.00 |
| வானம் விட்டு வா நிலவே | 115.00 |
| உனைத்தேன் என நான் நினைத்தேன் | 90.00 |
| என் நெஞ்சம் உன் தஞ்சம் | 80.00 |
| ஒரு நாள் ஒரு கனவு | 80.00 |
| பக்கம் வரத் துடித்தேன் | 85.00 |
| சிப்பியில் வந்த முத்து | 90.00 |
| உனக்கெனவே... உலகினிலே... பிறந்தவளே! | 90.00 |
| உயிரில் இணையும் தருணம் | 90.00 |
| கடலில் கலந்த மழைத்துளி | 90.00 |
| காத்திருந்தேன்... கண்மணியே | 80.00 |
| மயக்கம் கொண்டேன் தோழி | 110.00 |
| என்னவளே எனதுயிரே | 110.00 |
| சுவாசமாய் நின்றவளே | 110.00 |
| உனதுறவில் நான் கலந்தேன் | 115.00 |
| மயக்கம் பாதி தயக்கம் மீது | 115.00 |
| உனைச்சேர... உயிர் சுமந்தேன் | 130.00 |



# காதல் பெண்புறா... கையில் சேருமோ...

1

"வந்தாள் மகாலட்சுமியே....
என் வீட்டில் என்றும்
அவள் ஆட்சியே......"

பெங்களூரின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் அந்த பெரிய பங்களாவின் ஹாலில் இருந்த ஸ்பீக்கரில் அதிர்ந்த பாடல்..... அந்த வீட்டின் கல்யாணக் களையை அதிகரித்துக் காட்ட.... உறவினர்களும் நண்பர்களும் ஒருவருடன் ஒருவர் நட்பும் பாசமுமாக உரையாடிக் கொண்டிருக்க.... அத்தனை சந்தடிகளையும் கடந்து சென்று.... மாடியில் இருந்த அந்த ஆடம்பர அறைக்குள் நுழைந்த வாசுதேவனின் கரம் மெதுவாக அறையின் கதவைச் சத்தமின்றித் தாளிட்டது.

இதமான மல்லிகையின் நறுமணம் அறையெங்கும் சூழ்ந்திருக்க...... கீழிருந்து எழுந்து வந்த சந்தடிகள் அனைத்தையும் அந்த அறையின் கதவு பாதுகாப்புடன் தடுத்து நிறுத்திவிட.... அறையின் பேரமைதி... வாசுதேவனை முழுமையாக தனக்குள் உள்வாங்கிக் கொண்டது.

"சம்யுக்தா....?"

புதிய சூழ்நிலை தந்த தடுமாற்றத்துடன்... அறைக்குள் வேகமாக தான் தேடிவந்த தன்னவளைத் தேடி கண்களை சுழற்றியபடியே வாசுதேவன் அழைக்க... அவனது அழைப்பிற்கான பதிலாக அந்த அறையை ஒட்டியிருந்த படுக்கையறைக்குள் இருந்து கலகலப்பான வளையோசை எழுந்தது.

வேகமாகப் படுக்கையறைக்குள் நுழைந்த வாசுதேவனின் வரவிற்காகக் காத்திருந்தவளைப் போல.... அவசரமாக படுக்கையில் இருந்து எழுந்து நின்ற சம்யுக்தாவைக் கண்ட வாசுதேவனின் முகத்தில்.... உவகையும் கர்வமும் ஒருசேரத் தோன்றியது.

வெண் பளிங்குச் சிலையாக.... தந்த நிற மேனியில் .... பச்சைப் பட்டு தவழ்ந்திருக்க... அதற்கு மேட்ச்சாக பச்சையும் வெள்ளையுமாக கற்கள் பதிக்கப்பட்ட நெத்திச்சுட்டி, வங்கி, வளையல்கள், அட்டிகை..... ஆரம்.... ஒட்டியாணம் என அனைத்து



நகைகளுமே சம்யுக்தாவின் அழகைப் பேரழகாக்கிக் கொண்டிருந்தது.

வேகமாக எழுந்து நின்றதினால் முன்புறமாக சரிந்திருந்த மல்லிகைக் கரங்களில்.... தன் முகத்தைப் புதைத்துக் கொள்ள வேண்டும் போல உள்ளே எழுந்த ஆவலை.... மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டவனாக... சம்யுக்தாவைப் பார்த்த வாசுதேவனின் மனக்கண்ணிற்குள்... சிறிது நேரத்திற்கு முன்பாக.... சம்யுக்தாவின் மென்மையான கரத்தைப் பற்றி... அவளது மென்மையான வெண்டைக்காய் விரலில் தான் நிச்சயதார்த்த மோதிரத்தை அணிந்து விட்ட காட்சி தோன்றி – இனி சம்யுக்தா அவனது சொந்தம் என்பதை அவனுக்குப் புரியவைத்தது.

"சம்யுக்தா...." வாசுதேவனின் அழைப்பில் இருந்த கிறக்கத்தைப் புரிந்து கொண்டவளாக..... நிமிர்ந்து பார்த்த சம்யுக்தாவின் விழிகளில் தெரிந்த ஈர பளபளப்பைக் கண்ட வாசுதேவனின் உள்ளம் துணுக்குற்றது.

'இவள்... அழுதிருக்கிறாளா....? ஆனால்.... எதற்காக....?' மனதிற்குள் கேட்டபடியே சம்யுக்தாவின் முகத்தில் கேள்வியாக நிலைத்த வாசுதேவனின் பார்வையை எதிர்கொள்ளத் தயங்கியவளாக தலையை குனிந்து கொண்டாள் சம்யுக்தா.

"சம்யுக்தா... நான் உன்னைத்தான் கூப்பிட்டேன்..." வாசுதேவனின் குரலில் இருந்த கிறக்கம் மறைந்தது. அழுத்தம் தோன்றியிருக்க – இனிமேலும் தயக்கம் கொள்வதில் அர்த்தமில்லை என்கிற எண்ணத்துடன் – ஒரு சிறிய பெருமூச்சுடன் தலை நிமிர்ந்தாள் சம்யுக்தா.

"என்னை... நீதான் இங்க வரச் சொன்னியா சம்யுக்தா?" வாசுதேவனின் பார்வை கூர்மையாக சம்யுக்தாவின் முகத்தில் படிந்தது.

"ம்ம்.... ஆமாம்...." முதன் முறையாக சம்யுக்தாவின் குரலைக் கேட்டு உள்ளே எழுந்த சிலிர்ப்பை அடக்கிக் கொண்டவனாக அவளைப் பார்த்தான் வாசுதேவன்.

"வரச் சொல்லிவிட்டு... இப்படி அமைதியாக இருந்தால் என்ன அர்த்தம்? என்னால இங்க ரொம்ப நேரத்துக்கு இருக்க முடியாது சம்யுக்தா. வந்திருக்கிற கெஸ்ட் எல்லாரையும் நாமதான நல்லபடியாக கவனிச்சாகணும்? நீ எதுக்காக வரச் சொன்னங்கறதை சீக்கிரமா சொல்லு..."

"நாமதான்...." வாசுதேவன் பரபரப்புடன் பேசிக்கொண்டிருக்க – அவன் உரிமையுடன் கூறிய அந்த ஒற்றைச் சொல் – தன் மனதைக் குதறிப் பதம் பார்ப்பதைப் போல் உணர்ந்தாள் சம்யுக்தா.

"நான்... வந்து... நான்... உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும். அதான் உங்களை வந்து...." சம்யுக்தா



– வார்த்தைகள் அனைத்தும் தொண்டைக் குழிக்குள் சிக்கிக் கொண்டதைப் போல தடுமாற.... இதமான சிரிப்புடன் சம்யுக்தாவைப் பார்த்தான் வாசுதேவன்.

"நீ என்கிட்ட எதைப்பத்தி வேண்டுமானாலும் தயக்கம் இல்லாம பேசலாம் சம்யுக்தா. உனக்கு என்ன வேண்டுமோ – அதையும் நீ தாராளமாகக் கேட்கலாம்."

வாசுதேவன் கூறியதைக் கேட்டு நிமிர்ந்த சம்யுக்தாவின் முகத்தில் இருந்த தடுமாற்றம் அதிகரிக்க – கண்கள் சுருங்க அவளைப் பார்த்தான் வாசுதேவன்.

"இல்லையில்ல.... எனக்கு.... நான்... நான் உங்ககிட்ட சொல்ல வந்ததே வேற விசயம்... அது.... வந்து....."

வாசுதேவன் பொறுமையிழந்தவனாக தன் இரண்டு கைகளையும் மார்புக்குக் குறுக்காக கட்டிக் கொண்டு... தன் ஆறடி உயரத்திற்கும் நன்றாக நிமிர்ந்து நிற்க.... சம்யுக்தா அவசரமாக தன்னைச் சமாளிக்க முயன்றபடி அவனை அண்ணாந்து பார்த்தாள்.

"நான்... நான்... எனக்கு இந்த... கல்.. கல்யாணத்தில் விருப்பம் இல்ல... அதனால.. நீங்க..."

"என்னது...!!! என்ன என்ன...?" வாசுதேவனின் நிதானம் அழிந்து போக... கோபத்தில் சிவந்த

கண்களுடன்... சம்யுத்தா கூறியதை நம்ப முடியாத வனாக அவளை உற்றுப் பார்த்த வாசுதேவனைக் கண்ட சம்யுக்தாவின் உடல் நடுக்கமெடுக்க... அவசரமாக இரண்டு எட்டு பின்னால் நகர்ந்து நின்று கொண்டாள் சம்யுக்தா.

"இந்...இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுங்கன்னு சொன்னேன்." சம்யுக்தா நடுங்கிய குரலில் கூற..... ஒரே எட்டில் அவளது அருகில் வந்து நின்ற வாசுதேவனின் கை அவளை தன்னருகில் இழுத்து நிற்கச் செய்தது.

"என்ன திண்ணக்கம் இருந்தால்... நல்லாப் பட்டும் பனாரசுமாக அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்து... ஊரறிய நான் போட்ட நிச்சயதார்த்த மோதிரத்தையும் தைரியமாக உன் கையில் போட்டுக் கிட்டு... இப்ப வந்து இப்படி ஒரு வார்த்தை சொல்லுவே...?" சம்யுக்தாவைப் பிடித்திருந்த வாசுதேவனின் கைப்பிடி இறுக.... சம்யுக்தா வேதனையுடன் முகம் சுளித்தாள்.

"எனக்கு உங்ககிட்ட இதைச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கலை. இப்பதான் அதுக்கான சந்தர்ப்பம் கிடைச்சது. தயவு செய்து இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்க... ப்ளீஸ்..."

"ஏய்ய்....." சம்யுக்தா கெஞ்சலாகக் கூறிக் கொண்டிருக்க.... கண்கள் சிவக்க சம்யுக்தாவின்



கழுத்தைப் பிடித்து இறுக்கிய வாசுதேவனின் பிடி... சம்யுக்தாவின் விழிகள் பிதுங்க மூச்சுத் திணறுவதைப் பார்க்க முடியாத தவிப்புடன் விலகியது.

"ச்சே...." வாசுதேவன் வெறுப்புடன் உதறித் தள்ள... அவன் தள்ளிய வேகத்தில் சற்றுத் தள்ளி இருந்த கட்டிலில் சென்று விழுந்த சம்யுக்தா... எழுந்து அமர சக்தியற்றவளாக... பயத்தினால் உடல் நடுங்க... மெதுவாக எழுந்து அமர்ந்தாள்.

வேக வேக்மாக வெளிப்பட்ட கோப மூச்சுடன்... உடல் இறுக.... சம்யுக்தாவின் முன் வந்து நின்ற வாசுதேவனின் பார்வை அழுத்தமாக சம்யுக்தாவின் மீது படிந்தது.

அவனது பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாதவளாக.... முகமெல்லாம் வேர்க்க... உடல் வெடவெடக்க அமர்ந்திருந்தவளின் தோற்றம் வாசுதேவனின் உள்ளத்தைச் சுட்டெரிக்க... வாசுதேவனின் கைமுஷ்டி இறுகி கோபத்துடன் கட்டிலில் இறங்கியது.

சம்யுக்தா.... மேலும் உடல் பதறியவளாக எழுந்து நிற்க.... வாசுதேவனின் கண்கள் கேள்வியாக சம்யுக்தாவின் முகத்தில் நிலைத்தது.

"எதுக்காக இந்தக் கல்யாணத்தை வேண்டாம்னு சொல்றே? நீ... நீ... யாரையாவது காதலிக்கிறாயா...?"

"சேச்சே.... அப்படியெல்லாம் இல்ல...." வாசுதேவன் உள்ளம் மறுகக் கேட்ட கேள்வியை... அடுத்த நொடியிலேயே முகம் சுளிக்க அருவெறுப்புடன் மறுத்தபடியே தலை நிமிர்ந்த சம்யுக்தாவைக் கண்ட வாசுதேவனின் மனதிற்குள் இனம்புரியாத நிம்மதி பரவியது.

அடுத்த நொடியிலேயே.... அவன் மனதிற்குள் பொங்கியெழுந்த சந்தேகம்... அந்த நிம்மதியை விரட்டியடிக்க.... சம்யுக்தாவை நிமிர்ந்து பார்த்த வாசுதேவனின் முகத்தில் தவிப்பு தோன்றியது.

"அப்படியில்லேன்னா.... உனக்கு.... என்னைப் பிடிக்கலையா...?"

"சீச்சீ... அதுவும் இல்ல...." சம்யுக்தா அதே இயல்புடன் வாசுதேவன் கேள்வியை மறுக்க.... இப்போது சம்யுக்தாவைப் பார்த்த வாசுதேவனின் பார்வையில் நிறைவு தெரிந்தது.

தன்னுடைய ஆண்மையின் கர்வமெல்லாம் உடைந்து நொறுங்கி தூள் தூளாகிவிட... அதுநாள் வரையிலும் அவன் பெற்ற வெற்றிகள் அனைத்துமே வாசுதேவனின் உள்ளத்திற்குள் மிகப் பெரும் கேள்விக் குறியாக எழுந்து நிற்க.... சர்வ அங்கமும் அடங்கியவனாக கேட்ட வாசுதேவனுக்கு....

தன்னுடைய பதில்... அவன் இழந்த அனைத்தையுமே அவனுக்கு மீட்டுக் கொடுத்திருப்



பதை உணராதவளாக.... முகத்தில் குழந்தைத் தனமான உண்மை நிறைந்திருக்க... வாசுதேவனை நிமிர்ந்து பார்த்த சம்யுக்தாவை... அந்த நொடி.... வாசுதேவன் தன் உயிருக்கும் மேலாக காதலிக்கத் தொடங்கிவிட்டான்.

வாசுதேவனின் காதல் - அவனது முகத்தில் மென்மையை படரச் செய்ய... தன்னை மீறிய புன் முறுவலுடன் சம்யுக்தாவைப் பார்த்த வாசுதேவனின் பார்வைக்கான பொருள் புரியாதவளாக.... கள்ளமற்ற முகத்துடன்... அவனது புன்னகை தனக்கு பெறும் ஆறுதல் அளிப்பதை போல நிம்மதி பெருமூச்சுடன் வாசுதேவனை நிமிர்ந்து பார்த்தாள் சம்யுக்தா.

## 2

அறையில் ஓடிக்கொண்டிருந்த ஏ.ஸியின் சன்னமான ரீங்காரத்தைத் தவிர அறைக்குள் சிறிது நேரம் பேரமைதி நிலவ அந்த அமைதியைக் குலைக்க விரும்புவளைப் போல வாசுதேவனை வேண்டுதலாக பார்த்தாள் சம்யுக்தா.

"நான் சொன்னது போல சொல்லி கல்யாணத்தை நிறுத்தி விடுவீங்களா?" சம்யுக்தா

தயக்கத்துடன் கேட்க நிதானமாக அவளை திரும்பிப் பார்த்த வாசுதேவனின் முகத்தில் உறுதி தெரிந்தது.

"நீ எதுக்காக இந்தக் கல்யாணத்தை நிறுத்தச் சொல்றேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" வாசுதேவனின் குரலில் தெரிகிற நாடகபாணித் தனமான விசமத்தை அறியாதவளாக தனக்குள் மூழ்கியவளாக அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

"நான் இந்த பெங்களூர் சிட்டியிலே பொறந்து வளர்ந்தவ சார். அதுவும் லிங்கா குரூப் ஆஃப் கம்பெனீஸ் எம்.டி. சுந்தரலிங்கத்தோட செல்ல டாட்டர் நான். என்னால இந்த லைஃப் ஸ்டைலை விட்டுட்டு உங்க ஊருக்கெல்லாம் வர முடியாது சார்." சம்யுக்தாவின் வார்த்தைகளில் பிடிவாதம் தெரிந்தது.

"அது ஏன் அப்படி? நாங்க எல்லாம் எங்க ஊரில் வாழலையா என்ன?"

"நீங்க இருப்பீங்க சார். உங்களுக்கு அது பழகியிருக்கலாம். என்னால அது முடியாது" உறுதியாக தலையசைத்தவளை புருவம் சுருங்க வெறுமையான முகத்துடன் ஏறிட்ட வாசுதேவனின் முகத்தில் சற்று நேரத்திற்கு மறைந்திருந்த கோபம் மறுபடியும் தோன்றியிருந்தது.

"இப்ப இவ்வளவு தெளிவாக பேசுகிறவள் இதையெல்லாம் நிச்சயதார்த்தத்துக்கு முன்னாலயே என்கிட்ட சொல்லியிருக்கலாமே? என்கிட்ட கூட



சொல்ல வேண்டாம். உங்க அப்பாகிட்டயாவது சொல்லி யிருக்கலாமில்ல?" வாசுதேவனின் குரலில் கோபம் தெரிய குற்ற உணர்வுடன் தலைகுனிந்து கொண்டாள் சம்யுக்தா.

"அதைத்தான் அப்பவே சொன்னேனே சார்? எனக்கு அதுக்கான சந்தர்ப்பம் கிடைக்கலைன்னு? எனக்கு உங்களோட போன் நம்பர் கூடத் தெரியாது சார். அப்புறம் அப்புறம் அப்பா" சம்யுக்தாவின் கண்களில் கண்ணீர் தோன்ற குனிந்து தன் ஒற்றை விரலால் கண்ணீரை நாசூக்காக துடைத்துக் கொண்டாள் சம்யுக்தா.

"அப்பா ஒரு ஹார்ட்பேஷண்ட் சார். இப்ப ஒரு மாசத்துக்கு முன்னாலதான். ஹார்ட் அட்டாக் வந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டு அப்புறமாக கொஞ்ச நாளாகத்தான் நார்மலாக இருக்கார். இந்த சூழ்நிலையில் என்னால் அப்பாகிட்ட போய் இதையெல்லாம் சொல்ல முடியாது."

"இப்ப நான் வேண்டாம்னு சொன்னால் மட்டும் உங்க அப்பாவால தாங்கிக்க முடியுமா?"

"அப்படியில்ல சார். நீங்க கல்யாணம் வேண்டாம்னு சொன்னாலும் கூட அப்பாவால தாங்கிக்க முடியாதுதான் சார். ஆனா அப்ப அப்பாவுக்கு சப்போர்ட்டாக நான் இருப்பேன் சார். என்னால அப்பாவோட வருத்தத்தை சரியாக்க முடியும் சார்."

"ஆனா என்னால இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியாது சம்யுக்தா."

தன் மனதின் ஆசையை வாசுதேவன் ஒப்புக் கொண்டு விட்ட மகிழ்வோடு பேசிக் கொண்டிருந்த சம்யுக்தா வாசுதேவனின் உறுதியான வார்த்தை களைக் கேட்டு அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

"ஏன் சார்? நான்தான் என் சிச்சுவேசனை சொன்னேனே சார்? அதுக்கப்புறமும் நீங்க இப்படிச் செய்யுறது சரியில்லை சார்.." சம்யுக்தா அதிர்ச்சி மாறாதவளாக கூறிக் கொண்டிருக்க தன் வலுவான வலது கரத்தை சம்யுக்தாவின் வாய்மீது வைத்து அவளது பேச்சை நிறுத்தினான் வாசுதேவன்.

"முதல்ல இப்படி வார்த்தைக்கு வார்த்தை சார் போடுறதை நிறுத்து. சரியா?" சம்யுக்தா விழிகள் விரிய பார்க்க, அவளது கன்னத்தில் தன் இதழ்களை லேசாக பதித்துவிட்டு எழுந்த வாசுதேவனின் முகத்தில் உறுதி தெரிந்தது.

"இனி எதையுமே மாத்த முடியாது சம்யுக்தா. இன்னும் ஒரே மாசத்துல நம்ம கல்யாணம் நிச்சயம் செஞ்சபடி நடக்கும். இதில் எந்த மாற்றமும் இல்ல."

"........"

"உனக்கு விருப்பம் இருக்கோ... இல்லையோ... ஊர் அறிய என் நிச்சயதார்த்த மோதிரத்தை நீ ஏத்துக்



கிட்டிருக்க... இனி அதை நாம ரெண்டுபேருமே மறுக்க முடியாது...."

"........"

"இனிமேல் என் ஊருதான் உன்னோட சொந்த ஊர். நீ இனிமேல்....பள்ளிகொண்டான் புரத்தோட மருமகள். அந்த ஊருக்குத் தகுந்த மாதிரி நீ மாற பழகிக்க... இல்லேன்னா... கல்யாணத்துக்கு பின்னால நான் உன்னை மாத்திடுறேன்..."

"........"

"அப்புறம்... இன்னொரு விசயம். ரொம்ப அறிவாளித்தனமாக நடந்துக்கிறதாக நினைச்சு மாமாகிட்ட அதுதான் உங்க அப்பாகிட்டப் போய் ஏதாவது தத்துப்பித்துன்னு உளறி வெச்சிராத. அவர் உடம்புக்கு உன்னால ஏதாவது வந்ததுன்னு தெரிந்தால்.... அப்புறம் மனுசனாக இருக்க மாட்டேன். தெரிஞ்சிதா...?"

"........"

முதன் முதலாக ஆணின் ஸ்பரிசத்தை உணர்ந்த திகைப்புடன் சம்யுக்தா அதிர்வுடன் அமர்ந்திருக்க... தன் எண்ணங்களை அழுத்தமாகக் கூறிவிட்டுத் திரும்பிய வாசுதேவன்... மறுபடியும் தன் அழுத்தமான முத்தத்தினை சம்யுக்தாவின் கன்னத்தில் பதித்துவிட்டு விலகிச் செல்ல பதைப்புடன் அவனை விலக்கித் தள்ளினாள் சம்யுக்தா.

"இனி நீ இதுக்கெல்லாம் பழகிக்கணும்பா சம்யுக்தா.... வரட்டுமா..." வாசுதேவன் கேலியாக சிரித்துவிட்டு வெளியேற.... சம்யுக்தா அதிர்வுடன் தன் கால்களைக் கட்டிக்கொண்டு... அதில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"இவனை...? இவனையா நம்பினேன்...? என் ஆசைகளை எல்லாம் இவனால் எப்படி இவ்வளவு அலட்சியமாக ஒதுக்க முடிந்தது...?" சம்யுக்தாவின் உள்ளம் கொதிப்புடன் அலைமோத... தன் மனதின் சோர்வுடன் பதில் தெரியாத மௌனத்தோடு அப்படியே அமர்ந்து விட்டாள் சம்யுக்தா.

கேலியாக கூறுவதைப் போல கூறிவிட்டு விலகினாலும் சம்யுக்தா இருந்த படுக்கை அறையை விட்டு வெளிவந்த வாசுதேவனின் முகத்தில் வேதனை நிறைந்தது.

'இதற்காகவா இப்படி ஒரு வாழ்க்கைக்காகவா நான் இத்தனை வருடங்களாக காத்திருந்தேன்? எத்தனையெத்தனையோ ஆசைக் கனவுகளை மனதிற்குள் சுமந்து வந்த என்னை இப்படி ஒரே நொடியில் ஏமாற்றி விட்டாளே...? இவளுக்கு... என் ஆசைகளும்....கனவுகளும் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லையா....?' மனதிற்குள் மண்டிய வெறுமையுடன்... ஒரு நொடி அமைதியாக நின்று தன்னை நிதானித்துக் கொண்டான் வாசுதேவன்.



'எது எப்படி இருந்தாலும்... இந்தக் கல்யாணத்துல எங்க ரெண்டு பேரோட குடும்ப கௌரவமும் அடங்கி இருக்கு. இவ நினைக்கிறதைப் போல இந்தக் கல்யாணம் நாங்க ரெண்டு பேர் மட்டும் பேசி முடிவெடுக்கிற விசயம் இல்ல....'

'இப்ப ஊர் கூடி... உறவு முறைகளை சாட்சியாக வெச்சு நடந்த நிச்சயதார்த்தத்துக்கான மரியாதையை நாங்க கொடுத்துதான் ஆகணும்...'

'இதனால... என் எதிர்கால வாழ்க்கையே கூட கேள்விக்குறியாக போகலாம். ஆனா இப்ப நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு வழிப் பாதையில பயணம் செய்யத் தொடங்கிட்டோம்... இனி இதில் இருந்து எங்களால பின் வாங்க முடியாது...'

வாசுதேவன் மனதிற்குள் அலைமோதும் உணர்வுகளோடு அறைக்கதவை திறந்து வெளியேற... அங்கிருந்து இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள்ளாக அவனது வரவிற்காகவே காத்திருப்பவரைப் போல முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்திருக்க கலவரத்துடன் நின்றிருந்த சம்யுக்தாவின் தந்தையான சுந்தரலிங்கத்தைப் பார்த்தவுடன் வாசுதேவனின் நடை தானாக அப்படியே நின்று விட்டது.

சுந்தரலிங்கத்தின் பார்வை அழுத்தமாக வாசுதேவனின் முகத்தில் கேள்வியாக நிலைத்து நின்றது.

"சம்யுக்தா என்ன சொன்னா மாப்பிள்ளை?" வாசுதேவனின் அந்தரங்கத்தை தன் கேள்வி பாதித்துவிடக்கூடுமோ.. என்கிறபடி அச்சத்துடன் கேட்பவரைப் போல தயக்கமாகக் கேட்ட சுந்தரலிங்கத்தை புரிந்து கொண்டவனாக சிரிப்புடன் தன் வருங்கால மாமனாரை ஏறிட்டான் வாசுதேவன்.

"ஒண்ணுமில்ல மாமா... என்கிட்ட கொஞ்சம் தனியாகப் பேசணும் சொன்னா.. அதான்" வாசுதேவன் கூறியதைக் கேட்டு அதை நம்ப இயலாத சந்தேகத்துடன் அவனை ஆராய்ச்சியாக பார்த்தார் சுந்தரலிங்கம்.

"அப்படி நினைச்சு வரச்சொல்லி இருந்தால் எனக்கும் அது சந்தோஷம் தான் மாப்பிள்ளை ஆனா..."

"நான் சொல்றதில் நம்பிக்கை இல்லையா மாமா? சம்யுக்தா என்னை அதுக்காகத்தான் வரச்சொல்லி இருந்தா, நீங்கதான் இதுவரைக்கும் அவகிட்ட என்னோட போன் நம்பரைக்கூட கொடுக்கலையாமே?" இயல்பாகக் கேட்க வாசுதேவனின் கண்களை ஊன்றிப் பார்த்த சுந்தரலிங்கத்தின் கண்களில் கண்ணீர் திரையிட்டது.

"சம்யுக்தா ஒரு குழந்தை மாதிரி மாப்பிள்ளை, அதுக்கு இன்னமும் உலகத்தோட குணம் தெரியல. ஒரு வகையில் என்னோட செல்லம் தான் அதை இப்படி வளர்த்திருக்கு. ஆனா என் பொண்ணு



விலைமதிப்பில்லாத பொக்கிஷம் மாப்பிள்ளை, அதை என் உயிர் இருக்கும் போதே அதோட அருமை தெரிஞ்ச உங்கள மாதிரி ஒருத்தர்கிட்ட ஒப்படைச் சுட்டேன்னா அதுக்கப்புறமாக நான் நிம்மதியாக கண் மூடிடுவேன் மாப்பிள்ளை..."

வாசுதேவன் உரிமையுடன் சுந்தரலிங்கத்தின் கரம்பற்றி ஆறுதலாக அழுத்தினான்.

"என்ன மாமா இது? சந்தோசமான நேரத்தில் இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்படலாமா? நீங்க நிம்மதியாக கல்யாண வேலைகளைப் பார்க்க ஆரம்பிங்க மாமா. அப்படியே முடிஞ்ச வரைக்கும் கல்யாணத் தேதியை கொஞ்சம் முன்னதாகவே குறிச்சிட்டீங்கன்னாக் கூட நல்லது தான்" வாசுதேவன் குறும்பாகக் கூறி விட்டு நகர நிம்மதியான நெஞ்சத்துடன் வாய்விட்டுச் சிரித்தார் சுந்தரலிங்கம்.

## 3

சுந்தரலிங்கத்துடன் சிரித்துப் பேசியபடியே மாடியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருக்கும் பேரனைக் கண்டு தன் அருகில் அமர்ந்து இருந்த மனைவி காமாட்சியிடம் அவர்கள் இருவரையும் கண்களால் குறும்பாக சுட்டிக்காட்டிச் சிரித்தார் ஞானசம்பந்தன்.

"காமாட்சி போகிற போக்கைப் பார்த்தால் உன் பேரன் கூடிய சீக்கிரத்திலேயே பெங்களூர்வாசியாகி விடுவான் போல இருக்கே....?"

"ம்கும்... வயசுதான் ஏறிக்கிட்டே போகுது. ஆனா... உங்க புத்திமட்டும் வளராம அப்படியே இருக்கு. பெரிய மனுசத்தனமாப் பேச எப்பதான் கத்துக்கப் போறிங்களோ போங்க..." காமாட்சி கடிந்து கொள்வதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாதவராகச் சிரித்தார் ஞானசம்பந்தம்.

"இப்ப நான் தப்பாக ஒண்ணும் சொல்லலை காமாட்சி. நம்ம பய வாயெல்லாம் பல்லாக மாமனார் கூட சிரிச்சுக்கிட்டு வர்ற சந்தோசத்தைப் பார்த்துத்தான் அப்படிச் சொன்னேன்..."

"ம்ம்... சிரிச்சால்தான் என்னவாம்? வாசு... இனிமேல் உங்க பேரன் மட்டும் இல்ல. சுந்தரலிங்கத்தோட மருமகனும் தான். அதுவும் அவனோட ஒரே மகளைக் கட்டிக்கப் போகிற மாப்பிள்ளை அவன். ஆண் வாரிசு இல்லாத சுந்தரத்துக்கு இனி என் பேரன் தான் மகனாகவும் இருந்து சுந்தரத்தைப் பார்த்துக்கணும்."

"அப்படி இல்ல காமாட்சி நான் என்ன சொல்ல..."

"அய்யா சாமி. நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். வாயை மூடிக்கிட்டு அமைதியாக



இருந்தாலே போதும்..." காமாட்சி முறைப்புடன் கூறியதைக் கேட்ட ஞானசம்பந்தம்... அதற்கு மேலும் பேசும் தைரியம் இல்லாதவராக தன் வாயை இறுக்கமாக மூடிக்கொண்டார்.

"கிளம்பலாமாப்பா லேட் ஆகிடுச்சு. இப்பக் கிளம்பினால்தான் நாம ஊர் போய் சேருவதற்கு சரியாக இருக்கும். என்னம்மா நான் சொல்றது சரிதானா...?"

தாய் தந்தை இருவரையும் கேள்வியாக பார்த்த மகனுக்கு பதில் கூறுவதற்கான அனுமதியைத் தருமாறு மனைவியிடம் ஞானசம்பந்தம் பார்வை யாலேயே கெஞ்ச அவரது கெஞ்சுதலைக் கண்டு கொள்ளாதவளாக மகனைப் பார்த்தாள் காமாட்சி.

"ஏண்டாப்பா சத்யநாதா உங்க அப்பாவுக்குத் தான் மூளை வேலை செய்யாம இருக்குன்னா நீயும் ஏண்டா அவரைப் போலவே அசமந்தமா இருக்குற..?"

"அம்மா?" தான் ஏதேனும் தவறாக கேட்டு விட்டோமோ என்கிற சந்தேகத்துடன் புரியாமல் அன்னையைப் பார்த்தார் சத்யநாதன்.

"நாம என்ன ஹோட்டலுக்கு சாப்பிடவா வந்திருக்கோம்? சாப்பிட்டு முடிச்சவுடனேயே கிளம்பு கிளம்புன்னு வீட்டைப் பார்த்து ஓடறதுக்கு? நாம உன் புள்ளைக்கு நிச்சயதார்த்தம் பண்றதுக்காக வந்திருக்கோம்..."

"ஆமாம்மா நான் இப்ப தப்பா ஒண்ணும் சொல்லலையே?"

சிறிது நேரத்திற்கு முன்பாக தான் கேட்ட அதே கேள்வியையே தானும் காமாட்சியைப் பார்த்துக் கேட்ட மகனைப் பரிதாபமாகப் பார்த்தார் ஞானசம்பந்தம்.

'எல்லாம் நம்ம நேரம்டா மகனே' ஞானசம்பந்தம் மனதிற்குள் நொந்துகொள்ள அப்பாவியாக நின்றிருந்த மகனைப் பார்த்து பிறர் அறியாவண்ணம் தலையில் அடித்துக் கொண்டாள் காமாட்சி.

"அட மக்குப்பயலே அங்க பாரு. வந்திருக்கிற சொந்தக்காரங்க எல்லாரும் கிளம்பிக்கிட்டு இருக்காங்க. முதல்ல போய் நீயும் உன் பொண்டாட்டியும் ஒண்ணா சேர்ந்து நின்னு அவங்களை வழியனுப்பி வெக்கிற வழியைப் பாருங்க. ஆமா வேதவதி எங்கடா" மகனிடம் கேட்டபடியே மருமகளைத் தேடி கண்களைச் சுழற்றிய காமாட்சி தான் கூறியதைப் போலவே விருந்தினர்களை உடன் இருந்து வழியனுப்பிக் கொண்டிருந்த மருமகளைக் கண்டவுடன் நிறைவாக புன்னகைத்தாள்.

"என் மருமக கெட்டிக்காரிதான் அப்படி இல்லேன்னா உம் பொழப்பு நாறிப் போயிடும்டா மகனே. போ உம் பொண்டாட்டி பக்கத்துலயாவது போய் நில்லு" காமாட்சி மீண்டும் நொடித்துக்



கொள்ள அவசரமாக மனைவி வேதவதியிடம் ஓடினார் சத்யநாதன்.

"அத்தை, விசேஷம் நல்லபடியாக நடந்து முடிஞ்சதை நினைச்சு சந்தோசமாக இருக்கு. ஆனா விசேஷத்துல நான் ஏதாவது குறை வெச்சு இருந்தால் தயவு பண்ணி நீங்க அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது அத்தை" காமாட்சியிடம் பணிவாகக் கூறிய சுந்தரலிங்கத்தை வியப்புடன் பார்த்தான் வாசுதேவன்.

பெங்களூரின் முன்னணி தொழில் அதிபர்களில் ஒருவர் பல கோடிகளுக்கு அதிபதி. எத்தனையோ தொழில் வெற்றிகளை சர்வசாதாரணமாக தனதாக்கிக் கொண்ட திறமைசாலி என அத்தனை பெருமைகளையும் கொண்டிருந்த சுந்தரலிங்கம் தன்னுடைய அனைத்து அடையாளங்களையும் மறந்து மணமகனின் பாட்டியிடம் கைகூப்பிக் கெஞ்சுவதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனுக்கு...

சுந்தரலிங்கம் அவரது மகள் மீது கொண்டிருந்த பாசத்தின் அளவு புரிந்தது.

"குறை என்னப்பா குறை? நீ தனியாக இருந்து இவ்வளவு ஆடம்பரமாக நிச்சயதார்த்த ஏற்பாடு களைச் செஞ்சிருப்பதைப் பார்த்து மனசுக்கு நிறைவாக இருக்குய்யா சுந்தரம்."

"நல்லது அத்தை" சுந்தரலிங்கத்தின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

"அதுக்கும் மேலாக நாம என்ன அந்நியமா அசலா? சொந்தபந்தத்துக்குள்ள குறை நிறையைப் பார்க்கக் கூடாது சுந்தரம். எல்லாத்தையும் அனுசரிச்சிப் போனாதான் உறவுக்கும் அர்த்தம் இருக்கும்ப்பா" காமாட்சி அனுபவ அறிவுடன் கூற மனதார அவளது வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவராக புன்னகைத்தார் சுந்தரலிங்கம்.

"உங்களோட இந்தப் பெருந்தன்மையை தெரிஞ்சுதான் நான் என் பொண்ணு உங்க வீட்டுக்கு மருமகளாக வரணும்னு ஆசைப்பட்டேன் அத்தை. இனி என் பொண்ணைப் பத்தி எனக்குக் கவலையே இல்லத்தை."

"என் பேத்தி ராணிய்யா. அவளை நினைச்சு நீ எப்பவுமே கவலையே பட தேவையில்லை சுந்தரம். என் பேரன் அவளை தன் உயிருக்குள்ள வச்சுப் பார்த்துக்குவான்" காமாட்சி முழுமனதாகக் கூறியதைக் கேட்ட சுந்தரலிங்கம் நெகிழ்வுடன் அவளது கையை பிடித்துக் கொண்டார்.

"நீங்க சொன்னதே போதும் அத்தை. சம்யுக்தா இனி நல்லா இருக்கும் என்ற நம்பிக்கை வந்திடுச்சு."

"அட சரிப்பா சுந்தரம் திரும்பத் திரும்ப நீ அதையே பேசிக்கிட்டு இருக்காம வேற வேலை



இருந்தால் போய் அதைப் பாருப்பா" அதுவரை அமைதியாக இருந்த ஞானசம்பந்தம் தானும் அங்கிருப்பதைக் காட்டிக் கொள்ள விரும்புபவராகக் கூற காமாட்சியின் பார்வை நிதானமாகத் திரும்பி கணவனின் மீது நிலைத்தது.

மனைவியின் கண்களில் தெரிந்த எச்சரிக் கையைப் புரிந்து கொண்டவராக ஞானசம்பந்தம் உடனடியாக தன் வாயை மூடிக்கொள்ள அதைக் கண்ட வாசுதேவன் தனக்குள் பொங்கிய சிரிப்பை மிகுந்த பிரயாசையுடன் மறைத்துக் கொண்டான்.

"சரிப்பா சுந்தரம் உன் மாமா சொல்கிறதைப் போல இப்படியே பேசிக்கிட்டு இருந்தால் நேரமாகி விடும்ப்பா. அதனால நாங்க கிளம்பறோம். ஊருக்குப் போயிட்டு ஒரு நல்ல நாளாகப் பார்த்துச் சொல்றோம். அப்ப நீ எங்க சொல்றியோ அந்தக் கடையில முகூர்த்தப் புடவையை வாங்கிடலாம் சரிதானப்பா?"

"சரிதாங்க அத்தை உங்க விருப்பம் எப்படியோ அப்படியே செஞ்சிடலாம். எந்தக் கடையில புடவை எடுக்கணும்னு சொல்லுங்க நான் அங்க வந்திடறேன். உங்களுக்குத் தெரியாததா எனக்குத் தெரிஞ்சிடப் போகுது?" காமாட்சி கூறி முடிக்கும் முன்பாக பணிவுடன் பதில் கூறிய சுந்தரலிங்கத்தைக் கண்களில் மின்னிய பொறாமையுடன் பார்த்தார் ஞானசம்பந்தம்.

"டேய் வாசு இவன் என்னடா இப்படிப் போட்டுத் தாக்குறான்? உங்க பாட்டி மனசுக்குத் தகுந்தது மாதிரியே பேசுறானேடா? இந்த வித்தை எனக்கு வர மாட்டேங்குதேடா வாசு?"

"விடுங்க தாத்தா இத்தனை வருசமாக வராதது இனிமேலாகவா நமக்கு வந்திடப் போகுது? எல்லாம் விதின்னு நினைச்சு லூசுல விடுங்க" பொருமலாக பேசிக் கொண்டிருந்த ஞானசம்பந்தம் வாசுதேவனின் குரலில் இழையோடிய கேலியைப் புரிந்து கொண்ட அமைதியுடன் பேரனைத் திரும்பிப் பார்த்தான்.

"உன்கிட்டப் போய் சொன்னேன் பாரு என் புத்தியை செருப்பாலதான் அடிச்சுக்கணும்டா" ஞானசம்பந்தம் கடுப்பாகக் கூற "வேண்டாம் தாத்தா அப்புறம் செருப்பு எப்படிப் பிய்ஞ்சுச்சுன்னு பாட்டி கேக்குற கேள்விக்கு உங்களால பதில் சொல்ல முடியாது. அதனால அமைதியா இருங்க" வாசுதேவன் ஞானசம்பந்தத்தின் கடுப்பை ரசித்தபடியே கூறிச் சிரித்தான்.

அதற்குள்ளாக விருந்தினரை வழியனுப்பிவிட்டு தன் மனைவியோடு வந்த சத்யநாதன் வாசுதேவனின் முகத்தைக் கேள்வியாகப் பார்க்க தந்தையின் கேள்வியைப் புரிந்து கொண்டவனாக சம்மதமாக தலையசைத்தான் வாசுதேவன்.

"சரிங்க சம்பந்தி சம்யுக்தாவை வரச் சொன்னீங்கன்னா நாங்க எங்க மருமககிட்ட ஒரு



வார்த்தை சொல்லிவிட்டு கிளம்புவோம். என்ன வேதவதி நான் சொல்றது சரிதானே?" தான் தன் மனைவி சொல்லை மீறாதவர் என்பதை சுந்தர லிங்கத்துக்கு நிரூபிக்க விரும்பியவராகக் கேட்ட கணவரைப் பெருமையாக பார்த்துத் தலையசைத் தாள் வேதவதி.

"ஒரு நிமிசம் சம்பந்தி நான் போய் சம்யுக்தாவை கூட்டிக்கிட்டு வர்றேன்" சுந்தரலிங்கம் தன் உடல்நிலையை பொருட்படுத்தாதவராக மாடிப் படிகளில் தாவியேற சுந்தரலிங்கத்தைப் பார்த்த வாசுதேவனின் கண்களில் வேதனை நிறைந்தது.

"சம்யுக்தா இன்னமும் அழுதுகிட்டு இருக்காளோ என்னமோ? இவ்வளவு ஆசையாக ஓடுகிற இவர் தன் மகளோட அழுகையைப் பார்த்தால் என்ன நடக்கும்? இவரால் அதைத் தாங்கிக்க முடியுமா?"

வாசுதேவன் கவலையும் பதட்டமுமாகப் பார்த்துக் கொண்டிருக்க சற்று நேரத்திற்கு முன்பாக வாசுதேவனிடம் அழுத சுவடே முகத்தில் இல்லாதவளாக அமைதியான முகத்துடன் நிதானமான நடையுடன் தந்தையை பின்தொடர்ந்து படியிறங்கி வந்த சம்யுக்தாவின் கண்கள் கவனமாக வாசுதேவனைப் பார்ப்பதை மட்டும் தவிர்த்தது.

சம்யுக்தாவின் முயற்சியை புரிந்து கொண்ட பாவனையுடன் பிடிவாதமாக சம்யுக்தாவை மட்டுமே

பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் கண்கள் உறுதியுடன் பளபளத்துக் கொண்டிருந்தது.

## 4

**ஏ**.ஸியின் இதமான குளிர் காரினுள் நிறைந்திருக்க களைப்புடன் காரில் இருந்த அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க ஓட்டுனரின் அருகே இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த வாசுதேவனின் கண்கள் உறக்கத்தை மறந்தவையாக தன் முன் தெரிந்த இருளை வெறித்துக் கொண்டிருந்தது.

"ஏன் ஏன் இப்படியெல்லாம் நடந்தது?"

"இனி நான் செய்ய வேண்டியது என்ன?

அவள் கேட்டுக்கொண்டதைப் போல கல்யாணத்தை நிறுத்திவிட முடியுமா?"

"இல்லை நான் அவகிட்ட சொன்னதைப் போல இந்தக் கல்யாணம் நடந்துவிட்டால் அதன் பிறகு?"

"அதன் பிறகான எங்களது வாழ்க்கை எப்படி இருக்கும்?"

"மனதிற்குப் பிடிக்காத ஒருத்தியுடன் அவளைக் கட்டாயப் படுத்தி வாழ்வது ஒரு வாழ்வா? என்னால் அப்படி ஒரு வாழ்க்கையை வாழமுடியாது."



வாசுதேவன் தன்னை மீறி பெருமூச்சுடன் காரின் இருக்கையில் நன்றாக சாய்ந்து அமர்ந்து கொள்ள காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் பணிவுடன் வாசுதேவனைத் திரும்பிப் பார்த்தான்.

"நீங்க தூங்குங்க சார். நான் கவனமாக பார்த்து வண்டியை ஓட்டிக்கறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க சார்" டிரைவரின் குரலில் தெரிந்த அக்கறை வாசுதேவனின் நெஞ்சத்தைத் தொட புன்சிரிப்பால் டிரைவரைப் பார்த்து மறுப்பாக தலையசைத்தான் வாசுதேவன்.

"எனக்குத் தூக்கம் வரலை சார்லஸ். உங்களுக்கு டயர்டாக இருக்கும்போது சொல்லுங்க. நான் கொஞ்ச நேரம் டிரைவ் பண்றேன் சரியா?"

"சரிங்க சார்" சார்லஸ் சாலையில் கவனமாகி விட வாசுதேவனின் மனம் மீண்டும் தன் எண்ணங் களுக்குள் மூழ்கத் தொடங்கியது.

"நான் என்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பது தவறு. அப்புறம் அந்த சம்யுக்தாவிற்கும் எனக்கும் வித்தியாசம் இல்லாம போய்விடும்."

"இந்தக் கல்யாணத்தில் என் குடும்ப கவுரவமும் சந்தோசமும் மட்டும் அடங்க. இல்ல சம்யுக்தாவோட அப்பாவின் உயிரும்கூட இதில் தான் அடங்கி இருக்கு."

"இது ஏன் சம்யுக்தாவுக்கும் புரியல. என்னை வேண்டாம்னு சொல்றதுக்கு அவ சொன்ன காரணங்கள் உண்மைதானா?"

"சம்யுக்தா என்னை எதுக்காக இப்படி உயிரோட சித்ரவதை செய்யுற?"

வாசுதேவனின் விழிகள் தானாக வேதனையுடன் மூடிக்கொள்ள மூடிய இமைகளுக்குள் சம்யுக்தாவின் உருவம் வலம் வரத்தொடங்கியது.

பிறைபோன்ற அளவான நெற்றியுடன் வில்லாக வளைத்து இருந்த புருவங்களுக்குக் கீழே அடர்ந்த இமைகளுடன் நீண்ட கருவண்டுக் கண்கள் பட்டாம் பூச்சியாக பட படக்க சிவந்த மூக்கு சிறிது கூர்மையாக ஒளிவீசிக் கொண்டிருக்க அதற்குச் சற்றும் குறையாத அழகோடு அளவான இதழ்கள் இயற்கையாக சிவந்த நிறத்துடன் பளபளப்புடன் மின்னிக் கொண்டிருக்க தந்தக் கைகளை வாசுதேவனின் கரத்திடம் ஒப்படைத்து விட்டு தேவதையின் எழிலோடு நின்றிருந்த சம்யுக்தாவின் பேரழகு அந்த நிலையிலும் வாசுதேவனின் இதயத்தை மென்மையாக வருடிச் சென்றது.

சம்யுக்தாவின் விரலில் மோதிரத்தை அணிவித்து விட்டு பரிபூரண உரிமையுடன் சுதந்திரமாக சம்யுக்தாவை வருடிய வாசுதேவனின் பார்வையில் பதிந்துவிட்ட சம்யுக்தாவின் பருவ அழகு வாசுதேவனின் உணர்வுகளைத் தட்டியெழுப்ப,



வாசுதேவன் மூடியிருந்த இமைகளை அவசரமாகத் திறந்து தன் சுய உணர்வுக்கு வர துடிப்பவனாக சார்லஸை வலுக்கட்டாயமாக நகர்ந்து கொள்ளச் சொல்லிவிட்டு டிரைவர் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான்.

'இப்பவே இப்படின்னா கல்யாணத்துக்குப் பிறகு அவளை உரிமையோட பக்கத்துல வெச்சுக் கிட்டு என்னால கண்ட்ரோலாக இருக்க முடியுமா?'

'இருந்து தான் ஆகணும் வாசு. காலம் இப்படியே இருந்து விடாது. என்னிக்காவது ஒருநாள் உன் மனசுக்குள்ள இருக்கிற காதல் அவளோட மனசுக்குள்ளயும் வரும். அப்ப நீ முழு மனசோட உன் வாழ்க்கையை வாழத் தொடங்கலாம்.'

'ஆனால்.... அப்படி அவளோட மனசு மாறலேன்னா....? அவ இப்படியே என்மேல காதல் இல்லாமலேயே இருந்துவிட்டால்....?'

'அதற்காக? உன்னால் சம்யுக்தாவை விட்டுக் கொடுக்க முடியுமா? அவளை விட்டு இனிமேல் உன்னால பிரிய முடியுமா வாசு?'

'கண்டிப்பாக முடியாது. சம்யுக்தா என் உயிரில் பாதி. அவ எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் நான் அவளை முழுமனதாக காதலிக்கிறேன்.'

'என் சம்யுக்தாவை எந்தக் காரணத்திற்காகவும் என்னால் யாருக்கும் விட்டுத் தர முடியாது'

வாசுதேவனின் மனம் கூக்குரல் இட அவனது மனதின் வெறியை பிரதிபலிப்பதைப்போல ஸ்டியரிங் கைப் பிடித்திருந்த வாசுதேவனின் கைகள் இறுகியது.

'சேச்சே அப்படியெல்லாம் நான் யாரையும் காதலிக்கவில்லை' வாசுதேவனின் கேள்விக்கு அருவெறுப்புடன் முகம் சுளித்த சம்யுக்தாவின் உருவம் மனதிற்குள் தோன்ற வாசுதேவனின் மன இறுக்கம் சிறிது தளர்ந்தது.

'அவ மனசுக்குள்ள யாரும் இல்ல. ஆனா கூடிய சீக்கிரமே அவ என்னை ஏத்துக்குவா. எனக்கு நம்பிக்கை இருக்கு. அப்படியே அவ என்னை ஏத்துக்கா விட்டாலும் கூட அவ எனக்கு மனைவி யாக காலம் முழுவதும் என்கூட வாழ்ந்தாலே போதும். அவ என் பக்கத்துல இருக்கிற சந்தோசம் ஒண்ணே எனக்குப் போதும்.'

'உனக்குப் போதும் வாசு ஆனா அவளுக்கு?'

வாசுதேவனின் உள்மனம் எதிர்க்கேள்வி எழுப்ப வாசுதேவனின் முகம் பாறையாக இறுகியது.

'இது என் வாழ்க்கையை கெடுத்த சம்யுக்தா வுக்கு நான் கொடுக்கிற தண்டனையாக இருக்கட்டும். அவ வாழ்ந்தால் எனக்கு மனைவியாக நல்லபடியாக வாழணும். அப்படி இல்லேன்னாலும் என்னோட மனைவியாக என் அருகிலேயே அவ இருந்தாகணும். இதுதான் இனி அவளோட வாழ்க்கை.'



மனம் உறுதியுடன் கூறிக் கொண்டிருக்க வாசுதேவனின் எண்ணங்களுக்கு மாறாக இதயத்தில் பெரும் வலி எடுத்தது.

'என்ன மாதிரியான வாழ்க்கை இது? இதற்குப் பதிலாக நான் நரகத்துலகூட வாழ்ந்துடலாம்.'

'நரகத்திலேயோ அட வாசு!! இனி உன் வாழ்க்கையே நரகமாகத்தான் இருக்கப் போகுதுடா.'

வாசுதேவனின் இதயத்தில் இருந்த வேதனை பெரும் ஊற்றாக எடுத்து அவனது மனம் முழுவதும் நிறைந்திருக்க வாசுதேவன் சலிப்புடன் சாலையைப் பார்த்தான்.

"நான் வேணும்னா ஓட்டட்டுமா சார்?"

வாசுதேவனின் சலிப்பை வேறுவிதமாக புரிந்து கொண்ட சார்லஸ் அவசரமாகக் கேட்க அவனுக்கு பதில் கூறும் மனநிலையில் இல்லாத வாசுதேவனின் பார்வை சிந்தனையுடன் சாலையில் பதிந்திருந்தது.

"இன்னமும் எவ்வளவு தூரம் இருக்கு வாசு?" காமாட்சி களைப்புடன் கேட்க

"இன்னும் பாதிதூரம் இருக்குங்கம்மா" சார்லஸ் வாசுதேவனை முந்திக் கொண்டு பணிவுடன் காமாட்சிக்குப் பதிலளித்தான்.

"ஏம்பா டிரைவரு? நீ என்ன வெட்டிச் சம்பளத்துக்கா வேலையை பார்க்கிற? கல்யாண

மாப்பிள்ளையை வண்டி ஓட்ட விட்டுவிட்டு நீ ஜாலியா உட்காரந்து வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கியா?'' அரைத் தூக்கத்திலும் காமாட்சி கோபமாக கேட்ட விதத்தில் பதறிப் போய் காமாட்சியை பார்த்தான் சார்லஸ்.

"நான்தான் கம்பெல் பண்ணி அவரைக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கச் சொன்னேன் பாட்டி. ஒரே ஆளாக டிரைவ் பண்ணினாலும் கஷ்டம்தானே பாட்டி?'' வாசுதேவன் சார்லசிற்காக பரிந்துரைக்க

"அதுவும் சரிதான் கண்ணு. இப்படிப்பட்ட வெட்டிப் பயலுகளை வேலைக்கு வெச்சால் நாமளும் சேர்ந்து கஷ்டப்பட்டுதான் ஆகணும்.''

காமாட்சி விடாப்பிடியாக சார்லசை திட்டித் தீர்த்துவிட்டு தன் உறக்கத்தைத் தொடர அழாத குறையாக வாசுதேவனைப் பார்த்தான் சார்லஸ்.

"சார் பெரியம்மா இன்னும் ஒரு மாசத்துக்கு இதைச் சொல்லிக் காட்டுவாங்க சார்.''

"விடுங்க சார்லஸ். நமக்கு இதெல்லாம் பழக்கமான ஒண்ணு தான'' வாசுதேவன் அலட்சியமாகக் கூறிய விதத்தில் அதுவரையில் கண்மூடி அமைதியாக படுத்திருந்த வேதவதி வாய்விட்டுச் சிரித்தாள்.

"நீங்க இன்னும் தூங்கலையாம்மா?''



"நான் தூங்கிக்கிட்டுதான் இருந்தேன் தம்பி. அத்தை பேசுன பிறகுதான் முழிப்பு வந்துச்சு.''

"ம்கும் முழிப்பு வந்தவுடனேயே மாமியாரைக் கேலி பண்ணி சிரிப்பும் கூடவே வந்திருச்சாக்கும்? நல்ல மருமகதான் போ.''

மகனது கேள்விக்கு மெல்லிய குரலில் பதிலளித்து கொண்டிருந்த வேதவதி காமாட்சியின் வார்த்தைகளைக் கேட்டு மீண்டும் உறங்கத் தொடங்கிவிட்டவளைப் போல கண்மூடி சீட்டில் சாய்ந்து கொள்ள பொறுமலுடன் காமாட்சியை திரும்பிப் பார்த்தான் சார்லஸ்.

"ஒழுங்காக் கண்ணை முழிச்சு ரோட்டைப் பார்த்து கார் ஓட்ட துப்பு இல்லாம என் பேரனை வண்டியை ஓட்ட விட்டுக்கிட்டு இங்க திரும்பி லுக் விட்டுக்கிட்டு இருக்கியா? திரும்புடா முன்னால'' காமாட்சி போட்ட அதட்டலில் உடல் தூக்கி வாரிப் போடத் திரும்பிக் கொண்ட சார்லஸ் பிடிவாதமாக வாசுதேவனைப் பார்த்தான்.

"நீங்க தள்ளுங்க சார் நான் ஓட்டிக்கறேன்'' சார்லசின் நிலை புரிந்தவனாக காரை அவனிடம் ஒப்படைத்துவிட்டு தன் இருக்கைக்கு திரும்பிய வாசுதேவனின் மனதிற்குள் மீண்டும் வலம் வரத் தொடங்கினாள் சம்யுக்தா.

## 5

இரவு முழுவதும் விழித்திருந்ததினால் சிவந்த கண்களுடன் அறைக்கு வெளியே தெரிந்த எல்லை யற்ற வானத்தை திறந்திருந்த ஜன்னலின் வழியாக வெறித்தபடி நின்று கொண்டிருந்தாள் சம்யுக்தா.

அவளது மனம் வாசுதேவனின் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத திகைப்பில் ஆழ்ந்திருக்க தூரத்து வானத்தில் தன்னுடைய எதிர்காலத்தை தேட முற்படுபவளைப் போல கருநீல வானத்தை வெறித்துக் கொண்டிருந்த சம்யுக்தாவின் கண்களில் கலக்கம் தோன்றியது.

“இது எப்படி சாத்தியம்?” சம்யுக்தாவின் புருவம் கேள்வியாக சுளிக்க அவளது மனம் அவளுக் குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டது.

வாசுதேவனிடம் தன்னுடைய மறுப்பைத் தெரிவித்த மறுகனமே அவன் கல்யாணத்தை நிறுத்திவிடுவான் என மனக்கணக்குப் போட்டுக் கொண்டிருந்த சம்யுக்தாவின் உள்ளம் வாசுதேவன் அவ்வாறு செய்ய மறுத்துவிட்ட ஏமாற்றத்தில் துவண்டு விட்டிருந்தது.

“தன்னைத் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறாள் என்று தெரிந்த பிறகும்கூட ஒருவனால் அந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்க முடியுமா?”



அதுவரையிலும் தன் பார்வையை ஒருமுறை தவிர்த்துவிட்டாள் என்கிற காரணத்திற்காகக் கூட தன் காதலியை மறுத்துவிட்ட ஆண்மகன்களைப் பார்த்துப் பழக்கப்பட்டிருந்த சம்யுக்தாவினால் வாசுதேவனின் செயலை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அவளறிந்த உலகத்தில் அவள் வாழ்ந்து பழகி யிருந்த நகரத்தில் உறவும் பிரிவும் சர்வ சாதாரணமாகி உறவுகள் அனைத்துமே தங்களது வசதிக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளத்தான் என்கிற எண்ணத்திற்கு மாறியிருந்த சம்யுக்தாவினால்...

ஒரு நிச்சயதார்த்தம் நடந்துவிட்டதைக் காரணம் காட்டி வாசுதேவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

“டாமிட் ஒரு சாதாரண என்கேஜ்மெண்ட் நடந்துவிட்டால் நான் இவனுக்கு அடிமையாகி விட்டேன் என்று நினைத்துக் கொண்டானா?”

சம்யுக்தாவின் கைகள் வாசுதேவனின் அழுத்தமான பிடியினால் சிவந்திருந்த தன் கழுத்தை தடவிப் பார்த்தது.

“சரியான காட்டுமிராண்டி. பட்டிக்காட்டான் என்பது சரியாகத் தான் இருக்கிறது. ஒரு பெண்ணிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற இங்கீதம் கூட தெரியாதவனாக இருக்கிறான்.”

"போயும் போயும் எனக்கு மாப்பிள்ளையாக இவன்தான் அப்பாவுக்குக் கிடைச்சானா?"

ஒரு நொடி சம்யுக்தா நடந்த அனைத்தையும் தந்தையிடம் மறைக்காமல் சொல்லிவிடலாம் என்கிற முடிவுக்கு வந்தவள் பின் அடுத்த நொடியிலேயே தன் முடிவை மாற்றிக் கொண்டாள்.

"வேண்டாம். என் மேல் ஒரு துரும்பு பட்டால் கூட அப்பா துடிச்சுப் போயிடுவார். அப்படி இருக்கையில் எனக்காக என் வாழ்க்கைக்குத் துணையாக வருவார் என்கிற நம்பிக்கையில் அப்பா தேர்ந்தெடுத்திருக்கும் மாப்பிள்ளை தவறானவர் என்பது தெரிந்தால் அவரால் அதைத் தாங்கிக்க முடியாது."

"அதற்காக? உன்னால இப்படிப்பட்ட ஒருத்தன் கூட வாழ்நாள் எல்லாம் சந்தோசமாக வாழ்ந்துவிட முடியுமா?"

சம்யுக்தாவின் ஆழ்மனம் அவளிடம் எதிர்க் கேள்வி கேட்டு அந்தக் கேள்விக்கான விடை தெரியாதவளாக சம்யுக்தா மீண்டும் தொலை தூரத்து வானத்தை வெறிக்கத் தொடங்கினாள்.

"என் வாழ்க்கை என் மனம் என் விருப்பம் என் சந்தோசம்? இனிமேல் இந்த வார்த்தைகளுக்கு என்னிடம் எவ்விதமான அர்த்தமும் இல்லை. எல்லாம் முடிந்துவிட்டது. இனி....நான்...?"



சம்யுக்தாவிடம் இருந்து அவளையும் மீறிய பெருமூச்சு எழ அவள் மெதுவாகத் திரும்பி தன் அறையைச் சுற்றிலும் தன் பார்வையை சுழலவிட்டாள்.

"இந்த டிரெஸ்ஸிங் டேபிள் பெல்ஜீயத்தில் இருந்து வரவழைக்கப்பட்டதாம் சம்யுக்தா, பார்க்க ரொம்ப அழகா இருக்குல்ல? விலை கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் என் தேவதைப் பொண்ணோட அழகைக் காட்ட இந்தக் கண்ணாடி தான் பொருத்தமாக இருக்கும்னு உடனேயே வாங்கிட்டேன்டா உனக்கு இது பிடிச்சிருக்கா?" அறையின் ஒரு புற சுவர் முழுவதையும் மறைத்து நிறைத்திருந்த அந்தப் பெரிய டிரெஸ்ஸிங் டேபிளை வாங்கிய அன்று சுந்தரலிங்கம் பெருமையுடன் கேட்டது. சம்யுக்தாவின் காதுகளில் இப்போது எதிரொலித்தது.

'ஒரு சாதாரண முகம் பார்க்கிற கண்ணாடியை பிடித்திருக்கிறதான்னு ஆயிரம் தடவை என்கிட்டக் கேட்ட நீங்க எனக்குக் கல்யாணம் செய்துக்க விருப்பமா இல்லையான்னு கேக்குறதுக்கு எப்படிப்பா மறந்தீங்க?'

சம்யுக்தாவின் உள்ளம் தனக்குள் ஊமையாக அழ சம்யுக்தா விரக்தியுடன் மீண்டும் கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

"சம்யுக்தா இவர் பேரு வாசுதேவன். இவரைத் தான் நீ கல்யாணம் செய்துக்கப் போற."

"அப்பா...?"

வாசுதேவனுடைய புகைப்படத்தை முதன் முதலாக மகளிடம் கொடுத்துவிட்டு சுந்தரலிங்கம் திட்டவட்டமாகக் கூறியதும் அதைக் கேட்டு தான் அதிர்ந்து நின்றதும் அப்போதுதான் நிகழ்ந்ததைப் போல சம்யுக்தாவின் நினைவுக்குள் பசுமையாக நிலைத்திருந்தது.

"இப்படி திடீர்னு வந்து எனக்குக் கல்யாணம்னு சொன்னால் எப்படிப்பா? நான் இன்னும் மென்ட்டல்லி அதுக்கு பிரிப்பேர் ஆகலைப்பா." சம்யுக்தா திகைப்புடன் மறுக்க அதைக் கேட்ட சுந்தரலிங்கத் தின் முகத்தில் உறுதி தோன்றியது.

"நான் அவங்களுக்கு வாக்குக் கொடுத்திட்டேன் சம்யுக்தா. உன் அப்பா சொன்ன சொல்லை மீற மாட்டேன்னு உனக்குத் தெரியும்தானடா...?" தந்தையின் கேள்விக்கான விடையறியாதவளாக சம்யுக்தா திகைப்புடன் அமர்ந்திருக்க,

சுந்தரலிங்கத்தின் கை உயர்ந்து மகளது தலையை பாசத்துடன் தடவிக் கொடுத்தது.

"அப்பா உனக்கு நல்லதுதான் செய்வேன்னு உனக்கு நம்பிக்கை இல்லையா சம்யுக்தாக் கண்ணு?"



"அப்படி இல்லப்பா ஆனா நான்."

"வாசுதேவனை நீ கல்யாணம் செய்துக்கிட்டால் உன் வாழ்க்கை நல்லா இருக்கும் கண்ணு. அப்பாவுக்கு இதைவிட வேற என்ன நிம்மதி இருக்கு சொல்லு...?"

"அப்பா..."

"உனக்கு எது நல்லதுன்னு அப்பாவுக்கு நல்லாத் தெரியும் கண்ணு. இதுவரைக்கும் உனக்கு அப்பா எல்லாத்தையுமே பெஸ்ட்டானதாகத்தான் செலக்ட் பண்ணியிருக்கேன்டா இப்பவும் அப்படித் தான். வாசுதேவன் உனக்குப் பொருத்தமானவர்."

"ஆனாப்பா என்னால உங்களைப் பிரிஞ்சு இருக்க முடியாதுப்பா. நான் எப்பவுமே உங்ககூடவே இருக்கணும்னு ஆசைப்படறேன்ப்பா. அதுக்குத் தகுந்தமாதிரி நம்ம வீட்டோடவே இருக்கிறவராகப் பார்த்து செலக்ட் பண்ணுங்கப்பா."

"இல்லடாம்மா. அது சரிவராதுடா. எனக்கு மட்டும் உன்கூடவே கடைசிவரைக்கும் இருக்க ணும்ங்கிற ஆசை இல்லையா கண்ணு? ஆனா உன்னைக் கல்யாணம் செய்துக்கிறவர் சொத்துக் காக உன்னைக் கல்யாணம் செய்கிறவராக இருக்கக் கூடாதுன்னு நான் ஆசைப்படறேன்டா. வீட்டோட மாப்பிள்ளையாக இருக்கிறவர் நாளைக்கு?"

சுந்தரலிங்கத்தின் முகத்தில் கலக்கம் தோன்ற அவசரமாக தந்தையின் கரத்தை ஆறுதலாக பற்றிக் கொண்டாள் சம்யுக்தா.

"அப்படியில்லப்பா. எல்லோருமே தவறானவங் களாக இருக்கமாட்டாங்கப்பா. என் பிரண்ட்ஸ் எத்தனையோ பேரோட ஹஸ்பெண்ட்ஸ் எல்லாம் மாமனார் மாமியாரை தன் சொந்தத் தாய் தகப்பனாகத்தான் நினைக்கறாங்க."

சம்யுக்தா கூறக்கூற சுந்தரலிங்கத்தின் முகத்தில் படர்ந்த கலக்கம் மாறி தெளிவு தோன்றியது.

"வாசுதேவன் கூட அப்படிப்பட்டவர்தான் கண்ணு. நல்ல குணம் கொண்டவர். அன்பான குடும்பப் பின்னணி இருக்கிறவர். பையனும்கூட பார்க்கத் தங்கமாட்டமா கம்பீரமாக இருப்பார் சம்யுக்தா. உனக்கும் அவரைப் பிடிச்சரும்டா. நீ வேணும்னா பார்த்துக்கிட்டே இரு" சுந்தரலிங்கம் குறும்புடன் சிரித்ததை மனதில் தோன்றிய வெறுமையை மறைத்துக் கொண்டு அமைதியாக பார்த்தபடியே அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

"அதெல்லாம் சரிப்பா. ஆனா அவரோட ஊர்... அது அவரோட ஊராவது பெங்களூரா..., இல்ல?" சம்யுக்தாவின் முகத்தில் சந்தேகம் தெரிய அதனை



உறுதிப்படுத்துபவரைப் போல ஆமோதிப்பாக தலையாட்டியபடியே நிமிர்ந்தார் சுந்தரலிங்கம்.

"மாப்பிள்ளையோட ஊர் பள்ளிகொண்டான் புரம்மா. அது நம்ம ஊர்ப் பக்கமாக இருக்குடா."

"நம்ம ஊர் பெங்களூர்தானப்பா" சம்யுக்தாவின் குரலில் அவளையும் மீறிய எரிச்சல் தோன்றிவிட சுந்தரலிங்கம் மகளது உணர்வைப் புரிந்து கொண்டவராக சம்யுக்தாவை அழுத்தமாக பார்த்தார்.

"இல்லடா கண்ணு. இது நம்ம சொந்த ஊர் கிடையாது. நாம பொழைக்க வந்த ஊர் இது. இந்த ஊர் நமக்கு அத்தனைவசதி வாய்ப்புக்களையும் செல்வாக்கையும் வாரிவாரிக் கொடுத்திருக்குதான். ஆனா அதற்காக நாம நம்ம சொந்த மண்ணையும் மக்களையும் விட்டு விலகி வந்துர முடியாதுடா. இந்த ஊரில் எனக்குப் பின்னாடி நீ தனிமரமாக நின்னு விடக் கூடாது சம்புக்தா. உனக்குன்னு ஒரு குடும்பத்தை உன்னை ஆலமரமாக தாங்கி நிக்குற சொந்தங்களை வாழையடி வாழையாக நீ தழைச்சு வளரக்கூடிய வாழ்க்கையை உனக்காக உருவாக்கிக் கொடுத்தால் தான் என் மனம் நிம்மதியாகும் சம்யுக்தா. நீ என்னோட நிலையில் இருந்து யோசனை பண்ணி பாருடாம்மா ப்ளீஸ்டா கண்ணு" அதுவரையிலும் கம்பீரமாக கட்டளையிட்டே பார்த்துப் பழகியிருந்த

தந்தையின் கெஞ்சலைத் தாங்க முடியாத வேதனையுடன் அவரது முகத்தை சம்மதமாகப் பார்த்தாள் சம்யுக்தா.

## 6

அன்று மகளது சம்மதத்தைக் கண்டு மனநிறையுடன் சிரித்த தந்தையின் முகம் சம்யுக்தாவின் மனக் கண்ணில் தோன்றி மறைய சம்யுக்தாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவளது பட்டுக் கன்னங்களை நனைத்துக் கீழிறங்கியது.

"உங்க கணக்கு தப்பாகிவிட்டதுப்பா. நீங்க ஆசை ஆசையாக தேடிப்பிடிச்ச மாப்பிள்ளைக்கு உங்க மகளோட மனசைப் பத்திக் கவலை இல்லப்பா. அவரும்கூட மற்றவர்களைப் போல உங்க சொத்தின் மேல தான் ஆசையாக இருக்கிறார்ப்பா அதனாலதான் நான் சொன்னது அவர் காதிலேயே ஏறலை."

மனதிற்குள் மங்கியபடியே கட்டிலில் புரண்டு படுத்தவளின் கழுத்து வலி வாசுதேவனின் முரட்டுப் பிடியையும் கோபமான முகத்தையும் நினைவுக்குக் கொண்டு வர சம்யுக்தாவின் கண்ணீர் அதிகரித்தது.



'உங்க மகளை பூப்போல வளர்த்தீங்களேப்பா ஆனா இப்ப அதே பொண்ணை அவருக்குக் கொஞ்சம்கூட பொருத்தம் இல்லாத முரடன் ஒருத்தனோட கையில ஒப்படைச்சுட்டீங்களே. இனி நான் என்ன செய்யப் போகிறேன்?'

'எனக்காக ஒரு சின்ன செயின் வாங்கினால் கூட ஆயிரம் தடவை சோதிச்சுப் பார்த்து அழகு பார்த்து வாங்குவீங்களேப்பா? ஆனா இப்ப என் வாழ்க்கைத் துணையை மட்டும் சோதித்து பார்த்துத் தேர்ந்தெடுக்க மறந்துட்டீங்களேப்பா?'

சம்யுக்தாவின் உள்ளம் மீண்டும் மீண்டும் வாசுதேவனைப் பற்றிய சிந்தனைகளிலேயே நிலைத்திருக்க அதுவரையிலும் வேதனையையும் துக்கத்தையும் பற்றிப் பிறர்கூறி மட்டுமே அறிந்திருந்த சம்யுக்தா இன்று,

அதே வேதனையிலும் துக்கத்திலும் சிக்கித் தவிக்கும் தன் மனதை திசை திருப்பும் வழிவகை அறியாதவளாக அழுகையில் கரையத் தொடங்கினாள்.

சம்யுக்தாவின் நிலையறிந்து அவளது துக்கத்தைப் போக்க விரும்புவதைப் போல சம்யுக்தாவின் செல்போன் மின்னி ஒளிர ஆர்வமற்ற மனதுடன் செல்போனை கையில் எடுத்துப் பார்த்த சம்யுக்தா அதில் தெரிந்த எண்கள் அவளுக்கு

அறிமுகமற்றவைகளாக தோன்ற கேள்வியுடன் செல்போனை ஆன் செய்து தன் காதில் வைத்தாள்.

"சம்யுக்தா...?"

மறுமுனையில் கேட்ட குரல் உரிமையுடன் அழைப்பதைக் கேட்ட சம்யுக்தாவின் விழிகள் சுருங்க சிந்தனையுடன் முகம் சுளித்தாள் சம்யுக்தா

"ஹலோ... ஹலோ..."

சம்யுக்தா பதிலளிப்பதற்கு முன்பாக மீண்டும் மீண்டும் அழைத்த குரலில் கவனம் கலைந்தவளாக கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தாள் அவள்.

"ம்...சம்யுக்தா ஸ்பீக்கிங். நீங்க...? சம்யுக்தா வின் குரல் வெறுமையாக வெளிப்பட அவளது வார்த்தைகளைக் கேட்ட மறுமுனையில் சில நொடிகள் அமைதி நிலவியது.

"ஹலோ... யாருங்க பேசுறது...?"

"நான் வாசு பேசறேன் சம்யுக்தா... ஐ மீன்... ஐம் வாசுதேவன்..."

"யாரு...!?.... வாசு...? ஓ... நீங்களா...?"

பொறுமையற்றவளாக போனைக் காதில் வைத்திருந்த சம்யுக்தாவின் கையில் இருந்த செல்போன் அவளது அதிர்வால் கை நழுவிக் கட்டிலில் விழ வேகமாக மீண்டும் அதனைக் கையில் எடுத்துக் காதில் வைத்தாள் சம்யுக்தா.



"நீங்க...? என் நம்பர் உங்களுக்கு எப்படி தெரியும்...?"

சம்யுக்தாவிற்கே தான் கேட்கும் கேள்வி சிறுபிள்ளைத்தனமாகத் தெரிய மறுமுனையில் வாசுதேவன் மெல்லச் சிரித்தது சம்யுக்தாவின் செவியில் தெளிவாகக் கேட்டது.

"உன் நம்பர் எனக்குத் தெரியாதா சம்யுக்தா. இனி உன் சம்பந்தப்பட்ட எல்லாமே எனக்கு முக்கியமானதுதான்."

'ம்கும்... இந்த டயலாக்குக்கெல்லாம் குறைச்சல் இல்ல. அப்படி என் சம்பந்தப்பட்ட எல்லாம் இவனுக்கு முக்கியமானதாக இருந்தால் என் விருப்பப்படி இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டியதுதானே? அப்போ என் மனம் இவனுக்கு முக்கியம் இல்லையா...?' சம்யுக்தாவின் மனம் கோபமாக சிணுங்கியது.

"இப்ப எதுக்காக போன் பண்ணியிருக் கீங்க...?" மனம் நினைத்ததை தனக்குள் புதைத்துக் கொண்டவளாக சம்யுக்தா வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கேட்க அவளது கேள்வியை எதிர்பார்த்திராத வாசுதேவனின் சங்கடம் மறுமுனை யில் நிலவிய அவனது அமைதியிலேயே புரிந்தது.

"நான்... நான்.... உன்கிட்ட மன்னிப்புக் கேட்கணும்னு தோணிச்சு சம்யுக்தா. அதனால தான்..."

"மன்னிப்பா....? நீங்களா...? என்கிட்டயா....? எதுக்காக....?"

"சம்யுக்தா... உன் கோபம் எனக்குப் புரியுது. ஆனால் நீ நேத்து பேசினதை என்னால தாங்கிக்க முடியல சம்யுக்தா. அதனாலதான் நான் கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்துக்கிட்டேன்... ஸாரி..."

"........."

"ஆக்சுவலா... நான் இதுவரைக்கும் இப்படி யார்கிட்டயும் மன்னிப்பு கேட்டதே கிடையாது சம்யுக்தா. ஏன்னா... நான் எப்பவுமே என் மனசுக்கு சரின்னு படறதை மட்டும்தான் செய்வேன்..."

"......."

"நான் உன்கிட்ட நடந்துக்கிட்ட முறை தவறுன்னு பட்டுச்சு. அதனாலதான் உடனடியா உனக்குப் போன் பண்ணினேன்...."

"........"

"உன்னை இதுவரைக்கும் யாருமே இப்படி யெல்லாம் கோபமாக நடத்தியிருக்க மாட்டாங்க. என்னால உன் ஃபீலிங்சை புரிஞ்சுக்க முடியுது சம்யுக்தா. அதேபோல நீயும் என்னைப் புரிஞ்சுக் கிட்டா நல்லது..."

"எனக்கு யாரைப்பத்தியும் புரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்ல..." அதுவரையிலும் அமைதியாக



இருந்த சம்யுக்தா கோபத்துடன் பதிலளிக்க அதைக் கேட்ட வாசுதேவனின் கோபம் அவனது வார்த்தை களிலும் வெளிப்பட்டது.

"ரொம்ப நல்லது. இனி நானும் என்னைப் புரிந்து கொள்ளும்படி யார்கிட்டயும் கேட்க மாட்டேன்...."

"ம்ம்...கீப் இட் அப்...."

"ம்ம்...ஷ்யூர்....ஷ்யூர்...." வாசுதேவன் அழுத்தமாகக் கூறிவிட்டு போன் தொடர்பைத் துண்டித்துவிட சம்யுக்தா எரிச்சலுடன் போனை கட்டிலில் விட்டெறிந்தாள்.

'மன்னிப்புக் கேக்கறானாம்....மன்னிப்பு. யாருக்கு வேண்டும் இவனோட மன்னிப்பு...? இவனோட நாடகத்தை என்னால புரிஞ்சுக்க முடியாதுன்னு நினைச்சுட்டான் போல... இப்படி யெல்லாம் குழைஞ்சு பேசினால் நான் மனசு மாறி இவன்கிட்ட மயங்கிருவேன்னு நினைச்சுட்டான் போல...ச்சே....' சம்யுக்தா மெல்லத் தனக்குள் முணுமுணுத்தபடியே கோபமாக பற்களைக் கடித்துக் கொள்ள....

அதுவரையிலும் இருந்த அமைதியே போதும் என்பதைப் போல... மீண்டும் சம்யுக்தாவின் செல்போன் ஒலிக்கத் தொடங்கியது.

செல்லைக் கையில் எடுத்துப் பார்த்த சம்யுக்தா அதில் தெரிந்த வாசுதேவனின் நம்பரைப் பார்த்து விட்டு முகம் சுளிக்க போனைக் கீழே வைத்துவிட சம்யுக்தாவின் செல்போன் விடாமல் தொடர்ந்து ஒலிக்கத் துவங்கியது.

ஒரு சில நிமிடங்களுக்கு மேலாக போனின் அழைப்பு மணியை தாங்கிக் கொள்ள முடியாத எரிச்சலுடன் போனை ஆன் செய்து காதில் வைத்தாள் சம்யுக்தா.

“இப்ப திரும்பவும் எதுக்காக கால் பண்ணினீங்க....?”

“இப்ப நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்க....?” சம்யுக்தாவின் கோபம் நிறைந்த கேள்வியைக் கவனத்தில் கொள்ளாதவனாக நிதானமாக கேட்டான் வாசுதேவன்.

“நான் என்ன கேக்கறேன் நீங்க...?”

“நான் கேட்ட கேள்விக்கு முதல்ல பதில் சொல்லு சம்யுக்தா.”

“நான் எதுக்காக உங்களுக்கு பதில் சொல்லணும் சார்?”

“அப்ப சரி நான் இதே கேள்வியை என் மாமனாருக்கு போன் பண்ணிக் கேட்டுக்கறேன். அவர் வந்து உன்னைப் பார்த்துட்டு நீ என்ன



செஞ்சுக்கிட்டு இருக்கேன்னு என்கிட்ட சொல்லுவார் சரியா....?” கோபமும் எரிச்சலுமாக பேசிக் கொண்டிருந்த சம்யுக்தா வாசுதேவனின் அலட்சிய பதிலைக் கேட்டுப் பதறியவளாக அவசரமாக அவனைத் தடுத்தாள்.

“வெயிட்.... வெயிட் இப்ப நாம ரெண்டு பேரும்தான பேசிக்கிட்டு இருக்கோம்? இடையில அப்பாவை ஏன் இழுக்கறீங்க...?”

“எனக்கு மட்டும் வயசான அந்த மனுசரை இழுக்கணும்ம்னு ஆசையா என்ன? நீதான் என்னை அப்படி நடந்துக்க வைக்கிற...”

“ம்ம்...ஒகே ஒகே. இப்ப என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க?” வேறுவழியில்லாதவளாக சம்யுக்தா கேட்க மறுமுனையில் வாசுதேவன் இலகுவாக சிரித்தான்.

“இப்ப நீ என்ன செய்யுற....? அதை மட்டும் சொன்னால் போதும்....” வாசுதேவனின் பதில் அழுத்தமாக வந்தது.

“நான்தானே...? ரொம்ப சந்தோசமாக நிம்மதியாக என் எதிர்காலத்தைப் பத்தி கனவு கண்டுக்கிட்டே படுத்திருக்கேன். போதுமா?” சம்யுக்தாவின் குரல் தேய்ந்து... அழுகையாக உடைய சில நொடி அமைதியாக இருந்தான் வாசுதேவன்.

"இவ்வளவு நேரமாக அழுதுக்கிட்டு இருந்தியா சம்யுக்தா...?"

"வேற வழி...? என்னால இப்போதைக்கு அதுமட்டும் தானே முடியும்?" வாசுதேவனின் ஆறுதலான குரல் சம்யுக்தாவிற்கு ஆறுதல் தருவதற்குப் பதிலாக... அவளது வேதனையை அதிகரிக்க கோபத்துடன் வெடித்தாள் சம்யுக்தா...

"நீ இப்படித்தான் இருப்பேன்னு நினைச்சுத்தான் நான் திரும்பவும் கால் பண்ணினேன். இங்க பாரு சம்யுக்தா. நீ உன்னை நினைச்சு அதுவும் வேதனைப் படவும் நிறைய நேரம் இருக்கு. சொல்லப் போனா இனி வர்ற நம்ம எதிர்கால வாழ்க்கை பூராவுமே நம்ம ரெண்டு பேருக்குமே அப்படித்தான் இருக்கப் போகுதுன்னு எனக்கு நல்லாவே தெரியும்..."

"......"

"ஆனா அதையெல்லாம்... அப்புறமாக பார்த்துக்கலாம். இப்ப நீ எந்திரிச்சு... முகத்தை நல்லாக் கழுவித் துடைச்சிக்கிட்டு மாமாகிட்ட போ. அவர் இந்நேரம் உனக்காகக் காத்துக்கிட்டு இருப்பார் சம்யுக்தா. நாம நிம்மதியா இருக்க முடியாட்டியும் நம்மைப் பெத்தவங்களுக்காவது நம்மாள முடிஞ்ச நிம்மதியைக் கொடுக்கலாமே...?"

வாசுதேவனின் மீது மனமெல்லாம் வெறுப்பும் பரவியிருந்தாலும் கூட அவன் கூறிய வார்த்தை



களில் இருந்த உண்மையை சம்யுக்தாவின் மனம் ஒத்துக்கொள்ளவே செய்தது.

வாசுதேவன் கூறியதைப் போலவே தந்தை தனக்காகக் காத்திருப்பார் என்கிற எண்ணம் உள்ளூரத் தோன்ற இந்த எண்ணம் தனக்கு வராததை எண்ணித் தன்னையே நொந்து கொண்டவளாக அவசரமாக போனை கட் பண்ணிவிட்டு படுக்கை யில் இருந்து எழுந்தாள் சம்யுக்தா.

முகம் கழுவித் துடைத்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த சம்யுக்தாவிற்கு அழுகையினால் வீங்கித் தடித்திருந்த இமைகள் அவள் அழுததை தந்தைக்குக் காட்டிக் கொடுத்துவிடும் என்கிற பயம் தோன்ற கவனமாக சிறிதளவு முகப்பவுடரை கண் இமைகள் மீது லேசாக தடவிக் கொண்டாள் சம்யுக்தா.

## 7

"வாடாக் கண்ணு. குட் மார்னிங்..." சமையல் காரி கொண்டு வந்து வைத்திருந்த காபி பிளாஸ்க்கும் டம்ளரும் டீப்பாயில் அவள் வைத்துச் சென்றதைப் போல அப்படியே இருக்க...

மகளது வரவிற்காக மாடிப்படிகளையே பார்த்தபடி அமர்ந்திருந்த சுந்தரலிங்கம் சம்யுக்தாவின் வரவைக் கண்டு உற்சாகத்துடன் குரல் கொடுத்தார்.

“மார்னிங்ப்பா... நீங்க இன்னும் காபி குடிக்கலையாப்பா இவ்வளவு நேரம் ஆகிடுச்சே?” தந்தையிடம் சலுகையாக கோபித்தபடியே காபி பிளாஸ்க்கில் இருந்து காபியை டம்ளர்களில் ஊற்றப் போன சம்யுக்தாவைத் தடுத்து விட்டு...

பிளாஸ்க்கில் இருந்த காபியை தனக்கும் மகளுக்குமாக டம்ளர்களில் நிறைத்து அதில் ஒன்றை எடுத்து மகளிடம் கொடுத்தார் சுந்தரலிங்கம்.

“நீ வரட்டும்ன்னு வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தேண்டாக்கண்ணு. இன்னும் கொஞ்ச நாள் தானே அதுக்கப்புறம் நான் தனியாகத் தானே காபி குடிக்கணும்” இதைக் கூறிய சுந்தரலிங்கத்தின் முகத்தில் சோகத்திற்கு பதிலாக எல்லையற்ற மகிழ்வு நிறைந்திருந்தது.

“அப்பா இப்ப எதுக்காக அதைப்பத்தியெல்லாம் ஞாபகப் படுத்துறீங்க? இப்ப இந்த நிமிசம் நான் உங்க செல்லப் பொண்ணு உங்கக்கூட இருக்கேன். இதைமட்டும் நினைங்கப்பா” இலகுவாகக் கூறிய படியே கலங்கிய கண்களை தந்தையறியாமல் மறைத்துக் கொண்டாள் சம்யுக்தா.

“அதுவும் சரிதான்டா கண்ணு. இப்போதைக்கு நான் இதை மட்டும் நினைவுல வெச்சுக்கறேன். சரியா?” மகளிடம் சிரித்தபடியே தனக்கான காபியை எடுத்து உறிஞ்சத் தொடங்கிய சுந்தரலிங்கத்தின் கண்கள் யோசனையாக மகளது முகத்தில் நிலைத்தது.



“கண்ணெல்லாம் வீங்கி இருக்கேடா? அழுதியா கண்ணு?” சுந்தரலிங்கத்தின் குரல் கேள்வியாக வெளிப்பட வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள் சம்யுக்தா.

“நான் எதுக்காகப்பா அழப்போறேன்? நைட்டு தூங்குறதுக்கு லேட் ஆகிடுச்சுப்பா. காலையிலதான் தூக்கமே வந்தது. அதான் முகமெல்லாம் கொஞ்சம் வீக்கமாக தெரியுது.”

“ஓஓ...? இருக்கும் இருக்கும். எனக்கும்கூட நைட்டெல்லாம் சரியாக தூக்கமே இல்லடா கண்ணு. ஒரு பக்கம் நிம்மதியாக இருந்தாலும் இன்னொரு பக்கம் கொஞ்சம் படபடப்பாக இருக்குடா.”

உடல் நிலை சரியில்லாத தந்தையின் பதட்டம் அவரது ஆரோக்கியத்தை சீர்குலைத்துவிடுமே என்கிற கவலையுடன் தந்தையை கண்டிப்புடன் பார்த்தாள் சம்யுக்தா.

எதுக்காகப்பா பதட்டப்படணும்? நீங்க ரிலாக்ஸ்டாக இருங்கப்பா. அதுதான் உங்க ஹெல்த் கண்டிசனுக்கு நல்லது.” சம்யுக்தாவின் முகத்தில் கவலை படர மகளை சிரிப்புடன் பார்த்தார் சுந்தரலிங்கம்.

"பெண்ணைப் பெத்த தகப்பனுக்கு இந்த பதட்டம்கூட இல்லாம இருக்குமா கண்ணு? இதெல்லாம் சந்தோசப் பதட்டம்டா. இதனால ஹெல்த் கண்டிசன் இம்ப்ரூவ் தான் ஆகும்..."

தந்தையை அமைதியாக ஊன்றிக் கவனித்த சம்யுக்தாவிற்கு சுந்தரலிங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் இனம்புரியாத குதூகலம் நிறைந்திருப்பது நன்றாக புரிந்தது.

"ஏண்டா சம்யுக்தா மாப்பிள்ளைகிட்ட நேரில் பேசினியே அவரை உனக்குப் பிடிச்சிருக்கு தானே கண்ணு?"

சுந்தரலிங்கத்தின் வார்த்தைகளில் பரபரப்பும் பரிதவிப்பும் கலந்திருக்க ஏக்கமாக தன்னைப் பார்த்த தந்தையை மனதிற்குள் தோன்றிய பரிதாபத்துடன் பார்த்தாள் சம்யுக்தா.

"இப்ப வந்து இப்படிக் கேக்கறீங்களேப்பா? இந்தக் கேள்வியை நீங்க முதலிலேயே கேட்டிருந்தால் நான் என் மனசில இருக்கிறதை மறைக்காம சொல்லி இருப்பேனப்பா? இப்ப நான் என்ன பதில் சொல்லட்டும்? என் மனசில இருக்கிறதை சொன்னால் உங்களால அதைத் தாங்கிக்க முடியுமாப்பா?"

மகளது வாழ்க்கையைப் பற்றிய கனவுகளுடன் மனம் நிறைந்த நிம்மதியுடன் அதுவரையிலும் அமர்ந்திருந்த சுந்தரலிங்கத்தின் முகம் சம்யுக்தாவின்



அமைதியைக் கண்டு கேள்வியாக சுளிப்பதைப் பார்த்த சம்யுக்தா அவசரமாக தன் உணர்வுகளை மறைத்தபடியே தந்தையை சிரிப்புடன் பார்த்தாள்.

"நீங்க செலக்ட் பண்ணின மாப்பிள்ளை நல்லவராகத் தானே இருப்பார்ப்பா? உங்க செலக்சன் என்னிக்கு தப்பாகியிருக்கு?"

சம்யுக்தா தந்தை கேட்ட கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல் சமாளித்தபடியே சுந்தரலிங்கத்தின் மனம் விரும்பினபடியே கூற சம்யுக்தாவின் வார்த்தைகளைக் கேட்ட சுந்தரலிங்கத்தின் முகம் மலர்ந்தது.

"அப்போ மாப்பிள்ளை நல்ல குணசாலி தான்றதை நீயே ஒத்துக்கறியா கண்ணு? அப்பா செலக்சன் சரிதானே?"

சுந்தரலிங்கம் மகிழ்வுடன் கேட்க அமைதியாக சிரித்தபடியே தந்தையை பார்த்தபடி அமர்ந்திருந் தாள் சம்யுக்தா.

"எனக்கு முன்னாலேயே தெரியும்மா. இருந்தாலும் உன் வாயால ஒரு தடவை கேட்டு விட்டால் மனசுக்கு நிம்மதியாக இருக்கும்னு தோணிச்சுடா. அதனாலயே நேத்து நைட் என்னோட பாதி தூக்கம் போயிடுச்சு. இனிமேல் நான் நிம்மதியாக இருப்பேன்டா கண்ணு" சுந்தரலிங்கம் முகமெல்லாம் சிரிப்பாக எழுந்து வந்து சம்யுக்தாவை அன்புடன் அணைத்துக் கொள்ள

பொங்கி வந்த கண்ணீரை தனக்குள் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள் சம்யுக்தா.

"மாமா உனக்காக காத்திருப்பார் போ."

"நாம நிம்மதியாக இல்லாட்டியும் நம்மளைப் பெத்தவங்களுக்காவது நிம்மதியை கொடுக்கலாம்."

வாசுதேவனின் வார்த்தைகள் நினைவுக்கு வர அவனது வார்த்தைகளுக்கு பொருள் சம்யுக்தாவிற்கு முழுமையாக அந்த நொடியில் புரிந்தது.

எங்கோ இருக்கும் வாசுதேவனால் தன்னுடைய தந்தையின் மனநிலையை எவ்வாறு புரிந்து கொள்ள முடிந்தது? என்கிற கேள்வியை ஒதுக்கிவிட்டு தந்தையின் நிம்மதியான முகத்தை நிறைவுடன் பார்த்தாள் சம்யுக்தா.

"இது போதும். எனக்காகவே வாழ்ந்த என் அப்பாவுக்கு என்னால தர முடிகிற இந்த நிம்மதிக்காக நான் எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ள தயார்" சம்யுக்தா மனதிற்குள் மெல்லிய குரலில் உறுதியாக கூறிக் கொண்டாள்.

"சம்யுக்தாக் கண்ணு போய் குளிச்சுட்டு வந்து சாப்பிடு. சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக ரெஸ்ட் எடு. இன்னிக்கு ஒரு நாள்தான் உனக்கு ரெஸ்ட் சரியா?"

"ஏன்ப்பா? நாளைக்கு என்ன?" சம்யுக்தா புரியாமல் பார்க்க குதூகலமாக சிரித்தார் சுந்தரலிங்கம்.



"என்னடாம்மா இப்படிக் கேக்கற? கல்யாணத்துக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கு கண்ணு. புடவை நகை நட்டு சீர்வரிசை பாத்திரங்கள்னு வாங்கவேண்டிய அயிட்டம் நிறைய இருக்கேடா."

அதெல்லாம்தான் ஏற்கெனவே நிறைய இருக்கேப்பா? இப்ப புதிதாக வாங்கணுமா?"

கண்டிப்பாக வாங்கணும் கண்ணு. நடக்கப் போகிறது என்னோட இளவரசியோட கல்யாணம். இதில் எந்தக் குறையும் இருக்கக் கூடாதுடா. அதனால ஒவ்வொண்ணையும் நானே நேரில் போய் பார்த்துப் பார்த்து வாங்கணும். அதெல்லாம் உனக்கும் பிடிச்சிருக்குதான்னு நீ என்கூட வந்து பார்த்துச் சொல்லணும்."

சுந்தரலிங்கத்தின் கண்களில் ஆசை மின்ன அவர் கூறிக் கொண்டிருக்கும்போதே சம்யுக்தாவின் செல்போன் ஒலிக்க அழைப்பது யார் என்பதை செல்போனைப் பார்க்காமலேயே சம்யுக்தாவினால் புரிந்து கொள்ள முடிந்தது.

"யாருன்னு பாருடா" சுந்தரலிங்கத்தின் குரல் பரிந்துரைக்க வேறுவழியில்லாதவளாக செல்லை காதில் வைத்தாள் சம்யுக்தா.

"மாமா நல்லா இருக்காரா? நான் சொன்னதைப் போலவே உனக்காக வெயிட் பண்ணிக்கிட்டுதான்

இருந்தாரா?" மறுமுனையில் கேட்ட வாசுதேவனின் குரலில் அமைதி தெரிந்தது.

அந்த இனம் புரியாத அமைதி சம்யுக்தா விற்குள் ஆயிரமாயிரம் கேள்விகளை தோற்றுவித்தது.

"ம்ம்...ஆமா."

"கல்யாணத்தை நினைச்சு மாமா ரொம்ப எக்ஸைட் ஆவாரு சம்யுக்தா. நீ கூடவே இருந்து அவர் ரொம்ப எமோஷனல் ஆகிவிடாம பார்த்துக்க."

"ம்ம்....சரி.."

"அப்புறம் ஏதாவது பர்ச்சேஸ் பண்ணணும்னு சொன்னாருன்னா எனக்கு கால் பண்ணு. நான் அங்க வந்துடறேன். மாமாவை அலையவைக்காம நாம போய் எல்லாத்தையும் வாங்கிக்கலாம்."

'இப்பக்கூட எதுவுமே வேண்டாம்னு சொல்ல இவனுக்கு மனம் வரலியே? இதில் பெரிய நல்லவன் மாதிரி பேசுகிறான்' சம்யுக்தாவின் மனதிற்குள் வாசுதேவனைப் பற்றிய ஏளனம் தோன்றியது.

"என்னைப் பொறுத்தவரைக்கும் எதுவுமே வேண்டாம்தான் சம்யுக்தா. ஆனா இதைச் சொன்னால் மாமா கேக்க மாட்டாரு."

சம்யுக்தாவின் எண்ணவோட்டத்தைப் புரிந்து கொண்டவனாக வாசுதேவன் நிதானமாக கூற



அவனது வார்த்தைகளைக் கேட்ட சம்யுக்தாவின் உடல் தூக்கி வாரிப் போட்டது.

வாசுதேவனால் மட்டும் எப்படி அடுத்தவர் களின் மனநிலையை துல்லியமாக கணிக்க முடிகிறது என்கிற எண்ணத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட செல்போனை கீழே வைத்தாள் சம்யுக்தா.

## 8

"என்னங்கத்தை... நிச்சயதார்த்தம் நல்ல படியாக நடந்து முடிஞ்சிருச்சா?"

ஹாலில் அமர்ந்து கொண்டிருந்த கணவனுக் காக காபியோடு வந்த வேதவதி... வாசல்புறமாகக் கேட்ட குரலிற்குத் திரும்பிப் பார்த்து புன்னகைத்தாள்.

"வாம்மா சுந்தரி... உள்ளே வா" சத்யநாதனிடம் காபிக் கப்பைக் கொடுத்துவிட்டு சுந்தரியின் இடுப்பில் இருந்த குழந்தையை வாங்கக் கைநீட்டினாள் வேதவதி.

நீண்ட தூரப் பயணத்தினால் வீங்கியிருந்த கணவனின் கால்களுக்கு வலி நிவாரணி மருந்தைத் தடவிக் கொண்டிருந்த காமாட்சி கைகளில் இருந்த மருந்து டியூபைக் கீழே வைத்துவிட்டு முகம் சுருங்கச் சுந்தரியை நிமிர்ந்து பார்த்தாள்.

"உட்காரு சுந்தரி... காபி கொண்டு வரட்டுமா...?" உபசரிப்பாக கேட்ட வேதவதியிடம் மறுப்பாகத் தலையசைத்தபடியே அமர்ந்த சுந்தரியின் கண்கள் ஆராய்ச்சியாக வீட்டினைச் சுற்றிவந்தது.

"நான் கேட்டதுக்கு நீங்க பதிலே சொல்லலியே அத்தை? நிச்சயதார்த்தம் நல்லபடியாக நடந்துச்சா?"

"ஏம்மா....திரிபுர சுந்தரி...அதை நீயே நேரில் வந்து பார்த்து இருக்கலாமே? இப்ப வந்து உன் சின்ன மாமியார்கிட்ட இம்புட்டு அக்கறையாகக் கேக்குற?" அதற்கு மேலும் பொறுமையை கடைப்பிடிக்க முடியாதவளாக கேட்ட காமாட்சியை அலட்சியமாக திரும்பிப் பார்த்தாள் சுந்தரி.

"எனக்கு அவ்வளவு தூரத்திற்கு டிராவல் பண்ண முடியாது பாட்டி. பத்தாத குறைக்கு... இவன் வேற இருக்கானே" மடியில் இருந்த குழந்தையை கண்களால் சுட்டிக் காட்டிய சுந்தரியை பார்த்து முகத்தை நொடித்தாள் காமாட்சி.

"ஆடத் தெரியாதவன் தெரு கோணல்னு சொன்னானாம்... அது மாதிரித்தான் இருக்குடியம்மா நீ சொல்றது. என்னமோ போ" காமாட்சி மெதுவாக எழுந்து அங்கிருந்து செல்ல அவள் செல்லும் வரை அமைதியாக இருந்து விட்டு வேதவதியிடம் திரும்பினாள் சுந்தரி.



"சின்ன மாமா எங்க அத்தை வெளியில போயிருக்காங்களா..? பொண்ணு அவருக்குப் பொருத்தமான பொண்ணுதானா?"

"பொண்ணு தங்கச் சிலையாட்டம் இருப்பா சுந்தரி. உங்க சின்ன மாமாவோட சம்மதத்தைக் கேட்ட பின்னாலதான நிச்சயதார்த்தமே பண்ணினோம்...?"

"பணக்கார வீட்டுப் பொண்ணாச்சே அத்தை... குணமெல்லாம் நம்ம வீட்டுக்கு ஒத்துப் போகுமா...?"

"அதெல்லாம் நல்ல குணமான பொண்ணுதான் சுந்தரி. அழகுக்கேத்த அடக்கமான பொண்ணு..."

"எல்லாம் ஆரம்பத்துல நல்லாத்தான் இருப்பாங்க அத்தை... போகப் போகத்தான சுயரூப மெல்லாம் தெரிய வரும்..? என்னமோ... இங்க யெல்லாம் பொண்ணு கிடைக்காதமாதிரி பெங்களூரில் போய் பொண்ணு பார்த்து இருக்கீங்க..."

சுந்தரி அங்கலாய்ப்பாக பேசிக் கொண்டிருக்க அவளைப் புன்சிரிப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள் வேதவதி.

சுந்தரி வேதவதியின் அக்கா அஞ்சுகத்தின் ஒரே மருமகள். தன் மாமியார் வீட்டைப்போல பல மடங்கு செல்வாக்கான வேதவதியின் மகனுக்கு தன் தங்கையை மருமகளாக்கிவிட்டால் தன் பெற்றோர்

கவலையின்றி இருந்துவிடலாம் என்கிற எதிர்பார்ப் புடன் இருந்த சுந்தரிக்கு வேதவதி சம்யுக்தாவை தன் மருமகளாக தேர்வு செய்து விட்டிருந்ததில் சிறிது மனக்கசப்பு தோன்றியிருந்தது.

வெளிப்படையாகத் தன் மனவருத்தத்தை அவள் காட்டிக் கொள்ளாவிட்டாலும்கூட சுந்தரியின் வார்த்தைகளில் அவ்வப்போது தலை காட்டிய வெறுப்பு அவளது மனதினை மற்றவர்களுக்குத் தெளிவாகவே உணர்த்தியது.

"ஏம்மா...? பெங்களூரில் போய் பொண்ணு பார்க்கக் கூடாதா...? சுந்தரலிங்கமும் நம்ம ஊர்ப் பக்கத்துக்காரன்தாம்மா இப்ப பெங்களூரில் போய் செட்டில் ஆகி இருக்கான். அவ்வளவுதான்" அது வரையிலும் அமைதியாக இருந்த ஞானசம்பந்தம்.... காமாட்சி திரும்ப வருவதற்குள்ளாக சுந்தரியின் வாயை மூடவைத்து விட வேண்டும் என்கிற எண்ணத்துடன் அவசரமாகக் கூறினார்.

"அப்படி இல்ல தாத்தா. நம்ம பார்க்க வளர்ந்த பொண்ணுக்கூட காலப்போக்கில் எப்படியெல்லாமோ மாறிவிடுறாங்க இதுல நாம தூரத்துல போய்..."

"அம்மாடி திரிபுர சுந்தரி. அதையெல்லாம் நாங்க பார்த்துக்கறோம்மா... உனக்கு அந்தக் கவலை வேண்டாம். காலங்கார்த்தால இங்க வந்து உட்கார்ந்து நீ கதை பேசிக்கிட்டு இருக்க. அங்க



உங்க வீட்டுல என் பேரன் அதான் உன் புருசன் சமையல் பண்ணிக்கிட்டு இருக்கானே... இந்த மாதிரி கண்டிப்பாக எங்க வீட்டுக்கு வருகிற மகராசி யோட குணம் இருக்காது. அதனால நீ மனசைத் தேத்திக்கிட்டு வீட்டுப் பக்கம் கிளம்பிப் போ."

பட்டுக் கத்தரித்தாற் போல காமாட்சி இடைமறித்து கோபமாக கூற, அதைக்கேட்ட சுந்தரி முகம் கறுக்க தன் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

"இங்க பாரு வேதவதி இந்தப் பொண்ணுகிட்ட அளவோடு பேசுன்னு உன்கிட்ட எத்தனை தடவை சொல்லி இருக்கேன்? இப்பப் பாரு. நம்ம வீட்டுக்கு வரப்போகிற மருமகளைப்பத்தி நம்ம முன்னாடியே எவ்வளவு மட்டமாப் பேசிக்கிட்டு இருக்கான்னு...?" காமாட்சியின் வார்த்தைகளில் கண்டிப்பு தெரிந்தது.

"இல்லங்கத்தை. அக்காவோட முகத்துக்காகத் தான்..."

"உங்க அக்கா தங்கம்தான் வேதவதி. ஆனா ஒரு தகரத்தையில்ல மகனுக்காக கொண்டு வந்திருக்கா...? இப்படிப்பட்ட பொண்ணைப் போய் சாதுவான உங்க அக்கா மகனுக்கு கட்டி வெச்சிருக்காளே..?"

வேதவதி பெருமூச்சுடன் அமைதியாக வீட்டினுள் திரும்பிச் செல்ல காமாட்சி தானும் ஒரு

நெடிய பெருமூச்சுடன் கணவனின் அருகில் அமர்ந்தாள்.

"ஏண்டா சத்யநாதா? இங்க நடக்கிற எதுக்கும் உனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாததைப் போல உட்கார்ந்திருக்கியேடா...?"

அடுத்ததாக தாயின் கவனம் தன் மீது திரும்புவதை உணர்ந்த சத்யநாதன் அவசரமாக கையில் இருந்த காபிக் கோப்பையை கீழே வைத்தார்.

"அந்தப் பொண்ணுக்கு சரியானப் பதில் சொல்லத்தான் நீங்க இருக்கீங்களேம்மா? இதில நான் வேற எதுக்கும் பேசணும்னுதான் அமைதியாக இருந்துட்டேன்..."

"கெட்டிக்காரன் தான் போ... இப்ப எந்திரிச்சுப் போயி தோட்டம் துரவை சுத்திப் பார்க்கப் போறியா இல்ல அதுக்கும் நான் இருக்கேன்னு நினைச்சுக் கிட்டு இங்கேயே உட்கார்ந்திருக்கப் போறியா...?"

காமாட்சி கண்கள் சுருங்கக் கேட்க, விட்டால் போதும் என்கிற எண்ணத்துடன் அங்கிருந்து எழுந்து ஓடினார் சத்யநாதன்.

"ராத்திரி பூராவும் பிரயாணம் பண்ணிட்டு வந்ததுல கொஞ்சம் களைப்பாக இருந்திருக்கும் காமாட்சி. அவனைப் போய் இப்படி விரட்டுறியே....?"

"ம்கும் இந்த வயசுலயே சும்மா உட்கார்ந்து சொகம் கண்டுவிட்டால் அப்புறம் நம்ம வயசு



வரும்போது அக்கடான்னு மூலையில உட்கார்ந்திடத் தோணிடும்ங்க. அந்தக் காலத்துல நீங்க எப்பவாச்சும் இப்படி களைப்பாக உட்கார்ந்திருக்கீங்களா? அப்படி யெல்லாம் சுறுசுறுப்பாக இருந்ததுனாலதான் இப்பவும் உங்களால இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்க முடியுது."

பல வருடங்களுக்குப் பிறகு மனைவியின் வாயால் பாராட்டைக் கேட்ட மகிழ்வுடன் ஞானசம்பந்தம் காமாட்சியை ஆசையாகப் பார்க்க...

காமாட்சியின் முதிர்ந்த வயோதிக முகத்தில் வெட்கம் கலந்த புன்முறுவல் தோன்றியது.

"பிள்ளை இல்லாத வீட்டுல கிழவன் துள்ளிக்குதிக்கிற மாதிரி இப்பத்தான் பேரனுக்கு பொண்ணு பார்த்து நிச்சயம் பண்ணிட்டு வந்திருக்கும்போது நீங்க ஜெமினி கணேசன் பார்வை பார்த்துக்கிட்டு இருக்காம போய் நடக்க வேண்டிய வேலையைப் பாருங்க..."

வயோதிகத்திலும் மனைவியின் கண்களில் காதல் மின்னுவதைக் கண்டு ஆண்மையின் கர்வத்துடன் மனைவியை பார்வையால் வருடியபடியே எழுந்தார் ஞானசம்பந்தம்.

"என்ன தாத்தா? ரொமான்செல்லாம் பலமாக இருக்கு?" மனைவியை பார்த்தபடியே நடந்த ஞானசம்பந்தனின் அருகில் வந்து அவருக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லிய குரலில் கேட்டுச் சிரித்த

பேரனின் முதுகில் செல்லமாக தட்டினார் ஞான சம்பந்தம்.

"எம்புட்டோ வருசத்துக்கு அப்புறமாக இன்னிக்குத்தான் இந்தக் கிழவி கொஞ்சம் சிரிச்சுப் பேசியிருக்கா. அது பொறுக்கலையா உனக்கு?" இப்படி நந்தி மாதிரி குறுக்க வந்து நிக்குறியேடா வாசு? உனக்கே இது நியாயமாத் தெரியுதா..?" ஞான சம்பந்தனின் குரலில் ஏக்கம் தெரிய சிரிப்புடன் தாத்தாவின் தோளைக் கட்டிக் கொண்டான் வாசுதேவன்.

"சரி சரி தாத்தா. புலம்பாம இருங்க. நான் இதோ கிளம்பிட்டேன். நீங்க உங்க ரொமான்சை கண்ட்டினியூ பண்ணுங்க" வாசுதேவன் வேகமாக அங்கிருந்து சென்றுவிட எதிர்பார்ப்புடன் மனைவி இருந்த திசையில் திரும்பிய ஞானசம்பந்தனின் முகம் ஏமாற்றத்தில் சுருங்கியது.

"ஏண்டி சொக்கி இப்படித்தான் செடிக்கெல்லாம் தண்ணி காட்டாம காயவிடுவியா? நான் ஒரு நாள் வீட்லே இல்லாட்டி உங்க அத்தனை பேருக்கும் சோம்பேறித்தனம் அதிகமாகிவிடும்டி. அந்த பைப்புத் தண்ணியை திறந்துவிடு.."

முந்தானைச் சேலையை இடுப்பில் சொருகிக் கொண்டே வேலைக்காரியை அதட்டிக் கொண்டிருந்த காமாட்சி கணவன் தன்னையே பார்த்தபடியே இருந்த



இடத்தை விட்டு அசையாமல் நிற்பதைப் பார்த்துவிட்டு கேள்வியாக கண்களை சுருக்கினாள்.

"நீங்க எதுக்காக இப்படி பட்டிக்காட்டான் மிட்டாய் கடையை பார்த்த மாதிரி பேந்தப்பேந்த முழிச்சுக்கிட்டு நிக்கறீங்க? நல்ல கதையாப் போச்சு போ..."

காமாட்சி முகத்தை நொடித்து தோள் பட்டையில் இடித்துக் கொண்டு அதற்கு மேலும் அங்கிருந்தால் தன் நிலை எனனவாகும் என்பதை நன்றாக அறிந்தவராக அவசரமாக வாசல்புறமாக நடையைக் கட்டினார் ஞானசம்பந்தம்.

## 9

தூக்கத்தினால் கலைந்திருந்த தலைமுடி விரிந்து இடைவரை ஒரே சீராகப் படர்ந்திருக்க தோளில் போட்டிருந்த பூத்தூவாலையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அறையைவிட்டு வெளிவந்து மாடிப்படிகளில் இறங்கத் தொடங்கிய சம்யுக்தாவின் கண்கள் தந்தையைத் தேடி அவரைக் காணாத ஏமாற்றத்தில் கேள்வியாக சுருங்கியது.

வழக்கமாக மகளது வரவிற்காக பாசமான புன்னகையுடன் ஹால் சோபாவில் அமர்ந்திருக்கும் சுந்தரலிங்கம் விடிந்து வெகுநேரமாகிவிட்ட

நிலையிலும் எழுந்து வராததைக் கண்ட சம்யுக்தாவின் உள்ளத்தில் இனம்புரியாத பதட்டம் தோன்ற கையில் இருந்த துண்டினை சோபாவில் அவசரமாக விட்டெறிந்துவிட்டு தந்தையின் அறையை நோக்கி வேகமாக நடந்தாள் சம்யுக்தா.

படபடக்கும் இதயத்துடன் அவசரமாக கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற சம்யுக்தாவை தந்தையின் காலியான படுக்கை கேலியாக வரவேற்க கேள்வியுடன் புருவம் சுளித்தாள் சம்யுக்தா.

'கண்ணு அய்யா காலையில சீக்கிரமாகவே எந்திரிச்சு வெளியில போயிட்டாங்கம்மா, உங்ககிட்ட சொல்லிரச் சொன்னாங்க.'

சம்யுக்தாவிற்கு விவரம் தெரிந்த நாள்முதலாக வீட்டு வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்த பொன்னி அவளது பதட்டம் புரிந்தவளாக அவசரமாக ஓடிவந்து சொல்ல நிம்மதிப் பெருமூச்சுடன் பொன்னியைத் திரும்பிப் பார்த்தாள் சம்யுக்தா.

"எங்க போயிருக்காங்கன்னு தெரியுமா பொன்னி? என்கிட்டகூடச் சொல்லாம இவ்வளவு ஏர்லியாக எங்க போனாங்க?" பொன்னியிடம் கேட்டபடியே டீபாயில் இருந்த போனில் தந்தையின் செல்போன் நம்பரை அழுத்தத் தொடங்கினாள் சம்யுக்தா.



"அம்மாடி நான் ஏர்போர்ட்டில் இருக்கேன்டா கண்ணு. இன்னும் கொஞ்ச நேரத்துல வீட்டுக்கு வந்துடுவேன். நீ என்னை எதிர்பார்க்காம காபியைக் குடிச்சுட்டு ரிலாஸ்டாக இருடா நான் வந்துடறேன்."

சம்யுக்தா பொன்னியிடம் கேட்ட கேள்விக்கான பதிலை செல்போனில் கேட்ட தந்தையின் குரல் கூற திகைப்புடன் போனைப் பார்த்தாள் சம்யுக்தா.

"ஏர்போர்ட்டுக்கா? இந்நேரத்துக்கா? யாருப்பா வர்றாங்க?" சம்யுக்தா திகைப்பு மாறாத குரலில் கேட்க மறுமுனையில் சுந்தரலிங்கம் குறும்பா சிரித்தார்.

"அது சஸ்பென்ஸ்டா. நான் அங்க வரும்போது உனக்கே யார் வர்றதுன்னு தெரியும்."

சுந்தரலிங்கம் போன் தொடர்பைத் துண்டித்து விட கேள்வியாக சுளித்த புருவத்துடன் அமர்ந்த சம்யுக்தாவின் முன்பாக கோப்பையைக் கொண்டு வந்து வைத்தாள் பொன்னி.

"எனக்கு இப்ப காபி வேண்டாம் பொன்னி. அப்பா வந்துவிடட்டும் சேர்ந்து குடிச்சுக்கறேன்" சலிப்புடன் கூறிய சம்யுக்தாவின் கையில் கண்டிப்பான முகத்துடன் காபிக் கோப்பையைக் கொடுத்தாள் பொன்னி.

"வெறும் வயித்தோட இருக்கக் கூடாது கண்ணு. பேசாம இந்த காபியைக் குடி. அப்பா வந்த

பிறகு இன்னொரு தடவை குடிச்சிக்கிட்டாப் போச்சு. இன்னும் இருபது நாளில் கல்யாணத்தை வெச்சுக்கிட்டு இப்படி சாப்பிடாம இருக்கக்கூடாது கண்ணு.'' வாஞ்சையும் கண்டிப்பாக கூறிய பொன்னியின் வார்த்தைகள் மனதின் பாரத்தை அதிகரிக்கச் செய்ய கலங்கிய கண்களுடன் பொன்னியை ஏறிட்டுப் பார்த்தாள் சம்யுக்தா.

"அப்பாதான் அடிக்கடி என் கல்யாணத்தையே ஞாபகப்படுத்திக்கிட்டு இருக்காருன்னா நீயும் அதைப்பத்தியே பேசுறியே பொன்னி? உங்க ரெண்டு பேருக்கும் என்னை பிரியப்போகிற வருத்தம் கொஞ்சம் கூட இல்லையே?'' சம்யுக்தாவின் குரலில் இழைபோடிய ஏக்கத்தையும் புரிந்து கொண்ட அன்புடன் அவள் கன்னம் தொட்டு முத்தமிட்டாள் பொன்னி.

"இதில வருத்தப்பட என்ன இருக்கு கண்ணு? நல்லபடியாக வாழப் போகிற வாழ்க்கையை எங்க காலத்துக்குள்ள கண்நிறைய பார்த்துவிடணும்கிற வேகம்தான் எங்களுக்குள்ள இருக்கு கண்ணு. இதை விட வேற என்ன கொடுப்பினை வேணும் சொல்லு?''

பொன்னி கேள்விக்குறியாக சம்யுக்தாவைப் பார்க்க சம்யுக்தாவோ பதிலேதும் கூறாத அமைதியுடன் பொன்னி கொடுத்த காபியை குடிக்கத் தொடங்கினாள்.



சம்யுக்தாவின் வெறுமையான முகத்தைக் கண்ட பொன்னியின் மனதிற்குள் தாய்மையின் பரிதவிப்புத் தோன்றியது.

"பாவம் தாயில்லாத குழந்தை. தாய் இருந்திருந் தால் திருமணம் பற்றிய இந்தப் பெண்ணின் பயத்தையும் தவிப்பையும் தன் பாசத்தினால் மாற்றி இருப்பாள். உலக யதார்த்தத்தைப் புரிய வைத்திருப்பார். இன்றோ வேண்டிய அனைத்தும் இருந்தும்கூட எதுவுமே இல்லாததைப் போல இப்படி என் கண்ணு தவிச்சுப் போய் உட்கார்ந்திருக்கே? இந்த வேலைக்காரி என்னதான் எடுத்துச் சொன்னாலும் இந்தப் பிள்ளையோட தவிப்பை என் வார்த்தைகளால் போக்கிவிட முடியாதே? தெய்வமே நீதான் இந்தப் புள்ளைக்குத் துணையாயிருந்து பார்த்துக்கணும்'' பொன்னி ஒரு நெடிய பெருமூச்சுடன் அங்கிருந்து செல்ல அவள் சென்றதைக் கூட உணராதவளாக வெறித்த பார்வையுடன் அமர்ந்து இருந்தாள் சம்யுக்தா.

"அம்மாடி கண்ணு யார் வந்திருக்காங்கன்னு பாருடா'' சுந்தரலிங்கத்தின் உற்சாகக் குரல் சம்யுக்தா வின் சிந்தனையைக் கலையச் செய்ய அவசரமாக தந்தையை திரும்பிப் பார்த்தாள் சம்யுக்தா.

"என்னடாம்மா அப்படிப் பார்க்கிற? மாப்பிள்ளை வந்திருக்கார் பாருடா'' சுந்தரலிங்கம் ஒரு சிறு

புருவச் சுளிப்புடன் கூற அப்போதுதான் தந்தைக்கு அருகில் நின்றிருந்தவனை ஏறிட்டுப் பார்த்த சம்யுக்தா தீயை மிதித்தவளாக விதிர்த்து எழுந்து நின்றாள்.

“இவனா? இவனைக் கூட்டி வருவதற்காகவா அப்பா காலையிலேயே வெளியே போயிருந்தார்?”

“இவன் வருவது முன்பே தெரிந்திருந்தால் நான் என் ரூமைவிட்டு வெளியிலேயே வந்திருக்க மாட்டேன்?”

“ம்க்கும். நீ வராமல் இருந்தால் மட்டும் இவன் உன்னைப் பார்க்காமல் போய்விடுவானாக்கும்? நேராக உன் ரூமுக்கே வந்து சட்டமாக உட்கார்ந்திருக்க மாட்டான்?”

“அதுவும் சரிதான். அப்படி இவனைத் தனியாக சந்திப்பதற்கு இப்படி அனைவரின் முன்பாக ஹாலிலேயே பார்ப்பது எவ்வளவோ மேல்.”

“ஆனால் ஆனால் இப்படி இன்னும் எத்தனை நாட்களுக்கு இவனைத் தனிமையில் சந்திப்பதை என்னால் தவிர்க்க முடியும்?”

“இன்னும் எண்ணி இருபதே நாட்கள் தான் இருக்கிறது. அதன் பிறகு? பிறகு? என்னால் ? நான்? முடியுமா?”



சம்யுக்தாவின் மனம் தன் போக்கில் அலைபாய சம்யுக்தா விழிகள் விரிய திகைப்புடன் நின்றிருப்பதைக் கண்ட வாசுதேவனின் முகத்தில் ஒரு நொடி வெறுமையான புன்னகை தோன்றி மறைந்தது.

“என்னடா கண்ணு? மாப்பிள்ளையை வாங்கன்னு கூட சொல்லாம இப்படி நின்னுக்கிட்டு இருந்தால் என்ன அர்த்தம்? நீ இன்னும் சின்னப் பிள்ளை இல்ல சம்யுக்தா?” சுந்தரலிங்கத்தின் குரலில் வழக்கமாக இருக்கும் பாசம் மறைந்து கண்டிப்பு தெரிந்தது.

முதன் முறையாக அந்நியரின் முன்பாக அதிலும் சம்யுக்தா தன் மனதார வெறுத்து ஒதுக்க நினைக்கும் ஒருவரின் முன்பாக தந்தை காட்டிய கண்டிப்பு சம்யுக்தாவின் கண்களில் கண்ணீரை படரச் செய்ய சம்யுக்தா துடிக்கும் தன் கீழ் உதட்டினை அழுத்தமாகக் கடித்தபடியே தன் எதிரில் நின்றிருந்த வாசுதேவனை வெறுப்பு நிறைந்த கண்களுடன் ஏறிட்டாள்.

“திடீரென்று என்னைப் பார்த்த திகைப்பிலே அப்படி நிக்குறா மாமா. அதைப் புரிஞ்சுக்காம நீங்க இப்படி பேசினால் எப்படி? பாருங்க உங்க பொண்ணோட முகமே மாறிப் போச்சு” வாசுதேவனின் வார்த்தைகளில் மெல்லிய எச்சரிக்கை இழையோடு

வதைப் புரிந்து கொண்ட சுந்தரலிங்கத்தின் மனதிற்குள் பெருமிதத்துடன் கூடிய சங்கடம் தோன்றியது.

"இனி என் பெண் மேல் எனக்கிருக்கும் உரிமை குறைவுதானே?" மனதின் ஓரமாக சிறு வலி தோன்ற அதை மறைத்தபடியே வாசுதேவனைப் பார்த்துப் புன்னகைத்தார் சுந்தரலிங்கம்.

"தப்புதான் மாப்பிள்ளை. சம்யுக்தாவை சொல்லி விட்டு நான் கூட கொஞ்சம் நிதானம் இல்லாமதான் பேசிவிட்டேன். நீங்க உட்காருங்க மாப்பிள்ளை" சுந்தரலிங்கத்தின் வார்த்தைகளில் குழைவு தெரிய தந்தையின் குரலில் தெரிந்த மாறுதலை உள்ளூரத் தோன்றிய வேதனையுடன் பார்த்தாள் சம்யுக்தா.

தன்னால் தான் தன்னைப் பெற்றவர் மற்றவர் களின் முன்பாக தலைகுனிய வேண்டியதாகி விட்ட்து என்கிற குற்றவுணர்வு தோன்ற இனிமேல் இத்தகைய சந்தர்ப்பத்தை நேர விடக்கூடாது என்கிற உறுதியுடன் தலைநிமிர்ந்தாள் சம்யுக்தா.

"வாங்க உட்காருங்க" அமைதியாக வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் சம்யுக்தா வாசுதேவனைப் பார்த்துக் கூறியபடியே அருகில் இருந்த சோபாவினைக் கைகாட்ட மறுப்பின்றி அவள் காட்டிய இடத்தில் அமர்ந்த வாசுதேவனின் கண்கள் ரசனையுடன் சம்யுக்தாவை வருடியது.



கலைந்திருந்த தலைமுடி இடைவரை படர்ந்து காற்றில் பறந்து முகத்திலும் படிந்து விலக உயர்ரக சிந்தடிக் துணியினால் ஆன கரும் ஊதா நிற நைட்டி சம்யுக்தாவின் வெண்பளிங்கு நிறத்தினை மேலும் எடுப்பாகக் காட்ட எவ்வித ஒப்பனையும் இல்லாத தோற்றத்தில் ஒப்பற்ற எழில் வனப்புடன் தன் அழகினைத் தானே உணராத இயல்புடன் சாதாரணமாக நின்று கொண்டிருந்தவளைப் பார்க்கப் பார்க்க வாசுதேவனின் மனதிற்குள் இத்தனை அழகும் தனக்கே உரிமையானதா என்று எண்ணித் திகைப்பு உருவாகியது.

தந்தை அருகில் அமர்ந்திருக்க வாசுதேவனின் ரசனையான பார்வை தன்மீது படர்வதை உணர்ந்த சம்யுக்தாவின் முகம் இயல்பான குங்கும நிறத்திற்குச் செல்ல வாசுதேவனின் கண்களில் தெரிந்த ரசனை அதிகரித்தது.

"இவள்தான் எத்தனை அழகாக இருக்கிறாள்? ஒரு சிறு பார்வையைக்கூட தாங்காத மென்மை கொண்டவளா இவள்?"

'அப்பா பக்கத்தில் இருக்கிறதைக் கூட பொருட்படுத்தாம எப்படி பார்க்கிறான் பார். முன்னப் பின்ன லேடீசையே பார்த்தது இல்லை போல' சம்யுக்தாவின் உதடு ஏளனமாகச் சுளிக்க வாசுதேவனின் பார்வை அவளது சுளித்த உதட்டின் மீது நிலைத்தது.

'இவள் மட்டும் என் மேல இருக்கிற ஆசையினால இப்படி உதட்டைச் சுளிச்சுப் பார்த்தால் எப்படி இருக்கும்?' ஹூம் வாசுதேவனிடம் இருந்து அவனையும் அறியாமல் ஒரு நெடிய பெருமூச்சு தோன்ற அவன் சம்யுக்தாவின் மீதிருந்த தன் பார்வையை வேதனையுடன் அகற்றினான்.

"வாங்க மாப்பிள்ளைத் தம்பி ஊரில் அம்மா அப்பா எல்லாரும் நல்லா இருக்காங்களா?" மரியாதையுடன் கேட்டபடியே வந்த பொன்னி தன் கையில் இருந்த காபி பிளாஸ்க் மற்றும் டம்ளர்கள் இருந்த அலங்கார தட்டினை சம்யுக்தாவின் கையில் கொடுத்தாள்.

"தம்பிக்கும் காபி ஊத்திக் கொடு கண்ணு" சம்யுக்தா திகைப்புடன் பார்ப்பதைக் கண்ட பொன்னி அவளிடம் அழுத்தமாகக் கூறிக்கொண்டே அவள் கையில் தட்டினை திணிக்க,

வாசுதேவன் வேகமாக தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்து பொன்னியின் கையில் இருந்த காபி டிரேயை வாங்கி டீப்பாயில் வைத்தான்.

"உங்க பொண்ணு இருக்கிற நிலைமையில எங்களுக்கு காபி ஊத்திக் கொடுக்கிற மூடில இல்ல. அதனால நாங்களே ஊத்திக் குடிச்சுக்கறோம் பொன்னம்மா" இயல்பாக கூறியபடியே டம்ளர்களில் காபியை நிறைத்த வாசுதேவனை பார்த்த பொன்னியின் முகத்தில் நிறைவு தெரிந்தது.



## 10

'இந்தா சம்யுக்தா காபி குடி.'

இயல்பாக தனக்கு ஒரு டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு இன்னொரு டம்ளரை தன்னிடம் கொடுத்த வாசுதேவனை மறுக்க மனமில்லாதவளாக காபியை கையில் வாங்கிக் கொண்ட சம்யுக்தாவை தன் அருகில் அமரும்படி தலையசைத்தான் வாசுதேவன்.

"உட்காரும்மா இன்னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் நீ நின்னுக்கிட்டு இருக்கப் போற" சிரிப்புடன் சுந்தரலிங்கம் கூற எஜமானர் முன்னிலையில் வாய்விட்டு சிரிக்க முடியாமல் சேலை முந்தானையால் வாய் பொத்திச் சிரித்தாள் பொன்னி.

வேறுவழியின்றி சோபாவின் நுனியில் அமர்ந்த சம்யுக்தாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க மௌனமாக அவளை ரசித்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான் வாசுதேவன்.

"என்னைப் பார்த்தால் உங்களுக்கு நக்கலாக இருக்கிறதா? என்ன நாடகம் இதெல்லாம்?" சம்யுக்தா தந்தைக்குக் கேட்காத குரலில் சீற லேசாக புருவம் உயர்த்தி அவளைப் பார்த்த வாசுதேவனின் முகத்தில் மறுப்பு தெரிந்தது.

"ரொம்ப நேரம் நின்றால் பொண்டாட்டிக்கு கால் வலிக்குமேன்னு உண்மையான அக்கறையாலதான் சொன்னேன்மா அது தப்பா?"

சம்யுக்தாவைப் போன்றே அடிக்குரலில் கேட்டு விட்டு அப்பாவியாக அவளைப் பார்த்த வாசுதேவனின் பார்வையில் உண்மையான கேலி தெரிந்தது.

"ம்ம்... என் மேல ரொம்பத்தான் அக்கறை உங்களுக்கு அந்த அக்கறையைத்தான் நான் நிச்சயதார்த்தத்தன்னிக்கே பார்த்துவிட்டேனே?"

"நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எனக்கு உன்மேல அக்கறை அதிகம்தான் அதை நீயும் பார்க்கத்தானே போற?"

"பார்க்கலாம்... பார்க்கலாம்..."

சம்யுக்தா பிடிவாதமாக தலையை அசைத்து விட்டு வாசுதேவனை வெட்டும் விழிகளால் பார்க்க அவளது பார்வையை சிறிதும் தயக்கமில்லாமல் நேருக்கு நேராகப் பார்த்த வாசுதேவனின் பார்வையில் உறுதி தெரிந்தது.

வருங்கால மருமகனிடம் தன் ஆருயிர் மகள் உரையாடிக் கொண்டிருப்பதை கண்ணும் மனமும் நிறைந்தவராக பார்த்துக் கொண்டிருந்த சுந்தர லிங்கத்தின் முகத்தில் நிம்மதி தோன்றியது.



மகள் தன் வருங்காலக் கணவருடன் உரையாடிக் கொண்டு இருந்ததன் பொருள் புரியாதவராக இருவருக்குள்ளும் இருந்த அன்னி யோன்யத்தை ரசித்தவராக அமர்ந்திருந்தார் அவர்.

"ஐயா காலையில டிபனுக்கு ஸ்பெசலாக சமைக்கச் சொல்லிடறேன்ங்கய்யா" பொன்னி வினயத்துடன் கூற தன்னுணர்வு வந்தவராக பரபரப்புடன் திரும்பினார் சுந்தரலிங்கம்.

"ஆமாம் பொன்னி சீக்கிரமாக ரெடி பண்ணச் சொல்லு. அப்படியே மதியத்துக்கும் ஸ்பெசலாக ப்ரிப்பேர் பண்ணச் சொல்லு. சரிடா சம்யுக்தா மாப்பிள்ளையை உன் ரூமுக்குப் பக்கத்தில இருக்கிற ரூமுக்குக் கூட்டிக்கிட்டுப் போ கண்ணு. மாப்பிள்ளை நீங்க போய் ஃபிரஷ்ஷாகிட்டு வாங்க."

சுந்தரலிங்கம் பரபரப்பு மாறாதவராக பேசிக் கொண்டே போக அமர்த்தலான புன்முறுவலுடன் அவரைத் தடுத்தான் வாசுதேவன்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் மாமா. நான் ஆல்ரெடி ஹோட்டலில் ரூம் புக் பண்ணிவிட்டு தான் வந்திருக்கேன்."

"என்ன சொல்றீங்க மாப்பிள்ளை? கடல் மாதிரி நம்ம வீடு இருக்கும் போது நீங்க எதுக்காக மாப்பிள்ள ஹோட்டலில் தங்கணும்?" சுந்தரலிங்கத் தின் குரலில் திகைப்பு தெரிய தந்தையின் திகைப்பு

தனக்குள்ளும் தோன்றியவளாக வாசுதேவனைத் திரும்பிப் பார்த்தாள் சம்யுக்தா.

"இருக்கட்டும் மாமா. கல்யாணத்துக்கு முன்னால இங்க வந்து நான் தங்கினால் அது சரிவராது மாமா."

"அதெல்லாம் பழைய சம்பிரதாயம் மாப்பிள்ள. இந்தக் காலத்துல போய் அதையெல்லாம் பேசிக்கிட்டு இருக்கலாமா?"

"இல்ல மாமா ஊரில் இருந்து கிளம்பும்போதே பாட்டி சொல்லி தான் அனுப்புனாங்க. அதுக்கும் மேல நாளைக்குக் காலையில ஃபிளைட்டில அம்மா அப்பா அப்புறம் ஸ்பந்தனா எல்லாரும் வர்றாங்க. அதனால வெளியில தங்கினால் எனக்கும் கொஞ்சம் பிரைவஸி இருக்கும் மாமா."

"உங்க இஷ்டம் மாப்பிள்ளை" அரைகுறை மனதுடன் ஒப்புக்கொண்ட சுந்தரலிங்கத்தின் மனதிற்குள் கேள்வி எழுந்தது. மனதின் கேள்வியை வெளிப்படையாக கேட்க முடியாதவராக அமைதியாகி விட்டவரின் மனநிலையை உணர்ந்து கொண்டவனாக மாமனாரை நிமிர்ந்து பார்த்தான் வாசுதேவன்.

"முகூர்த்தப் புடவை நகைகளை எல்லாம் பெங்களூரிலேயே வாங்கிடலாம்னு பாட்டியும் அம்மாவும் பேசி முடிவு பண்ணி இருக்காங்க மாமா. அதற்காகத்தான் அப்பாவும் அம்மாவும் நாளைக்கு வர்றாங்க."



மனதின் கேள்விக்கு விடை கிடைத்தவராக நிம்மதியுடன் வாசுதேவனைப் பார்த்த சுந்தரலிங்கத்தின் முகத்தில் நெகிழ்வு தெரிந்தது.

"அதை நம்ம ஊரிலேயே கூட வாங்கிடலாமே மாப்பிள்ள அதுக்காக" தயக்கத்துடன் இருந்த சுந்தரலிங்கத்தை மென்மையுடன் இடைமறித்தான் வாசுதேவன்.

"அதனால என்ன மாமா? உங்க உடம்பு இருக்கிற சூழ்நிலையில உங்களால இங்கயும் அங்கயுமா அலைய முடியாதுல்ல? அதுக்கு மேலாக நம்ம ஸ்பந்தனாவுக்கு அவளுக்கான டிரெஸ்ஸை எல்லாம் பெங்களூரில்தான் பர்ச்சேஸ் பண்ணியாகணுமாம். அதுவும் அவங்க அண்ணியோட சேர்ந்து தான் செலக்ட் பண்ணுவாங்களாம்" வாசுதேவன் அன்பு அலுப்புடன் கூறிச் சிரிக்க சுந்தரலிங்கமும் சிரித்தபடியே செல்லமாக தலையசைத்தார்.

"குட்டியம்மா சொன்ன பிறகு அவங்க பேச்சுக்கு மறுப்பு சொல்ல முடியுமா? அவங்க விருப்பப் படியே நடக்கட்டும்" சுந்தரலிங்கத்தின் குரலிலும் முகத்திலும் எல்லையற்ற மென்மை தெரிந்தது.

"யாரைப் பத்தி பேசிக்கிட்டு இருக்காங்க? அது யார் அவள்? சம்யுக்தாவின் மனதிற்குள் வண்டாகக் குடைந்த கேள்விக்குப் பதில் தெரியாதவளாக விழித்தாள் சம்யுக்தா.

"அதிலும் நிச்சயதார்த்தத்துக்கு வரமுடியாமல் போன கோபத்துல வேற இருக்கா. இதுக்கு சம்மதிக்கலேன்னா என்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவா மாமா."

"சரிதான் சரிதான் கோபம் இருக்காதா பின்னே?"

"என்ன மாமா சொல்றீங்க? நானா அவளுக்கு காலேஜ்ல எக்ஸாம் நடத்தினேன்? என் மேல கோபப் பட்டால் நான் என்ன செய்யட்டும்?"

"இந்தப் பொண்ணுகிட்ட நாம இப்படி யெல்லாம் லாஜிக் பேசமுடியாது மாப்பிள்ள. அவங்க சொல்றதுக் கெல்லாம் நாம தலையாட்டித் தான் ஆகணும்."

வாசுதேவன் வாய்விட்டுச் சிரித்தபடியே சம்யுக்தாவை திரும்பிப் பார்க்க அவளது முகத்தில் தெரிந்த குழப்பத்தைக் கண்டவனின் புருவம் கேள்வியாக உயர்ந்தது.

"என்னடா கண்ணு... இப்படி முழிக்கிற? ஸ்பந்தனா யாருன்னு தெரியுதா...? உன்னோட செல்ல நாத்தனார். சத்யநாதன் வீட்டு இளவரசி. நீ அவளைப் பார்த்தது இல்லையே...?" சுந்தரலிங்கம் கூறிக் கொண்டே போக அப்படியும்கூட புரியாத வளாக குழப்பத்துடன் அமர்ந்திருந்த சம்யுக்தாவை அழுத்தமாக ஏறிட்டான் வாசுதேவன்.



"ஸ்பந்தனா என்னோட தங்கை. காலேஜில ஃபர்ஸ்ட் இயர் படிக்கிறா...."

"உங்களுக்கு தங்கை இருக்கிறாளா...?"

பொறுமையாக கூறிக் கொண்டிருந்த வாசுதேவன் சம்யுக்தாவின் அவசரக் கேள்வியினால் விழிகள் சுருங்கியவனாக அவளைப் பார்த்தான்.

"ஏன்....? இருக்கக் கூடாதா....?"

நிறுத்தி நிதானமாக வெளிப்பட்ட வாசுதேவனின் வார்த்தைகளில் தெரிந்த பேதத்தை உணர்ந்தவளாக தயக்கத்துடன் நாக்கைக் கடித்துக் கொண்டாள் சம்யுக்தா.

"இல்ல... வந்து.... உங்களுக்கு ஒரு தங்கை இருக்காங்கன்றது எனக்குத் தெரியாது. அதனாலதான்... நான்..."

"உனக்கு என்னைப்பற்றி என்னதான் தெரியும் சம்யுக்தா?"

வாசுதேவனின் குரலில் குமுறும் எரிமலையின் சீற்றம் மறைந்திருக்க... உள்ளூர எழுந்த பயத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு அமைதியாக தலையை குனிந்து கொண்டாள் சம்யுக்தா.

"தெரிஞ்சுக்கணும்கிற ஆர்வம் இருந்தால் எல்லாம் தெரிந்திருக்கும் ஆனால்.... ம்ப்ச்..."

அடிக்குரலில் சீறிவிட்டு எழுந்த வாசுதேவனை அவசரமாக அவனது கைப்பற்றி அமர வைத்தாள் சம்யுக்தா.

"இப்ப எதுக்காக இப்படி முகத்தைத் தூக்கி வெச்சுக்கறீங்க நீங்க...? நல்ல வேளை அப்பா நம்மளை கவனிக்கலை..." கூறியவளை எரிக்கும் விழிகளுடன் திரும்பிப் பார்த்தான் வாசுதேவன்.

"ம்ம்... நான் மட்டும் எப்பவும் உன்னைப் பத்தியும் உன்னோட குடும்பத்தைப் பத்தியும் மட்டுமே கவலைப்படணும். ஆனால் நீ எனக்காக என்னைப்பத்தி எதையும் தெரிஞ்சுக்கக்கூட முயற்சி பண்ண மாட்ட. அப்படி தானே..?" சீற்றத்துடன் கேட்ட வாசுதேவன் எழுந்து பொன்னியுடன் பேசிக் கொண்டிருந்த சுந்தரலிங்கத்தின் அருகில் வந்தான்.

"சரிங்க மாமா. நான் கிளம்பறேன். நீங்க எதுவோ பர்ச்சேஸ் பண்ணனும்னு சொன்னீங்களே? அதையெல்லாம் ஒரு லிஸ்ட் போட்டு சம்யுக்தாகிட்ட கொடுத்துடுங்க. நானும் அவளும் போய் இன்னிக்கு எல்லாத்தையும் வாங்கிடறோம்..."

"சரிங்க மாப்பிள்ளை..."

"நாளைக்கு அப்பாம்மா வந்திடுவாங்க மாமா. அதுக்கு பின்னால எதையும் வாங்கமுடியாது. நானும் அவங்ககூடவே கிளம்பிப் போகணும் மாமா..."



"உங்க விருப்பப்படி செய்துடலாம் மாப்பிள்ள..."

"ஊரிலயும் கல்யாண வேலைகள் நிறைய இருக்கு. இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யல. அதனாலதான் உடனே கிளம்பணும்னு சொன்னேன். எது வாங்குறதாக இருந்தாலும் இன்னிக்கே வாங்கிடலாம் மாமா. நீங்க முடியாததோட தனியா அலைய வேண்டாம்..."

"சரிங்க மாப்பிள்ளை..."

"என்னைப் பொறுத்த வரைக்கும் ஆடம்பரமான பொருட்கள் எதுவும் வாங்க வேண்டிய தேவை இல்ல மாமா... உங்களுக்கு ரொம்ப அத்தியாவசியம்னு மனசுக்கு தோணுறதை மட்டும் வாங்கலாம்..."

வாசுதேவன் ஒவ்வொன்றாக யோசனை செய்து பேசுபவனை போல பேசிக் கொண்டிருப்பதையும் தந்தை அவன் கூறியவற்றை எல்லாம் பெருமிதத் துடன் மறுக்காமல் கேட்டுக் கொள்வதையும் கண்ணிமைக்காமல் பார்த்தபடியே அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

'இவன் யார்? நேற்று வரை அறிமுகமே இல்லாதவனாக இருந்த இவன் இன்று என் தந்தைக் காக ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பேசுவது ஏன்...?'

சம்யுக்தாவின் மனதிற்குள் தோன்றிய கேள்விக்கான பதிலைக் கூறாதவனாக அவளைத்

திரும்பியும் பார்க்காமல் வெளியேறிய வாசுதேவனின் முதுகை வெறித்தவளாக சிலையாக அமர்ந்திருந் தாள் சம்யுக்தா.

## 11

அழகான வேலைப்பாடுகளைக் கொண்ட பெல்ஜியம் கண்ணாடியின் முன்பாக அமர்ந்திருந்த சம்யுக்தாவின் கண்கள் கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தையே இமைக்காமல் வெறித்துக் கொண்டிருந்தது.

அரக்கு சிவப்பு நிறத்தில் தங்க நிற பட்டு நூலினால் சின்னஞ்சிறு பூக்கள் கொடிகளுடன் மின்னிக் கொண்டிருந்த சுடிதார் சம்யுக்தாவின் வெண்தந்த நிற தேகத்தை மேலும் மெருகேற்றிக் காட்ட கண்ணாடியே அவளது உருவத்தைத் தன்னால் பிரதிபலிக்க முடிந்த கர்வத்துடன் தனி கம்பீரத்துடன் நின்றிருப்பதை உணராதவளாக தன் பிம்பத்தின் மீது கண்பதித்திருந்த சம்யுக்தாவின் உள்ளத்திற்குள் குழப்பமும் போராட்டமும் சூறாவளியாக சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

"என்னைப் பற்றி உனக்கு என்னதான் தெரியும்...?"

"நான் மட்டும் உன் குடும்பத்தைப் பற்றி மட்டுமே கவலைப்பட வேண்டுமா...?"



சீற்றமும் கோபமுமாகக் கேட்ட வாசுதேவனுடைய குரல் சம்யுக்தாவின் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

'இவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்?'

'நான் இவனுடனான உறவே வேண்டாம் என்றிருக்கும்போது... இவனுடைய உறவுகளைப் பற்றி நான் எதற்காக தெரிந்து கொள்ள வேண்டும்?'

சம்யுக்தாவின் உள்ளத்தில் ஒரு பாகம் கோபமாக குரல் கொடுக்க அவளது உள்ளத்தின் மறுபாகமோ அதற்கு நேர் மாறாக வாசுதேவனின் நடவடிக்கைகளைப் பற்றி குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

'ஆனால் அவனோ என் அப்பாவைப் பற்றியும் அவரது உடல்நலத்தைப் பற்றியும் இவ்வளவு அக்கறையோடு இருக்கிறானே...?'

'அப்புறம்...? இருக்கமாட்டானா...? இத்தனை பெரிய கோடீஸ்வரர் தன் சொத்தையும் பெற்ற பெண்ணையும் அவன் கையில் ஒப்படைக்கும்போது அதற்கான பிரதிபலனை அவன் இந்த அக்கறையைக் கூட காட்டாமல் இருக்க முடியுமா?'

'ஒரு வேளை இவை அனைத்துமே நடிப்பாகக் கூட இருக்கலாமோ?' சம்யுக்தாவின் மனதிற்குள் பயம்சூழ அதற்குமேலும் சிந்திக்க பயந்தவளாக வேகமாக எழுந்து அவ்வறையைவிட்டு வெளிவந்தாள் சம்யுக்தா.

"ரெடியாகிட்டியாம்மா? மாப்பிள்ள இப்பதான் போன் பண்ணினார் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடறதாகச் சொன்னார்ம்மா."

சம்யுக்தா அமைதியாக தந்தையின் அருகில் சென்று அமர அவளது அமைதியைக் கவனத்தில் கொள்ளாத பரபரப்புடன் மகளிடம் தன் கையில் இருந்து லிஸ்ட்டை நீட்டினார் சுந்தரலிங்கம்.

"இங்க பாருடாம்மா மாப்பிள்ளை வேண்டாம்னு சொன்னாலும் நீ இந்த லிஸ்ட்டில் இருக்கிறதை எல்லாம் கண்டிப்பாக வாங்கிடணும். சரியா...? இதனாலதான் நானே பர்ச்சேஸ் பண்ணிடலாம்னு நினைச்சேன். ஆனா மாப்பிள்ளை தானாக உதவ வரும்போது நாம் அதை மறுத்தால் நல்லா இருக்காதில்லடா?"

"........"

"அதனால நீ கண்டிப்பாக இதையெல்லாம் வாங்கிவிடு. அப்புறம் நாம ரெகுலராக போகிற ஷா எண்டர்பிரைசசுக்கே போயிருங்க. நான் போன் பண்ணி சொல்லிடறேன். பில் எல்லாம் நம்ம வீட்டுக்கே வழக்கம் போல கொடுத்து விடச் சொல்லிடும்மா. அப்புறம் நம்ம ஜூவல்லர்சுக்குக் கூட" பரபரப்புடன் சிறு குழந்தைக்கு அறிவுறுத்துபவரைப் போல கூறிக் கொண்டிருந்த தந்தையை அழுத்தமாக நிமிர்ந்து பார்த்தாள் சம்யுக்தா.



"நான் எல்லாத்தையும் பார்த்துக்கறேம்பா. நீங்க டென்சன் ஆகாம அமைதியாக இருங்க. நாம வழக்கமாக போகிற கடைங்களுக்குப் போகலேன் னாலும் என்கிட்டதான் என்னோட கிரெடிட் கார்டு இருக்குல்ல? அதுக்கும் மேல நான் என்ன இந்த பெங்களூர் சிட்டியையேவா விலைக்கு வாங்கப் போறேன்? நீங்க இவ்வளவு கவலைப்பட வேண்டிய தேவை இல்லப்பா."

"அதுக்கில்லடா நீ குழந்தை உனக்கு இதெல்லாம்..."

"இனிமேலும் நான் குழந்தையாகவே இருக்க முடியுமாப்பா? இனி நானும் இதுக்கெல்லாம் பழகிக்கணும் தானே?" சம்யுக்தா தன்னையும் மீறி எழுந்த கண்ணீரை தந்தை பார்த்துவிடாமல் மறைக்க முயற்சி செய்ய சுந்தரலிங்கமோ கண்ணில் படர்ந்த கண்ணீருடன் மகளது தலையை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார்.

"உண்மைதான் கண்ணு. இனி நீயும் பொறுப்போட இருக்கணும்தான். ஆனால் எனக்கு வாசு மேலயும் அவங்க குடும்பத்து மேலயும் ரொம்ப நம்பிக்கை இருக்குடா. உன்னை உன்னோட இயல்போட அவங்க அத்தனை பேரும் ஏத்துக்குவாங் கன்ற நம்பிக்கை இருக்கு. எல்லாத்துக்கும் மேல வாசு உன்னை ஒரு குறையும் இல்லாம கவனிச்சுக்குவார். நீ

நல்லா இருப்படா'' சுந்தரலிங்கத்தின் குரலில் எல்லையற்ற உறுதி தெரிய சம்யுக்தா ஒரு பெருமூச்சுடன் தந்தையை பார்த்தாள்.

"உங்க நிம்மதிதான்ப்பா எனக்கு முக்கியம். இந்த கல்....'' சம்யுக்தா கூறிக்கொண்டிருக்கும் போதே வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்க அவசரமாக மகளை மறந்து எழுந்து வாசலுக்கு ஓடினார் சுந்தரலிங்கம்.

சம்யுக்தா ரெடியா மாமா?'' கேட்டபடியே வந்த வாசுதேவனை புன்சிரிப்புடன் பார்த்தபடியே மகளை பார்வையாலேயே அருகில் அழைத்த தந்தையைப் பார்த்த சம்யுக்தாவுடன் மனதிற்குள் இனம் புரியாத தனிமை உணர்வு தலைதூக்கியது.

அதுநாள் வரையிலும் மகளது வார்த்தைகள் ஒவ்வொண்ணுமே தனக்கான வேதவாக்காக எண்ணி வந்த தந்தை....

மகளது முகத்தைக் கொண்டே அவளது மனநிலையை புரிந்து கொண்டு அதன்படியே செயல்படும் தந்தை...

இன்று தான் கூற வந்ததைக்கூட காதில் கேளாதவராக அவளது மனதையும் விருப்பத்தையும் அறிந்து கொள்ளும் எண்ணம் இல்லாதவராக அன்னியனைப் போல இருப்பதைக் கண்ட சம்யுக்தா



அமைதியாக எழுந்து ஒரு சிறு தலையசைப்பை மட்டும் தந்தையின் அனுமதிக்காக கொடுத்துவிட்டு வாசுதேவனுடன் இணைந்து வெளியே சென்றாள்.

அமைதியாக காரின் பின் இருக்கை கதவைத் திறந்து காருக்குள் அமரச்சென்ற சம்யுக்தாவின் கரம் பற்றி தடுத்துவிட்டு அவளுக்காக காரின் முன் இருக்கைக் கதவை திறந்து பிடித்தான் வாசுதேவன்.

சம்யுக்தா சாவி கொடுக்கப்பட்ட பொம்மையாக காருக்குள் ஏறி அமர்ந்தாலும் டிரைவர் இருக்கையில் அமர்ந்த வாசுதேவனைத் திரும்பிப் பார்த்தவளின் கண்களில் சிறு வியப்பு தோன்றி மறைந்ததைக் கண்ட வாசுதேவன் சிறு சிரிப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"இது நம்ம கார்தான் சம்யுக்தா. இங்க பெங்களூரில் இருக்கும் நம்ம ஆபீசில் இருக்கும் கார். நான் இங்க வரும்போது மட்டும் இதை யூஸ் பண்ணிக்குவேன். மத்த நேரத்தில் சும்மாதான் நின்றிருக்கும்.''

'இவனுக்கும் பெங்களூரில் ஆபீஸ் இருக்கிறதா? இவனும் பிஸினெஸ் பண்ணுகிறானா? என்ன பிஸினெஸ்?'

சம்யுக்தாவின் மனதிற்குள் சங்கிலித் தொடர்களாக கேள்விகள் தோன்ற அவற்றை யெல்லாம் வாய்விட்டுக் கேட்கும் தைரியம் இல்லாதவளாக மௌனமாக சாலையை பார்த்தாள்.

வாசுதேவன் ஒரு கைதேர்ந்த ஓட்டுனரின் லாவகத்துடன் பெங்களூர் சாலைகளில் பரிட்சயமான வனைப் போல காரைச் செலுத்திய பாவனை அவன் கூறியது உண்மை என்பதை சம்யுக்தாவிற்குப் புரியவைக்க காற்றில் பறந்த துப்பட்டாவை இழுத்து சரி செய்தபடி நிம்மதியாக சீட்டில் சாய்ந்து அமர்ந்த சம்யுக்தாவை ஓரக் கண்ணால் ரசித்த வாசுதேவனின் மனதிற்குள் இதமான தென்றல் காற்று நறுமணத்துடன் தவழத் தொடங்கியது.

“சுடிதாரில் நீ ரொம்ப.... தட் மீன்ஸ் சாரியை விட சுடிதார் உனக்கு நல்லா சூட் ஆகுது” வாசுதேவனின் மெல்லிய குரலில் கூற அவனைத் திரும்பியும் பாராமல் அமர்ந்திருந்த சம்யுக்தாவின் முகத்தில் வலியுடன் கூடிய மெல்லிய புன்னகை தோன்றியது.

“ஈஸிட்? ஆனா அதனால என்ன பிரயோஜனம்? நான் தான் இனிமேல் சேலையோட தான வலம் வந்தாகணும்.’’

சம்யுக்தாவின் வார்த்தைகளைக் கேட்ட வாசுதேவனின் முகத்தில் புரியாத பாவனை தோன்றியது.

“என்ன சொல்ற நீ....?’’

’’உண்மையை சொல்றேன். பள்ளி கொண்டான் புரத்துக்கும் சுடிதாருக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா? அங்க வந்து நான் சுடிதார் போட்டுக்கிட்டு



இருக்க முடியுமா? உங்க கிராமத்தில இருக்கிறவங்க என்னை கேலி செய்யமாட்டாங்களா?’’ சம்யுக்தா உள்ளூர தோன்றிய குமுறலுடன் வாசுதேவனை காயப்படுத்திவிடும் வேகத்துடன் பேசிக் கொண்டிருக்க அவளது பேச்சைக் கேட்ட வாசுதேவன் அவள் எண்ணியத்திற்கு மாறாக வாய்விட்டுச் சிரித்தபடியே சம்யுக்தாவை நன்றாக திரும்பிப் பார்த்தான்.

'இவனோட சிரிப்பு எவ்வளவு அழகா இருக்கு!!!' சம்யுக்தா முதன் முறையாக ரசனை யுடன் தன்னை மீறிய ஆர்வத்துடன் வாசுதேவனைப் பார்க்க.

மாநிறத்திற்கும் சற்று கூடுதலான நிறத்துடன் சீராக நாகரீகமாக வெட்டப்பட்டிருக்கும் அடர்த்தி யான கேசம் காற்றில் பறக்க ஆழமான ஊடுறுவும் கண்களுடன் கூரான நாசியுடன் வசீகரமான சிரிப்புடன் அழகான பல் வரிசை மின்ன ஆறடிக்கும் அதிகமான உயரத்துடன் கம்பீரமான ஆணழகுடன் அமர்ந்திருந்தவனின் தோற்றம் சம்யுக்தாவின் கண்களுக்குள் நிறைந்து இதயத்தில் பதிந்தது.

சம்யுக்தாவின் கண்களில் தெரிந்த ரசனையை கவனித்து அறிந்து கொள்ள முடியாத வகையில் சாலையின் போக்குவரத்து நெரிசல் வாசுதேவனின் கவனத்தை முழுமையாக தன்புறம் திருப்பிவிட வாசுதேவனின் முகத்தில் படர்ந்த சிறு கேலியுடன் திரும்பி சாலையில் பார்வையை பதித்தான்.

"ஏன்... பள்ளி கொண்டான்புரத்தில் இருக்கிற வங்க யாருக்கும் சுடிதார்ன்னா என்னன்னே தெரியாதா சம்யுக்தா....?" வாசுதேவனின் குரலில் இழையோடிய கேலி சம்யுக்தாவின் ரோசத்தை அதிகரிக்கச் செய்ய அவள் வாசுதேவனைப் பார்த்து அலட்சியமாக தலை குறுக்கினாள்.

"ம்ம்ம்... சுடிதார்னா எல்லாருக்கும் தெரியும் தான். ஆனா உங்க கிராமத்துல... மேரேஜ் ஆனவங்களை சுடிதாரெல்லாம் போட்டுக்க விடமாட்டாங்களாமே...? என் பிரண்ட்செல்லாம் அப்படித்தான் சொல்றாங்க..." குழந்தையின் அறியாமையுடன் கூறியவளை லேசாக திரும்பிப் பார்த்த வாசுதேவனின் முகத்தில் மென்மை படர்ந்தது.

"முதலில் உன் பிரண்ட்ஸ் சொல்றதை எல்லாம் அப்படியே நம்பிக்கிட்டு உன் மூளையை குழப்பிக்கிற பழக்கத்தை நிறுத்து சம்யுக்தா..."

"ஆனா.... நான்..."

"இங்கபாரு சம்யுக்தா... இங்க நீ எப்படி இருக்கியோ... அதே மாதிரியே நீ அங்கே... நம் வீட்டிலும் உன் இஷ்டப்படியே தாராளமாக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரைக்கும் நீ நீயாகவே இருக்கலாம். போதுமா...?" வாசுதேவனின் குரலில் உறுதி தெரிந்தது.



"ஆனா... உங்க ரிலேடிவ்ஸ்... நெய்பர்ஸ் எல்லாம்..."

"ம்ம்... நான்தான் சொல்றேனே...நீ யாரைப் பத்தியும் கவலைப்பட வேண்டாம். சரியா...?"

வாசுதேவனின் வார்த்தைகளுக்கு மறுப்பாக எதுவும் சொல்லாமல் அமைதியாக அமர்ந்திருந் தவளை லேசாக திரும்பிப் பார்த்துவிட்டு வாசுதேவன் சாலையில் கவனமாகிவிட... உள்ளூர முரண்டு பிடிக்கும் மனதினை அடக்க முயற்சித்தவளாக அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

'நான் நானாக இருப்பதற்கு இவனுடைய அனுமதி எதற்கு?'

சம்யுக்தாவின் உள்மனம் போர்கொடி உயர்த்த... மனதின் கேள்வியில் இருந்த உண்மை உணர்ந்தவளாக மௌனமாக சாலையை பார்த்தபடி அமர்ந்திருந்தாள் அவள்.

## 12

**மி**ன்விளக்கின் ஒளியினால் அந்த பெரிய நகைக்கடை இந்திர லோகத்தைப்போல ஜொலித்துக் கொண்டிருக்க – கண்கள் நகைக் கடைக்குள் நுழைந்தவர்களைப் பார்த்த கடையின் அதிபர் தன்

இருக்கையில் இருந்து எழுந்துவந்து சம்யுக்தாவைப் பார்த்துக் கரம் குவித்தார்.

"நமஸ்தே ஜி...வாங்கோ...வாங்கோ. அப்பாஜி நல்லா இருக்காங்களா...?" லேசான இந்தி சாயலுடன் கேட்டவரைப் பார்த்து சிநேக பாவத்துடன் பெருமையாக சிரித்தபடியே வாசுதேவனைப் பார்த்த சம்யுக்தாவுடன் முகத்தில் சிறு கர்வம் தோன்றியது.

'பார்த்துக்கோ... இதுதான் என்னோட ஸ்டேட்டஸ். எனக்கு எதற்காகவும் உன் தயவு தேவை இல்லை...' உள்ளூர மனதிற்குள் கூறிக்கொண்ட சம்யுக்தாவின் மனதிற்குள் அதுநேரம் வரை அலைபாய்ந்து கொண்டிருந்த புயல் சிறிது அமைதியடைந்தது.

"அப்பா நல்லா இருக்காங்க அங்கிள். இவர்..."

சம்யுக்தா மெதுவாக வாசுதேவனைக் கைகாட்டி அறிமுகம் செய்துவைக்க முயல கடை அதிபர் வாசுதேவனை பரிட்சயமான புன்சிரிப்புடன் பார்த்து அவனது கை பற்றி மரியாதையுடன் கைகுலுக்கினார்.

"ம்ம்... தெரியும்மா. வாசு சார் கூட உங்களுக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகி இருக்குன்னு கேள்விப் பட்டேன். ரொம்ப சந்தோசம்மா. கங்கிராஜ்லேசன்ஸ் வாசு ஜி..."



"இட்ஸ் ஒகே சார்... தேங்க்...யூ..." வாசுதேவன் இலகுவான நுனிநாக்கு ஆங்கிலத்தில் பதில் கூறிவிட்டு திரும்ப வியப்புடன் நின்றிருந்த சம்யுக்தா அவசரமாக தன் முக உணர்வுகளை சீர் படுத்திக் கொண்டார்.

"ஷெல் வி கோ...?" வாசுதேவன் நாகரீகமாக கேட்டபடியே சுவாதீனமாக சம்யுக்தாவின் இடையை லேசாக அணைத்து அழைக்க... சம்யுக்தா சங்கோஜ பாவனையுடன் நகர்ந்தாள்.

"இந்தக் கடைக்கு நீங்க ஏற்கெனவே அப்பா கூட வந்திருக்கீங்களா...?" சம்யுக்தா கேள்வியாக வாசுதேவனை நிமிர்ந்து பார்க்க அவளது கேள்விக்கான பொருள் புரிந்தவனாக இனிய முகத்துடன் சம்யுக்தாவின் இடையை அணைத்திருந்த கரத்தை விலக்கிக் கொண்டான் வாசுதேவன்.

"ஏன்...? உங்க அப்பாகூட வந்தால்தான் என்னை மற்றவர்களுக்கு தெரியுமா...? இந்த வாசுதேவன் மற்றவர்கள் அவனுக்காக மட்டும் தான் மதிப்பார்கள் சம்யுக்தா. எனக்கும் அதுதான் பிடிக்கும்..."

வாசுதேவன் விலகி வேகமாக கடைக்குள் நடந்து சென்றுவிட அவனது வேகத்திற்கு இணையாக நடக்க முடியாதவளாக ஓட்டமும் நடையுமாக அவனைப் பின் தொடர்ந்தாள் சம்யுக்தா.

"மாமா கொடுத்த லிஸ்ட்டை கொடு..."

சம்யுக்தா நீட்டிய பேப்பரில் ஒருமுறை பார்வையை பதித்து விட்டு மீண்டும் அதனை சம்யுக்தாவிடமே கொடுத்தான் வாசுதேவன்.

"இந்த ஏஸி... பிரிஜ்... வாஷிங்மெஷின் எக்ஸ்ட்ரா... எக்ஸ்ட்ரா.... வெல்லாம் தேவையே இல்லை. நகை மட்டும் வாங்கிக்க சம்யுக்தா..." வாசுதேவன் உணர்ச்சியற்ற குரலில் கூற... உள்ளூர சிரித்துக் கொண்டாள் சம்யுக்தா.

"ஆமா நகைதானே விலை மதிப்பு அதிகமானது. அதனால... அதைமட்டும் வாங்கினால் போதும்." லேசாக அலட்சியமாக உதடு சுழித்துவிட்டு சம்யுக்தா நகைகளின் பக்கமாக திரும்பிக் கொள்ள அவளது முக பாவனைகளைக் கண்ட வாசுதேவனின் உள்ளம் வேதனையுடன் சுருங்கியது.

இவள் என்னைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாளா...? என்னோடு வாழ விருப்பம் இல்லையென்று இவள் கூறிய அன்றே என் இதயம் பாதி செத்துவிட்டதே...? இதற்கும் மேலாக இவள் என்ன செய்து என்னைப் புண்படுத்திவிட முடியும்...?

'ஒருவேளை... நாளை அப்பாம்மா முன்பாக இவள் இப்படி நடந்துக்கொண்டால்....?'



வாசுதேவனின் பார்வை சிந்தனையாக சம்யுக்தாவின் மீது படிந்தது.

சம்யுக்தா தன்னிச்சையாக தனக்கு தேவையான நகைகளை தேர்வு செய்துவிட்டுத் திரும்ப அவற்றையெல்லாம் எடுத்துப்பார்த்த வாசுதேவனின் புருவம் சுளித்தது.

"என்ன செலக்ட் செய்திருக்கிற நீ?" சிறு கண்டிப்புடன் அவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு திரும்பிய வாசுதேவனை கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் சம்யுக்தா.

"ஏன் இதுக்கெல்லாம் என்ன? ஒவ்வொண்ணும் நல்ல டிசைனாகத்தான் இருக்கு..."

"இருக்கு சம்யுக்தா. ஆனா இத்தனை லட்சங்களை போட்டு நீ வாங்கப் போகிற நகைகளில் ஏதாவது ஒன்றாவது ஒன்றுடன் ஒன்று பொருத்தமாக இருக்கிறதா பார். ஒன்றில் பச்சைக் கல். ஒன்றில் சிவப்பு. ஒன்றில் வைரம் நகை எடுத்தால் ஒவ்வொரு செட்டாக எடுத்துப் பழகணும் சம்யுக்தா..."

"ச்சு... போதும். மனிதர்களான நமக்குள்ளேயே பொருத்தம் இல்லை என்கிறபோது இந்த நகைகளுக்குள் பொருத்தம் இல்லாவிட்டால் என்ன குறைந்துவிடப் போகிறது? செட்டாக இல்லையாம்... முதல்ல நமக்குள்ளயே செட்டாகாம இருக்கே... இதுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க...?"

"கரெக்டாகத்தான் சொல்ற சம்யுக்தா. நானும் இது வரைக்கும் அதைபத்தித்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஒரு நிமிசம் என்கூட வர்றியா..? கொஞ்சம் வெளியில போயிட்டு வரலாம்?'' வாசுதேவன் அமர்த்தலான குரலில் கேட்டுவிட்டு திரும்பி நடக்க குழப்பமான முகத்துடன் அவளைப் பின் தொடர்ந்தாள் சம்யுக்தா.

"என்ன ஜி ஒண்ணும் வாங்கலையா? உள்ளே இன்னும் புது டிசைன்ஸ் இருக்கு பாருங்க ஜி.'' பதட்டமாக கல்லாவில் இருந்து எழுந்தவரிடம் கை உயர்த்தி தடுத்தான் வாசுதேவன்.

"ஜஸ்ட் ஒன் மினிட் சார். வீ வில் கம் பேக் வி ஹேவ் ஒன் அர்ஜென்ட் மேட்டர் ப்ளீஸ்...''

வாசுதேவன் நிதானமாக நடந்து காருக்குள் ஏறி அமர அவனை பின் தொடர்ந்த சம்யுக்தா அலட்சியத்துடன் தானும் காருக்குள் அமர்ந்தாள்.

"நீ சொன்னதும் சரிதான் சம்யுக்தா. நான் இந்த கல்யாணத்தை நிறுத்திவிடறதாக முடிவு செய்துட்டேன்...''

"வாட்...!?'' வாசுதேவன் நிதானமாக அழுத்தத்துடன் கூறியதை நம்ப முடியாத அதிர்ச்சியுடன் விழி விரிய அவனைப் பார்த்தாள் சம்யுக்தா.



"ஆமாம் சம்யுக்தா. உண்மையாகத்தான் சொல்றேன். நான் இப்பவே போய் உங்க அப்பாகிட்ட இந்த கல்யாணம் நடக்காதுன்னு சொல்லிடறேன் சரிதானே?'' வாசுதேவன் இலகுவாக கூறியபடியே காரை கிளப்ப முனைய அவசரமாக அவனது கரம் பற்றி தடுத்தாள் சம்யுக்தா.

நிச்சயதார்த்தம் முடிந்ததில் இருந்து ஒரு குழந்தையின் குதூகலத்துடன் பெற்றவரின் மனநிறைவுடன் கடமையை முடிக்கும் எதிர்பார்ப்புடன் வலம் வந்து கொண்டிருக்கும் சுந்தரலிங்கத்தின் முகம் சம்யுக்தாவின் மனக்கண்ணில் தோன்ற சம்யுக்தாவின் முகத்தில் கலவரத்தின் ரேகை படிந்தது.

"இப்ப வந்து இப்பப் போய் உடனடியாக இதைச் சொன்னால் அப்பாவால தாங்கிக்க முடியாதே...?'' சம்யுக்தாவின் குரலில் தவிப்பு தெரிய அதனை கண்டு கொள்ளாத இறுக்கத்துடன் அவளைப் பார்த்தான் வாசுதேவன்.

"இப்ப சொல்லாம வேற எப்ப சொல்லச் சொல்ற? கல்யாணத்துக்கு இன்னமும் இருபதே நாட்கள்தான் இருக்கு சம்யுக்தா. இதுக்கு மேலயும் காலம் தாழ்த்த முடியாது..''

"இதுக்காகத்தான் நான் நிச்சயதார்த்தம் நடந்த அன்னிக்கே உங்ககிட்ட சொன்னேன். நீங்கதான் கேட்கலை...''

"தப்புதான் சம்யுக்தா. நான் அன்னிக்கே நீ சொன்னதைக் கேட்டு இருக்கணும். சொந்தக்காரங்க அத்தனை பேரும் இருக்கும்போதே நீ சொன்ன மாதிரி நான் கல்யாணத்தை நிறுத்தி இருக்கனும்..."

"என்ன...!? நான் அப்பாகிட்ட தனியாகத்தானே உங்களை சொல்லச் சொன்னேன்..."

"அதைத்தான் இன்னிக்கு சொல்லிடறேன் என்கிறேன். இப்ப உங்க அப்பா தனியாகத்தானே இருக்கிறார்...?"

"ஆனா... அப்பா... அப்பாவால இதை..."

"தாங்கிக் கொள்ள முடியாதுதான். இப்ப சொன்னால் மட்டும் இல்ல... நீ சொன்ன மாதிரி நிச்சயதார்த்தம் நடந்த அன்னிக்கு அத்தனை பேருக்கு மத்தியில நான் கல்யாணத்தை நிறுத்தி இருந்தாலும் கூட உங்க அப்பாவால தாங்கிக் கொள்ள முடிந்திருக்காதுதான். ஆனா அதைப்பத்தி யெல்லாம் நான் எதுக்காக கவலைப்படணும் சம்யுக்தா...?"

"எனக்கு என் அப்பா முக்கியம்..."

ம்ஹூம்...? அப்படியா? ஆனால் அது உன் சொந்த விசயம் சம்யுக்தா. எனக்கு அதைப்பத்தி யெல்லாம் எந்த அக்கறையும் இல்லை. உனக்கு இந்த கல்யாணத்தில் விருப்பம் இல்லை. அதனால நானும் இந்த கல்யாணத்தை நிறுத்திவிட சம்மதிக்கிறேன். அவ்வளவுதான். உனக்கு இதுதானே வேண்டும்?"



"இல்ல...இது... அப்படி இல்ல. அப்பாவுக்கு இதனால..."

"போதும் சம்யுக்தா. ஸ்டாப் இட். அப்பா... அப்பா... அப்பா. உனக்கு மட்டும் தான் அப்பா இருக்கிறாரா... எனக்கு இல்லை? எனக்கும் ஒரு குடும்பம் இருக்கு சம்யுக்தா. உன்னைப் போல சுயநலமாக யோசிக்காம மத்தவங்களோட சுக துக்கத்தை மதிக்கிற குடும்பம் எங்க குடும்பம். அதனாலதான் நான் நீ அன்னிக்கு சொன்னதை பெரிதாக எடுத்துக்காம உங்க அப்பாகிட்ட அதைப் பத்தி காட்டிக்காம இதுவரைக்கும் நடந்துக்கிட்டேன். ஆனா நீ...? உன் மனதில் என்னைப்பத்தி என்ன நினைச்சிக்கிட்டு இருக்க? என்னை பார்த்தால் உன் அழகுக்கும் சொத்துக்கும் ஆசைப்படுகிற பேராசைக் காரன் மாதிரி இருக்கா? மனசுக்குப் பிடிக்கலைன்னா எப்பேர்ப்பட்ட பேரழகியையும் இந்த வாசுதேவன் திரும்பிக்கூட பார்க்கமாட்டான். என் குடும்பத்துக்கு நீ மருமகளாக வரணும்னு என்னைப் பெத்தவங்க முடிவு பண்ணினாங்க. அதனால நானும் உன்னை விரும்பினேன். நீ பேசினதை பெரிதாக எடுத்துக்காம இருந்துட்டேன். ஆனா இப்ப அது தப்புன்னு எனக்கு தோணுது..."

சம்யுக்தா திக்பிரமை பிடித்தவளாக அமர்ந்திருக்க வாசுதேவன் கோபத்துடன் மீண்டும் காரைக் கிளப்பினான்.

"வேண்டாம் கொஞ்சம் பொறுங்க. நான் நாம கொஞ்சம் யோசனை பண்ணிவிட்டு..."

"இனிமேல் யோசனை பண்றதுக்கு எதுவும் இல்லை சம்யுக்தா. ஒரு ஆண்மகனுக்கு மிகப்பெரிய அவமானம் எது தெரியுமா? தன்னை திருமணம் செய்துக்கப் போகிற பெண் தன்னை விரும்பலைன்னு தெரிஞ்சா அவனோட மனசு துடிக்கும் துடிப்பை உன்னால புரிஞ்சுக்க முடியுமா? உன்னால முடியாது. ஆனா நான் நம்ம ரெண்டு வீட்டு பெரியவங்களுக்காகவும் நம்ம ரெண்டு வீட்டு கவுரவத்திற்காகவும் பிடிக்காத ஒருத்தியை கல்யாணம் பண்ணிக்க தயாராக இருந்தேன். எனக்கு நல்லா தெரியும் இதனால என் வாழ்க்கைக்கான அர்த்தமே இல்லாம போயிரும்னு நல்லா தெரியும். தெரிஞ்சேதான் நான் என் வாழ்க்கையை பணயம் வெச்சிருக்கேன்."

"......"

"ஒரு விதத்தில் பார்க்கப் போனா இது எல்லாமே உன்னால வந்ததுதான். உன்னால்தான் என் வாழ்க்கையே மாறிப்போச்சு. நீ உன் விருப்பத்தை முதலிலேயே என்னிடம் தெரிவிச்சிருந்தால் நான் உன் வாழ்க்கைக்குள் வந்தே இருக்கமாட்டேன்



சம்யுக்தா. நீ இந்த உலகை ஆளும் ராணியாக இருந்தாலும் கூட உன்னை ஏறெடுத்துப் பார்த்திருக்க மாட்டேன். செய்வதையெல்லாம் நீ செய்துவிட்டு என் வாழ்க்கையையே சூனியமாக்கிவிட்டு நான் உன்னை ஏமாற்றிவிட்டதைப் போல நடந்துகொள்வது எந்த விதத்தில் நியாயம்?" வாசுதேவன் கண்கள் சிவக்க கேட்ட கேள்விக்கு பதில் கூற முடியாதவளாக தலைகுனிந்து கொண்டாள் சம்யுக்தா.

## 13

பெங்களூரின் போக்குவரத்து நெரிசலால் தோன்றிய இரைச்சலும் ஜனநடமாட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் சத்தமும் என எவ்வித சந்தடியும் எட்டாத ஒருவித பேரமைதி அந்தக் காருக்குள் பரவி இருக்க குனிந்திருந்த சம்யுக்தாவின் விழிகளில் இருந்து சொட்டிய கண்ணீர் அவளது கையில் பட்டுத் தெறித்தது.

எதுவும் செய்ய இயலாதவனாக பச்சாதாபத்துடன் சம்யுக்தாவைப் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் கண்களிலும் வேதனை படிந்திருந்தது.

"ச்சு... இப்ப எதுக்காக இப்படி அழுதுக்கிட்டு இருக்க? முதலில் கண்ணைத் துடை சம்யுக்தா. இது எல்லாமே நீயாக தேடிக்கிட்ட வேதனை. முதல்ல அழுகையை நிறுத்து."

"....."

"சரி சம்யுக்தா இப்ப சொல்லு. உனக்காக நான் என்ன செய்யணும்.....? உன் அப்பாகிட்ட சொல்லி கல்யாணத்தை நிறுத்தட்டுமா...?"

சம்யுக்தா அவசரமாக மறுப்பாக தலையசைக்க அவளது மறுப்பைக் கண்ட வாசுதேவனின் மனதிற்குள் சாரல் அடிக்கத் தொடங்கியது.

"சரி நான் எதுவும் சொல்லலை. ஆனா இதுக்கான சொல்யூசன் தான் என்ன சம்யுக்தா? நீ இப்படியே வேதனைப்பட்டுக்கிட்டு இருக்கிறதை என்னால பார்க்க முடியாது."

சம்யுக்தா அமைதியாக கண்களைத் துடைத்த படியே தலை நிமிர அவளது முகத்திலேயே பார்வையை பதித்திருந்த வாசுதேவனின் கண்கள் கூர்மையானது.

"ஏதாவது பேசு சம்யுக்தா. இப்படி நான் மட்டுமே பேசிக்கிட்டு இருந்தால் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காது சம்யுக்தா."

"நான் என்ன சொல்லணும்னு நீங்க எதிர்பார்க்கறீங்க? இப்ப இந்த சூழ்நிலையில என்னால எதைப்பத்தியுமே யோசிக்க முடியலைங்க. தலையே வெடிச்சிரும்போல இருக்கு" சம்யுக்தா குனிந்து தன் இரு கைகளாலும் தலையை தாங்கிப்



பிடித்துக் கொள்ள அவளைப் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் மனதிற்குள் அவளது நிலையை எண்ணி இரக்கம் தோன்றியது.

'எதுக்காக? இப்படி பிடிவாதம் பிடிச்சுக்கிட்டு உனக்கு நீயே வேதனையை கொடுத்துக்கிற? நீ என்னை கல்யாணம் பண்ணிக்க முழு மனதாக சம்மதிக்கிறேன்னு மட்டும் ஒரே ஒரு வார்த்தை சொல்லி விடு சம்யுக்தா. உன்னை என் இதயத்தில் வைத்துப் பாதுகாக்கிறேன். அதன் பிறகு எந்தத் துன்பமும் உன் அருகில் கூட வரமுடியாமல் உனக்குப் பாதுகாப்பாக துணையாக நான் இருப்பேன் சம்யுக்தா. ப்ளீஸ் வாய்திறந்து பேசுடி. என்னைக் கொல்லாதே...'

வாசுதேவன் மனதிற்குள் அரற்றிக் கொண்டிருப்பதை அறியாதவளாக தலையை கைகளால் அழுந்தப் பிடித்துக் கொண்டு கண்மூடி அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

"சரி... வா, உன்னை உன் வீட்டில் டிராப் செய்துடறேன்..." வாசுதேவன் பொறுமையிழந்த வனாக கூற அவசரமாக தலை நிமிர்ந்து அவனை மறுப்பாக பார்த்தாள் சம்யுக்தா.

"எதுவுமே வாங்காம போனா அப்பாவுக்கு நான் என்ன பதில் சொல்வது?"

"இப்ப இந்த நகையும் மற்ற பொருட்களும் எதற்காக சம்யுக்தா...? நடக்காத ஒன்றிற்காக

இத்தனை வீண் செலவு அவசியமா?'' வாசுதேவனின் வார்த்தைகளில் தெரிந்த வெறுமை மனதைச் சுட அவனை கெஞ்சுதலாக பார்த்தாள் சம்யுக்தா.

"வந்து நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கலாமா?''

"கேளு சம்யுக்தா, என்கிட்ட நீ தாராளமாக என்ன வேணும்னாலும் கேக்கலாம்'' வாசுதேவனின் பார்வை சம்யுக்தாவை ஊடுருவிப் பார்க்க முயல அவனை பார்த்த சம்யுக்தாவின் முகத்தில் தயக்கம் தெரிந்தது.

"வந்து எனக்கு கொஞ்சம் டயம் வேணும்.''

"எதுக்கு?''

வார்த்தைகளை மென்று விழுங்கியபடி கூறிய சம்யுக்தாவின் மீது வாசுதேவனின் பார்வை உறுதியுடன் படிந்தது.

அவனது கேள்விக்கான பதிலை மறந்தவளாக சம்யுக்தா திகைப்புடன் வாசுதேவனைப் பார்க்க அவளது நிலை புரிந்து கொண்டவனாக தன் பார்வையை திருப்பிக் கொண்டான் வாசுதேவன்.

"நீ கேக்கிற அவகாசம் கல்யாணத்துக்கான்னா ஐம் சாரி சம்யுக்தா. இதுக்கும் மேல ஒரு நிமிசம்கூட என்னால உனக்கு டயம் கொடுக்க முடியாது. ஏன்னா ஏற்கெனவே நம்ம ரெண்டு பேர் வீட்டிலும் நம்மளைப்



பத்தி நிறைய எதிர்பார்ப்புகளை நாம உருவாக்கிட்டோம். இனிமேலும் அவங்களை ஏமாற்ற நான் தயாராக இல்லை...''

"நான்... நான்... கல்யாணத்தைப் பத்தி பேசலை... ஆனா ஆனா'' சம்யுக்தா கூறாமல் விட்ட வார்த்தைகளை அவளது படபடக்கும் கண்கள் வாசுதேவனுக்கு உணர்த்திவிட அவன் மென்மை படர்ந்த முகத்துடன் நன்றாக சம்யுக்தாவின் பக்கமாக திரும்பி அமர்ந்து கொண்டான்.

"இதோபார் சம்யுக்தா... நீ கேக்கிற அவகாசம் கல்யாணத்துக்கு அப்புறமான நம்ம வாழ்க்கைக் கான அவகாசம்னா நான் உனக்கு வேண்டிய அளவு அவகாசத்தைக் கொடுக்க தயாராக இருக்கேன். என்னைப் பொறுத்தவரையில் கல்யாணத்திற்கு பிறகு என்மீது உனக்கு பரிபூரண உரிமை உண்டு. உனக்கான அனைத்துமாக நான் இருப்பேன். அதே நேரத்தில் நான் உன்னிடம் உன் விருப்பம் இல்லாமல் எந்த விதமான உரிமையும் எடுத்துக்க மாட்டேன். சரியா?''

சம்யுக்தா அமைதியாக கீழ் உதட்டை அழுந்தக் கடித்தபடி அமர்ந்திருக்க அவளது இதழ்களை ஆசையுடன் பார்வையால் வருடியபடி அவளைப் பார்த்தான் வாசுதேவன்.

"என்னுடன் இணைந்து வாழ உனக்கு விருப்பமே இல்லாமல் போனாலும்கூட நான்

அதற்காக வருத்தப்பட மாட்டேன் சம்யுக்தா. ஏன்னா நம்மோட கல்யாண வாழ்க்கை இப்படித்தான் இருக்கப் போகுதுன்னு நானும் எதிர்பார்த்தே இருந்தேன். அதனால எனக்கு எந்தவிதமான ஏமாற்றமும் இருக்காது.''

"....."

"ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள் சம்யுக்தா. நம்முடைய வாழ்க்கை எந்த சூழ்நிலையிலும் நம்மளைப் பெத்தவங்களுக்கு தெரிஞ்சிடக் கூடாது. நான் அவங்க தெரிஞ்சுக்கிற அளவுக்கு நடக்க மாட்டேன். அதே போல நீயும் அவங்களுக்கு எவ்விதமான சந்தேகமும் வராதபடி நடந்துக்கணும். அப்படி நீ நடந்துக்காமல் போனா அப்புறம் நீ இந்த வாசுதேவனுடைய இன்னொரு சுயரூபத்தைப் பார்க்க வேண்டியதாகிவிடும் சம்யுக்தா. இதை உனக்கான எச்சரிக்கையாகவே நான் சொல்கிறேன்.''

வாசுதேவன் ஒவ்வொரு வாக்கியத்தையும் நிதானமாக கூறிக்கொண்டிருக்க அவனது கடைசி வாக்கியத்தை கூறும்போது கண்கள் பளபளக்க எச்சரிக்கை பாவனையுடன் சம்யுக்தாவின் விழிகளை ஊடுருவிய வாசுதேவனின் பார்வை சம்யுக்தாவின் முதுகுத் தண்டினை பயத்தால் சிலிர்க்கச் செய்தது.



"இல்ல நான் என்னால யாரையும் கஷ்டப்படுத்த முடியாது. யாருடைய மனசும் வருத்தப்படாதபடி நான் நடந்துக்க டிரை பண்றேங்க ஐ பிராமிஸ்.''

"ஆமாமாம். உன்னால என்னை மட்டும்தான் கஷ்டப்படவைக்க முடியும்னு எனக்குத்தான் தெரியுமே.''

வாசுதேவன் கேலியாக கூறினாலும்கூட அவனது வார்த்தைகளில் உள்ளூர தெரிந்த வலியை சம்யுக்தாவினால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவள் குற்றவுணர்வுடன் பார்வையை தழைத்துக் கொண்டாள்.

"சரி வா ஏற்கெனவே லேட் ஆகிருச்சு. அந்த சேட்டு இதுக்குள்ள உங்க அப்பாவுக்கு போன் பண்ணிட்டானோ என்னவோ? வா வா'' வாசுதேவன் பரபரப்புடன் காரை விட்டிறங்க அவனது அவசரம் தன்னையும் தொற்றிக் கொண்டவளாக காரில் இருந்து இறங்கினாள் சம்யுக்தா.

அதுநாள் வரையிலும் அவளது மனதினை பாரமாக அழுத்திக் கொண்டிருந்த வேதனை தீருவதற்கான வழிவகையை கண்டுபிடித்து விட்டதைப் போல மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு சம்யுக்தாவின் மனதிற்குள் தெளிவு தோன்றியிருந்தது. இதற்காக அவள் வாசுதேவனுக்கு மானசீகமாக நன்றியை தெரிவிக்கவும் தயங்கவில்லை. அதன்

வெளிப்பாடாகத்தானோ என்னவோ அதன்பிறகு சம்யுக்தா வாசுதேவன் கூறிய எந்த வார்த்தைக்கும் விருப்பத்திற்கும் மறுப்பே தெரிவிக்காதவளாக அனைத்தையும் ஆமோதித்து ஏற்றுக் கொண்டாள்.

"இந்த வைர அட்டிகை மாலை, வளையல், தோடு இது எல்லாத்தையும் தனியாக எடுத்து வைங்க. இது உனக்கு ஒகே தானே சம்யுக்தா?"

"ம்ம்ம் ஒகே..."

"அப்புறம் அந்த பச்சைக் கல் ஜிமிக்கி அந்த சின்ன மாங்காய் மாலை அந்த பச்சைக் கல் வளையல் இதையும் பேக் பண்ணிடுங்க இது பிடிச்சிருக்குதானே?"

"ம்ம்ம் பிடிச்சிருக்கு."

"அந்த பவள நெக்லஸ் அதை தனியா பேக் பண்ணி பில்லையும் தனியாக போட்டுடுங்க சார். அதுகூடவே இந்த பிரேஸ்லெட்டையும் சேர்த்துக்கங்க."

வாசுதேவன் கண்ணைப் பறிக்கும் விதமாக ஜொலித்துக் கொண்டிருந்த நெக்லசையும் அதே வண்ண பிரேஸ்லெட்டையும் தனியாக எடுத்து வைக்க அதனை புரியாமல் பார்த்த சம்யுக்தாவின் கைகளில் அவை இரண்டையும் எடுத்துக் கொடுத்தான் வாசுதேவன்.

"இது நம்ம மேரேஜுக்காக என்னோட கிப்ட் சம்யுக்தா. இதுவும் உனக்கு பிடிச்சிருக்குதானே?"



வாசுதேவன் ஆர்வமாக பார்க்க அவனது விருப்பத்திற்கு மறுப்பளிக்க மனமற்றவளாக அவற்றை ஏற்றுக் கொண்ட சம்யுக்தாவின் முகத்தில் தயக்கம் தெரிந்தது.

"அப்பாதான் இத்தனை நகைகளை வாங்கி இருக்காரே. இது போக வீட்டிலும் நிறைய நகைகள் இருக்கு"

"இருக்கட்டும் சம்யுக்தா. உன்னிடம் எவ்வளவு நகை இருந்தாலும் நான் உனக்காக வாங்கிக் கொடுப்பதுதான் எனக்கு சந்தோசம். அதுதான் உனக்கும் ஸ்பெசலாக இருக்கும்னு நினைக்கிறேன்."

வாசுதேவனின் மெல்லிய குரல் ஆண்மையின் கரகரப்புடன் கம்பீரமாக சம்யுக்தாவின் காதருகில் ஒலிக்க முதன் முறையாக அவனது குரலில் வசீகரிக்கப் பட்டவளாக நின்றிருந்தாள் சம்யுக்தா.

"சார் வெள்ளி விளக்கு கேட்டீங்களே" கடைக் காரப் பையனின் குரல் சம்யுக்தாவின் கவனத்தைத் திருப்ப அவன் கொண்டு வந்து வைத்த விளக்குகளை திருப்தி இல்லாதவனாக பார்த்து உதட்டை பிதுக்கினான் வாசுதேவன்.

"நான் கேட்டது மகாலட்சுமி இருக்கிற மாதிரியான விளக்கு சார்" வாசுதேவன் கூறிக் கொண்டிருக்கும் போதே மற்றொருவன் தன் கைகளில் சில விளக்குகளை ஏந்திக் கொண்டுவந்து

அவர்களின் முன்பாக வைக்க அவற்றில் நடு நாயகமாக இருந்த விளக்கினை கையில் எடுத்துப் பார்த்த வாசுதேவனின் முகத்தில் பரி பூரண திருப்தி இருந்தது.

மகாலட்சுமி தேவி தாமரை மலரில் அமர்ந்திருக்க அவரை சுற்றிலும் ஐந்து விளக்கு முகப்புகள் அமைந்திருக்க அந்த விளக்கின் மேல் பாகத்தைத் தாங்கியிருந்த அடிபாகத்திலும் தாமரை இதழ்கள் விரிந்த நிலையில் இருப்பதை போல காணப்பட்ட விளக்கு சம்யுக்தாவின் மனதிற்கும் நிறைவைக் கொடுத்தது.

“எங்க ஊர் பக்கம் வீட்டுக்கு வருகிற மருமகளை மகாலட்சுமியின் அம்சமாக நினைத்து தான் வரவேற்பார்கள். என் வீட்டிற்குள்ளும் நீ அதே போல அம்பாளின் உருவத்துடன் வரவேண்டும் என்பது என் ஆசை சம்யுக்தா” வாசுதேவன் கூறியதைக் கேட்டபடியே அந்த விளக்கினை ஆசையுடன் வருடிப் பார்த்தாள் சம்யுக்தா.

‘இவனிடம் என்ன ஒரு ரசனை இருக்கிறது பார்! இது இவனுடைய பிறவிக் குணமாக இருக்கும் போல.’

சம்யுக்தாவின் கண்கள் வாசுதேவன் தேர்வு செய்து இருந்த நகையின் மீது ரசனையுடன் படிந்தது.



‘சாதாரணமாக வாங்கும் பொருட்களில் கூட இவ்வளவு ரசனையாக இருக்கிற இவன் வாழ்க்கையையும் ரசித்து வாழ்ந்துதான் பழகி இருப்பான்.’

இனி வாசுதேவனுடனான தன்னுடைய வாழ்க்கையை பற்றிய கவலைகளை மறந்தவளாக வாசுதேவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பற்றிய சிந்தனைகளுடன் தன் வீடு திரும்பிய சம்யுக்தா வெகு நாட்களுக்குப் பிறகு அன்று இரவு நிம்மதியாக உறங்கத் தொடங்கினாள்.

## 14

**ம**லையாக குவிந்து கிடந்த சேலைக் கூட்டத்தின் இடையே தனக்கான சேலைகளை முன்பே திட்டமிட்டு இருந்தவளைப் போல நேர்த்தியான லாவகத்துடன் தேர்ந்தெடுத்த வேதவதியை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

இத்தனைக்கும் மேலாக ஒரிரு நிமிடங்களில் அவள் தேர்ந்தெடுத்திருந்த சேலைகள் அத்தனையுமே மிகுந்த வேலைப்பாடுடன் அழகழகான வண்ணங் களில் கண்ணை உறுத்தாத பாந்தத்துடன் இருந்ததைக் கண்ட சம்யுக்தாவின் மனதிற்குள் வருங்கால மாமியார் மீது தனி மரியாதை உருவாகியது.

'வாசுதேவனின் ரசனைக்கான மூலகாரணம் அவருடைய அம்மாவாகத்தான் இருக்க வேண்டும்' மனதிற்குள் எண்ணமிட்டபடியே அமர்ந்திருந்த சம்யுக்தாவின் முன்பாக தான் தேர்ந்தெடுத்திருந்த சேலைகளை எடுத்து வைத்தாள் வேதவதி.

"எனக்குத் தோணின வரைக்கும் செலக்ட் செய்திருக்கேன்டா. இதில் இருந்து உனக்குப் பிடிச்சதை நீ செலக்ட் பண்ணு. ஒரு வேளை இதுல எதுவும் பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை சம்யுக்தா. உனக்கு பிடிச்சதை எடுத்துக்க."

'ஐயோ அத்தை. எனக்கு சேலை செலக்சன் எல்லாம் தெரியாது. நீங்க செலக்ட் பண்ணியிருக்கிற சேலைகளே நல்லா இருக்கு'' சம்யுக்தா அவசரமாகக் கூற மென்மையாக புன்னகைத்தாள் வேதவதி.

"இப்ப என்னடா கண்ணு அதான் நான் இருக்கேனில்ல? உனக்கு எது நல்லா இருக்கும்னு எனக்குத் தெரியும்டா. நீ கவலையை விடு'' வேதவதி கூறியபடியே தான் தேர்ந்தெடுத்து வைத்திருந்த சேலைகளிலேயே மிகவும் விலையுயர்ந்தவைகளாக பார்த்துத் தனியாக எடுத்து வைத்தாள்.

"இத்தனை சேலை எதுக்கும்மா வேதவதி. சும்மா ஒரு ரெண்டு புடவை மட்டும் எடும்மா'' சுந்தரலிங்கம் வேதவதி எடுத்து அடுக்கிய சேலைகளை பார்த்தபடியே தயக்கத்துடன் கூற தன்



வழக்கமான புன்னகையுடனேயே சுந்தரலிங்கத்தை திரும்பிப் பார்த்தாள் வேதவதி.

"கல்யாணம்ங்கிறது வாழ்நாளிலேயே ஒரு முறை வருகிற விசேசம் அண்ணா. என் மருமகள் அந்த நாளில் வேளைக்கொரு புடவையாக கட்டிக்கட்டும். நம்ம கிட்ட காசு பணத்துக்கு குறைச்சலா என்ன? புள்ளைங்க சந்தோசமாக இருந்தால் போதும் அண்ணா'' வேதவ்தி பெருமையும் பூரிப்பாக கூறிவிட அதற்கு மேலாக மறுப்பு கூறாமல் அமர்ந்து விட்டார் சுந்தரலிங்கம்.

"அம்மா உன் பார்ச்சேஸ் முடிஞ்சிருச்சா இல்லையா? நானும் அண்ணியும் எனக்கு டிரெஸ் செலக்ட் பண்ண போகணும்மா'' சிணுங்கலாக கூறியபடியே சம்யுக்தாவின் கைப்பற்றி இழுத்த ஸ்பந்தனாவுடன் சிரித்தபடியே எழுந்து நின்றாள் சம்யுக்தா.

"எனக்கு தேவையானதை எல்லாம் அத்தையே பார்த்து வாங்கிடுவாங்க ஸ்பந்தனா. அதனால நாம உனக்கான டிரெஸ்ஸை பார்க்க போகலாம் வா."

"ஹை! அண்ணின்னா இப்படித்தான் இருக்கணும். நீங்க வாங்க அண்ணி போகலாம்'' ஸ்பந்தனா ஆசையுடன் சம்யுக்தாவின் தோள்களைக் கட்டிக் கொண்டு குதூகலத்துடன் கொஞ்ச இருவரையும் பார்த்து உள்ளூர மகிழ்வுடன்

கணவரிடம் திரும்பி கண்களால் அவர்களை சுட்டிக் காட்டி மகிழ்ந்தாள் வேதவதி.

“சரி சரி தனா. நீங்க ரெண்டு பேருமாக தனியாகப் போக வேண்டாம். நானும் உங்ககூட வர்றேன் வா” வாசுதேவன் ஸ்பந்தனாவிடம் கூறிக் கொண்டே எழுந்து நிற்க கேலிச் சிரிப்புடன் அண்ணனைப் பார்த்து ஒற்றைக் கண்ணை சிமிட்டினாள் ஸ்பந்தனா.

“என்னண்ணா? என்னை சாக்கு வெச்சு அண்ணிகூட ரொமான்ஸ் பண்ணிக்கலாம்னு பார்க்கறீங்களா? நடத்துங்க நடத்துங்க.”

ஸ்பந்தனாவின் கேலிச் சிரிப்பைப் பார்த்த சம்யுக்தா முகம் சிவக்க செல்லக் கோபத்துடன் மகளது முதுகில் தட்டினாள் வேதவதி.

"ஏய், அண்ணனை கேலி செய்கிற அளவுக்கு பெரிய மனுசி ஆகிட்டியா நீ? வாயை மூடிக்கிட்டு போடி பொண்ணு."

"அம்மா – மருமக வந்துட்டாங்கன்னு ரொம்பத் தான் எகத்து காட்ட வேண்டாம், அவங்க முதலில் எனக்கு அண்ணி. அப்புறம்தான் உங்களுக்கு மருமகள்... அதனால பர்ஸ்ட் பிரிபரென்ஸ் எனக்கு தான் இருக்கு. தெரிஞ்சதா..?" ஸ்பந்தனா இடுப்பில் கைவைத்து அன்னையை முறைக்க... வேதவதி லேசாக தலையில் அடித்துக்கொண்டே வாசுதேவனைப் பார்த்தாள்.



"வாசு... இந்த வாயாடியைக் கூட்டிக்கிட்டு போய் முதலில் அவளுக்கு என்ன வேணுமோ வாங்கிக் கொடுப்பா. அப்பதான் இவ அடங்குவா..."

"ம்ம்... அது... அந்த பயம் இருக்கணும். ஸ்பந்தனான்னா சும்மாவா... இல்லாத காலரை உயர்த்துபவளைப் போல பாவனை செய்து கொண்டே தோளில் சாய்ந்து கொண்ட ஸ்பந்தனாவை... அந்த நொடி முதலாக மனதார தன் உடன்பிறந்தவளாக எண்ணி அன்பு செலுத்தத் தொடங்கினாள் சம்யுக்தா.

வேதவதிக்கு நேர்மாறாக கடையின் அத்தனை உடைகளையும் கலைத்து போட்டுப் பார்த்த பிறகும்... தனக்கான உடையை தேர்ந்தெடுக்க முடியாதவளாக கன்னத்தில் கைவைத்து யோசனை செய்து கொண்டிருந்த தங்கையை வாசுதேவன் பரிதாபமாக பார்த்தபடியே நின்றிருப்பதைக் கண்ட சம்யுக்தாவிற்கு சிரிப்பு வந்து விட்டது.

"என்ன ஸ்பந்தனா இது...? இத்தனை டிரெஸ்ஸில் உனக்கு ஒன்று கூட பிடிக்கலையா?"

"ம்ப்ச் – அப்படி இல்லண்ணி. எனக்கு எல்லாத்தையுமே பிடிச்சிருக்கு. அதுதான் பிராப்ளமே..." ஸ்பந்தனா குழந்தைத் தனத்துடன் கூற – அதைக் கேட்ட வாசுதேவனின் விழிகள் அதிர்ச்சியில் விரிந்தது.

"என்னது !?" வாசுதேவன் அலறாத குறையாக உரக்கக் கேட்ட விதத்தில் – சலிப்புடன் உடையை

தேடி எடுத்துக் கொண்டிருந்த கடைக்கார பையன் கையில் எடுத்த சுடிதாரை கீழே போட்டு விட்டு... அதிர்ந்து திரும்பிப் பார்த்தான்.

"என்ன சார் ஆச்சு...?" கடைக்காரன் அதிர்வு மாறாமல் கேட்க... அவனது கேள்விக்கு பதில் கூற தெரியாதவனாக கடைக்காரனை அசட்டுச் சிரிப்புடன் வாசுதேவன் பார்க்க... இதைக் கண்ட சம்யுக்தா வாய்விட்டுச் சிரித்தபடியே ஸ்பந்தனாவை அணைத்துக் கொண்டாள்.

அதுநாள் வரையிலும் சம்யுக்தாவை வெறுமை யான முகத்துடன் கலங்கிய கண்களுடனேயே பார்த்திருந்த வாசுதேவனுக்கு... சம்யுக்தாவின் மனம் விட்டுச் சிரித்த தோற்றத்தை முதன் முறையாக பார்த்த அந்த நொடி தன் வாழ்நாள் முழுமைக்கும் மறக்க முடியாத தருணமாக தோன்றியது.

அவன் சம்யுக்தாவின் சிரித்த தோற்றத்தினை தன் கண்ணிமைகளுக்குள் பாதுகாத்து... இதய அறைக்குள் பொக்கிஷமாக நிறைந்துக் கொண்டான்.

'பாவி... சிரிக்கும் போது எத்தனை அழகாக இருக்கிறாள்! இப்படி சிரித்த முகத்துடன் இருந்தால்தான் என்ன...?' மனதிற்குள் மெல்ல முணுமுணுத்து கொண்ட வாசுதேவன்... தன்னவளை அப்படி சிரிக்க வைத்த தங்கைக்கு அந்த கடை முழுவதையுமே வாங்கி பரிசளித்துவிட வேண்டும் போல இருந்தது.



"தனா.... இன்னிக்கு உன் சாய்ஸ்தான். உனக்கு எத்தனை டிரெஸ் எடுக்கணுமோ... எடுத்துக்க...."

"இந்தக் கதையெல்லாம் வேண்டாம் அண்ணா. நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும் நான் எனக்கு வேணும்ங்கிறதை எடுத்துக்குவேன்."

வாசுதேவன் மறுபடியும் அசடு வழிய நிற்க.... சம்யுக்தா சிரித்தபடியே தன் செல்ல நாத்தனாரை அணைத்துக் கொண்டாள்.

சிரிப்பின் போது சம்யுக்தாவிடம் ஒரு தேவதையின் எழில் தோன்றுவதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் கால்கள் அவனையும் அறியாமல் நகர்ந்து சென்று சம்யுக்தாவின் அருகாமையில் நின்றுகொண்டது.

வாசுதேவன் தனக்கு மிக அருகில் நிற்பதைக் கூட அறியாதவளாக பேச்சும் சிரிப்புமாக ஸ்பந்தனாவுடன் அரட்டையடித்த படியே அவளுக்கான உடைகளை தேர்வு செய்து கொண்டிருந்த சம்யுக்தாவின் கைகள் அவ்வப்போது வாசுதேவனை லேசாக இடித்தபடி இருக்க... உடைகளை பார்ப்பதற்காக சம்யுக்தா திரும்பிய போதெல்லாம் வாசுதேவனின் மீது படர்ந்து விலகிய சம்யுக்தாவின் பெண்மை வாசுதேவனுக்குள் மூட்டிய நெருப்பின் வெம்மை. அவனை சுட்டெரிப்பதற்குப் பதிலாக

வாசுதேவனின் உள்ளமெங்கும் இன்ப மழையின் சாரலால் நனைத்துக் கொண்டிருக்க... தன்னை மறந்த நிலையில் நின்று விட்டான் வாசுதேவன்.

"அண்ணா – கார்டைக் கொடுங்கண்ணா..." ஸ்பந்தனாவின் அழுத்தமான அழைப்பு கவனத்தைக் கலைத்து... வாசுதேவனைத் தன்னுணர்வுக்குத் திரும்பப் செய்ய... வாசுதேவன் தனக்குள் புன்னகைத்தபடியே ஸ்பந்தனாவை பார்த்து தலையசைத்தான்.

"நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருங்க தனா. நான் போய் பே பண்ணிவிட்டு வர்றேன்...." என்றபடி நகர்ந்தவன்... கடைக்குள் நிலவிய கூட்டத்தைப் பார்த்துவிட்டு தன் முடிவை மாற்றிக் கொண்டவனாக அவர்களிடம் திரும்பினான்.

"வேண்டாம் தனா, கூட்டம் அதிகமாக இருக்கு. அதனால் நீங்க இங்க தனியாக நிற்க வேண்டாம். நீங்களும் வாங்க..." என்றபடியே ஸ்பந்தனாவை தனக்கு முன்பாக செல்ல விட்டு... சம்யுக்தாவை தன் கை வளைவிற்குள் அணைத்தபடியே நடக்கத் தொடங்கினான் வாசுதேவன்.

அது சற்று பெரிய கடை என்பதினால்... துணிகளை வாங்கும் இடத்திற்கும்... அதற்கான தொகையை செலுத்தும் இடத்திற்குமான தூரம் சற்று நீளமாகவே இருக்க... இடைவெளியில் நிறைந்திருந்த மனிதர்களின் இடையே இருவரையும் பாதுகாப்பாக அரவணைத்து வாசுதேவன் அழைத்துச் சென்ற விதம் சம்யுத்தாவின் மனத்திற்கு மிகவும் இதமாக இருந்தது.



சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட சம்யுக்தாவிற்கு தனக்கு எல்லாமாக இருந்த தந்தைக்கு தொல்லை தராமல் வாழ்ந்தே பழகிவிட்டவள்... இன்று

தனக்காக... தன்னைப் பாதுகாப்பாக அரவணைத்துச் செல்ல ஒருவன் இருப்பதை எண்ணிய பெருமிதம் மனதிற்குள் தலை தூக்கியது.

அவர்கள் இருவரையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்று ஒரு ஓரமாக தன் அருகிலேயே நிற்க வைத்திருந்தாலும் கூட... தன் கிரெடிட் கார்டை கடைக்காரனிடம் கொடுத்து தங்களுடைய உடைகளை வாங்கி சரி பார்த்தும் பெற்று கொண்டிருந்தாலும் வாசுதேவனின் பார்வை மட்டும் அவர்கள் இருவரையும் விட்டு விலகாமல் கண்காணித்துக் கொண்டே இருந்தது.

குஞ்சுகளை பாதுகாக்கும் தாய்ப் பறவையின் அன்பான எச்சரிக்கையுடன் வாசுதேவனின் கண்கள் அலைபாய்வதை கண்ட சம்யுக்தா. தன்னை விட்டு சற்று தள்ளி நின்று கொண்டு ஷோகேஸில் இருந்த உடைகளை பார்த்துக் கொண்டிருந்த ஸ்பந்தனாவை

தன் கை நீட்டி அழைத்து... அவளை தன் கை அணைப்பிற்குள் நிறுத்திக் கொண்டாள்.

சம்யுக்தாவின் செய்கையை கண்ட வாசுதேவனின் முகத்தில் மென்மை கலந்த நிம்மதி படர்ந்தது. சம்யுக்தா தன்னையும் அறியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாக வாசுதேவனின் குடும்பத்தினருடன் மனதளவில் உறவில் ஒன்று பட்டுக் கொண்டிருப்பதை அவளது நடவடிக்கைகள் வாசுதேவனுக்கு உணர்த்த அவனது மனதிற்குள் நிம்மதி கலந்த ஆனந்தம் தோன்றியது.

"என்னப்பா வாசு... இந்த தனா கேட்ட எல்லாத்தையும் வாங்கியாச்சா...? இங்க பாரு ஸ்பந்தனா... இதுக்கு மேல அங்க வந்து இதை வாங்க மறந்துட்டேன். அதை வாங்க மறந்துட்டேன்னு என் உயிரை வாங்கக் கூடாது சொல்லிட்டேன்..." வேதவதி கண்டிப்புடன் கூற முகம் சிணுங்கிய ஸ்பந்தனாவை அன்புடன் அனைத்துக் கொண்டாள் சம்யுக்தா.

"அதனால ஒரு ப்ராப்ளம் இல்ல ஸ்பந்தனா. உனக்கு என்ன வேணுமோ எனக்கு ஒரு போன் பண்ணிச் சொல்லிடு. நான் வாங்கிட்டு வந்து தர்றேன் சரியா?" கூறிய சம்யுக்தாவின் இடையில் கை கொடுத்து குதூகலத்துடன் கட்டிக் கொண்டாள் ஸ்பந்தனா.



"தேங்க்யூ அண்ணி. யூவார் மை ஸ்வீட் அண்ணி. என் பிரண்ட்ஸ் நிறைய பேர் இங்க தான் டிரெஸ் எடுக்கிறாங்க. அப்ப எல்லாம் அவங்களை பார்த்து எனக்கு பொறாமையாக இருக்கும். ஆனால்.. இனிமேல்தான் எனக்கு கவலையே இல்லையே... ஏன்னா இப்பதான் நீங்க இருக்கீங்களே...? நான்..." ஸ்பந்தனா உற்சாகமாக பேசிக் கொண்டிருக்க... அவளை கண்டிப்புடன் இடைமறித்தது வாசு தேவனின் குரல்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் சம்யுக்தா, நீ தனியாக கடைக்கெல்லாம் அலைய வேண்டாம். தனா உனக்கு என்ன வேணுமோ என்கிட்ட சொல்லு..."

வாசுதேவனின் கண்கள் கவலையுடன் கடைக்குள் அலைமோதிய கூட்டத்தை சுற்றி வர அவனது மனதினை அறிந்து கொண்டவளாக சம்மதமாக தலையசைத்தாள் சம்யுக்தா.

## 15

**வ**ண்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த திருமண மண்டபம் இந்திரலோகத்தின் பேரெழிலோடு போட்டியிட விரும்புவதைப் போல பிரகாசித்துக் கொண்டிருக்க உறவினர்களும் நண்பர்களுமாக கூட்டம் கூட்டமாக வந்தவர்கள்

அனைவரையும் வாசலில் நின்று வரவேற்றுக் கொண்டிருந்த வேதவதி தம்பதியினரின் முகத்திலும் சுந்தரலிங்கத்தின் முகத்திலும் சந்தோசத்தின் பூரிப்பு நிறைந்திருந்தது.

திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே பெங்களூரில் இருந்து ஃபிளைட்டில் வந்திறங்கிவிட்ட சுந்தரலிங்கமும் சம்யுக்தாவும் கடந்த இரண்டு தினங்களாக மேட்டுப்பாளையத்தில் இருந்த மிகப் பெரிய ஹோட்டலில் தங்கி இருக்க முறைப்படி அன்று மாலை மாப்பிள்ளை வீட்டினரான வாசுதேவனின் உறவினர் சென்று மணமகளை அழைத்து வந்து மண்டபத்தில் தங்க வைத்திருந்தார்கள்.

மணமகள் அழைப்பிற்காக சென்றிருந்த காரில் இருந்து இறங்கிய சம்யுக்தாவினை கண்ட உறவினர்கள் அனைவரின் கண்களிலும் வியப்பு தெரிய அதைக் கண்ட வேதவதியின் முகத்தில் கரைகாணாத பெருமை தோன்றியது.

"அண்ணி... நான்தான் உங்களை ஆரத்தி எடுத்து வரவேற்கிறேன். அதனால... இனிமேல் நீங்க என்னிக்குமே எனக்கு தேங்க்புல்லா இருக்கணும் சரியா...?" ஸ்பந்தனா வழக்கமான கலகலப்புடன் சிரித்தபடியே ஆரத்தி எடுக்க புன்னகையுடன் அவளைப் பார்த்து தலையசைத்த சம்யுக்தாவின் கன்னம் வழித்து திருஷ்டி கழித்தாள் காமாட்சி.



"என் பேத்திங்க ரெண்டு பேரும் என்னிக்குமே ஒத்துமையாக இருந்தாலே போதுமே... இதுல தேங்க்ஃபுல்லா இருக்க வேண்டிய தேவை என்ன இருக்கு? நீ வாடா கண்ணு" நிறைந்த மனதுடன்... பெரிய மனுசியாக தன் கையை பிடித்து அழைத்துச் சென்ற காமாட்சியை அமைதியாக பின்தொடர்ந்தாள் சம்யுக்தா.

"ஸ்பந்தனா... உன்னை உங்க அம்மா வரச் சொன்னாங்க... போ." இடுப்பில் குழந்தையுடன் வந்த சுந்தரி கூறியதை நம்பாதவளாக சந்தேகமாக அவளைப் பார்த்த ஸ்பந்தனாவை முறைத்தாள் சுந்தரி.

"அம்மாடி... உன்கிட்டதான் சொன்னேன். காதில விழுகலையா...?" எரிச்சலுடன் கேட்ட சுந்தரியை பதிலுக்கு முறைந்தபடியே அறையை விட்டு வெளியேறிய ஸ்பந்தனாவைப் பார்த்து முகத்தை நொடித்து விட்டு... மணமகளாக தலை குனிந்து அமர்ந்திருந்த சம்யுக்தாவைப் பார்த்த சுந்தரியின் முகத்தில் பொறாமை வெளிப்படையாக தெரிந்தது.

'இம்புட்டு அழகோட... நகை நட்டோட இருக்கிறது... அந்தப் பக்கமே வேற ஏதாவது மாப்பிள்ளையை பிடிச்சுக்கிட்டு போக வேண்டியது தானே? இப்படி என் தங்கச்சி வாழ்க்கையை

கெடுக்கிறதுக்காகவே இங்க வந்திருக்கிறாளே இந்த வினைகாரி?' உள்ளூர பல்லைக் கடித்த படியே சுந்தரி சம்யுக்தாவின் அருகே சென்று அமர... லேசாக தலையுயர்த்தி அவளைப் பார்த்து பாவனை யுடன் சிரித்தாள் சம்யுக்தா.

அத்தனை நேரம் வரையிலும் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க சம்யுக்தாவை முறைத்துக் கொண்டிருந்த சுந்தரி சம்யுக்தா அவளைப் பார்த்த நொடியில் உடனடியாக வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் வாயெல்லாம் பல்லாக சம்யுக்தாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் சுந்தரி.

"என் பேரு சுந்தரி. நான் உனக்கு அக்கா முறைவேணும் சம்யுக்தா. அக்கா முறை என்ன இனிமேல் என்னை உன் கூடப்பிறந்த அக்காவாகவே நினைச்சுக்க..."

"ம்ம்... சரிங்கக்கா..." உரிமையுடன் கூறியவளிடம் ஆமோதிப்பாக தலையாட்டினாள் சம்யுக்தா.

"நானும் நீயும் ஒரே வீட்டுக்குத்தான் மருமகளாக வந்து இருக்கோம் சம்யுக்தா. ஹூம் நம்ம தலையில இப்படித்தான்னு அந்த ஆண்டவன் எழுதி இருக்கான். என்ன பண்றது சொல்லு...?" அங்கலாய்ப்பாக கூறிவிட்டு சம்யுக்தாவின் முகத்தை ஆராய்ச்சியாக பார்த்த சுந்தரி... சம்யுக்தாவின்



முகத்தில் தான் எதிர்பார்த்த திகைப்பு தெரிவதைக் கண்டவுடன் திருப்தியாக தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

பெங்களூரில் பிறந்த கோட்டீஸ்வரனின் மகளாக வாழ்ந்து பழகியிருந்த சம்யுக்தா. கண்டிப்பாக முழு மனதுடன் வாசுதேவனை மணந்து கொள்ள சம்மதித்து இருக்க மாட்டாள் என்கிற தன் கணிப்பு உண்மையாக இருந்ததைக் கண்ட சுந்தரிக்கு... தன் புத்திக்கூர்மையை எண்ணி பெருமிதம் தோன்றியது.

'ம்ம்... அப்படி வா வழிக்கு என் தங்கச்சி இருக்க வேண்டிய இடத்தில நீ நிம்மதியாக வாழ்ந்துட முடியுமா...? அதுக்கு நான் விட்டுடுவேனா? சுந்தரியா கொக்கா...?' மனதிற்குள் கறுவிக் கொண்டே சுந்தரி பார்ப்பதை உணர்ந்திராத சம்யுக்தாவின் மனதிற்குள் கலக்கம் தோன்றியது.

"என்னைக் கூட விடு சம்யுக்தா... நான் இதோ இருக்கிற ஊரில் பிறந்து இந்த பள்ளி கொண்டான் புரத்துக்கு மருமகளாக வந்துட்டேன். ஆனா நீ...? அத்தனை பெரிய பெங்களூரில் பிறந்து வளர்ந்து படிச்சு ஓடியாடி திரிஞ்சுட்டு கடைசியில இந்த ஊரில் வந்து மாட்டியிருக்கிற பாரு... அதுதான் கஷ்டமாக இருக்கு..."

"................"

"நீ உங்க வீட்டுல ராணி மாதிரி வாழ்ந்திருப்ப. இவங்க வீடும் கொஞ்சம் பணக்கார வீடுதான். இருந்தாலும்... உங்க வீட்டைப் போல வருமா?"

"உன் அழகுக்கும் படிப்புக்கும் நீயெல்லாம் எப்படியெப்படியோ வாழ்ந்திருக்க வேண்டிய பொண்ணு."

"உங்க அப்பாதான் புத்தி கெட்டுப் போய் இப்படியொரு சம்பந்தத்தை பேசி முடிச்சுட்டார்னு கேள்விப்பட்டேன்."

அதுவரையிலும் அமைதியாக தனக்குள் கலங்கிக் கொண்டிருந்த சம்யுக்தா... சுந்தரி தன் தந்தையை பற்றிக் கூறியவுடனேயே கோபத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

சம்யுக்தாவின் கோப பார்வையை கண்டவுடனேயே சுந்தரியின் மனதிற்குள் எச்சரிக்கை உணர்வு தோன்றிவிட... அவள் அப்பாவித்தனமான புன் சிரிப்புடன் சம்யுக்தாவின் கரத்தினை இறுக்கமாக பற்றிக் கொண்டாள்.

"அவரும்தான் என்ன செய்வாரு சொல்லு? பொண்ணு மேல இருக்கிற பாசத்துல இப்படி ஒரு முடிவுக்கு வந்துட்டாரு போல. ஆனா உன் மனசைப் பற்றியும் கொஞ்சம் யோசனை பண்ணி இருக்கலாம். சரி அதைவிடு. இனிமேல நம்ம தலையெழுத்தை மாத்தவா முடியும்? வாய்ச்சதுதான் நம்ம



தலைவிதின்னு வாழ்ந்துட்டுப் போக வேண்டியது தான். இப்ப நான் வாழவில்லையா என்ன?"

"........."

"சரிம்மா சம்யுக்தா. நான் வர்றேன். ரொம்ப நேரம் நான் உன்கிட்ட பேசிக்கிட்டு இருந்தால்... உங்க வீட்டு ஆளுங்களுக்கு அது பிடிக்காது. ஏன்னா நான் மனசுல பட்ட உண்மையை வெளிப்படையா பேசிருவேன். அதான்."

சுந்தரி கூறி முடிக்கும் முன்பாக... பேத்தியை அழைத்துக் கொண்டு வேகமாக அவர்கள் இருந்த அறைக்குள் காமாட்சி நுழைய, சுந்தரி சம்யுக்தாவிடம் அவர்கள் அவசரமாக வந்து நின்றதினை பார்வையால் சுட்டிக் காட்டி விட்டு, மகனை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

"போறா பாரு வித்தாரக் கள்ளி. இவ சொன்னான்னு சொல்லிக்கிட்டு கீழே வந்தியாக்கும்? இனிமேல் அவ சொன்னா... இவ சொன்னான்னு சொல்லிக்கிட்டு இங்கயும் அங்கயுமா அலையாம அண்ணி கூடவே பேசாம உட்கார்ந்திருக்கணும். புரிஞ்சதா? நீ இன்னும் சின்னப்புள்ள இல்ல ஸ்பந்தனா பார்த்து நடந்துக்க..." காமாட்சி கண்டிப்புடன் கூறிவிட்டு சென்றுவிட... ஸ்பந்தனா லேசாக சுளித்த புருவத்துடன் சம்யுக்தா வின் அருகே சென்று அமர்ந்து கொண்டாள்.

"அண்ணி ஏன் ஏதோ மூடு அவுட் ஆன மாதிரி இருக்கீங்க?" அதுவரையிலும் இல்லாத கலக்கத் துடன் அமர்ந்திருந்த சம்யுக்தாவின் தோற்றம் ஸ்பந்தனாவின் மனதிற்கு மாறுதலாக தெரிய... ஸ்பந்தனா இயல்பான மென்மையுடன் சம்யுக்தாவின் தோளை அணைத்தபடியே கேட்டாள்."

"ஒண்ணுமில்லை ஸ்பந்தனா. லேசாக தலை வலிக்குது. நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கவா...?" கன்றிய முகத்துடன் கேட்டவளை தயக்கமாக பார்த்தாள் ஸ்பந்தனா.

"இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கங்க அண்ணி. இப்பதான் சொந்தக்காரங்க எல்லாரும் வந்துக்கிட்டு இருக்காங்க. அவங்க எல்லாருமே உங்களை பார்க்க வருவாங்க. அதனால...." ஸ்பந்தனா தயக்கத்துடன் கூற...... சம்யுக்தாவின் மனதிற்குள் எரிச்சல் தோன்றியது.

'என்ன ஊர் இது? இவங்களுக்கெல்லாம் என்னைப் பார்த்தால் மனுஷியாக தோன்ற வில்லையா? நான் என்ன காட்சிப் பொருளா? உடம்புக்கு முடியாதபோதுகூட இவங்களுக்காக நான் சிரிச்சுக்கிட்டு நடக்கணுமா?' சம்யுக்தாவின் மனம் கோபத்துடன் அலைபாயத் துவங்க.... அவளது முகம் பாறாங்கல்லாய் இறுகிப் போனது.

"வேதவதி அக்கா கொடுத்து வெச்சவங்க தான். தேவலோகத்து ரம்பை மாதிரி ஒரு மருமகளைக் கொண்டு வந்துட்டாங்களே.....?"



"அடிப் போடி இவளே... வேதவதிக்கு இதில என்ன அதிர்ஷ்டம் இருக்கு? வாசுதேவனுக்குத்தான் அதிர்ஷ்டம் அடிச்சிருக்கு."

"அதுவும் சரிதான். இனி வாசுவை கையிலேயே பிடிக்க முடியாது போங்க. ஏற்கெனவே நம்ம பொண்ணுகளை ஆயிரத்தெட்டு குறை சொல்லுவான். இனிமேல் என்னவெல்லாம் பேசப் போகிறானோ?"

"இந்தாடி.... பொண்ணுகளா... எங்க வாசுவுக்கு என்ன குறைச்சல்? அவன் ஆண் அழகன்டி. அந்த வகையில சம்யுக்தாவும் தான் கொடுத்து வெச்சு இருக்கணும். சரிதானே கண்ணு....?"

"என்னம்மா கல்யாணப் பொண்ணு.... வாயைத் திறந்து ஏதாவது பேசலாமில்ல? இப்படி ஊமையாட்டமா அமைதியா உட்கார்ந்திருக்கிற....?"

"அது பெரிய இடத்துப் பொண்ணு. நம்மகிட்ட எல்லாம் பேச விருப்பம் இல்லையோ என்னமோ....?"

"ஏன்....? நாம எல்லாரும் மட்டும் ஒண்ணும் இல்லாதவங்களா என்ன? அவங்கவங்க பவிசு அவங்கவங்களோட....."

உறவினர் கூட்டம் ஆளாளுக்குத் தோன்றியதை பேசத்தொடங்க.... தொடக்கத்தில் கேலியும் கிண்டலுமாக தொடங்கிய பேச்சுக்கள் அனைத்தும்

நேரம் செல்லச் செல்ல காட்டமாக வெளிவரத் தொடங்கியது.

யாருக்கு என்ன பதில் சொல்வது என்பதே தெரியாதவளாக மலங்க மலங்க விழித்தபடியே அனைவரையும் பார்த்துக் கொண்டிருந்த ஸ்பந்தனாவிற்குத் தலை சுற்றுவதைப் போல இருந்தது.

'இந்த அண்ணியும்தான் லேசாக சிரித்து.... எதையாவது பேசினால் தான் என்ன? இப்ப எதுக்காக இப்படி உம்மென்று உட்கார்ந்து இருக்காங்க...?' ஸ்பந்தனா தவிப்புடன் கையை பிசைந்தபடியே சம்யுக்தாவை பார்த்துக் கொண்டிருக்க அவளுக்கு ஆறுதல் அளிப்பதைப் போல ஸ்பந்தனாவின் பின்புறமாக இருந்து எழுந்த குரலால் நிம்மதியுற்ற வளாக திரும்பிப் பார்த்தாள் ஸ்பந்தனா.

"எல்லாரும் ஒரு இடத்தில இருந்தால் போதுமே... ஆளாளுக்கு எதையாவது பேசிக்கிட்டு இருப்பீங்க. நீங்க எல்லாரும் புதுப் பொண்ணாக இருந்தபோது இப்படித்தானே அமைதியா இருந்தீங்க? ஏண்டி மல்லிகா... நீ புதுப் பொண்ணாக உம்மனாம் மூஞ்சியாக உட்கார்ந்து இருந்தது உனக்கு மறந்துப் போச்சா....?"

"அடப் போக்கா.... இப்ப எதுக்கு அதெல்லாம்...?"



"ம்ம்... அதேபோலத்தான் மத்தவங்களும் இருப்பாங்க தெரிஞ்சுதா? கீழே போய் சாப்பிட்டு விட்டு ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க.... போங்க....."

சற்று தோரணையான குரலில் புதிதாக வந்தவள் கூற, மற்றவர்கள் அனைவரும் அரைமனதாக கலைந்து சென்றனர்.

"ஹாய்.... ஐம் சுவர்ணா.... சுவர்ணப்ரியா. உன்னவருடைய அத்தை மகள். நான் கொஞ்சம் வயதில் மூத்தவளாகிப் போனதால்தான் வாசுதேவன் உனக்குக் கிடைச்சிருக்கான்..."

ஸ்நேகமான புன்சிரிப்புடன் கூறிக்கொண்டே அமர்ந்தவளின் இயல்பு சம்யுக்தாவிற்கு இதத்தை தர... அவள் தன்னையும் மீறி எழுந்த புன்னகையுடன் சுவர்ணாவை நட்புடன் பார்த்துச் சிரித்தாள்.

## 16

**பெ**ற்றோரும்.... பெரியோரும்.... குறித்திருந்த சுபயோக சுபதினத்தில்... உற்றார் உறவினர் வாழ்த்த – தன் மனதிற்கினியவளின் கழுத்தில் மாங்கல்யம் அணிவித்து அவளை தன்னுடைய மனைவியாக்கிக் கொண்டான் வாசுதேவன்.

அழுதழுது சிவந்த கண்களுடன் கண்ணீரை துடைத்துத் துடைத்து சிவந்த கன்னங்களுடன்... வாசுதேவன் கட்டி தாலியை தலை குனிந்து தன் கழுத்தில் ஏற்றுக் கொண்டு... வாசுதேவனை தன் கணவனாக ஏற்றுக்கொண்ட சம்யுக்தாவின் கண்கள் மெல்ல உயர்ந்து தந்தையின் முகத்தில் நிலைத்து நின்றது.

தன் மனம் விரும்பியபடியே மகளது திருமணம் நிறைவாக நடந்தேறி விட்டதில் துளிர்த்த ஆனந்தக் கண்ணீரை தன் தோளில் கிடந்த பட்டுத் துண்டினால் துடைத்தபடியே மணமக்களை நெகிழ்வுடன் பார்த்த தந்தையைக் கண்ட சம்யுக்தாவின் மனதெங்கும் வேதனையின் வலி நிறைந்தது.

'அவ்வளவு தான்.. எல்லாம் முடிந்து விட்டதுப்பா...'

'இனி உங்களுடைய செல்ல மகள்... இன்னொருவரின் உடைமை ஆகிவிட்டேன்ப்பா...'

'இனி நான் என் வாழ்நாள் முழுவதும் உங்களை எண்ணி ஏங்கிக்கொண்டே இன்னொருவரின் வீட்டில் வாழவேண்டியதுதான்....'

'திரும்ப முடியாத ஒருவழி பாதையின் பயணத்தை நான் தொடங்கிவிட்டேன் அப்பா. இனி என்னால் உங்களிடமும் நம் வீட்டிற்கும் திரும்ப வரமுடியாது...'

'அப்படியே நான் வருவதாக இருந்தாலும்... அதற்கு இன்னொருவரின் அனுமதி வேண்டும்.



உங்களுக்கும் எனக்கும் இடையே... புதிதாக ஒரு சொந்தம் வந்து விட்டதுப்பா...'

'ஆனால் இது சொந்தமா! அல்லது நம்மைப் பிரிக்கும் தடுப்பு சுவரா என்பதுதான் எனக்கு தெரியவில்லைப்பா...'

மணமக்கள் இருவரும் சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு மணமேடையை விட்டிறங்கி பெரியவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக வர... நேராக தந்தையிடம் செல்ல முயன்றவளின் கரத்தை பிறர் அறியாவண்ணம் அழுத்தமாக பற்றி தடுத்து நிறுத்தினான் வாசுதேவன்.

புரியாமல் வாசுதேவனைப் பார்த்தவளிடம் தங்களுக்கு எதிரில் நின்றிருந்த காமாட்சி... ஞானசம்பந்தம் தம்பதியினரை பார்வையால் சுட்டிக் காட்டி விட்டு அவர்களின் பாதம் தொட்டு வணங்கினான் வாசுதேவன்.

வேறு வழி இல்லாதவளாக... தானும் குனிந்து வணங்கிவிட்டு நிமிர்ந்த சம்யுக்தாவின் பார்வை... அனைவரையும் முன் நிற்கச் செய்து தான் மட்டும் பின்னால் ஒதுங்கி நின்ற தந்தையைப் பார்த்து வேதனையில் சுருங்கியது.

'இவனும் இவனுடைய சொந்தங்களும் மட்டும் தான் இவனுக்கு முக்கியமா? என்னைப் பெற்று வளர்த்து... எனக்காகவே வாழ்ந்த என் அப்பா... இனிமேல் எனக்கு இரண்டாம் பட்சமாகி விடுவாரா?'

'இது என்ன நியாயம்? என்னைப் பெற்றவரின் ஆசீர்வாதம் எனக்கு முக்கியம் இல்லையா? நான் நன்றாக வாழவேண்டும். என் வாழ்க்கை வளமாக இருக்க வேண்டும் என்று என் அப்பாவை விட மற்றவர்கள் அதிகமாக ஆசீர்வதித்து விடுவார்களா...?'

சம்யுக்தாவின் உள்ளம் குமுறிக் கொண்டிருக்க... வாசுதேவன் அடுத்ததாக தன்னைப் பெற்றவர்களின் காலில் பணிந்து எழ.... சம்யுக்தாவும் சாவி கொடுத்த பொம்மையாக அவனைப் பின்பற்றினாள்.

அடுத்ததாக நின்றிருந்தவர்களையும் தன் போக்கில் குனிந்து வணங்கச் சென்ற சம்யுக்தாவை தடுத்து.... சற்று தள்ளி நின்றிருந்த சுந்தரலிங்கத் திடம் வாசுதேவன் அழைத்துச் செல்ல... பெருகி வந்த கண்ணீரோடு தந்தையின் பாதம் பணிந்த சம்யுக்தாவின் உடல் அழுகையில் குலுங்கியது.

"நல்லா இருங்க கண்ணுகளா.....? நீங்க சகல சௌபாக்கியங்களோட நல்லா இருக்கணும்...." கண்ணீர் படர்ந்த கண்களுடன் சுந்தலிங்கம் கம்மிய குரலில் ஆசீர்வதிக்க....

அவரது பாதம் பணிந்து எழுந்த சம்யுக்தா.... அதற்கு மேலும் தாங்கிக் கொள்ள முடியாதவளாக தந்தையின் கழுத்தை கட்டிக் கொண்டு பெரும் கேவலுடன் அழுகத் தொடங்கினாள்.

"டேய்..... சம்யுக்தா.... அம்யாடி... கண்ணு.... என்னடா இது? இங்க பாருடா... சீச்சீ... எல்லாரும்



வேடிக்கை பார்க்கிறாங்கடா. இவ்வளவு கோழையா நீ... சம்யுக்தா...."

மண்டபமே ஒரு நிமிடம் நிசப்தமாகி... அனைவரும் சம்யுக்தாவையே பார்த்துக் கொண்டிருக்க.... பதறிப் போனவராக தன் அன்பு மகளை தன்னை விட்டு விலக்கி நிறுத்தினார் சுந்தரலிங்கம்.

அவரது கண்கள் கெஞ்சலும் இறைஞ்சு தலுமாக வாசுதேவனை பார்க்க... நிலைமையை புரிந்து கொண்டவன்ாக வாசுதேவன் சட்டென்று நகர்ந்து சென்று சம்யுக்தாவின் தோளோடு அணைத்து அவளை தன் தோளில் சாய்த்துக் கொண்டான் வாசுதேவன்.

"கண்ட்ரோல் யுவர் செல்ஃப் சம்யுக்தா. எல்லாரும் வேடிக்கை பார்க்கிறது உனக்கு தெரியலியா? நீ என்ன குழந்தையா சம்யுக்தா......?" வாசுதேவனின் அழுத்தமான குரலில் கண்டிப்பு தெரிய.... அப்போதுதான் சூழ்நிலையை புரிந்து கொண்டவளாக.... அவசரமாக கண்களை துடைத்த படியே வாசுதேவனை விட்டு விலகி நின்றாள் சம்யுக்தா.

க்கும்.... அழுகையை நிறுத்துன்னுதான் சொன்னேன். இப்படி அவசரமாக தள்ளி நில்லுன்னு சொல்லலை. சரி.... சரி... வா....." வாசுதேவன்

ஏமாற்றத்துடன் சம்யுக்தாவிற்கு மட்டுமே கேட்கும் படியாக முணுமுணுக்க சம்யுக்தா அமைதியாக வாசுதேவனை பின்தொடர்ந்தாள்.

"செல்லமாக வளர்ந்த பொண்ணு..... அதான் இப்படி.... நீங்க தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் அத்தை...." சுந்தரலிங்கம் கூறுவது அறியா தயக்கத்துடன் சொல்வதைக் கேட்ட காமாட்சி கலகலவென்ற சிரிப்புடன் சுந்தர லிங்கத்தின் கூப்பிய கையை இறக்கிவிட்டாள்.

"அடப் போப்பா சுந்தரம். இதெல்லாம் பொண்ணுகளோட இயல்பான குணம்ப்பா. அந்தக் காலத்துல.... நானும் இப்படித்தான் எங்க அப்பா அம்மாவை பிரிய முடியாத அழுதேன். இப்ப நானும் இவர்கூட வாழ்ந்து பேரன் பேத்தி எடுத்துரலியா? இதுக்கெல்லாம் வருத்தப்படக்கூடாது சுந்தரம்...."

காமாட்சி பெருந்தன்மையாக கூற.... சிரித்த முகத்துடன் மாமியாரின் வார்த்தைகளை தலை யசைத்து ஆமோதித்தாள் வேதவதி.

"ஆமாம் அண்ணா. பெத்தவங்ககிட்ட பாசம் இல்லாம இருந்தாத்தான் நாம சங்கடப்படணும். இப்படி பெத்தவங்க மேல உசிரையே வெச்சு இருக்கிற பொண்ணு.... நாளைக்கு .... தன்னைக் கட்டினவனை தன்னோட உசிராகவே நினைச்சு வாழுவா பாருங்க...."



"உங்க தங்கச்சி சொல்றதும் சரிதான் மச்சான். எங்க கல்யாணத்தப்ப உங்க தங்கச்சி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினதை பார்த்து நானே கொஞ்சம் பயந்துதான் போயிட்டேன். அதுக்கப்புறம் ஒரு ரெண்டு வருசம் கழிச்சு பார்த்தா..... நானே உங்க வீட்டுக்கு போயிட்டு வான்னு சொன்னாக் கூட... இவ எங்க வீட்டை விட்டு நகர மாட்டாளே...."

"பேசினது போதும் சத்தியநாதா... இப்படியே பழைய கதைகளை பேசிக்கிட்டு இருந்தால் விடிஞ்சு போயிடும். போய் மேற்கொண்டு ஆக வேண்டியதை பாரு... அம்மாடி வேதா.... நீ போய் மாப்பிள்ளை பொண்ணுக்கு பாலும் பழமும் கொடுக்கிறதுக்கான ஏற்பாட்டைப் பண்ணு போ. அப்பா... வாசுதேவா போதும்ப்பா. நம்ம சொந்த பந்தம் பெரியய்யா இப்படி எல்லார் காலிலும் விழுந்து எந்திரிச்சேன்னா அப்புறம் இன்னும் ஒரு மாசத்துக்கு நீயும் என் பேத்தியும் குறுக்கு வழியில படுத்திருக்க வேண்டியதுதான். மரியாதை மனசில இருந்தால் போதும். வா... வா..."

காமாட்சி தோரணையாக கூறிக் கொண்டே வந்து மணமக்களின் அருகில் வந்து நிற்க... சம்யுக்தா அப்போதே வலிக்கத் தொடங்கிய இடுப்பில் ஒரு கையை வைத்தபடி... காமாட்சியை திரும்பிப் பார்த்தால்.

"வாடா கண்ணு... வந்து பாலும் பழமும் சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடு வா..."

காமாட்சி கைப்பற்றி அழைத்துச் சென்று மணமக்களை ஒரு அறையில் தயாராக போடப் பட்டிருந்த சேர்களில் அமரச் செய்ய... அதற்குள்ளாக வாழைப்பழங்களுடன் வந்த வேதவதி... அவற்றில் ஒரு சில துண்டுகளை வெள்ளி ஸ்பூனினால் எடுத்து வாசுதேவனின் வாயில் ஊட்டி விடுவதற்காக செல்ல கோபத்துடன் அவளை அதட்டி நிறுத்தினாள் காமாட்சி.

"அம்மா வேதா... என் பேரனுக்கு கையில தெம்பு இருக்கும்மா கிண்ணத்தை அவன் கையில கொடு. அவனும் சாப்பிட்டுவிட்டு... அவன் பொண்டாட்டிக்கும் அவனே ஊட்டி விடட்டும். நீ வா..."

"அப்பா போட்டோ கிராபரு – நீ எதுக்கு இப்படி வேடிக்கை பார்த்துக் கிட்டு நிக்கிற? இதுக்காகத் தான் உனக்கு சம்பளம் தர்றோமா? என் பேரன் ஊட்டி விடறதை போட்டோ புடிப்பா..."

போட்டோகிராபர் அவசரமாக கேமராவில் கண் பதிக்க சம்யுக்தா தன்னையும் மீறி எழுந்த புன்னகையுடன் வாசுதேவனை திரும்பிப் பார்த்தாள்.

"ம்ம்... இப்படி சிரிச்சுக்கிட்டு இருந்தால்தான் பார்க்கிறதுக்கு நல்லா இருக்கு. இந்தா..."

வாசுதேவன் அடிக்குரலில் கூறிக் கொண்டே பழத்துண்டுகளை ஸ்பூனினால் எடுத்து நீட்ட...



அத்தனை பேருக்கும் முன்பாக அவ்வாறு சாப்பிட வேண்டிய சூழ்நிலையை எண்ணிய வெட்கச் சிவப்புடன் வாய் திறந்து அதனை வாங்கிக் கொண்டாள் சம்யுக்தா.

"ஒகே சம்யுக்தா... நீ இங்கயே இரு... நான் போய் வந்திருக்கிற கெஸ்ட் எல்லாரையும் வழியனுப்பிட்டு வர்றேன். ரிலேசன்ஸ்சை அப்பா அம்மா பாட்டி இவங்க எல்லாரும் பார்த்துக்கு வாங்கதான். இருந்தாலும் என்னுடைய பிரண்ட்ஸ் நான்தானே கவனிச்சாகணும்...? இங்க அவங்களுக்கு வேற யாரையும் தெரியாது..."

'இதையெல்லாம் இவன் எதுக்காக என்கிட்ட சொல்கிறான்? போகணும்னா போக வேண்டியது தானே...?' குழப்பத்துடன் மனதிற்குள் கேட்டுக் கொண்டவளாக தலையசைத்தாள் சம்யுக்தா.

"தனா அண்ணி கூடவே இருக்கணும்... சரியா...?"

"சரிங்கண்ணா நான் அண்ணிகூட பேசிக் கிட்டு இருக்கேன். நீங்க போங்க..."

"ஒரு ஒன் அவர்தான் சம்யுக்தா. நான் வந்துடறேன்..."

"ச்சு... இவன் என்ன வெளியூருக்கா போகிறான்...? இதோ... ரூமுக்கு வெளியில இருக்கிற

ஹாலுக்குத்தானே போகிறான்...?" சம்யுக்தா உள்ளே மண்டிய எரிச்சலை வெளிக் காட்டிக் கொள்ள முடியாதவளாக ஸ்பந்தனாவின் கைபற்றி இழுத்து தன் அருகில் அமர்த்திக் கொள்ள... வாசுதேவன் அரைமனதாக அறையை விட்டு வெளியேறினாள்.

'டேய் வாசு... உண்மையிலேயே நீ அவளுக்காகத் தான் சமாதானம் சொன்னாயா... இல்ல... அவளை விட்டு பிரிய மனசில்லாம பேசிக்கிட்டு இருந்தியா...?' வாசுதேவனின் உள் மனம் அவனைக் கேலி செய்ய வாசுதேவன் தன்னையும் அறியாமல் மீண்டும் திரும்பி அறைக்குள் அமர்ந்திருந்த சம்யுக்தாவை பார்த்தான்.

ஸ்பந்தனா குறும்புடன் எதையோ கூறிக் கொண்டிருக்க... அவளது பேச்சினை தலையசைத்து கேட்டபடியே சிரித்துக் கொண்டிருந்த சம்யுக்தாவை கண்ட வாசுதேவனின் மனதிற்குள் மெல்லிய பொறாமை உணர்வு தோன்றியது.

'என்னைத் தவிர மத்த அத்தனை பேர்கிட்டயும் இவ சிரிச்சுகிட்டு பேசுவா... ஆனா நான் பக்கத்தில இருந்தால் மட்டும் மூஞ்சியை தூக்கி வெச்சுக்கிட்டு இருப்பா...'

சிறிது நேரத்திற்கு முன்பாக சம்யுக்தாவை அனைத்துக் கொண்ட கைகளும்.. மெத்தென்ற அவளது மென்மையை உணர்ந்த உடலும் சூடேற தகிக்கும் ஆண்மையின் தவிப்புடன் ஒரு



பெருமூச்சை வெளியிட்டபடியே சற்று தொலைவில் நின்றிருந்த தன் நண்பர் குழாமை நோக்கி நடக்கத் தொடங்கினான் வாசுதேவன்.

## 17

அறையெங்கும் மல்லிகையின் நறுமணம் சூழ்ந்திருக்க நான்கு பேர் படுத்துறங்கும் அளவிற்கு பெரியதான வேலைபாடுகள் நிறைந்த அந்தக் கட்டிலில்... அமர்ந்திருந்த சம்யுக்தாவின் இதயம் அலைகடலில் அடித்துச் செல்லப்பட்டு பின் கரை ஒதுங்கிய நிற்பதைப் போன்ற களைப்பில் ஆழ்ந்திருந்தது.

கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு உணர்வுகளின் அலைக்கழிப்பாலும்.. மனமெங்கும் சதா சர்வ காலமும் சூழ்ந்திருந்த கவலைகளிலும்... அதிலும் கடந்த சில தினங்களாக புதிய இடம்... புதிய சூழ்நிலை... புதிய மனிதர்களின் "அவர் களுடைய பழக்க வழக்கங்கள்... சம்பிரதாயங்கள் என அனைத்திற்கும் ஈடுகொடுத்து தன் மன உணர்வுகளை வெளிக்காட்டிவிடாமல் அவரவர் களுக்கு தக்கவாறு பேசி... சிரித்து... நடித்து... என சம்யுக்தாவின் உள்ளம் களைத்து ஓய்ந்து போய் இருந்தது.

கல்யாண மண்டபத்தில் இருந்து மணமக்களுடன் கிளம்பிய கார்... ஒரு அரை மணி நேர பயணத்திலேயே ஒரு பெரிய வீட்டின் முன்பாக சென்று நிற்க... இங்கு என்னென்ன சம்பிரதாயங் களையெல்லாம் செய்ய வேண்டுமோ என்கிற கவலையுடன் வாசுதேவனை திரும்பிப் பார்த்தாள் சம்யுக்தா.

"உங்... வந்து... நம்ம வீட்டுக்குப் போக இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்? எனக்கு ரொம்ப டயர்டாக இருக்கு...?" சம்யுக்தா அயர்வுடன் கூற... சம்யுக்தாவைப் பார்த்து பிறர் அறியாவண்ணமாக சன்னமாக சிரித்தான் வாசுதேவன்.

"இதுதான் நீ சொல்கிற ... நம்ம வீடு... சம்யுக்தா... கீழே இறங்கி வா..."

"இதுவா..!!" சம்யுக்தா ஆச்சரியமாக கீழே இறங்கி தன்முன் இருந்த வீட்டினை ஆராய்ச்சியாக பார்த்தாள்.

ஒரு சிறிய அரண்மனையின் கம்பீரத்துடன் அழகுடன் மிக ரசனையுடன் கட்டப்பட்டிருந்த அந்த மாளிகையின் தோற்றம் சம்யுக்தாவிற்கு உள்ளூர வியப்பை உண்டாக்கியது உண்மைதான்.

பெங்களூரில் இருந்த அவர்களது பங்களா பெரியதுதான் என்றாலும் பள்ளிகொண்டான்புரத்தில் இருந்த வாசுதேவனின் மாளிகை அதைவிட சற்று பெரியதாகவே இருந்தது.



பெங்களூரில் அவர்களது வீட்டின் முன்பாக இருந்த சிறிய தோட்டத்தையே... தன் தோழிகளிடம் பெருமையுடன் சுற்றிக் காட்டுவாள் சம்யுக்தா. ஏனெனில்... அவளுடைய தோழிகள் அனைவருமே பெரிய பெரிய அபார்ட்மெண்ட்களில் குடியிருக்கும் மேல்தட்டு வர்க்கத்தினர்.

அவர்களுக்கெல்லாம் வீட்டின் முன்பாக தோட்டம் இருப்பதும், அதனை சம்யுக்தா விரும்பி பராமரிப்பதும் மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.

ஆனால் இங்கோ... வீட்டின் முன்பாக கிட்டத் தட்ட இன்னொரு மாளிகையை கட்ட முடிகிற அளவிற்கான இடத்தில்... நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட சீரான தோட்டமும்... அதிலும் ஒருபுறம் முழுவதுமாக பூச்செடிகளும் மா, வாழை, போன்ற பழவகைகளும்... வளர்ந்திருக்க...

அதற்கு மாறாக... மற்றொரு புறத்தில் சீராக வெட்டப்பட்டு இருந்த புல்வெளி பச்சைக் கம்பளமாக தரையில் படர்ந்திருக்க... அதன் நடுவே மரத்தினால் ஆன வெண்நிற டீப்பாயை சுற்றிலும் நாற்காலிகள் போடப்பட்டு இருந்தது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது.

அதிகாலையிலும்... அந்தி மாலையிலும் அந்த நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து... தோட்டத்து பூக்களின் நறுமணத்தை சுவாசித்தபடியே காபி

குடிக்கும் சுகத்தை... சம்யுக்தாவினால் அப்போதே மனதிற்குள் அனுபவிக்க முடிந்தது.

"என்ன பார்க்கிற சம்யுக்தா? உங்க வீட்டளவிற்கு பணக்காரத்தனமாக இல்லாவிட்டாலும் கூட... நம்ம வீடும் நல்லாத்தான் இருக்கும்." வாசுதேவன் தன்னடக்கத்துடன் கூற... அவசரமாக அவனை மறுப்பாக பார்த்தாள் சம்யுக்தா.

"சேச்சே... இந்த தோட்டம் ரொம்ப அழகாக இருக்கு..."

"தேங்க்ஸ்... வீடும் அழகாய்த்தான் இருக்கும். இது எல்லாமே நானே டிசைன் பண்ணினது."

"நீங்களா...!"

"ம்ம். நானேதான். ஒரு இன்ஜினியராக இருந்துக் கிட்டு என் வீட்டை நானே டிசைன் பண்ணலேன்னா எப்படி...?"

"ஓஓ...? நீங்க இன்ஜினீயரா...?" சம்யுக்தா இயல்பாகக் கேட்க அவளை உற்றுப் பார்த்த வாசுதேவனின் கண்களில் கோபம் தெரிந்தது.

"இது... இதைத்தான் நான் அன்னிக்கே சொன்னேன். உனக்கு என்னைப் பற்றிய எதுவுமே..." வாசுதேவன் பல்லைக் கடித்த படியே பேசத் தொடங்க... அவனது கோபத்தை அதற்கு மேலும் வெளிக்காட்ட முடியாத படிக்கு ஸ்பந்தனா ஆரத்தித்



தட்டுடன் வீட்டினுள் இருந்து வர... அவளைத் தொடர்ந்து வேதவதி... காமாட்சி.. மற்ற உறவுப் பெண்கள் என அனைவரும் வெளிவர வாசுதேவன் மௌனமாக நின்று விட்டான்.

"வெல்கம் அண்ணி..." ஸ்பந்தனா வாய் கொள்ளாத சிரிப்புடன் ஆரத்தித்தட்டினை சுழற்ற... வாசுதேவனின் கோபத்தில் இருந்து தன்னை தற்காலிகமாக தப்புவித்த நாத்தனாருக்கு மனதிற்குள் நன்றி கூறிக் கொண்டாள் சம்யுக்தா.

"வலது காலை எடுத்து வெச்சு உள்ளே வாம்மா..." காமாட்சி சம்யுக்தாவின் கைப் பற்றி அழைக்க... வாசுதேவன் அவசரமாக திரும்பி காருக்குள் இருந்த வெள்ளி விளக்கை எடுத்து சம்யுக்தாவின் கையில் கொடுத்தான்.

"இப்ப உள்ள வா..."

சம்யுக்தா தன் இரு கைகளாலும் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த விளக்கினை சர்வ ஜாக்கிரதையாக பிடித்துக் கொண்டே கவனமாக நடக்க... அவளது இடையை தன் வலக் கரத்தினால் அணைத்தபடியே வலது காலை எடுத்து வைத்து... தன் வீட்டிற்குள் நுழைந்தான் வாசுதேவன்.

"இப்படி வாம்மா..." வீட்டினுள் நுழைந்தவுடன் வேதவதி மருமகளின் தோள் தொட்டு அன்புடன்

அழைக்க... அனுமதி கேட்டவளைப் போல வாசுதேவனை திரும்பிப் பார்த்த சம்யுக்தாவிடம் உள்ளூர தோன்றிய கர்வத்துடன் தலையசைத்தான் வாசுதேவன்.

வேதவதி சம்யுக்தாவை நேராக தங்களது பூஜையறைக்கு அழைத்துச் சென்று... அவள் கையில் கொண்டு வந்த விளக்கை வாங்கி பூஜை மாடத்தில் நடு நாயகமாக வைத்து... திரியும் நெய்யும் போட்டு அதனை ஏற்றுமாறு சம்யுக்தாவை பணித்தாள்.

சம்யுக்தா கவனமாக திரியை தூண்டி விட்டு... பின் ஒரே தீக்குச்சியினால் விளக்கை ஏற்றிவிட்டு நிமிர... அதனை கண்டு காமாட்சி பெருமிதமாக சம்யுக்தாவை அணைத்துக் கொண்டாள்.

"என் பேத்தி கெட்டிக்காரிதான் வாசு. நீ ஒரு குறையும் இல்லாம நல்லா வாழுவப்பா..." காமாட்சி நிறைந்த மனதுடன் கூற அவளது வாழ்த்து உண்மையாக வேண்டும் என்கிற வேண்டுதலுடன் மனைவியுடன் இணைந்து நின்று கைகூப்பி தெய்வங்களை வணங்கினாள் வாசுதேவன்.

"சரிடாம்மா சம்யுக்தா... இப்படி வா, வந்து ஹாலில் உட்காரு..." வேதவதி சம்யுக்தாவை அழைத்துச் செல்ல முயல... அவளைத் தடுத்து விட்டு.. சம்யுக்தாவிடம் அவள் கழுத்தில் இருந்த மாலையை கழற்றி வாங்கி தன் கழுத்து மாலையோடு



சேர்த்து பூஜையறையின் மாடத்தில் வைத்துவிட்டு திரும்பிய வாசுதேவன்... கண்களாலேயே சற்று தள்ளி நின்றிருந்த தங்கையை அழைத்தான்.

"அண்ணியை கூட்டிக்கிட்டுப் போய் உன் ரூமில் உட்காரவை தனா. அவ கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்..."

"அதுவும் சரிதான்... தனா நீ கூட்டிக்கிட்டு போடா..." வேதவதி பெருந்தன்மையுடன் மகன் கூறியதை அப்படியே ஏற்றுக் கொள்ள... தனக்காக சற்று முன்பாக தான் களைப்பாக இருப்பதாக கூறியதற்காகவே வாசுதேவன் அவ்வாறு கூறியிருப்பதை உணர்ந்து... அமைதியாக ஸ்பந்தனாவுடன் அவளது அறைக்கு சென்று விட்டாள் சம்யுக்தா.

அறைக்கு சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சம்யுக்தாவின் உடைகள் அடங்கிய பைகளும்... சூட்கேசும் அந்த அறைக்கு வந்து விட அவசரமாக உடை மாற்றிக் கொள்வதற்காக சூட்கேசை திறந்தாள் சம்யுக்தா.

"அம்மாடி சம்யுக்தா... இன்னும் கொஞ்ச நேரத்துக்கு இப்படியே இருடா கண்ணு, தனா அந்த ஏசியை ஆன் பண்ணு..." அவர்களுடனேயே வந்த காமாட்சி கூறியதைக் கேட்ட சம்யுக்தாவுக்கு... களைப்பாக இருந்தாலும் அமைதியாக மீண்டும் அமர்ந்து விட்டாள்.

"அப்படியே கண்ணை மூடி படுத்துக்க கண்ணு. கொஞ்ச நேரம் தூங்கி எந்திரிச்சாத்தான் களைப்பு போகும். படுத்துக்க..." அவளைப் புரிந்து கொண்டவளாக கனிவுடன் கூறிய காமாட்சியின் குணம்... சம்யுக்தாவிற்குள் வியப்பை உருவாக்க அவள் அப்படியே கட்டிலில் சாய்ந்து கண் மூடினாள்.

'எப்படி இவர்களால் அடுத்தவர்களின் மன உணர்வுகளை இத்தனை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது...? என்னால் இவர்களை போல இத்தனை சுலபமாக இவர்களது உணர்வுகளை புரிந்து நடந்து கொள்ள முடியுமா...?' மனதிற்குள் சிந்தித்தபடியே கண்மூடி இருந்தவளை மெல்ல மெல்ல உறக்கம் ஆக்கிரமித்துக் கொண்டது.

"அம்மாடி கண்ணு..." காமாட்சியின் ஆதூரமான குரல் கேட்டு கண்விழித்த சம்யுக்தா... அவசரமாக கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

தன்னை சுற்றிலும் இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டவள் குற்ற உணர்வுடன் காமாட்சியை பார்க்க அவளோ அதைப் பற்றிய கவனமே இல்லாதவளாக... சம்யுக்தாவிற்கான சேலையையும் மற்ற உடைகளையும் அவளது கையில் கொடுத்தாள்.

"போய் குளிச்சுட்டு டிரெஸ் மாத்திக்கிட்டு வா கண்ணு. உனக்காக எல்லாரும் சாப்பிடாம காத்திருக்காங்க..."



காமாட்சி கூறியதைக் கேட்ட சம்யுக்தா அவசரமாக குளியலறைக்குள் செல்ல... ஒரு சிறிய புன் சிரிப்புடன் அறையை விட்டு வெளியேறினாள் காமாட்சி.

இரவு உணவை உண்டு முடிந்த பிறகு... மற்ற உறவினர்கள் விலகிச் சென்று... ஆண்கள் அனைவரும் தோட்டத்தில் அமர்ந்து கதை பேச தொடங்கி விட...

நெருங்கிய உறவுப் பெண்கள் மட்டும் சம்யுக்தாவை அலங்கரிக்க தொடங்க... சம்யுக்தா விற்கு அடுத்து நிகழப் போவது என்னவென்று புரிந்துவிட்டது.

ஒரு பெரிய சூறாவளி அடிவயிற்றில் பயத்துடன் மையம் கொள்ள தன் நிலையை வெளிப்படையாக சொல்ல முடியாத தவிப்புடன் அமர்ந்து விட்டாள் சம்யுக்தா.

"ஏய்... மல்லிகைப் பூவை நிறைய வெச்சு விடுங்க... அப்பதான் வாசனையா இருக்கும்..."

"மல்லிகையைவிட ஜாதிப் பூதான் ரொம்ப வாசனையாக இருக்கும் அப்பதான் வாசு... சம்யுக்தாகிட்ட அப்படியே மயங்கிப் போயிருவாரு..."

"ம்க்கும். பூவாசனைதான் என் கொழுந்தனை மயக்கனுமாக்கும். அவர்தான் ஏற்கெனவே

பொண்டாட்டிகிட்ட மயங்கிப் போய்க் கிடக்கிறாரே...! நான் தான் காலையில இருந்தே பார்த்துக்கிட்டு தானே இருக்கேன்..."

"ஏய்... அதுக்கு நீ ஏண்டி இவ்வளவு பொறாமைப் படற...? வேணும்னா இந்த பூவுல பாதியை நீயும் தலையில வெச்சுக்க... இன்னியில இருந்து என் தம்பியும் உன்கிட்ட மயங்கித்தான் போவான்..."

"போதும் அண்ணி. உங்க தம்பி மயக்குன மயக்கத்துல ரெண்டை பெத்து வளர்க்கிறத்துக்கே போராடிக்கிட்டு இருக்கேன். இனிமேலயும் மயங்கினாருன்னா... என்பாடுதான் திண்டாட்டமா போகும்..."

"ஏய்... பார்த்துடி... நீ இப்படி அலுத்துக் கிட்டேன்னா... அப்புறம் என் தம்பி வேற எங்கயாவது போய் மயங்கி நின்னுறப் போறான்..."

"ம்ம்... விடுவேனா.. அதிலெல்லாம் நாங்க ரொம்ப உஷாருல்ல..."

சுற்றிலும் நின்றிருந்த உறவினப் பெண்கள்... ஆண்கள் அருகில் இல்லாத சுதந்திரத்துடன் தத்தமது அந்தரங்கங்களை பரிமாறிக் கொண்டிருக்க... அதைக் கேட்ட மற்ற இளம் பெண்கள் கன்னம் சிவக்க மயக்கத்துடன் நின்று இருக்க... இவை அனைத்திற்கும் காரணமாக இருந்த கதாநாயகியான சம்யுக்தாவோ...



எந்த விதமான உணர்ச்சியும் இல்லாதவளாக உணர்வுகளை துடைத்து விட்ட வெறுமையான பார்வையுடன் அமைதியாக தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.

## 18

'கல்யாணத்துக்கு முன்னால வாசுதேவன் கொடுத்த வாக்குறுதி அவனுக்கு நினைவில் இருக்குமா?'

'அப்படி நினைவில் இல்லாவிட்டால்...? ஒரு வேளை எங்களுடைய திருமணம் நடப்பதற்காக அவன் பொய் உரைத்து இருந்தால்...?'

அறையில் ஏஸியின் குளுமை நிறைந்து இருந்தாலும் கூட சம்யுக்தாவிற்கு மூச்சு முட்டுவதைப் போல படபடப்பாக இருந்தது. துடைக்க துடைக்க வேர்த்து வழிந்த முகத்தை ஒரு கட்டத்திற்கும் மேல் துடைக்கவும் மறந்தவளாக பார்வை ஒரே இடத்தில் நிலைத்திருக்க சிலையாக அமர்ந்துவிட்டாள் சம்யுக்தா.

ஒரு நிமிடம் ஒரு யுகமாக கழிய... வெகுநேரம் சென்று அறைக்குள் வந்த வாசுதேவனின் காலடியோசை... சம்யுக்தாவின் காதுகளில் இடிஓசையாக கேட்க... உடல் தூக்கி வாரிப்போட

அவசரமாக கட்டிலில் இருந்து எழுந்து நின்ற சம்யுக்தாவைப் பார்த்து கேள்வியாக புருவம் உயர்த்தினான் வாசுதேவன்.

"எதுக்காக இப்படி பதறிக்கிட்டு எந்திரிச்சு நிக்கிற...?" எரிச்சலுடன் கேட்டபடியே வாசுதேவன் அறைக்கதவை இறுக்கமாக சாத்தி தாழ் போட... பயத்தில் நடுங்கிய கால்களுடன் அதற்கு மேலும் நிற்க சக்தியற்றவளாக மீண்டும் கட்டிலில் அமர்ந்தாள் சம்யுக்தா.

"ஏஸி கூலிங்கை வேணும்னா கொஞ்சம் கூட்டி வைக்கவா? எப்படி வேர்த்து வழியுது பார். நீ பெங்களூரின் குளிர்ச்சியிலேயே இருந்து பழகினதால இப்படி இருக்கு. இன்னும் கொஞ்ச நாளில் நம்ம ஊர் கிளைமேட் உனக்குப் பழகிவிடும் பார்."

"......."

"பொதுவாகவே நம்ம ஊரிலும் கூட கிளைமேட் கொஞ்சம் குளிர்ச்சியாகத்தான் இருக்கும் சம்யுக்தா. ஊட்டி பக்கத்தில் இருக்கிறதால இங்கேயும் பெங்களூரைப் போல கிளைமேட் நல்லா இருக்கும்..."

".........."

"ம்ம். அப்புறம்...? எப்படி இருக்கு நம்ம ஊரு...? வெயிட் வெயிட்... நான் தப்பா கேட்டுவிட்டேன்... நம்ம கிராமம்... ரைட்...?"



வாசு தேவனின் குரலில் கேலி கலந்திருக்க... சிறிது நாட்களுக்கு முன்பாக பள்ளிகொண்டான் புரத்தை கிராமம் என்று கூறியதை குத்திகாட்டு கிறான் என்பதை புரிந்து கொண்டாள் சம்யுக்தா.

அவள் கூறியதைப் போல பள்ளிகொண்டான் புரம் கிராமமாக இல்லாமல்.. ஓரளவிற்கு அனைத்து வசதிகளும் கொண்ட சிறு டவுனாக இருப்பதைக் கண்ட சம்யுக்தாவின் மனதிற்கும் அது மிகப் பெரிய ஆறுதலாகவே இருந்தது.

"பால் குடிக்கிறியா சம்யுக்தா...?" வாசுதேவன் இயல்பாக கேட்க அவசரமாக தலையசைத்து மறுத்த சம்யுக்தாவை மறுபடியும் கேள்வியாக முறைத்தான் வாசுதேவன்.

"ஏன்... ஏன் வேண்டாங்கிற? நைட்டுல பால் குடிச்சுட்டு படுத்தால் தூக்கம் நல்லா வரும்னு சொல்வாங்க..." வாசுதேவன் கண்டிப்பாக கூறிக் கொண்டே பாலை டம்ளரில் சரித்து நிறைத்தவன்... அங்கு ஒரே ஒரு டம்ளர் மட்டுமே இருப்பதைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"ஒரே ஒரு டம்ளர்தான் இருக்க சம்யுக்தா. நீ முதலில் குடித்துவிட்டு டம்ளரைக் கொடு... நான் அப்புறமாக குடிக்கிறேன்... இந்தா..."

"இல்லயில்ல... நீங்க முதலில் குடிங்க... நான்... நான்... அப்புறமாக குடிக்கறேன்..." சம்யுக்தா

அவசரமாக மறுக்க... ரகசியப் புன்னகையுடன் கட்டிலின் மறுபுறத்தில் அமர்ந்த வாசுதேவனின் பார்வை ரசனையுடன் தன் மனைவியாகிவிட்டவளின் மீது பதிந்தது.

'அடி என் செல்லப் பொண்டாட்டியே... நான் முதலில் பால் குடிக்கணும்கிறதுதான் நம்ம சம்பிரதாயமே....' மனதிற்குள் புன்னகைத்தபடியே தன்னுடைய டம்ளரில் இருந்து பாலில் பாதியை குடித்துவிட்டு மீண்டும் அதே பாலுடன் பிளாஸ்க்கில் இருந்த பாலை சரித்து டம்ளரை நிறைத்து சம்யுக்தாவிடம் நீட்டினான் வாசுதேவன்.

செய்வதறியாதவளாக அவசரமாக பாலை வாங்கி ஒரே வாயாக குடித்து விட்டு டம்ளரை அருகில் இருந்த டேபிளில் வைத்த சம்யுக்தாவின் கைகள் வெட வெடவென நடுங்கத் தொடங்கியது.

"சரி... போ.. போய் நைட்டியை மாத்திக்கிட்டு வந்து தூங்கு குட்நைட்..." அதற்கு மேல் அவள் அங்கு இருப்பதையே கண்டுகொள்ளாதவனாக வாசுதேவன் தன்னுடைய சட்டையை கழற்றி ஹேங்கரில் மாட்டிவிட்டு... கைலியை கையில் எடுக்க... சம்யுக்தா தனக்கான நைட்டியை எடுத்துக் கொண்டு ஒரே பாய்ச்சலாக குளியல் அறைக்குள் ஓடினாள்.

கச கசவென இருந்த பட்டுச் சேலையை களைந்துவிட்டு.. நைட்டிக்கு மாறிய சம்யுக்தா



விற்கு.. இயல்பான உடைக்கு மாறிவிட்ட நிம்மதி தோன்ற... தான் களைந்து போட்டிருந்த பட்டுச் சேலையை மீண்டும் நன்றாக மடித்து கையில் எடுத்துக் கொண்டு அறையில் இருந்து சம்யுக்தா வெளிவருவதற்குள்...

கைலி... டிஷர்ட்டுடன் படுக்கையில் கால் நீட்டி சாய்ந்து அமர்ந்திருந்தான் வாசுதேவன்.

"புடவையை அந்த டேபிளிலேயே வைத்துவிடு சம்யுக்தா. நாளை காலையில உன் கப்போர்டுல வெச்சிக்கலாம்..."

'என் கப்போர்டா...?'

"இதோ இந்த ரைட் சைடுல இருக்கிற கப்போர்டு என்னுடையது. லெப்ட்டில் இருக்கிறது உனக்கானது. நம்ம மேரேஜ் பிக்ஸ் ஆனவுடனேயே இதை செய்து வெச்சுட்டேன்..."

"ஓஓ...?"

"சரி... வந்து படுத்துக்க... வா. உனக்கும் ரொம்ப டயர்டாக இருக்கும்." வாசுதேவன் இலகுவாக கட்டிலின் மறுபுறத்தைக் காட்ட – சம்யுக்தா தயக்கத்துடன் அவனை பார்த்தாள்.

"நான் – அந்த சோபா கம் பெட்டில் படுத்துக்கவா...?" அவள் தயக்கமாக கூறி முடிக்கும் முன்பாக... சுளித்த புருவத்துடன் சம்யுக்தாவை

ஏறிட்டுப் பார்த்த வாசுதேவனின் முகத்தில் கோபம் தெரிந்தது.

"ஏன்...? இங்க படுத்தால் என்ன...?"

"இல்ல... வந்து ரூம் பெரியதாக தானே இருக்கு... அதனால நான்..." "ம்ம்... ரூமைப் போலவே கட்டிலும் பெரிதாகத்தான் இருக்கு. இங்க வந்து படு. சினிமாவுல வருகிற மாதிரி எல்லாம் நீ ஒரு பக்கம்... நான் ஒரு பக்கமுனு எல்லாம் படுக்க முடியாது. என்னோட லிமிட் எனக்கு நல்லாவே தெரியும் சம்யுக்தா. நான் உனக்கு கொடுத்த வாக்குறுதியும் எனக்கு ஞாபகத்தில் இருக்கு. அதனால.. என் கோபத்தை கிளறாம பேசாம வந்து படு.." வாசுதேவன் அதற்கு மேல் பேச ஒன்றும் இல்லை என்பதைப் போல திரும்பிப் படுத்துவிட மெதுவாக கட்டிலின் மறுபுறம் வந்து படுக்கையில் சாய்ந்த சம்யுக்தாவின் மனதிற்குள் சுந்தரலிங்கத்தைப் பற்றிய எண்ணங்கள் ஆக்கிரமிக்க தொடங்கியது.

'அப்பா இந்நேரம் எங்கே இருப்பார்? அவருக்குன்னு தனியாக ரூம் கொடுத்து இருக்காங்களா இல்லையான்னு தெரியலியே? இத்தனை பெரிய வீட்டில் அவருக்கு தனியாக ரூம் கொடுத்திருப்பாங்கதான்... ஆனா அப்பா மாத்திரைகளை போட்டுக்கிட்டாரா இல்லையான்னு தெரியலியே... ஒருவேளை போடாமல் விட்டிருந்தால்?



நெஞ்சு வலி ஏதாவது வந்துவிட்டால் தனியாக.. இந்த தெரியாத ஊரில் என்ன பண்ணுவார்...?' மனதிற்குள் ஓடிய எண்ணங்கள் பீதியை கிளப்பிவிட... சம்யுக்தா அரண்டு போனவளாக எழுந்து அமர்ந்தாள்.

'நான் உடனே போய் அப்பாவை பார்க்க வேண்டும்...'

"இன்னும் தூங்கலியா நீ...? போசம படு சம்யுக்தா..." தான் என்னது செய்கிறோம் என்று தெரியாதவளாக எழச் சென்ற சம்யுக்தா... மறுபுறமாக திரும்பி அவளைப் பாராமலேயே சீறிய வாசுதேவனின் குரலைக் கேட்டு... அவசரமாக கட்டிலில் படுத்து கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டாள்.

சில நிமிடங்களுக்கு வாசுதேவனுக்காக பயந்து கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டிருந்தவளை... மெல்ல மெல்ல நித்திரை ஆட்கொள்ள... அமைதியாக உறங்கத் தொடங்கிவிட்ட சம்யுக்தாவை... உறங்காமல் கட்டிலில் படுத்திருந்த வாசுதேவன் அவளது உறக்கத்தை கலைத்து விடாதவனாக மெதுவாக எழுந்து கட்டிலில் சாய்ந்து அமர்ந்த படியே... உறங்கும் மனைவியை கண் இமைக்காமல் பார்த்தபடி விழித்திருக்க தொடங்கினான்.

கோடீஸ்வரனுக்கு மகளாக பிறந்து... இளவரசியாக வாழ்ந்த... வாசுதேவனுடைய மனைவியை... தன் புகுந்த வீட்டிற்கு மகாராணியாக

வாழ வந்திருப்பவள்... ஒன்றுமே இல்லாதவளாக... சிறு தலையணையை இறுக்கமாக கட்டிப்பிடித்த படியே பயம் மாறாத முகத்துடன் உறங்குவதைக் கண்ட வாசுதேவனின் மனதிற்குள் அவள் மீது இரக்கம் ஆனது.

'இவள் சொன்னதைப் போல நான் இவளை திருமணம் செய்து கொள்வதை மறுத்திருக்க வேண்டுமோ...?' தன்னை மீறி எழுந்த கேள்வியின் சுமை தாளாதவனாக பெருமூச்சு விட்ட வாசுதேவனின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

'கண்டிப்பாக நிச்சயதார்த்தத்துக்கு முன்பாக இவளது மனம் தெரிந்திருந்தால் நான் இவளது விருப்பத்தை நிறைவேற்றி இருப்பேன்... ஆனால்...?'

'திருமணமான ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒவ்வொரு பெண்ணும்.... எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலையைத்தான்... தற்போது சம்யுக்தாவும் எதிர் கொண்டிருக்கிறாள். என்னைத் தவிர... யாரை இவள் மணந்திருந்தாலும் இந்த சூழ்நிலையை இவள் கடந்து தான் சென்றாக வேண்டும்...'

'என்ன ஒரு வித்தியாசம்... அப்போது இவள் மனம் விரும்பி இதனை கடக்க முயற்சித்து இருப்பாள். இப்போதோ...?'

'எது எப்படி இருந்தாலும் சரி சம்யுக்தா... நான் உனக்கு துணையாக இருப்பேன். நீ இனி எடுத்து



வைக்கும் ஒவ்வொரு அடிக்குமான அடித்தளமாக நான் இருப்பேன்...'

'என் அன்பும்... காதலும்... உன்னை எனக்கானவளாக மாற வைக்கும். அப்படி நீயாக மனம் மாறும் வரை நான் காத்திருப்பேன் சம்யுக்தா... நீ நிம்மதியாக தூங்கு...'

மனதிற்குள் மனைவிக்கு வாக்களித்தபடியே தானும் அவள் அருகில் படுத்துக் கொண்ட வாசுதேவன்... உறவில்லாத அந்த முதல் இரவும் கூட புதுமையாகவே இருந்தது.

அதுவரையிலும் தனியாக உறங்கிப் பழகியிருந் தவனுக்கு... அன்று தன் மனதிற்கினியவள் மல்லிகையின் நறுமணத்துடன்... அதே மலரின் மென்மை முகத்தில் தவழ அவனது படுக்கையை பகிர்ந்து கொண்டு உறங்கியது வாசுதேவனின் உள்ளத்திற்குள் இனம்புரியாத இன்பத்தை உருவாக்கியது.

இனி இந்த உலகில் தான் தனியாள் இல்லை... தனக்கென்று ஒரு குடும்பம்... தன்னை நம்பி ஒரு பெண் இருக்கிறாள் என்கிற நினைவே வாசு தேவனுக்குள் புது உற்சாகத்தை உருவாக்கியதை போல இருந்தது.

அது நாள் வரையிலும்... தாய், தந்தை, தங்கை, தாத்தா, பாட்டி என மிகப் பெரிய குடும்பத்தின்

அங்கத்தினராக வாழ்ந்து இருந்தாலும் கூட... தங்களது வீட்டில் இணைந்த புது அங்கத்தினரான சம்யுக்தாவினால் தன் வாழ்வே ஒளிமயமாக ஆகிவிட்டதைப் போல அவனுக்கு தோன்றியது.

பல்வேறு உணர்வுகளுடன் போராடியபடியே வாழ்ந்திருந்த வாசுதேவன்... காலை கதிரவன் வானத்தில் வலம் வர தொடங்கிய பின்பே தன்னை அறியாமல் உறக்கத்தில் ஆழத் துவங்கினான்.

பல பல கனவுகளுடன் உறங்கிக் கொண்டிருந்த வாசுதேவனின் கனவினை கலைப்பதைப் போல தோள் தொட்டு அசைத்த கரத்தினை எரிச்சலுடன் தட்டி விட்டபடி கண்விழித்த வாசுதேவன்...

தன்னை தொட்டு எழுப்பிக் கொண்டிருந்த மலர்க் கரத்துக்கு சொந்தமானவளை பார்த்தவுடன்... அவசரமாக கண்களை துடைத்த படியே கட்டிலில் எழுந்து அமர்ந்தான்.

## 19

அந்த காலை நேரத்திலேயே தலைக்கு குளித்து... ஈரக்கூந்தலை காய்வதற்காக நன்றாக விரித்து விட்டு... கருஞ்சிவப்பில் சந்தன நிற கரை கொண்ட கிரேப் சில்க்கில்... நெற்றி நிறைய குங்குமத்துடன் நின்றிருந்த சம்யுக்தா...



வாசுதேவனுடைய கண்களுக்கு வானத்து தேவதை நேரில் வந்து நிற்பதைப் போல இருந்தது.

"இவள்தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! தான் ஒரு பேரழகி என்பதை அறியாத அறியாமைதான் இவளை மேலும் மேலும் பேரழகியாக்கி இருக்கிறது... தனக்குள் கூறியபடியே எழுந்த வாசுதேவன் பாத்ரூமிற்குள் சென்று வெளிவருவதற்குள்ளாக... சூடான காபி டம்பளருடன் அவனுக்காக காத்திருந்தாள் சம்யுக்தா.

அவளது கோலத்தைக் கண்டு வியப்புடன் வாசுதேவன் புருவம் உயர்த்தி பார்க்க... அவனிடம் காபியை தயக்கத்துடன் நீட்டினாள் அவள்."

"வந்து... நீங்க எழுந்தவுடனேயே காபியை கொடுக்கச் சொல்லி அத்தை சொல்லி விட்டாங்க. அதான்..."

"ஓஹோ...? உங்க அத்தை வேற என்ன வெல்லாம் சொல்லிவிட்டாங்க...?"

அப்போதுதான் சம்யுக்தா நெற்றி நிறைந்த குங்குமத்துடன் மங்களகரமாக நின்றிருந்ததற்கான காரணம் வாசுதேவனுக்கு புரிந்தது.

அவன் தன்னை மீறி எழுந்த சிரிப்புடன் சம்யுக்தாவை பார்த்தான்.

"உங்க அத்தை உன்னை காபி குடிக்க சொல்லலியா...?" அவன் கேட்ட பிறகுதான் ஞாபகம்

வந்தவளாக தனக்கான டம்ளரில் காபியை நிறைத்து கையில் எடுத்துக் கொண்டாள் சம்யுக்தா.

அவளது நடவடிக்கையை பார்த்து இரக்கத்துடன் எழுந்த வாசுதேவன் தன் கையில் இருந்த காலி டம்ளரை டேபிளில் வைத்து விட்டு... சம்யுக்தாவின் கரம் பற்றி... சுவர் ஓரமாக இருந்த சோபாவில் அமரச் செய்து தானும் அவள் அருகில் அவளது முகத்தை நேராக பார்த்தபடி அமர்ந்து கொண்டான்.

"இதோ பார் சம்யுக்தா... இது உன் வீடு. இங்க உன் விருப்பப்படி நீ இருக்கலாம். இப்படி பயந்து பயந்து எல்லாத்தையும் செய்யணும்கிற தேவை இல்லை..."

"........"

"இப்போதைக்கு கல்யாணத்துக்காக வந்திருக்கிற கெஸ்ட்டெல்லாம் நிறைய பேர் இருக்கிறதால... உனக்கு கொஞ்சம் அன்ஈஸியாக இருக்கும். இவங்க எல்லாரும் இன்னும் ஒண்ணு ரெண்டு நாளில அவங்கவங்க ஊருக்குப் போயிருவாங்க. அதற்கப்புறம்... நம்ம பேமிலி மட்டும் தான் இருப்போம்..."

"எனக்கு எல்லாமே புதிதாக இருக்கு. அதான்..."

"அதைத்தான் சொல்றேன். பயப்படாம ரிலாக்ஸ்டாக இரு. நம்ம பேமிலியை பொறுத்த



வரைக்கும் எல்லாருமே உன் மேல ரொம்ப அன்பு வெச்சு இருக்காங்க. அதனால முடிஞ்ச வரைக்கும் சகஜமாக இருந்து பழகு..."

"ம்ம்... டிரை பண்றேன்..." கூறிக் கொண்டே காலியான டம்ளர்களையும்... பிளாஸ்க்கையும் டிரேயில் வைத்து கையில் எடுத்துக்கொண்டு நகரச் சென்ற மனைவியை தடுத்து... அவளது கையில் இருந்த டிரேயை வாங்கி மீண்டும் டேபிளிலேயே வைத்தான் வாசுதேவன்.

"இதையெல்லாம் வேலைக்காரம்மா வந்து எடுத்துக்கிட்டு போயிருவாங்க. இப்போதைக்கு நீ உன்னை சிரமப் படுத்திக்காம அமைதியாக வா..." புரியாமல் பார்த்துக் கொண்டிருந்த மனைவியின் கரம் பற்றி அழைத்துக்கொண்டு வாசுதேவன் மாடிப் படிகளில் இறங்கிச் செல்ல... அமைதியாக அவனுடன் இணைந்து நடந்து வந்த மகளை... ஹாலில் அமர்ந்த காமாட்சியுடன் பேசிக் கொண்டிருந்த சுந்தரலிங்கத்தின் பார்வை நிறைவுடன் பார்த்து ரசித்தது.

புது மணமக்களை கண்டு கொள்ளாதவர் களைப் போல தத்தமது வேலைகளை பார்த்துக் கொண்டிருந்த அனைவரின் கண்களுமே ரகசியமாக அவர்களுக்கு இடையே நிலவும் அன்னியோன்னி யத்தை ஆராய்ச்சியாக கண்காணித்து

கொண்டிருக்க... அதை அறிந்தவன் போல சுவாதீனமாக ஹால் சோபாவில் அமர்ந்த வாசுதேவன்... சம்யுக்தாவையும் இழுத்து தன் அருகில் அமர்ந்திக் கொண்டான்.

"காபி சாப்பிட்டு விட்டீங்களா மாமா?"

"ம்ம்... சாப்பிட்டு விட்டேன் மாப்பிள்ளை..." உரிமையுடன் கேட்ட வாசுதேவனுக்கு பணிவுடன் பதிலளித்தார் சுந்தரலிங்கம்.

"கமலம்மா... ரூமை கிளீன் பண்ணிவிடுங்க..." வாசுதேவனின் வார்த்தைகளுக்காகவே காத்திருந்த வளைப் போல.... கமலம் என்றழைக்கப்பட்டவள் அவசரமாக மாடியேறிச் சென்றாள்.

"தாத்தா எங்க பாட்டி...?"

"இப்பதான் தோட்டத்து பக்கம் போயிட்டு வர்றேன்னு கிளம்பிப் போனார் தம்பி. ஏதாவது முக்கியமான வேலை இருக்காய்யா...?"

"முக்கியமான வேலை எதுவும் இல்ல பாட்டி. பங்சனில் வேலை பார்த்தவங்களுக்கெல்லாம் அமௌண்ட் செட்டில் பண்ணனும்..."

"அதை உன் அப்பா பார்த்துக்கிட்டு இருக்கான் தம்பி. நீ எதை நினைச்சும் கவலைப்படாம இருய்யா கண்ணு..."



"சரி பாட்டி. சம்யுக்தா... காலை டிபனுக்கு மாமா என்ன சாப்பிடுவாங்கன்னு சமையல்கார அம்மாகிட்ட சொல்லிவிடு. கண்டதையும் சாப்பிட்டுவிட்டு அப்புறம் ஊருக்கு போன பின்னாடி அவர் தனியாக கிடந்து அவஸ்தை படக்கூடாது பார்..."

சம்யுக்தா தலையசைத்துவிட்டு எழுந்து சமையல் அறையை நோக்கி செல்ல... மனைவியை தன் வீட்டினருடன் இயல்பாக்குவதற்காக பேரன் செய்யும் முயற்சியை பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டாள் காமாட்சி.

"நான் இன்னிக்கு மதியத்துக்கு மேல கிளம்பறேன் மாப்பிள்ளே. நீங்களும் சம்யுக்தாவும் இன்னும் ரெண்டு நாள் கழிச்சு பெங்களூர் வந்தால் நன்றாக இருக்கும்..."

சுந்தரலிங்கம் வாசுதேவனின் அனுமதிக்காக கேட்பவரைப் போல கேட்டார்.

"அதுக்குள்ள கிளம்பிட்ட என்ன சுந்தரம்? நீயும் ரெண்டு மூணுநாள் இங்க தங்கி இருந்துட்டு... உன் மருமகனையும் சம்யுக்தாவையும் கையோட கூட்டிக்கிட்டு போகலாமில்ல..." உரிமையுடன் கண்டிப்பான குரலில் கூறிய காமாட்சி அதே அனுமதிப்பாக எதிர்பார்ப்பவராக திரும்பிப் பார்த்தார் சுந்தரலிங்கம்.

"இல்ல அத்தை, அங்க போட்டது போட்டபடி இருக்கும். நான் போய்தான் எல்லாத்தையும் பார்க்கணும். அதுவும் இல்லாம... பெங்களூரில் என் பிஸினஸ் பிரண்ட்ஸ்சுக்காக... ஒரு சின்ன ரிசப்சன் வெச்சிருக்கேன். அதுக்கான ஏற்பாடுகளையும் பாக்கணும்."

"இப்ப ரிசப்சன் எல்லாம் எதுக்கு மாமா? நீங்க தனியாளா எத்தனை வேலைகளைத்தான் பார்ப்பீங்க? அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் மாமா...?"

"அது நல்லா இருக்காது மாப்பிள்ள. என் பொண்ணையும் மாப்பிள்ளையையும் நானும் நாலு பேருக்கு காட்டி பெருமைப்பட்டுக்க வேண்டாமா? அந்த சந்தோசத்துக்கு முன்னாடி... வேலையெல்லாம் எனக்கு பெரிசாகத் தெரியாது... மாப்பிள்ள..."

சுந்தரலிங்கத்தின் கண்களும் முகமும் பெருமிதத்துடன் பளபளக்க... அவரது ஆனந்தத்தை குலைக்க விரும்பாதவனாக அமைதியாகிவிட்டான் வாசுதேவன்.

அவனிடம் கூறியதைப் போலவே... சுந்தரலிங்கம் காலை உணவை உண்டு முடித்தவுடனேயே கிளம்பிவிட... அவரது பிரிவை தாங்க முடியாத துக்கம் தொண்டையை அடைக்க கண்ணீருடன் நின்றுவிட்டாள் சம்யுக்தா.



"அம்மாடி... கண்ணு. அப்பா இதோ இருக்கிற பெங்களூருக்குத்தான போறாரு...? நீ கலங்காத கண்ணு. உனக்கு அப்பாவை பார்க்கணும் போல இருந்தால் உன் புருசன் கிட்ட சொல்லு. அடுத்த ரெண்டு மணி நேரத்துல ஃபிளேன்ல ஏத்தி உன்னை உங்க அப்பாக்கிட்ட கூட்டிட்டுப் போயிர மாட்டானா....? கண்ணை துடைச்சுக்கம்மா..." காமாட்சி சம்யுக்தாவின் முதுகை தடவியபடியே ஆறுதலாக கூற...

அவர்களையே பார்த்த படி நின்றிருந்த சுந்தரி தன் அருகில் நின்றிருந்தவளிடம் கேலியாக அவர்களை சுட்டிக்காட்டி சிரித்தாள்.

"பார்த்துக்கோடி... சீமையில இருந்து கொண்டு வந்த மருமகளுக்கு இந்த வீட்டில இருக்க இஷ்டம் இல்ல போல இருக்கு. இவங்க எல்லாரும் அவளை தாஜா பண்றதை பாரு. எல்லாம் பணம் பண்ணுகிற வேலை. காலம் கலிகாலம்கிறது சரியாத்தான் இருக்கு..." சுந்தரி மெல்லிய குரலில் நக்கலாக கூற... அதை கேட்டுக் கொண்டிருக்கிறவளின் முகத்திலும் அதே கிண்டல் தோன்றியது.

"நீ சொல்றதும் சரிதான். இந்த பொண்ணை இவங்க ரொம்பத்தான் தாங்கறாங்க. நமக்கென்ன வந்தது... போ..." அவள் அசட்டையாக கூறியபடியே நகர்ந்து செல்ல... சுந்தரி சிரிப்பு மாறாத முகத்துடன் சம்யுக்தாவின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

"பாசமா பொத்திப் பொத்தி வளர்த்த அப்பாவை பிரிஞ்சு நின்னா வேதனையாகத்தான் இருக்கும் பாட்டி? நீங்க ஆயிரம் சமாதானம் சொன்னாலும் அதையெல்லாம் இந்த பொண்ணோட மனசு கேட்டால் தான...?"

காமாட்சி சுந்தரியை சுட்டெரித்து விடுபவளைப் போல பார்வையால் எரிக்க... அவளை லட்சியம் செய்யாதவளாக சம்யுக்தாவின் கையை பிடித்துக் கொண்டு அவளுக்கு ஆறுதல் சொல்லும் பாவனையில் அவளை நன்றாக நெருங்கி நின்று கொண்டாள் சுந்தரி.

"அழுகாத சம்யுக்தா. என்ன பண்றது... பொம்பளையாக பிறந்தால் தலைவிதி இதுதான். இப்ப நானெல்லாம் இல்லையா...? ஆனா... உனக்கு உங்க அப்பா மேல பிரியம் அதிகம்னு கேள்விப்பட்டேன்... தாயில்லாத பொண்ணில்லையா... அதனால அப்பா மேல பிரியம் அதிகமாகத்தான் இருக்கும். அதிலேயும் உங்க அப்பா உடம்புக்கு முடியாதவர் வேற... இங்கயாவது உன்னை பார்த்துக்கா நாங்க எல்லாரும் உன் கூடவே இருக்கோம். ஆனா உங்கப்பாவுக்கு அங்க யாரு துணையா இருக்கப்போறா? பாவம்தான் போ..." சுந்தரி பேசப் பேச... அவள் எதை எதிர்பார்த்து சம்யுக்தாவிடம் பேச வந்தாளோ... அதி விரைவிலேயே அது நடந்து விட்டது.



ஒரு பெரும் கேவலுடன் சம்யுக்தா மாடிப்படி களை கடந்து தங்களது அறைக்குள் ஓடிச் செல்ல... திகைப்படைந்தவனாக எழுந்து... அவளைப் பின் தொடர்ந்து ஓடினான் வாசுதேவன்.

போடா... போ.. போய் உன் பொண்டாட்டி காலை பிடிச்சு சமாதானம் பண்ணு. இந்த சுந்தரி பேசுன பேச்சு... இன்னும் ரெண்டு நாளைக்காவது உன் சந்தோசத்தை குலைச்சு நாசமாக்கும் பாரு... போ... சுந்தரி மனதிற்குள் கூறியபடியே அங்கிருந்து வெளியேறிவிட... நடந்து செல்லும் அவளது முதுகை துளைக்கும் பார்வையுடன் நின்றிருந்தாள் காமாட்சி.

சுந்தரியின் நோக்கம் தெளிவாக புரிந்துவிட பல்லைக் கடித்தபடியே வீட்டிற்குள் திரும்பினாள் அவள்.

'படுபாவி... இனிமேல் இந்த வீட்டுக்குள்ள அடியெடுத்து வையி அன்னிக்கு இருக்குடி உனக்கு கச்சேரி...' காமாட்சியின் மனம் தனக்குத் தானே சபதம் எடுத்துக் கொண்டது.

"நான் இப்பவே அப்பாகிட்ட போகணும். நானும் அவர் கூடவே பெங்களூருக்கு போறேன். என்னைக் கொண்டு போய் ஏர்போர்ட்டில் இறக்கி விடுங்க... ப்ளீஸ்..."

சம்யுக்தா பிடிவாதமான குரலில் அழுகையுடன் மன்றாடிக் கொண்டு இருக்க... இறுகிய முகத்துடன்

அசையாமல் அவளையே பார்த்தபடி நின்றிருந்த வாசுதேவனின் கண்களில் கோப நெருப்பு தோன்றியது.

"சரி கிளம்பு. உன் துணி மணிகளை எல்லாம் பேக் செய்து கொள். உன்னை இப்பவே கொண்டு போய் ஏர்போட்டில் இல்லை... உங்க வீட்டிலேயே விட்டு விட்டு வந்துடறேன்..."

வாசுதேவன் தீர்மானமான குரலில் கூற... சம்யுக்தா நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறி போட்டியிட்ட முகத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆனா... திரும்பி வரும்போது நான் மட்டும் தான் இங்க வருவேன் நீ அங்கேயே இருந்துக்கணும்... சரியா...?"

"இல்ல... சரி... ஆனா..."

"இங்க பார். ஒண்ணு... அமைதியாக இங்க இரு. இன்னும் ரெண்டு நாளில் நாம ரெண்டு பேருமே பெங்களூர் போயிட்டு வரலாம். இல்லேன்னா... இப்பவே கிளம்பு... உன்னை கொண்டு போய் விட்டு விட்டு நான் திரும்பி வந்துடறேன். ஆனா அதுக்கப்புறம்... உங்க அப்பாவை சமாளிக்க வேண்டியது உன்பாடு. அதைப் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை... "



வாசுதேவன் தெளிவான குரலில் உறுதியாக கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட... முடிவெடுக்க முடியாமல் திகைப்புடன் விக்கித்து நின்று விட்டாள் சம்யுக்தா.

## 20

தலை நிறைந்த பூவும்... முகம் நிறைந்த சிரிப்புமாக... கணவனுடன் இணைந்து காரில் இருந்து இறங்கிய மகளை... ஓடோடி வந்து முகம் கொள்ளாத பூரிப்புடன் வரவேற்றார் சுந்தரலிங்கம்.

"கொஞ்சம் அப்படியே நில்லு கண்ணு. ஆரத்தி எடுத்துடறேன். உங்க ஜோடி பொருத்தத்தை பார்த்து ஊர் கண்ணெல்லாம் பட்டிருக்கும்... "பொன்னி தயாராக கரைத்து வைத்திருந்த ஆரத்தி தட்டுகளுடன் ஓடிவந்து ஆரத்தி சுற்றிவிட்டு விலக... சுவாதீனமாக வீட்டிற்குள் நுழைந்த மகளை கண்டிப்புடன் பார்த்தார் சுந்தரலிங்கம்.

"இன்னும் விளையாட்டுத்தனமாகவே இருக்கக் கூடாது சம்யுக்தா. மாப்பிள்ளையை நீ தான் நம்ம வீட்டுக்குள்ள கூட்டிக்கிட்டு வந்து உபசரிக்கணும். அதை விட்டு விட்டு நீ இப்படி ஓடி வரலாமா..." கடிந்து கொண்டே சென்று வாசுதேவனின் கையில் இருந்த பெட்டியை தன் கையில் வாங்கிக் கொண்டார் அவர்.

"அப்பா... அவர் என்ன புதிதாகவா இந்த வீட்டுக்கு வர்றாரு? நான் இத்தனை நாள் கழிச்சு இப்பதான் நம்ம வீட்டுக்கு வர்றேன். அதுக்குள்ள இப்படி திட்டறீங்களே...?" குழந்தைத் தனமான ஏமாற்றத்துடன் கேட்ட மகளை சமாளிக்கும் வகை தெரியாதவராக பார்த்த சுந்தரலிங்கத்திடம் பெருந்தன்மையாக புன்னகைத்தான் வாசுதேவன்.

"விடுங்க மாமா... அவ குணம்தான் உங்களுக்கு தெரியுமே...? நான் நம்ம வீட்டுக்கு வர்றதுக்கு சம்யுக்தா வழிகாட்டணுமா என்ன...?"

"அதானே... பொன்னி... இன்னிக்கு என்ன டிபன் பண்ணியிருக்க? உன் கை சமையலை சாப்பிட்டு எத்தனை நாளாச்சு...? கொஞ்சம் சீக்கிரமாக ரெடி பண்ணி வை. அப்படியே உங்க மாப்பிள்ளைக்கு பிடிச்ச மாதிரி பூரியும் சிக்கன் குருமாவும் செஞ்சிருங்க..." சமையல் அறையை நோக்கி குரல் கொடுத்தபடியே தன் அறைக்கு செல்வதற்காக மாடிப்படியில் கால்வைத்த சம்யுக்தா... தன்னைத் தானே கண்டிப்பவளைப் போல தன் பின்னந்தலையில் செல்லமாக தட்டிக் கொண்டாள்.

"ஸாரி... நான் ஏதோ ஒரு நினைப்புல இருந்துட்டேன்... நீங்களும் வாங்க... கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்துவிட்டு... அப்புறமாக வந்து சாப்பிடலாம்..." தந்தை கூறிய உபதேசத்தை ஏற்றுக்



கொண்டவளைப் போல வாசுதேவனிடம் உபசாரமாக கூறியபடியே... பெட்டியை கையில் எடுத்த சம்யுக்தாவிடமிருந்து அதனை தன் கையில் வாங்கிக் கொண்ட வாசுதேவன்... அமைதியாக மனைவியை தொடர்ந்து அவளது அறைக்குள் சென்றாள்.

முதன்முதலாக... ஆயிரமாயிரம் கற்பனை களுடன் அந்த அறைக்குள் தான் நுழைந்ததும்... பின் அதே அளவு ஏமாற்றத்துடன் அங்கிருந்து வெளியேறி சென்றதும்... ஒவ்வொன்றாக வாசுதேவனின் மனதிற்குள் காட்சியாக விரிய... வாசுதேவன் தலையை வேகமாக குலுக்கி... அவற்றை எல்லாம் மறக்க முயற்சித்து தன்னை சமநிலை படுத்திக் கொள்ள முயற்சித்தான்.

"உள்ளே வாங்க. நீங்க அங்க உங்க ரூமில செஞ்சிருந்ததை போலவே... இங்கேயும் அப்பா உங்களுக்காக தனி கப்போர்டு ரெடி பண்ணி இருக்கார் பாருங்க. இதில உங்களுக்கு தேவையான அத்தனையுமே தயாராக இருக்கு. இந்தாங்க..." சம்யுக்தா உற்சாகத்துடன் கூறிக்கொண்டே அந்த அலமாரியை திறந்து... அதில் இருந்த புது துண்டினை எடுத்து வாசுதேவனிடம் கொடுத்தாள்.

"நீங்க போய் பிரெஷ் ஆகிட்டு வாங்க. உங்க டிரெஸ் எல்லாத்தையும் நான் அடுக்கி வெச்சுடு டேறேன்..." கூறிக்கொண்டே சம்யுக்தா சுவாதீனமாக

பெட்டியை திறந்து அதில் இருந்த வாசுதேவனின் உடைகளை அலமாரிக்குள் அடுக்கத் தொடங்க... மனைவியை வியப்புடன் பார்த்த படியே குளியல் அறைக்குள் நுழைந்தான் வாசுதேவன்.

"ஆமாண்டி... நான்தான், இங்க பெங்களூருக்கு வந்திருக்கேன். என்னது நீ வர்ரியா... ஒகேப்பா.... வா.. வரும்போது நம்ம பிரெண்ட்ஸ் எல்லாரையும் கூட்டிக்கிட்டு வா... ம்ம்... ஜாலியாத்தான் இருக்கும்..."

உற்சாகமாக போனில் பேசிக் கொண்டிருந்த சம்யுக்தா அதை கேட்ட படியே பாத்ரூமிலிருந்து வெளி வந்த வாசுதேவனை அதே உற்சாகம் மாறாத முகத்துடன் பார்த்தாள்.

"என் பிரண்ட்ஸ் எல்லாம் இங்க வர்றேன்னு சொல்லி இருக்காங்க. அவங்களுக்கு தேவையானதை எல்லாம் ஹோட்டலில் இருந்து ஆர்டர் பண்ணி வரவழைக்கணும். நீங்க... வாங்க... வந்து சாப்பிட்டு விட்டீங்கன்னா. நான் என் வேலையை பார்க்க தொடங்கிருவேன்..." சம்யுக்தா பரபரப்பாக கூற... ஒரு நெடிய பெருமூச்சுடன் அவளை மறுப்பாக பார்த்தான் வாசுதேவன்.

"எனக்கு சாப்பாடெல்லாம் வேண்டாம் சம்யுக்தா. இங்க பெங்களூரில் ஆபீசில் எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. அதனால நான்



கிளம்பறேன்... அநேகமாக நான் திரும்பி வர ஈவினிங்க ஆகிவிடும்..."

"ம்ம்... அப்ப சரி. போயிட்டு வாங்க. நானும் பிரெண்ட்சோட சேர்ந்து ஃபிரியா அரட்டை அடிச்ச மாதிரி இருக்கும். அவங்களும் கிளம்ப சாயந்திரம் ஆகிரும்னு நினைக்கிறேன்..." சம்யுக்தா மீண்டும் தன் செல்போனை எடுத்து பேசத் தொடங்கிவிட... மௌனமாக அங்கியிருந்து கிளம்பிவிட்டான் வாசுதேவன்.

மாலை மயங்கும் நேரத்தில் களைப்பும் சோர்வுமாக காரிலிருந்து இறங்கிய வாசுதேவனை... அவனுக்காகவே காத்திருப்பவரைப்போல வாசல் சிட் அவுட்டில் இருந்த சேரில் அமர்ந்திருந்த சுந்தரலிங்கம் அவசரமாக எழுந்த சென்று வரவேற்றார்.

"மறுவீட்டுக்கு வந்த இடத்திலும்கூட ஆபீசுக்கு போகணுமா தம்பி? காலையிலயும் சாப்பிடாம கிளம்பிட்டீங்க... மதியம் எங்க சாப்பிட்டீங்களோ என்னவோ...? ரொம்ப சோர்வாக இருக்கீங்களே? உள்ள வாங்க...? கண்டிப்பும் கரிசனையுமாக பேசிக் கொண்டே வாசுதேவனை சுந்தரலிங்கம் வீட்டினுள் அழைத்து செல்ல...

ஹால் சோபாவில் அமர்ந்து... தன் எதிரே இருந்த சிநேகிதக் கூட்டத்தினரிடம் சத்தமாக பேசி சிரித்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

"ஹாய்... ஹலோ... வெல்கம் சார்... ஹலோ மிஸ்டர் வாசு வாங்க சார்..." கலவையான வரவேற்பு ஒலி உற்சாகமாக வரவேற்க... சோர்வான புன் சிரிப்புடன் மனைவியின் அருகே சென்று அமர்ந்தான் வாசுதேவன்.

"என்ன சார்... ரொம்ப பிஸி போல இருக்கு..."

"ஏண்டி சம்மு... இவர் இப்படி பிஸியாக இருந்தால் நீ என்னடி செய்வ...?"

"சம்யுக்தா... உன் ஹஸ்பெண்டுக்கு சிரிக்கிறதுக்கு சம்பளம் கொடுக்கணும் போல இருக்கேடி. நம்ம கேங்குக்கு தகுந்த மாதிரி டிரெயினிங் கொடுத்து பழக்கி வைடி..."

"இங்க பாருங்க சார்... எங்க சம்யுக்தா கண்ணில இருந்து வெங்காயம் உரிக்கிற போது கூட கண்ணீர் வராம பார்த்துக்கணும். சரியா...?"

"சம்யுக்தாவுக்கு ஏத்த ஜோடிதான்... சாரும் ரொம்ப ஹேண்ட்ஸமாக தான் இருக்காரு..."

"ஏய்... பிரெண்டோட ஹஸ்பெண்ட் உனக்கு அண்ணன் மாதிரி சைட்டெல்லாம் அடிக்கக் கூடாது..."

"அடிப்பாவி... என் ஹஸ்பெண்டை தவிர நான் யாரையும் சைட் அடிக்க மாட்டேன்னு சபதம் எடுத்துருக்கேண்டி..."



"ஹை... ஹை... உன் சபதமெல்லாம் எப்படி இருக்கும்னு எங்களுக்கு தெரியாதா...?"

வீடெங்கும் சத்தமும் இறைச்சலுமாக இருக்க... ஏற்கெனவே தலைவலியுடன் வீடு திரும்பி இருந்த வாசுதேவனுக்கு.... தலையே வெடித்து விடும்போல தலைவலி மேலும் அதிகரிக்க தொடங்கியது.

"நான் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன் சம்யுக்தா. சாரி கைஸ்... ஹேவ் எ நைஸ் டைம்..." சம்யுக்தாவிடம் கூறிவிட்டு அவளது பதிலை எதிர் பாராதவனாக வாசுவேன் மாடியேறி சென்றுவிட... அவனது சோர்வை கவனத்தில் கொள்ளாதவளாக சிநேகிதிகளிடம் அரட்டை அடித்து விட்டு.. அவர்கள் அனைவரும் அங்கிருந்து கிளம்பி சென்ற பிறகு... வெகு நேரம் சென்றுதான் வாசுதேவனிடம் திரும்ப வந்தாள் சம்யுக்தா.

சோர்வாக படுத்திருந்த வாசுதேவன்... சிரிப்புடன் வந்த சம்யுக்தாவின் முகத்தை பார்த்து... தன் சோர்வை மறைத்துக் கொண்டவனாக தானும் சிரிப்புடன் அவளைப் பார்த்தான்.

"இப்படி மனசு விட்டு அரட்டை அடிச்சு ரொம்ப நாள் ஆகிருச்சு இன்னிக்கு நேரம் போனதே தெரியல..."

".........."

"உங்களுக்கு டிபன் எடுத்து வெக்க சொல்லவா...?"

"வேண்டாம்..."

"ஏன் வெளியில சாப்பிட்டீங்களா...? அப்ப சரி... நான் போய் பால் எடுத்துட்டு வர்றேன். இருங்க..."

சரியாக பத்தே நிமிடங்களில் கண்ணாடி டம்பளரில் பால் நிறைத்து கொண்டு வந்த சம்யுக்தா... ஒன்றை அவனிடம் கொடுத்துவிட்டு... மற்றொன்றை தானும் பருகத் தொடங்க... கேள்வியாக மனைவியை பார்த்தான் வாசுதேவன்.

"நீ சாப்பிடலியா..."

"ம்ச்சு.. எனக்கும் சாப்பாடு வேண்டாம். இன்னிக்கு மனசுக்கு ரொம்ப நிறைவாக இருக்கு. அதனால சாப்பிட தோணலை..."

சம்யுக்தா நைட்டியை மாற்றிக் கொண்டு வந்து படுக்கையில் சரிய... வாசுதேவனின் அறையில் இருந்ததைப் போல சம்யுக்தாவின் அறையில் இருந்த கட்டில் பெரியதாக இல்லாததால்... வாசு தேவனால் மனைவியின் அருகாமையை நன்றாக உணர முடிந்தது.

சம்யுக்தா அன்று இருந்த சந்தோசமான மனநிலையில்... வாசுதேவன் அவளுடன் ஒன்றுகூட விரும்பினால் கூட அவள் சம்மதித்து விடுவாள்



என்கிற எண்ணம் வாசுதேவனுக்குள் ஒரு நிமிடம் ஆண்மையின் தாபத்தை ஏற்படுத்த...

மறுகணமே தன்னுடைய மனதினை மிகுந்த பிரயாசைப்பட்டு தன் வசம் கொண்டு வந்தான் வாசுதேவன்.

அவனைப் பொறுத்த வரையிலும்... சம்யுக்தா... அவனை... அவனுடைய உறவுகளுடன்... தன்னுடையவனாக ஏற்றுக் கொண்டு. அவனுடன் இணைய வேண்டும் என்று விரும்பினான் அவன்.

எனவே... மறந்தும்கூட மனைவியின் பக்கமாக திரும்ப முயலாதவனாக அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டவனை... மிக விரைவிலேயே தூக்கம் வந்து அரவணைத்துக் கொண்டது.

"மாப்பிள்ளை ரொம்ப ஹேண்ட்சம்மாக இருக்கிறார் சுந்தரம் சார்..."

"அருமையான ஜோடி பொருத்தம் சார். அமைந்தால் இப்படி அமையணும்..."

"நீங்க நினைச்சதைப் போலவே பொண்ணுக்கு ஒரு ராஜகுமாரனை கொண்டு வந்துட்டீங்க சுந்தரம்... வாழ்த்துக்கள்...."

"குட் செலக்சன் சுந்தரம்..."

மேடையில் நின்றிருந்த மணமக்களை விருந்தினர்கள் அனைவருமே மனதார புகழ.. வாய்

கொள்ளாத சிரிப்புடன் பெருமையில் பூரித்துப் போனார் சுந்தரலிங்கம்.

அவரது வாழ்நாளின் லட்சியம் எல்லாம் அந்த நொடியிலேயே அனைத்தும் நிறைவடைந்து விட்டதைப் போல தோன்றியது அவருக்கு.

மாமனாரின் விருப்பத்திற்கேற்றாற்போல... வந்திருந்த விருந்தினர் அனைவரிடத்திலும் அவரவர்களுக்கு தகுந்தாற் போல பேசி... அவரவர்க்கு தகுந்தாற்போல அவர்களது கேள்விகளுக்கு பதிலளித்து... சிலருக்கு சிரிப்பை மட்டுமே பதிலாக கொடுத்து என வரவேற்பு நிகழ்ச்சியை ஒரு குறைவுமில்லாமல் நடத்தி முடித்து விட்டு... சுந்தரலிங்கத்திற்கு துணையாக இருந்து நிகழ்ச்சிக்கான செலவுக் கணக்குகளை சரிபார்த்து முடித்துவிட்டு... ஹோட்டலில் இருந்து திரும்பிய வாசுதேவனை உடல் சோர்வு தள்ளாட வைத்தது.

வெகுவாக முயற்சி செய்து உடை மாற்றி படுக்கையில் சரிந்தவனின் அருகே சம்யுக்தா உடை மாற்ற மனமின்றி... தயக்கத்துடன் அமர்ந்திருப்பதை கண்ட வாசு தேவனின் பார்வை கேள்வியாக அவள் மீது படிந்தது.

"வந்து... நாளைக்கே நாம கிளம்பணுமா..." சம்யுக்தா தயக்கத்துடன் கேட்க... சோர்வும் களைப்புடனும்... அங்கு வந்த நாள் முதலாக



சம்யுக்தா தன்னை சரியாக கவனித்து நடத்தாத ஏமாற்றமும்... வாசுதேவனின் மனதிற்குள் கோப நெருப்பை உருவாக்க... எரிக்கும் கண்களுடன் சம்யுக்தாவை முறைத்தான் வாசுதேவன்.

"எனக்கு இங்க இருந்து கிளம்பவே மனசு வரலை. இன்னும் கொஞ்ச நாள் இங்க இருந்துட்டு போகலாமா...?"

"........."

"இல்லாவிட்டால்.... உங்களுக்கு வேலை இருந்தால் நீங்க கிளம்புங்க. நான் இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு வர்றேன்...."

அவ்வளவுதான்... வாசுதேவன் தன்னை மறந்து அறைந்த அறையில்.. கட்டிலின் ஒரு ஓரத்திற்கு சென்று விழுந்தாள் சம்யுக்தா.

நடந்ததை முழுமையாக உணரும் சக்தியற்ற வளாக தன் கண்ணத்தில் கை வைத்து வெறித்த பார்வையுடன் எழுந்து அமர்ந்தவளின் முன்பாக ஒற்றை விரல் காட்டி எச்சரித்தான் வாசுதேவன்.

"நாளைக்கு காலையில நாம ரெண்டு பேரும் இங்க இருந்து கிளம்பறோம். சரியா...? அதை விட்டு விட்டு... மாமா முன்னாடி ஏதாவது அழுதுகிழுது ஆர்ப்பாட்டம் பண்ணினியோ... கொன்னுருவேன் கொன்னு. என்னைப் பார்த்தால் உனக்கு

இளிச்சவாயன் போல தெரியுதா? நானும் சின்னப் பொண்ணு... போனா போகுதுன்னு உன் இஷ்டத்திற்கு எல்லாம் வளைந்து - கொடுத்தா... நீ ரொம்பத் தான் ஆட்டம் போகிற...? ஒழுங்கா போய் படு. நாளைக்கு அதே மாதிரி ஒழுங்கு மரியாதையா என்கூட கிளம்பு...போ..."

வாசுதேவன் கோபத்தில் சீற... சம்யுக்தா நடுங்கும் உடலுடன்... உடை மாற்றவும் தோணாதவளாக அப்படியே கட்டிலில் சுருண்டு படுத்து விட்டாள்.

'பாவம்... நான் இப்படி நடந்திருக்க கூடாது...' நடுங்கும் மனைவியை பார்த்து இரக்கம் கொண்ட மனதினை அவள் அறிந்து விடாதவகையில் மறைத்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்து அமர்ந்து மேலே சுற்றிய பேனை வெறித்தபடி படுத்து விட்ட வாசுதேவன்.. அன்று இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்தது... நடுங்கும் தன் மீது போர்வையை எடுத்து போர்த்தி விட்டது... விடியும் வரையிலும் தன் முதுகில் ஆறுதலாக தடவிக் கொண்டிருந்தது என எதையுமே அறியாதவளாக அரை மயக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

விடிந்து வெகு நேரம் சென்றே தன்னுணர்வு வந்தவளாக கண்விழித்து பார்த்தவள்... வாசுதேவன் குளித்து முடித்து தயாராகி... தங்களது



பெட்டிகளையும் தயார் செய்து... கிளம்புவதற்கு ரெடியாக காத்திருப்பதைக் கண்டு கண்கள் கலங்க.... வாசுதேவனுக்கு முன்பாக அழுகையை காட்ட பயந்தவளாக குளியல் அறைக்குள் நுழைந்தாள் சம்யுக்தா.

அமைதியாக ரெடியாகி... உணவு உண்டு முடித்து... தந்தையிடமும் வேலையாட்களிடமும் விடைபெற்று... அதே அமைதியுடன் காரில் ஏறி அமர்ந்த மனைவியின் அருகே அமர்ந்தான் வாசுதேவன்... பெங்களூரின் சாலைகளில் கார் விரைத்து ஓடி... அதனை கடந்து... பெங்களூரின் சுவடு கண்ணுக்கு தெரியாமல் மறைந்த பிறகு... மெதுவாக கை நீட்டி மனைவியை தன் அருகில் இழுத்து அவளது இடையில் கை கொடுத்து இறுக்கமாக தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

## 21

"வாசு... வாவா... என்ன அதுக்குள்ள திரும்பி வந்துட்டீங்க...? இன்னும் ரெண்டு நாள் தங்கி இருந்துட்டு வந்திருக்கலாமப்பா...?" காரில் இருந்து இறங்கிய பேரனை சந்தோசமாக வரவேற்று குரல் கொடுத்த கணவனை பார்வையிலேயே அடக்கினாள் காமாட்சி.

"இப்ப எதுக்கு இப்படி எட்டு வீட்டுக்கு கேக்குற மாதிரி கத்தறீங்க? அவனுக்கு என்ன செய்யணும்னு தெரியாதா....?"

'க்கும்.. இந்த கிழவிக்கு நான் வாய்திறந்து பேசினாலே பிடிக்காதே...' ஞானசம்பந்தன் அமைதியாகிவிட... வாடிய முகத்துடன் காரிலிருந்து நிதானமாக கீழே இறங்கிய சம்யுக்தாவை ஆராய்ச்சியாக பார்த்தாள் காமாட்சி.

"அம்மாடி கண்ணு... சம்யுக்தா.. வாடாம்மா... வாவா. நீ இல்லாம இந்த வீடே வெறிச்சோடிக் கிடந்தது. உங்க நாத்தனார் வேற நீ எப்ப திரும்பி வருவேன்னு கேட்டு என்னை துளைச்சு எடுத்துட்டா போ... ஸ்பந்தனாவை கூப்பிடு... உங்க அண்ணி வந்துட்டாங்க பாரு..."

காமாட்சி கவனமாக சம்யுக்தாவின் மனதை மாற்றச் செய்த முயற்சிக்கு... அவள் எதிர்பார்த்த பலன் கிடைத்தது.

"அண்ணி..." ஸ்பந்தனா வீட்டினுள் இருந்து காற்றாக ஓடிவந்து ஸ்பந்தனாவின் கழுத்தைக் கட்டிக் கொள்ள... அவளது அன்பைக் கண்ட சம்யுக்தாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"நீங்க இல்லாம ரொம்ப போர் அடிச்சுது அண்ணி. நீங்க எப்படா வருவீங்கன்னு வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தேன்..."



"உங்க அண்ணியை இப்படி வாசலில் நிற்க வெச்சே பேசிக்கிட்டு இருக்கப் போறியா தனா.. முதலில் அவளை உள்ளே கூட்டிக்கிட்டு போ..."

காரில் இருந்த பெட்டியை எடுத்து வேலையாளிடம் கொடுத்துக் கொண்டே கூறிய வாசுதேவனின் குரல் காதிலேயே விழுகாத பாவனையுடன் ஸ்பந்தனாவை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்ற மனைவியை உள்ளூர சிரித்தபடி ரசித்துக் கொண்டே தானும் அவர்களுடன் இணைந்து வீட்டினுள் சென்றான் வாசுதேவன்.

அன்று இரவு வரையிலும்... ஒரு நிமிடம் கூட ஸ்பந்தனாவை விட்டுப் பிரியாமல் உடனிருந்து ஸ்பந்தனா வளவளவென்று பேசிக் கொண்டிருக்க சம்யுக்தாவினால் ஸ்பந்தனாவைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்க நேரம் இல்லாமல் போய் விட்டது.

"ஏய் வாலு... டைம் என்ன ஆச்சு பாரு..."

"பத்து மணி ஆகுதும்மா..." கூறிய அன்னையிடம் இயல்பாக சுவரில் தொங்கிய கடிகாரத்தில் மணி பார்த்துக் கூறியவளின் முதுகில் செல்லமாக அடித்துவிட்டு அவளது கை பற்றி எழுப்பினாள் வேதவதி.

"எனக்கு மணி பார்க்க தெரியாம உன்கிட்ட கேட்டேன்னு நினைச்சியா...? எந்திரிச்சு வாடி..."

"அம்மா... ப்ளீஸ். இன்னும் கொஞ்சம் நேரம் அண்ணிகிட்ட பேசிக்கிட்டு இருந்துட்டு வர்றேனே..."

"உங்க அண்ணி எங்கயும் போயிட மாட்டாங்க... இங்க தான் இருப்பாங்க. நாளைக்கு காலையில வந்து மிச்சம் மீதிக் கதையை பேசிக்கலாம்... வா..." ஸ்பந்தனா சிணுங்கிக் கொண்டே எழ... அவளை பார்த்து சிரித்தபடியே மாமியாரை பார்த்தாள் சம்யுக்தா.

"அவ இருக்கட்டும் அத்தை. இன்றும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கோமே..."

"இல்லம்மா... நீ ரொம்ப தூரம் டிராவல் பண்ணிட்டு வந்திருக்கிற. உனக்கு களைப்பாக இருக்கும். நீ ரெஸ்ட் எடு..." வேதவத் பிடிவாதமாக மகளை இழுத்துக் கொண்டு வெளியேற... அவர்கள் வெளியே செல்வதற்காக காத்திருந்தவனைப்போல அறைக்குள் நுழைந்து கதவடைத்த வாசுதேவனிடம் பேச விருப்பம் இல்லாதவளாக அவனுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டாள் சம்யுக்தா.

மனைவியின் கோபத்தை ஓரளவிற்கு எதிர்பார்த்திருந்ததினால் உள்ளூர தோன்றிய சிரிப்புடன் கட்டிலின் மறுபுறத்தில் அமர்ந்தான் வாசுதேவன்.

"சம்யுக்தா..." மெல்லிய குரலில் அழைத்த வாசுதேவனின் குரலுக்கு பதிலின்றி போக... வாசுதேவனின் சிரிப்பு பெரிதானது.



'கொஞ்சம் கொஞ்சமாக என்னிடம் நீ நெருங்கி வருகிற சம்யுக்தா. உரிமை இருக்கும் இடத்தில்தான் கோபம் வரும்...'

"நான் உன்னைத்தான் கூப்பிட்டேன் சம்யுக்தா..."

"நீ கூப்பிட்ட உடனேயே நான் திரும்பிடணுமா? நான் என்ன உன் அடிமையா...?"

"சம்யுக்தா... உனக்கு என் மேல கோபம் வருவது இயல்புதான்..."

கோபமா... வெறி வெறியா வருது. ஆனால் என்ன செய்ய? நான் தான் சூழ்நிலை கைதியாகி விட்டேனே...?

"நான்... செஞ்சது தப்புதான் சம்யுக்தா... ஸாரி..."

மன்னிப்பு கேட்டால் போதுமா? இதுவரைக்கும் யாரும் என்னை கைநீட்டி அடிச்சது கிடையாது... நீ என்னை... ச்சே...

"அதான் ஸாரி சொல்லிட்டேன்ல... இதுக்கு மேலயும் நீ இப்படி மூஞ்சியை தூக்கி வெச்சுகிட்டு அந்தப் பக்கமா திரும்பிப் படுத்திருந்தேன்னா. அப்புறம் நான்..."

வாசுதேவன் கூறி முடிக்கும் முன்பாக... மனதிற்குள் தோன்றிய பயத்தின் காரணமாக

அவசரமாக வாசுதேவனை பார்த்து திரும்பிப் படுத்தாள் சம்யுக்தா.

'இவன் ஏதாவது ஏட்டிக்கு போட்டியாக செய்வதற்கு முன்னால நானே திரும்பிப் படுத்துடறது நல்லது...'

"குட்... இதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு. இப்ப உனக்கு என் மேல கோபம் இருந்தால் உன் மனசு சமாதானம் ஆகிற வரைக்கும் என்னைக் கன்னா பின்னான்னு திட்டி விடு... நான் அமைதியாக கேட்டுக்கிறேன்..."

"ஆமாமா... ஏற்கெனவே நான் மனசுக்குள்ள அதைத்தான் செஞ்சுக்கிட்டு இருக்கேன்..."

"சம்யுக்தா..."

'சொல்லித் தொலைடா...'

"நான் சொல்றதை கொஞ்சம் பொறுமையாக் கேளு..."

'இதுவரைக்கும் அதைத்தானே செஞ்சுக்கிட்டு இருக்கேன்...'

"இப்ப நாம இருக்கிற இந்த வீடுதான் நம்ம இடம் சம்யுக்தா..."

'நான் இல்லேன்னு சொன்னேனா? இது உன் இடமாக இருக்கிறதாலதானே இங்க வீடு கட்டி



குடியிருக்கிற? அடுத்தவங்க இடத்தில கட்ட முடியுமா என்ன...?' மனதிற்குள் கேட்டுக் கொண்ட சம்யுக்தா... அந்தக் கேள்வியினால் மனதிற்குள் தோன்றிய சிரிப்பை தனக்குள் அடக்கிக் கொண்டாள்.

"அதாவது... இதுதான் நம்மோட கரெக்ட் பிளேஸ். இனிமேல் இதுதான் உன் வீடு சம்யுக்தா..."

".........."

"நான் உங்க அப்பா மேல அன்புக் அக்கறையும் வெச்சிருக்கிற மாதிரி நீயும்... இங்க இருக்கிறவங்க மேல அன்பு காட்டி பழகிக்கணும்..."

"..........."

"அப்பதான் நம்ம ரெண்டு குடும்பத்துக்குள்ளயும் இருக்கிற ஒற்றுமை பலப்படும். நம்ம ரெண்டு பேரோட குடும்பமும்... ஒரே குடும்பமாக மாறணும் சம்யுக்தா... அதுதான் என் ஆசை..."

".........."

"நீ பெங்களூரிலும் நான் இங்கேயும் இருந்தால்... நம்ம ஆசை நிறைவேறாது. நம்ம ரெண்டு குடும்பத்துக்குள்ளயும் மனக்கசப்புதான் வரும்..."

".............."

"இன்னும் கொஞ்ச நாள் பொறுமையாக இரு சம்யுக்தா. உனக்கே நம்ம குடும்ப சூழ்நிலை பழகிவிடும். அதுக்காகத்தான் நான் உன்னை வலுக்கட்டாயமாக இங்கே கூட்டிக்கிட்டு வந்தேன்... "

"............"

"நீ இந்த குடும்பத்துல ஒருத்தியாக மாறிவிட்டால்... அதன் பின்னால் நானே உன்னை பெங்களூருக்கு கூட்டிக்கிட்டு போறேன். நாம இங்க கொஞ்ச நாள்... அங்க கொஞ்ச நாள்னு இருப்போம்... சரியா...?"

வாசுதேவன் பேசத் தொடங்கியவுடன்... மனதிற்குள் அவனிடம் சரிக்கு சரியாக பதில் கூறிக் கொண்டிருந்த சம்யுக்தா. ஒரு கட்டத்தில் அமைதியாகி வாசுதேவனின் வார்த்தைகளில் தெரிந்த உண்மையை உணர்ந்துகொள்ள தொடங்கினாள்.

'இவன் சொல்வதும் சரிதானோ...?' மனம் வாசுதேவனின் வார்த்தைகளிலேயே மையம் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்துவிட...

தான் அவ்வளவு தூரம் எடுத்துக் கூறியும் கூட பிடிவாதமாக வாய் திறந்து பேசாமல் அமைதியாக படுத்திருந்த சம்யுக்தாவை கோப விழிகளால் சில நொடிகள் வெறித்து பார்த்து விட்டு... படுக்கையில் சரிந்து கண்மூடிக் கொண்டான் வாசுதேவன்.



'இவளுக்கெல்லாம் எவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னாலும் புரியாது. இவகிட்ட பேசுறது... சுத்த வேஸ்ட்...'

வாசுதேவன் பல்லைக் கடித்த படி படுத்து உறங்கிவிட... விடி விளக்கின் ஒலியில் தெரிந்த அவனது முகத்தையே கண் கொட்டாமல் பார்த்தபடி படுத்திருந்தாள் சம்யுக்தா.

'இவனோட இடத்தில் இந்நேரம் வேற யாராவது இருந்திருந்தால் என் நிலைமை என்னவாகி இருக்கும்...?'

'இவன்தான் எவ்வளவு நல்லவனாக இருக்கிறான்...?'

'ச்சு.... சில நேரத்துல நானும்கூட கொஞ்சம் மடத்தனமாகத்தான் நடந்துக்கிறேன்....'

'ஆனால்.... நான் எப்படி நடந்துக்கிட்டாலும்... என்கூட இவர் இருக்கிறாரோ.....? இவர் எல்லாத்தையும் சரி பண்ணிடுவார்....'

'இவன் என்பது... அந்த நொடியில் இவர் என்றானது... என்பது கூட கவனத்தில் பதியாதவளாக வாசுதேவனையே பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவின் கண்களில் ரசனை தோன்றியது.

'பிரெண்ட்ஸ் எல்லாம் சொன்னதைப் போல... இவன் ரொம்ப ஹேண்ட்சம் தான்..."

'அந்த ப்ரித்தி இவரைப் பார்த்து என்னமாய் ஜொள்ளு விட்டாள்? இனிமேல் நாங்க பெங்களூர் போகும் போது... யாரையும் கூப்பிடக் கூடாது...' பொறாமையுடன் முகம் சுளித்தாள்... மீண்டும் திரும்பி அருகில் இருந்த கணவனின் முகத்தில் தன் பார்வையை பதித்து ரசிக்க தொடங்கினாள் சம்யுக்தா.

'தூங்கிறப்ப கூட எவ்வளவு பிடிவாதமாக முகத்தை வெச்சிருக்கிறார் பார். காட்டுமிராண்டி.. காட்டுமிராண்டி...' செல்லமாக மனதிற்குள் திட்டிய படியே... சத்தமின்றி சிரித்த சம்யுக்தா... வாசுதேவன் அதனை பார்த்து விடுவானோ என்கிற சந்தேகத்துடன்... போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டாள்.

வாசுதேவன் கண்விழிக்கும் முன்பாக அவனுக்கு காபியை எடுத்துச் சென்று அவன்முன் நிற்க வேண்டும் என்கிற அவலுடன் மாடியேறிக் கொண்டிருந்த சம்யுக்தாவின் முகம்... ஏமாற்றத்தில் சுருங்கியது.

அவள் வருவதற்கு முன்பாகவே... மாடிப்படிகளில் பாதி இறங்கிவிட்ட வாசுதேவன் சம்யுக்தாவை கேள்வியாக பார்த்தபடியே அவள் அருகில் வந்தான்.



"உங்களுக்காக காபி எடுத்துக்கிட்டு வந்தேன்..." சம்யுக்தா ஏமாற்றமாக கூற அதை கவனிக்காதவனாக கீழே இறங்க தொடங்கிய கணவனை வேறு வழியின்றி தானும் பின் தொடர்ந்தாள் சம்யுக்தா.

நேராக சென்று ஹாலில் அமர்ந்திருந்த தந்தை மற்றும் பாட்டியுடன் வாசுதேவன் அமர்ந்துவிட.... அவனுக்கான காபி டம்ளரை அவன் முன் இருக்கிற டீப்பாயில் வைத்துவிட்டு... பின்... செய்வதறியாத வளாக விலகிச் சென்றாள் சம்யுக்தா.

"அண்ணி... இந்த சுடிதார் டிசைனை பாருங்களேன்... நான் இது மாதிரிதான் பெங்களூர் கடையில தேடினேன்.. ஆனா கிடைக்கலை..." ஸ்பந்தனா காட்டிய நாளிதழ் விளம்பரத்தை சுவாரசியமில்லாமல் பார்த்த சம்யுக்தாவிடம்... அதனை அறியாதவளாக.. அந்த சுடிதாரின் அருமை பெருமைகளை அடுக்கத் தொடங்கினாள் ஸ்பந்தனா.

"சரி ஸ்பந்தனா... நாம இதைப் பத்தி அப்புறமாக பார்க்கலாம். உங்க அண்ணன் குளிச்சுட்டாரான்னு பார்த்துட்டு வர்றேன்... "

வாசுதேவன் தங்களது அறைக்கு திரும்பிச் சென்று வெகு நேரமாகிவிட்டதை உணர்ந்த அவசரத்துடன் எழுந்த சம்யுக்தாவின் கை பற்றி இழுத்து மீண்டும் தன் அருகில் அமர்த்தினாள் ஸ்பந்தனா.

"அண்ணனுக்கு குளிக்கத் தெரியாதா என்ன? நீங்க போய்த்தான் அவரை குளிக்க வைக்கப் போறிங்களா...? பேசாம உட்காருங்க அண்ணி. இன்னும் ரெண்டு நாளில நான் காலேஜீக்கு திரும்பப் போயிருவேன்... அப்புறம் உங்க செல்ல ஹஸ்பெண்ட் பின்னாலேயே திரிஞ்சுக்கலாம்... இப்ப நான் சொல்றதை கேளுங்க..." ஸ்பந்தனா பிடிவாதமாக கூறிவிட... வேறு வழியின்றி... வாசுதேவன் வருகிறானா என்பதை அடிக்கடி பார்த்தபடியே நாத்தனாரின் வார்த்தைகளை அரைகுறையாக கேட்டபடி அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

வாசுதேவன் கீழே இறங்கி வருவதைப் பார்த்துவிட்டு சம்யுக்தா அவசரமாக எழுந்த நிற்க... அவள் அங்கு நிற்பதைக்கூட பொருட்படுத்தாத வனாக... நேராக டைனிங்டேபுளுக்கு சென்று... வேதவதி கொடுத்த உணவை உண்டுவிட்டு... அலுவலகத்திற்கு கிளம்பிக் சென்று விட்டான் வாசுதேவன்.

## 22

சூரியக் கதிர்கள் அதிகாலையின் குளுமை மாறி சூடாக ஒளிவீசி பூமியை தன் வெப்பத்தால் சுட்டெரிக்க தொடங்கியிருக்க சூரியனின் வெப்பத்தைக்கூட உணராதவளாக... தோட்டத்தை



வெறித்தபடியே புல்வெளியின் நடுவே இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த சம்யுக்தாவின் முகமெங்கும் சிந்தனை படர்ந்திருந்தது.

பெங்களூர் சென்று வந்த நாள் முதலாக... வாசு தேவனின் நடவடிக்கைகளில் தெரிந்த மாறுதல்... சம்யுக்தாவின் மனதிற்கு வேதனையை கொடுத்தது.

ஒருவேளை... அன்றைய நாள் இரவு வாசுதேவன் பேசிய வார்த்தைகளுக்கு தான் மறுமொழியாக எதையாவது பேசி இருக்க வேண்டுமோ... என்கிற எண்ணம் தோன்றி அவளுடைய உள்ளத்தை மேலும் பரிதவிக்கச் செய்தது.

அதற்கு பரிகாரமாக எண்ணி அவள் வாசுதேவனிடம் நெருங்கி பேச முயலும் போதெல்லாம்.. அவன் அதனை புரிந்து கொள்ளாமல் விலகிச் சென்று கொண்டிருக்க... அதனை மாற்றும் வழியறியாதவளாக சம்யுக்தா திகைத்து நின்றாள்.

சற்று சீக்கிரமாக எழுந்து... வாசுதேவன் கண் விழிக்கும் முன்பாக அவருக்கான காபியுடன் அறைக்கு சென்று... அவனுடன் சிறிது நேரம் மனம் விட்டு உரையாடிக் கொண்டிருக்கலாம் என்று எண்ணி சம்யுக்தா வேகமாக அதிகாலையிலேயே கண்விழித்து எழுந்தாலும் கூட... வாசுதேவன் அவளுக்கு முன்பாக எழுந்து... ஹாலில் இருக்கும் மற்றவர்களுடன் சென்று அமர்ந்து விடுவான்.

வெகு நேரத்திற்கு அனைவரிடமும் எதையாவது பேசிய படியே அமர்ந்திருந்துவிட்டு அலுவலகம் செல்வதற்கு சற்று நேரத்திற்கு முன்பாக... வேகமாக தங்களது அறைக்குச் சென்று... அவசரமாக தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அலுவலகத்திற்கு சென்று விடுபவன்... இரவு வெகு நேரம் கழித்து... தாமதமாகத்தான் வீடு திரும்புவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

வீட்டிற்குள் நுழையும் போதே... களைத்த தோற்றத்துடன் சோர்வுடன் வருபவனிடம்... மனம் நோகும்படி தான் எதுவும் பேசிவிடக் கூடாது என்கிற கவனத்துடன் சம்யுக்தா அமைதியாக எடுத்து வைக்கும் உணவினை உண்டு விட்டு அறைக்குத் திரும்புபவன்... சம்யுக்தா அறைக்கு வருவதற்குள் நிச்சலனமாக உறங்கத் தொடங்கிவிடுவான்.

சம்யுக்தாவிற்கு... தான் செய்த குற்றம் என்னவென்பது சற்றும் புரியவில்லை. தான் பேசிய வார்த்தைகளுக்கு சம்யுக்தா பதில் கூறவில்லை என்கிற ஒரு சில காரணத்திற்கான வாசுதேவன் இவ்வளவு கோபம் கொள்ளக்கூடும் என்பதை எதிர் பார்த்திராத சம்யுக்தாவிற்கு... நாட்கள் செல்லச் செல்ல வாசுதேவனின் மீது அவளது மனதிற்குள் ஒருவித பயம் உருவாகத் தொடங்கியது.



தொடக்கத்தில் வாசுதேவன் சம்யுக்தாவை தவித்துக் கொண்டிருந்த நிலை படிப்படியாக மாறி.. தற்போது சம்யுக்தா வாசுதேவனை தவிர்க்கத் தொடங்கி இருந்தாள்.

'என்ன மாதிரியான வாழ்க்கை இது...?' சம்யுக்தாவின் மனதிற்குள் சலிப்பு தோன்றி... அதுவே மெல்ல மெல்ல கழிவிரக்கமாக மாறி இருக்க... சம்யுக்தாவிற்கு உன்னைச் சுற்றியிருக்கும் உலகமே சூனியமாக தோன்றத் தொடங்கியிருந்தது.

"அம்மாடி... சம்யுக்தா! என்னடா கண்ணு... இப்படி சுட்டெரிக்கிற வெயில்ல இங்க வந்து உட்காந்திருக்கிற...?" சம்யுக்தாவை பார்த்துப் பதறிப் போனவளாக ஓடி வந்த காமாட்சியை பார்த்து விரக்தியாக சிரித்தாள் சம்யுக்தா.

'என் வாழ்க்கையே சுட்டெரிக்கும் பாலைவனமாக இருக்கும் போது... இந்த வெயில் என்னை என்ன செய்துவிடப் போகிறது பாட்டி...?' மனதிற்குள் கேள்வி கேட்ட படியே எழுந்து நின்ற சம்யுக்தாவின் கரத்தை பற்றி இழுக்க குறையாக அவளை வீட்டினுள் அழைத்து வந்து காமாட்சியின் மனதிற்குள் அவளது மனநிலையை புரிந்து கொண்ட ஆற்றாமை தோன்றியது.

வாசுதேவனின் நடவடிக்கையையும்... சம்யுக்தாவின் வாடிய முகத்தையும் வைத்து...

அவர்களுடைய அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி அனுபவசாலியான காமாட்சியால் புரிந்து கொள்ள முடிந்தது.

சிறுவயதில் இருந்தே... வீட்டிற்கு ஒரே ஆண் வாரிசாக தனிக்காட்டு ராஜாவாகவே வாழ்ந்து பழகியிருந்த வாசுதேவனுக்கும். கோடீஸ்வரனின் செல்வ புதல்வியாக... செல்லமாக வளர்ந்திருந்த சம்யுக்தாவிற்கும் இடையே பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் பணிந்து போகும் தன்மை இயல்பாகவே இல்லாமல் போய் இருப்பதை அவள் உணர்ந்த கொண்டிருந்தாள்.

ஆனால்... வீட்டிற்கு மூத்த மனுசியாக... பெரியவளாக தான் அவர்கள் இருவருக்குமான அந்தரங்க வாழ்க்கையில் தலையிட்டு புத்திமதி சொல்லிவிடாத வகையில் அவளது அறிவு அவளை தடுத்து நிறுத்தியது.

'சொல்லிக் கொடுத்த சொல்லும்.. கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு கை கொடுக்க முடியும்? இரண்டு பேரும் அவர்களாகவே ஒருவரையொருவர் தானாக புரிந்து வாழ்வதுதான் நல்லது. கொஞ்சநாள் விட்டுப் பிடிப்போம்... அதன் பிறகும் சரியாகவில்லையென்றால்... அப்பப் பார்த்துக்குவோம்...' தனக்குள் அறிவுறுத்திக் கொண்டபடியே அவள் அமைதியாக பேரன் பேத்தி இருவரையும் கண்காணித்துக் கொண்டிருந்தாள்.



"ஏன் காமாட்சி... இதுக ரெண்டு பேரும் கலகலப்பே இல்லாம இருக்குதுகளே? புதுசாக் கல்யாணமான ஜோடிக்குள்ள இருக்கிற நெருக்கத்தையே காணோமே காமாட்சி..." ஞானசம்மந்தம் கூட ஒரு முறை சந்தேகம் கொண்டவராக கேட்க... கழுத்தை நெரித்தபடியே கணவனை முறைத்தாள் காமாட்சி.

"ஆமாமாம்.. ஆடு மாடுக மாதிரி நடுவீட்டில கட்டிப்பிடிச்சுக்கிட்டு திரியச் சொல்றீங்களா? பெரிய மனுசன் புத்தி போகுது பாரு. அதுக ரெண்டும் படிச்ச புள்ளைக அவங்க வாழ்க்கையை எப்படி வாழணும்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும். நீங்க போய் உங்க சோலிக் கதைய பாருங்க..."

காமாட்சி கறாராக சொல்லிவிட... அதன் பிறகும் அதைப் பத்தி பேச ஞானசம்பந்தனுக்கு தைரியம் இல்லாமல் போய் விட்டது.

வீட்டுப் பெரியவரான ஞானசம்பந்தத்தின் நிலையே இதுவென்றால்... சத்யநாதனோ தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருப்பவர்... வேதவதியோ வாய் இல்லாப் பூச்சி... அவருக்கு அந்த வீட்டு சமையல் அறைதான் எல்லாமே. அதனால் வாசுதேவனுக்கும் சம்யுக்தாவிற்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் பனிப்போர் மற்ற அனைவரின் கருத்தைக் கவராமலேயே போய் விட்டிருந்தது.

"ஏன் கண்ணு... இப்படித்தான் ஏறு வெயில்ல போய் உட்கார்ந்து இருப்பாங்களா? பாரு... முகமெல்லாம் கன்றிப் போய் இருக்குது. அம்மாடி வேதா... சில்லுன்னு கொஞ்சம் மோர் கொண்டு வாம்மா..." சம்யுக்தாவை வாஞ்சையோடு சோபாவில் அமர வைத்தபடியே சமையல் அறையை பார்த்து குரல் கொடுத்தாள் காமாட்சி.

அடுத்த இரண்டாவது நிமிடமே வேதவதி கையில் மோருடன் வந்துவிட, காமாட்சி தன் கையாலேயே சம்யுக்தாவை வற்புறுத்தி அதனை குடிக்கச் செய்துவிட்டு தானும் அவள் அருகில் அமர்ந்து அவளது முகத்தை ஊடுறுவிப் பார்த்தாள்.

"ஒண்ணுமில்ல பாட்டி... போர் அடிச்சுது... அதான் தோட்டத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருக்கலாமேன்னு போனேன்..." காமாட்சியின் பார்வையின் தீட்சண்யத்தை தாங்க முடியாதவளாக மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் சம்யுக்தா.

பேத்தி கூறுவது பொய்யென்பதை உணர்ந்திருப்பதாலும்... அவளது வார்த்தைகளை நம்பிவிட்டவளைப் போல பொய்யாக முகம் மலர்ந்தாள் காமாட்சி.

"அப்படியா கண்ணு! அதுக்கு எதுக்காக இங்க போய் உட்காரணும்? என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா... நானே உன்னை நம்ம தோட்டம் துரவுகளை சுத்திப் பார்க்க கூட்டிக்கிட்டு போய் இருப்பேனில்ல...? "



"நம்ம தோட்டத்துக்கா...? அது எங்க இருக்கு பாட்டி...?"

"நல்லாக் கேட்ட போ. ஊரை ஆளுர ராசாவுக்கு பொண்டாட்டியாகி விட்டு நம்ம தோட்டம் எங்க இருக்குன்னு கேக்குற பாரு! இந்த ஊரைச் சுத்தி இருக்கிற தோட்டத்துல பாதி நம்மளோடதுதான் கண்ணு. பாதிச் சொத்து பரம்பரையாக வந்தது... மீதி சொத்தெல்லாம் உன் புருசன் தன் சொந்த சம்பாதியத்துல வாங்குனது. என் பேரன் மகா கெட்டிக்காரன் இல்ல...? இல்லாட்டி உனக்கு புருசனாகி இருக்க முடியுமா...?" காமாட்சியின் குரலில் பெருமிதம் தெரிய... அதைக் கேட்டுக் கொண்டிருந்த சம்யுக்தாவின் மனதிலும் பெருமை தோன்றியது.

"சரி கண்ணு... எந்திரி... போகலாம். ஏலேய் சார்லசு... வண்டியை எடுடா..." அதட்டலாக கூறியபடியே சம்யுக்தாவின் கை பற்றி எழுப்பிய காமாட்சியை மறுப்பாக பார்த்தாள் சம்யுக்தா.

"தோட்டத்தை சுத்திப் பார்க்கப் போகிறதுக்கு கார் எதுக்கு பாட்டி? நாம மெல்ல நடந்தே போயிட்டு வரலாம். எனக்கும் பொழுது போன மாதிரி இருக்கும்."

"அது சரித்தான்.. உன்னை நடக்க வெச்சு கூட்டிக்கிட்டு போனால் அப்புறம் உன் புருசனுக்கு யார் பதில் சொல்றது...? ஆம்பளைய நடக்கிற நடைக்கே... ஒரு பக்கத்த சுத்தி வர அரை நாள் ஆகும். நீ பூமி அதிராம நடந்து பழகுன பொண்ணு... உன்னாலயெல்லாம் நடக்க முடியாது கண்ணு. நீ பேசாம வா... ஏலேய்... வண்டி ரெடியா இல்லையாடா...?" காமாட்சி அப்படியே வெளியே சென்று விட... வேதவதியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு காமாட்சியை பின் தொடர்ந்தாள் சம்யுக்தா.

"இங்க பாரு... என் பேத்தி மொத மொத தோட்டத்தை சுத்திப்பாக்க வருது. வண்டியை ஒரு குலுங்கல் கூட இல்லாம ஓட்டணும். தெரிஞ்சதா..?" காமாட்சி அதட்டலாக கூற... ஸ்டியரிங்கை பிடித்திருந்த டிரைவர் சார்லசின் கைகள் மெல்ல நடுங்கியது.

"தோட்டத்துக்கு போகிற பாதை குண்டும் குழியுமாக இருக்கும் பெரியம்மா. வண்டி கொஞ்சம் ஆடத்தான் செய்யும்..."

"என்னது...?" காமாட்சி தன் பெரிய விழிகளை விரித்து சார்லஸ் உற்றுப் பார்க்க பயத்துடன் சம்யுக்தாவை கெஞ்சுதலாக பார்த்தான் அவன்.

"பாட்டி... அவர் உள்ளதைத்தானே சொல்கிறார்...? பேசாம இருங்க பாட்டி. நீங்க சாதாரணமாகவே



போங்க சார்லஸ்..." சம்யுக்தா அமைதியாக செல்லும்படி கண்களால் சைகை காட்ட... நிம்மதியாக திரும்பி காரைக் கிளப்பினான் சார்லஸ்.

"வரவர உனக்கு வாய் கொஞ்சம் அதிகமாகத்தான் ஆகிறது சார்லசு. உன்னை சொல்லிக் குத்தம் இல்ல... எங்க வீட்டுத் தண்ணீ உன்னை இந்த ஆட்டம் போட வெக்குது..."

"அட... அவரை விடுங்க பாட்டி. இங்க தெரியுற தோட்டத்தில் எது எது நம்மளோடதுன்னு சொல்லுங்க..."

தொடக்கத்தில் சார்லசை காமாட்சியிடம் இருந்து தப்புவிப்பதற்காக கேட்ட சம்யுக்தா மெல்ல மெல்ல காமாட்சி... தோட்டத்தின் வளத்தைப் பற்றியும்... அவற்றை வாசுதேவன் வாங்கியதைப் பற்றியும் விரிவாக கூறிக்கொண்டே வர... அவருடைய பேச்சில் மனம் ஒன்றிப் போய் விட்டாள்.

"அந்த இருக்கு பாரு... அந்த தோப்புக்காரன் நமக்கு விக்கிறதுக்கு ரொம்ப பிகு பண்ணிக் கிட்டான். நம்ம வாசு அவன் தோப்பை சுத்தி இருக்கிற அத்தனை தோட்டத்தையும் வாங்கிப் போட்டு... அவன் தோட்டத்துக்கு போறதுக்கு பாதையே இல்லாம பண்ணிப்புட்டான். அப்புறந்தான் அவன் நம்ம வழிக்கு வந்து தோப்பை நமக்கு

விக்கிறதுக்கு ஒப்புக்கிட்டான்.." காமாட்சி பெருமையாக கூற... அவளை சிந்தனையாக திரும்பிப் பார்த்தாள் சம்யுக்தா.

"அது தப்பு இல்லையா பாட்டி. விக்கிறதுக்கு மனசு இல்லாதவங்கக்கிட்ட இப்படி வழி இல்லாம செஞ்சு இடத்தை வாங்குறதும்கூட பாவம்தானே...?"

"அட நீ வேற கண்ணு. அவன் அந்த தோப்பை விக்காம வெச்சு இருந்தான்னா... வாசு தன்பாட்டுல இருந்துருப்பான். ஆனா இவன்... வாசுமேல பொறாமைபட்டுக்கிட்டு... அசலூர்காரனுக்கு அடிமாட்டு விலைக்கு தோப்பை விக்கிறதுக்கு பேசி முடிசிட்டான். அதுக்கப்புறம்தான்... என் பேரன் இந்த விளையாட்டையே விளையாட ஆரம்பிச்சான். இனத்தாருக்குள்ள பகை இருக்கக்கூடாது கண்ணு... அப்படி இருந்தால்... அதை முளையிலேயே கிள்ளிடணும்..."

"..............."

"ஆனா வாசு இந்த நிலத்துக்கே உண்டான நியாயமான விலை கொடுத்துத்தான் இதை வாங்கினான். அந்த மடப்பயலுக்கு அப்புறமாகத்தான் வாசுவோட நல்லகுணம் புரிந்தது. இதை எதுக்காக சொல்றேன்னா.... வாசுவோட குணத்தை பத்தி நீயும் நல்லா புரிஞ்சுக்கணும்னுதான் சொன்னேன்...."



"வாசு இருக்கானே... அவன் தங்கமான குணத்துக்காரன்தான். ஒருத்தரோ மனசு நோகாம நடக்கணும்தான் நினைப்பான். ஆனா அவனோட அருமையை புரிஞ்சுக்காம இருந்தா... அப்புறம் அவனோட கோபத்தை யாராலயும் தாங்கிக்க முடியாது..."

'என்னாலயும் தான் தாங்கிக்க முடியில பாட்டி...' சம்யுக்தா மனதிற்குள் எண்ணியவாறே... பெருமூச்சுடன் ஜன்னலின் புறமாக திரும்பி வெளிப்புறத்தில் பார்வையை பதித்துக் கொள்ள.. அவளை பார்த்த காமாட்சியின் முகத்தில் கனிவு நிறைந்தது.

"எல்லாத்துக்கும் நேரம் காலம்னு ஒண்ணு இருக்கும் கண்ணு. வாசுவோட கோபம் குறையுற வரைக்கும் காத்திருந்தால் எல்லாமே நல்லதாத்தான் நடக்கும். இந்த தோட்டத்துக்காரனையே எடுத்துக்க... வாசுவால அவனுக்கு நல்லதுதான நடந்திருக்கு...?"

காமாட்சி அதற்கு மேல் எதுவும் பேசாதவளாக அமைதியாகி... தான் கூறுவதைப் பற்றி சம்யுக்தா சிந்தனை செய்து புரிந்து கொள்வதற்கு இடமளிக்க அதே நேரத்தில் காமாட்சியின் வார்த்தைகளில் தனக்கான செய்தியும் புதைந்திருப்பதை புரிந்து கொண்டவளாக சிந்தனை படர்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.

23

"வாங்கய்யா... வாங்க வாங்க. நீங்க வரப்போறதாக போன் பண்ணினீங்கன்னு சத்யநாதன் சொன்னான். உள்ள வாங்க..."

வழக்கமில்லாத வழக்கமாக காமாட்சி பணிவுடனும் மரியாதையுடனும் வரவேற்ற குரலைக் கேட்டு திகைப்புடன் தங்களது அறையில் இருந்து வெளியே எட்டிப் பார்த்தாள் சம்யுக்தா.

தூய வெண்ணிற வேஷ்டி சட்டையில் கண்ணியமான, தோற்றத்துடன் இருந்த நான்கைந்து பெரியவர்கள் கையில் தேங்காய் பழம், பூ நிறைந்த பிளாஸ்டிக் கவருடன் வந்திருக்க... வேதவதி வேகமாக வந்து கரம் குவித்து அவர்களுக்கு வணக்கம் செலுத்தினாள்.

"அய்யாவும், சின்னய்யாவும் வீட்டில் இல்லங்களாம்மா...?" வந்திருந்த பெரியவர் ஒருவர் வீட்டினை சுற்றிப் பார்வையை சுழற்றிய படியே கேட்க... அவரை மரியாதையுடன் ஏறிட்டுப் பார்த்தாள் காமாட்சி.

"சத்யநாதன் வெளியில ஒரு வேலையாப் போயிருக்கான். அய்யா இங்கதான் இருக்காங்க. நீங்க எல்லாரும் உட்காருங்க... நான் அவரை கூட்டிக் கிட்டு வர்றேன்..." காமாட்சி வீட்டினுள் விரைந்து செல்ல சிரிப்புடன் வேதவதியை பார்த்தார் அவர்.



"அம்மாடி... ஒரு தாம்பாளத்தட்டு குடும்மா..."

வேதவதி அவசரமாக கொண்டு வந்த வைத்த தாம்பாளத் தட்டில் அவர் பூ, பழம், தேங்காய் என அனைத்தையும் அடுக்கி முடிப்பதற்கும் காமாட்சி ஞானசம்பந்தனை அழைத்து வருவதற்கும் சரியாக இருக்க... அந்தத் தட்டினை அப்படியே எடுத்து அவர்களிடம் கொடுத்தார் அந்த பெரியவர்.

"இதெல்லாம் எதுக்குங்க...? அம்மாடி வேதவதி... தாம்பாளத்தை வாங்கிக்கம்மா..." பெரியவரிடம் பேச்சுக்காக மறுத்துவிட்டு... பெரியவளாக அந்த மரியாதையை மருமகளுக்காக விட்டுக் கொடுத்து நின்றாள் காமாட்சி.

"அப்புறம்...? ஊர்ப் பக்கமெல்லாம் மழை பெய்ந்ததா...? இந்த வருசம் வெள்ளாமை விளைச்சல் பரவாயில்லையா...?" ஞானசம்பந்தன் பெரிய மனித தோரணையுடன் வந்தவர்களிடம் விசாரிக்க..

காமாட்சி கணவரிடம் மரியாதையுடன் பணிவாக அவர் பின்னால் நின்றபடியே... மாடியில் இருந்து தன்னை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவை கீழிறங்கி வரும்படி பார்வையாலேயே ஜாடை காட்டினாள்.

'யார் இவர்கள்...?' ஆவலுடன் கீழே வந்த சம்யுக்தாவை பெருமையுடன் அணைத்தபடி...

வந்திருந்த விருந்தினரிடம் அறிமுகம் செய்தாள் காமாட்சி.

"வணக்கம்..." சம்யுக்தா பணிவுடன் வணங்க... பெருந்தன்மையுடன் அவளைப் பார்த்து அறிமுகமான வர்களைப் போல சிரித்தவர்கள்... தங்கள் கையில் இருந்த வெற்றிலை பாக்கில்... சில நூறு ரூபாய்த் தாள்களை வைத்து சம்யுக்தாவிடம் நீட்ட... திகைப்புடன் பார்த்த சம்யுக்தாவிடம் அதனை வாங்கிக் கொள்ளும்படி வலியுறுத்தினாள் வேதவதி.

"இவங்க எல்லாரும் நம்ம ஊர் பெரியவங்க சம்யுக்தா. நம்ம கோவில் திருவிழா வருது... அதுக்காக நம்மளுக்கான முதல் மரியாதையை செய்ய வந்திருக்காங்க..."

"முதல் மரியாதையா...?" சம்யுக்தாவிற்கு இதெல்லாம் மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

"பரம்பரை பரம்பரையா கோவிலுக்கான முதல் மரியாதையை உங்க குடும்பத்துக்கு செய்யுறதுதான் வழக்கம்மா. இனிமேல் இதையெல்லாம் நீயும் தெரிஞ்சுக்கணும்..."

வந்திருந்த பெரியவர்கள் அனைவரும் சற்று நேரம் அமர்ந்திருந்து விட்டுப்... பின் கிளம்பிச் சென்றுவிட... வீட்டில் இருந்த மூவரும்



திருவிழாவிற்கான ஏற்பாடுகளை செய்வதைப் பற்றி திட்டமிடத் தொடங்கினர்.

"இன்னிக்கு ஊர் பெரியவங்க சில பேர் வந்திருந்தாங்க. கோவில் திருவிழா வருகிறதாமே...? அதைப் பத்தி பேச வந்திருந்தாங்க..."

வழக்கம் போல தாமதமாக வந்து... படுக்கையில் சரிந்த கணவனிடம் தானாகவே வலியச் சென்று கூறினாள் சம்யுக்தா.

"தெரியும்..." வாசுதேவன் ஒற்றை வார்த்தையாக பதில் கூறிவிட்டு திரும்பி படுத்து விட சம்யுக்தா சிணுங்கிய மனதினை அதட்டியபடியே கணவனைப் பார்த்தாள்.

"நான் கோவில் திருவிழாவை எல்லாம் பார்த்ததே இல்லை. அதைப்பத்தி நினைக்கிறப்ப... ரொம்ப எக்ஸைட்டடா இருக்கு..."

"இன்னும் ஒரு வாரத்துல பார்க்கத்தான போற? அப்ப இந்த எக்ஸைட்மெண்ட்டெல்லாம் சரியாகி விடும்..."

வாசுதேவன் தன் கடமை முடிந்தது என்பதைப் போல உறங்கத் தொடங்கி விட... உறங்கிடும் கணவனை பார்த்தபடியே விழித்திருந்த சம்யுக்தா... உண்மையிலேயே அந்த திருவிழாவினை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினாள்.

"அம்மாடி சம்யுக்தா... இதுதான் நம்மோட பூர்வீக ஊர்ம்மா. எங்க மாமனார் காலத்துல இந்த ஊர் வறட்சியாகி கஷ்டம் வந்துட்டதால... இங்க இருந்து அவங்க எல்லாரும் நாம இருக்கிற பள்ளி கொண்டான்புரத்துக்கு குடிவந்துட்டாங்களாம். ஆனா... குலதெய்வ கோவில் மட்டும் இந்த ஊரில்தான் இருக்கு. அதனால நம்ம சாமியை கும்பிடணும்னா.. நாம இங்கதான் வந்தாகணும். காமாட்சி தங்களது பரம்பரை வழக்கத்தைப் பற்றி கூறிக் கொண்டே வர கவனமாக அதனை கேட்டுக் கொண்டாள் சம்யுக்தா.

"அப்ப நமக்கு இந்த ஊரிலும் தோட்டம் வீடெல்லாம் இருக்கா பாட்டி...?" சம்யுக்தா ஆவலுடன் கேட்க... லேசாக புருவம் சுளிக்க வியப்புடன் மனைவியை திரும்பிப் பார்த்தான் வாசுதேவன்.

காதுகளில் சிவப்புகல் வைத்த குடை ஜிமிக்கி... வாசுதேவன் முதன் முதலாக வாங்கிப் பரிசளித்த பவள நெக்லஸ்... தடிமனான தாலிக்கொடி.. அதே பவளக் கல் பதித்த ஆரம்... கையில் வாசுதேவன் கொடுத்த பிரேஸ்லெட்... அந்த சிவப்பு நிற கற்களுக்கு பொருத்தமாக... சந்தன நிற மைசூர் பட்டு நீண்ட பின்னலில் நான்கு சரமாக தளர்வாக வைத்திருந்த ஜாதி மல்லிகை பூ என



சௌந்தர்யத்தின் மொத்த உருவமாக அமர்ந்திருந்த மனைவியின் கொள்ளை கொள்ளும் அழகில் மனதைப் பறிகொடுத்தவனாக அலைபாயத் தொடங்கிய மனதினை கட்டுப்படுத்த முயற்சிக்ககூட் மறந்தவனாக அப்படியே அமர்ந்து விட்டான் அவன்.

கிராமத்தின் சாலையில் செல்லும் கார் குலுங்கிய போதெல்லாம் சம்யுக்தாவின் மெத்தென்ற உடல் வாசுதேவனின் ஒரு புறத்தில் படர்ந்து விலக... அவளது கூந்தலில் சூடியிருந்த ஜாதி மல்லிகையின் நறுமணம் தன்னை முற்றிலுமாக சூழ்ந்திருப்பதை ரசித்து... அந்த நறுமணத்தை ரசித்து உள்ளிழுத்துக் கொண்ட வாசுதேவனின் உள்ளம் இறகு இல்லாமலேயே வானத்தில் பறக்கத் தொடங்கியது.

அதுநாள் வரையிலும் எல்லையற்ற எழிலுடன் தனக்கு உரிமையான மனைவியாக வலம் வந்த சம்யுக்தாவின் அழகில் மனதை பறிகொடுத்து விட்டு. அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று வதற்காக கோபம் என்னும் போர்வைக்குள் மறைந்து கொண்டு... வீடு தங்கும் நேரத்தைக் கூட குறைத்துக் கொண்டு... பித்து பிடிக்காத குறையாக வெளியிலேயே நின்றுக் கொண்டிருந்த வாசுதேவன்... இன்று அத்தனை மனக் கட்டுப்பாடுகளையும் காற்றில் பறக்க விட்டவனாக... மனைவியின் அருகாமையில் மதி மயங்கிப்போனவனாக அமர்ந்திருந்தான்.

காரின் ஆட்டத்திற்கு பிடிமானமாக சம்யுக்தா அடிக்கடி வாசுதேவனின் கரத்தினை பிடித்துக் கொள்ள... வாசுதேவனுக்கு சொர்க்கமே கீழே இறங்கி பூமிக்கு வந்து விட்டதைப் போல இருந்தது.

சம்யுக்தாவின் மென்மையான கரத்தின் இதமான வெப்பம் வாசுதேவனுக்குள் உறங்கிக் கொண்டிருந்த ஆண்மையின் தவிப்பை தூண்டி விட... சம்யுக்தாவின் அருகாமை தரும் இன்பத்திற்காக ஏங்கத் தொடங்கியது வாசுதேவனின் உள்ளம்.

"ஆரம்ப காலத்துல இந்த ஊரில நமக்கு வீடு... சொத்து பத்துன்னு எதுவும் இல்ல சம்யுக்தா. ஆனா வாசு தலையெடுத்த பின்னாலதான்.. நம்ம பூர்வீக ஊரிலயும் நமக்குன்னு சொத்து இருக்கணும்னு நினைச்சு வாங்கிப்போட்டு இருக்கான்..."

"ஓஓ...?" சம்யுக்தாவிற்குள் கணவனை எண்ணி பெருமிதம் தோன்றியது.

"நமக்காக ஒரு பத்து ஏக்கர் தோட்டம் வாங்கியிருக்கோம் சம்யுக்தா. அந்த தோட்டம் பூராவும் பழக்கன்றுகளை வெச்சுட்டேன். மா... வாழை.... சப்போட்டா... கொய்யா... தென்னைன்னு எல்லா வகை தோப்பும் இருக்கு. ஏன்னா மத்த விவசாயம் பண்றதாக இருந்தால் நாம இங்க



அடிக்கடி வரவேண்டியது இருக்கும். அதுவே தோப்புகளாக இருந்தால்... ஒரு தோட்டக்காரனை மட்டும் வேலைக்கு அமர்த்திக்கிட்டு... வருடக் குத்தகைக்கு விட்டிறலாம் பாரு. அதனால்தான் அப்படி செஞ்சேன். தோட்டத்து மூலையில கோவிலை ஒட்டி.. வீட்டையும் கட்டி வெச்சாச்சு. இப்ப நாம நம்ம வசதிக்கு இங்க வந்து தங்கி இருந்திட்டுப் போகலாம். அப்படியே... கோவிலுக்காக ஒரு ரெண்டு ஏக்கர் நிலத்தை வாங்கி அதை கோவிலுக்கே கொடுத்துட்டேன். அதுல வருகிற வருமானத்தை வெச்சி ஊர் பெரியவங்க கோவிலை பராமரிக்கறாங்க..." வெகு நாட்களுக்கு பிறகு மனைவியிடம் வாசுதேவன் மனம் விட்டு நீண்ட நேரம் பேசியதைக் கண்ட சம்யுக்தாவின் கண்களில் ஈரம் படர்ந்தது.

அதே நேரத்தில்... சம்யுக்தாவின் மனதிற்குள் தன் கணவனின் மீது அவள் கொண்டிருந்த அபிமானம் பல மடங்கு உயர்ந்தது. அவள் கண்களுக்கு வாசுதேவன் ஒரு கதாநாயகனாகவே தோன்றினான்.

"அண்ணி... நம்ம ஊர் திருவிழாவை பாருங்களேன்... நீங்க இப்படி ஒரு திருவிழாவை இதுவரைக்கும் பார்த்தே இருக்க மாட்டீங்க. நம்மளோட சொந்தபந்தமெல்லாம்... தோட்டத்து

வீட்டுக்கு... அதாவது நம்ம வீட்டுக்கு.. வந்துடுவாங்க ரொம்ப ஜாலியாக இருக்கும். அதிலேயும்... இந்த வருசத்து திருவிழா எனக்கு காலேஜ் லீவு இருக்கிறப்ப வந்திருக்கு... நல்ல வேளை. இல்லாமல் போனால் நான் இந்த திருவிழாவுக்கு வந்தே இருக்க முடியாது..." ஸ்பந்தனா உற்சாகத்துள்ளலுடன் கூறினாள்.

"ம்ஹூம்...? எனக்கும் கூட இந்த திருவிழாவை நினைச்சா ஜாலியாகத்தான் இருக்கு ஸ்பந்தனா..." சம்யுக்தா பின்புறமாக அமர்ந்திருந்த ஸ்பந்தனாவை திரும்பிப் பார்த்தபடி கூற... அவள் திரும்பிய போது முழுமையாக தன்மேல் படர்ந்த மனைவியின் பெண்மை உணர்த்திய மென்மையில் – தன்னையும் மீறிய தாபத்துடன் பிறர் அறியாவண்ணம் மனைவியின் இடையில் கைகொடுத்து அணைத்துக் கொண்டான் வாசுதேவன்.

அனைவரின் முன்பாக கணவனின் அணைப்பைக் கண்டு வெட்கத்தில் பிறர் அதனை அறிந்து விடாதவகையில் சம்யுக்தா நகர்ந்து வாசுதேவனை நன்றாக நெருங்கி அமர்ந்து கொள்ள.. கிறக்கத்துடன் கண்மூடி.. ம்னைவியின் தோளில் படந்த பூவின் நறுமணத்தை முகர்ந்து மகிழ்ந்தான் வாசுதேவன்.



மேடும் பள்ளமுமாக இருந்த காட்டுப் பாதையில் பயணித்த கார்... கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இந்திர ஜாலத்தை நிகழ்த்தியபடியே சென்று ஒரு பெரிய வீட்டின் முன்பாக நிற்க...

அழகிய கனவு கலைந்த ஏமாற்றத்துடன்... காரை விட்டு இறங்கிய வாசுதேவன் தாபத்துடன் திரும்பி மனைவியின் முகம் பார்க்க... குங்குமமாக சிவந்த முகத்தை தலைகுனிந்து மறைத்தாள் சம்யுக்தா.

"இந்த வீடும் கூட நான் டிசைன் பண்ணி கட்டினதுதான் சம்யுக்தா. கீழே இரண்டு பெட்ரூம்... ஹால்... கொஞ்சம் பெரியதாக கிச்சன் முன்புற சிட் அவுட்.... முதல் மாடியில் முழுவதுமாக பெரிய ஹால்... அதன் ஒரு ஓரமாக பாத்ரூம்... அப்புறம் மொட்டை மாடியில்.. ஒரே ஒரு பெட்ரூம் இருக்கும். வா... வீட்டை சுத்திக் காட்டறேன்..."

வாசுதேவன் மனைவியை அழைத்துச் செல்ல... ஸ்பந்தனா கடந்த முறை தான் நட்டு வைத்த பூச்செடிகளை பார்ப்பதற்காக வீட்டின் பின்புறமாக ஓடினாள்

ஒவ்வொரு அறையாக மனைவிக்கு காண்பித்த படியே அழைத்துச் சென்ற வாசுதேவன்... தன் சட்டையின் பாக்கெட்டில் இருந்த சாவியை எடுத்து

மொட்டை மாடியின் படுக்கை அறைக்கதவை திறந்து... மனைவியை உள்ளே அழைத்துச் சென்றான்.

"இது என்னுடைய பிரைவேட் ரூம். இதோட சாவிகூட எப்போதும் என்கிட்டதான் இருக்கும். வருகிற கெஸ்ட் எல்லாரும் கீழேயே தங்கிடுவாங்க. மேக்ஸிமம் யாரும் இந்த ரூமுக்கு வர மாட்டாங்க..."

சுவாதீனமாக கூறிக் கொண்டே... அறையின் உட்புறமாக நகர்ந்த வாசுதேவன் திரும்பி அவனை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த சம்யுக்தாவின் கரம் பற்றி இழுக்க... எதிர்பாராத விதமாக அவன் அப்படி பற்றி இழுத்ததில் தடுமாறிப் போனவளாக வாசுதேவனின் மீது சரிந்தாள் சம்யுக்தா.

மனைவியை தன் மேல் தாங்கிக் கொண்டே பின்புறம் இருந்த கட்டிலில் சரிந்த வாசுதேவனின் கரங்கள் சம்யுக்தாவை தன்னுடன் மாலையாக பின்னிக் கொள்ள... அவனது சூடான இதழ்களின் வெப்பத்தை தன்னுடைய கன்னத்தில் உணர்ந்த சம்யுக்தாவின் பெண்மை சிலிர்ப்புடன் விழித்துக் கொள்ள தொடங்கியது.



## 24

சுற்றி சுழன்றடித்த காற்று தென்னை மரக் கீற்றுகளின் இடையே புகுந்து வெளிவந்த சலசலப்பு... ஒரு தேர்ந்த இசைக் கலைஞனின் சங்கீதத்தைப் போல சரசரப்புடன் கேட்டுக் கொண்டிருக்க... மரத்தில் அமர்ந்திருந்த பறவைகள் காற்றின் வேகத்துக்கு தக்கபடி அமர்ந்தும்... பறந்தும்.. தங்களுக்குள் பேசிக் கொண்ட கீச்சுக் குரல்... அந்த இன்னிசைக்குத் தகுந்தபடி பாடல்களை பாடிக் கொண்டிருப்பதைப் போல இருந்த....

இயற்கைச் சூழ்நிலையில் கணவனின் அணைப்பு கிறக்கத்தை உருவாக்க.. சம்யுக்தா மிகுந்த விருப்பத்துடன் கணவனுடன் ஒன்றிக் கொண்டாள். மனைவியின் ஒத்துழைப்பு ஆண்மையின் தாபத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய.. வாசுதேவன் மிக வேகமாக முன்னேறத் தொடங்கினான்.

"அண்ணா..."

அற்புத இன்னிசைமழையை பொழிந்து கொண்டிருந்த வீணையின் நாதத்தின் இடையே அபஸ்வரமாக ஒலிப்பதைப் போல கேட்ட தங்கையின் குரலினால்... ஒரே நொடியில் தன் வேகமெல்லாம் அடங்கிவிட... அவசரமாக மனைவியை விட்டு விலகி வாசலுக்கு சென்று... தன்னை நாடிவந்த

தங்கையை அங்கேயே தடுத்து நிறுத்தினான் வாசுதேவன்.

"கீழே கோவில் சம்பந்தமாக பேசுவதற்காக பூசாரி பெரியப்பா வந்திருக்கிறார் அண்ணா. உங்களை பார்க்கணும்னு சொன்னார்..."

"ஓஒ...? சரி வா..." வாசுதேவன் தங்கையின் கரம் பற்றி அழைத்துக்கொண்டு நடக்கத் தொடங்க... கேள்வியாக பின்புறமாக திரும்பிப் பார்த்தாள் ஸ்பந்தனா.

"அண்ணி எங்கேண்ணா? போன தடவை நான் நட்டு வெச்ச ரோஜாச் செடி பெரியதாக வளர்ந்திருக்குண்ணா. மல்லிகை பூச்செடி கூட... பந்தல் போடுகிற அளவுக்கு வளர்ந்திருக்கு. இன்னிக்கு அந்த பூவை எல்லாம் நானே என் கையால கூட்டி அண்ணிக்கு கிஃப்டாக கொடுக்கப் போறன்..."

தங்கை தன் மனைவியின் மீது வைத்திருக்கும் அன்பு வாசுதேவனின் மனதை நெகிழச் செய்ய... அவரது கேள்விக்கு பதில் கூற முடியாத திகைப்புடன் திரும்பிப் பார்த்தான் அவன்.

அதற்குள்ளாக... தன்னை சீர் செய்து கொண்ட முகத்துடன் சம்யுக்தா அறையை விட்டு வெளிவர... நிம்மதியும் தாபமும் கலந்த பெருமூச்சுடன் மனைவியின் முகத்தை ஒரு முறை அழுத்தமாக



பார்த்துவிட்டு வாசுதேவன் கீழே சென்று விட... மான்குட்டியாக தன்னிடம் ஓடிவந்த ஸ்பந்தானாவை சிரித்த முகத்துடன் ஏறிட்டாள் சம்யுக்தா.

"அண்ணி... போன திருவிழாவுக்கு வந்திருந்தபோது... நான்..."

"நீ உங்க அண்ணாகிட்ட சொல்லிக்கிட்டிருந்த எல்லாத்தையும் நானும் கேட்டேன் ஸ்பந்தனா. நீ கட்டிக் கொடுக்கப் போகிற பூவுக்காக நான் இப்ப இருந்தே வெயிட் பண்ண தொடங்கிவிட்டேன்..."

"அண்ணி.. ஜஸ்ட் ஒரு ஹாஃப் அன் அவர்ல நான் உங்களுக்காக பூவை கட்டிக்கொண்டு வர்றேனே... இல்லையான்னு... பாருங்க..." ஸ்பந்தனா ரோசத்துடன் கீழே இறங்கி ஓடி விட...

நிதான நடையுடன் மாடியின் கைப்பிடி சுவரின் அருகே சென்று அதன்மீது சாய்ந்து நின்ற சம்யுக்தாவின் உள்ளத்தில் இன்ப அலைகள் அலைமோதத் தொடங்கின.

"ஒரு மின்சார பார்வையின் வேகம்... வேகம்... உன்னோடு நான் கண்டு கொண்டேன்..." சம்யுக்தா தனக்குள் மெல்லிய குரலில் பாடிக் கொண்டே கீழே பார்க்க... அதே நேரத்தில் தன் அருகில் இருந்தவர்களிடம் பேசிய படியே உயர்ந்த வாசுதேவனின் பார்வை மனைவியின் கண்களுடன் ஒரு கணம் கலந்து விலகியது.

வீட்டின் வாயில் புறமாக ஊர் பெரியவர்கள் அனைவரும்.. வாசுதேவனின் வரவிற்காக காத்திருந்தவர்களைப் போல... அவனைச் சுற்றிலும் குழுமியிருக்க... அவர்களின் நடுவே நின்று அவர்களுடன் உரையாடியபடியே.... வாசுதேவனின் பார்வை மனைவியை ரசித்துக் கொண்டிருக்க...

கணவனின் பார்வை உள்ளூர உருவாக்கிய கிளர்ச்சியுடன்... இதழ்கடித்து கைப்பிடி சுவர்மீது நன்றாக சாய்ந்து நின்றுகொண்டாள் சம்யுக்தா.

**"ஒரு பெண்ணோடு தோன்றிடும் தாபம்... தாபம்...**
**என்னோடு நான் கண்டு கொண்டேன்...**
**என்னை மறந்து விட்டேன்...**
**இந்த உலகத்தில் நானில்லை... நானில்லை...**
**உன்னை பிரிந்துவிட்டால்...."**
**எந்த மலரிலும் தேனில்லை... தேனில்லை...**
**இது கனவா... இல்லை நினைவா..**
**என்னை கிள்ளி உண்மை அறிந்தேன்...**
**உன்னை பார்த்தெந்தன்...**
**தாய்மொழி மறந்தேன்..."**

பாடலின் ஒவ்வொரு வரியிலும் தோன்றிய காதலின் தாபமும்... ஆற்றாமையும் சம்யுக்தாவின் மனதில் இறங்கி... உள்ளத்தில் பதிந்தது.



சம்யுக்தா எத்தனை நேரம் அப்படியே சிலையாக நின்றிருந்தாளோ தெரியாது. கீழே இருந்து ஸ்பந்தனா தன்னை அழைக்கும் உரத்த குரல்... அவளை நிதானத்திற்கு வரச் செய்ய... தனக்குள் தோன்றிய சிறு வெட்கத்துடன் குனிந்து ஸ்பந்தனாவைப் பார்த்த சம்யுக்தாவை கீழே வரும்படி சைகையால் அழைத்தாள் ஸ்பந்தனா.

வருவதாக ஸ்பந்தனாவிடம் அவளைப் போலவே சைகையால் கூறிவிட்டு திரும்பிய சம்யுக்தாவை... கணவனின் கேலி கலந்த பார்வை உள்ளூர தோன்றிய வெட்கத்தை அதிகரிக்க செய்துவிட... தன்னை மீறி கன்னங்களில் தோன்றிய நாணச் சிவப்புடன்... கீழே இறங்கத் தொடங்கினாள் ஸ்பந்தனா.

"எவ்வளவு நேரமாக கூப்பிட்டுக்கிட்டே இருக்கிறது அண்ணி? பேசாம மேலே ஏறி வரலாமான்னு நினைச்சேன்.. அதுக்குள்ள நல்ல வேளையாக நீங்களே என்னை பார்த்துட்டீங்க..."

"உங்க அண்ணிக்கு இப்போதெல்லாம்... நீ கூப்பிட்டது கேக்காது ஸ்பந்தனா. அதெல்லாம் கூப்பிடறவங்க கூப்பிட்டால் மட்டும்தான் கேக்கும். என்ன சம்யுக்தா... நான் சொல்றது சரிதானே...?" ரகசிய சிரிப்புடன் ஸ்பந்தனாவை பின்புறமாக அணைத்தபடியே வந்து நின்ற சுவர்ணபிரியாவை...

அங்கே அந்த நேரத்தில் எதிர்பார்த்திராத தடுமாற்றத்துடன் சம்யுக்தா பார்க்க...

அவளது தடுமாற்றத்தை... சிறிது கோபம் கலந்த கேலிச் சிரிப்புடன் பார்த்தாள் சுவர்ண பிரியா.

"என்னை அடையாளம் தெரியுதா...? இல்ல... அதுக்குள்ள நான் யாருன்றது மறந்துடுச்சா...?" உரிமையுடன் அதட்டினாள் சுவர்ணா.

"உங்களை எப்படிக்கா என்னால மறக்க முடியும்? உங்க அத்தானை எனக்காக விட்டுக் கொடுத்தவங்களாச்சே நீங்க...?" சுவர்ணாவை போலவே தானும் உரிமையுடன் பதிலளித்த சம்யுக்தாவின் கரத்தை நெகிழ்வுடன் பற்றிக் கொண்ட சுவர்ணா முகத்தில் உண்மையான அன்பு நிறைந்திருந்தது.

"தேங்க்ஸ் சம்யுக்தா. உண்மையில நீ என்னை யெல்லாம் ஞாபகம் வெச்சிருக்க மாட்டேன்னுதான் நான் நினைச்சேன். ஆனா... நீ...?"

"அப்படியெல்லாம் இல்லக்கா. நாம எல்லாரும் இனிமேல் ஒரே பேமிலியாகிவிட்டோம் என்கிற போது... நான் எப்படி உங்களை மறப்பேன்...?"

"மறுபடியும்.. இதுக்காக.... நாம எல்லாரும் ஒரே பேமிலின்று ஒத்துக்கிட்டதுக்காக... இன்னொரு தேங்க்ஸ் சம்யுக்தா..." சுவர்ணபிரியா கேலியாக



இழுத்துக் கூறிய விதத்தில்... வாய்விட்டு சிரித்தாள் சம்யுக்தா.

"என்ன...? அக்காவும் தங்கையுமா சேர்ந்து ஏதோ ஒரு பெரிய ஜோக்கை கண்டு பிடிச்சுட்டீங்க போல இருக்கு? என்கிட்ட சொன்னா... நானும் சேர்ந்து சிரிப்பேனில்ல...?" உதட்டில் புன்னகையும்... கண்களில் குரோதமுமாக இருவேறு உணர்வுகளின் கலவையாக அவர்களின் அருகே வந்து நின்ற சுந்தரியை பார்த்த சுவர்ணபிரியாவின் சிரிப்பு... அப்படியே உதட்டில் உறைந்து நின்றுவிட்டது.

"நாங்க என்ன உன்னை விட பெரிய அறிவாளியா சுந்தரி? உனக்கு தெரியாத எந்த ஜோக்கு எங்களுக்கு தெரிஞ்சுறப் போகுது...?" சுவர்ணபிரியா நிதானமாக கேட்க... அவளைப் பார்த்து தனக்குள் பல்லை கடித்துக் கொண்டாள் சுந்தரி.

'இவளோட கொழுப்பு மட்டும் என்னிக்குமே அடங்காது போல இருக்கே...? பெரிய பணக்காரனை கட்டியிருக்கிற திமிர்...'

"அதென்னக்கா அப்படி சொல்லிட்டீங்க? நீங்க பெரிய அறிவாளியா இருக்கப் போய்தான்... உங்க வீட்டுக்காரன உங்க கைக்குள்ள அடக்கி வெச்சிருக்கீங்க? அத்தான்தான்... உங்க பேச்சுக்கு மறு பேச்சு பேசுறது இல்லையாமே? அந்த வகையில

பார்க்கப் போனா... நானும் சம்யுக்தாவும் ஏமாளிங்க தான் அக்கா..."

சுந்தரி பேசப் பேச... சுவர்ணபிரியாவின் சிரித்த முகம் மெது மெதுவாக மாறி... கடினமானது'.

"பொம்பளைங்க நாம... நம்மைப்பத்தி பேசிக் கிட்டு இருக்கிற போது வீட்டு ஆம்பளைகளைப் பத்தி பேசுறது தப்பு சுந்தரி..."

"அதெப்படிக்கா தப்பாகும்...? எங்க அக்கா வீட்டுக்காரரை நான் கேலி பண்ணாம வேற யாரு கேலி பண்றது? அதுக்கும் மேல... நான் உண்மையைதான சொன்னேன்...?"

"அது உண்மையாக இருந்தாலும்... தப்பில்லை சுந்தரி. என் வீட்டுக்காரரை நான் என் அன்பால எனக்கானவராக மாத்தி இருக்கேன். ஒவ்வொருத் தரைப் போல பயமுறுத்தி அடிமையாக ஆக்கி வெக்கலை..."

சுவர்ணா சுந்தரியின் கண்களை நேருக்கு நேராக பார்த்தபடி அழுத்தமாக கூற... சுந்தரியின் முகம் பேயறைந்ததைப் போல மாறியது.

"எங்க அம்மா என்னை கூப்பிடறாங்க சம்யுக்தா. நான் போய் என்னன்னு கேட்டு விட்டு வர்றேன். நீயும்... வெட்டியாக இங்க நின்று பேசிக்கிட்டு இருக்காம... வேற ஏதாவது உருப்படியான வேலை இருந்தால் போய்ப் பாரு..."



சுவர்ணபிரியா... சுந்தரியை பார்த்தபடியே சம்யுக்தாவிடம் எச்சரிக்கை குரலில் கூற.. அவளது வார்த்தைகளின் உள் அர்த்தம் புரிந்தவளாக... ஸ்பந்தனாவை அழைத்துக் கொண்டு விலகிச் சென்ற சம்யுக்தாவைப் பார்த்து ஆத்திரமாக முறைத்தாள் சுந்தரி.

"இந்த சுந்தரி அண்ணி... இப்படித்தான் ஏடாகூடமாக எதையாவது பேசிக்கிட்டே இருப்பாங்க அண்ணி. ஆனா சுவர்ணாண்ணிக்கு இதெல்லாம் பிடிக்காது..." ஸ்பந்தனா ஆற்றாமையாக கூறியதை கண்டுகொள்ளாத பாவனையுடன் ஸ்பந்தனாவிடம் கேலிச் சிரிப்புடன் திரும்பினாள் சம்யுக்தா.

"அவர்களை விடு ஸ்பந்தனா. நீ எனக்காக ஹாஃப் அன் அவரில் பூக்கட்டித் தருவதாக சொன்ன ஞாபகம்... எனக்காக நீ கட்டிய பூ எங்கே...?"

"க்கும்... அதைக் கொடுக்கத்தான் உங்களை அத்தனை கத்துக் கத்திக் கூப்பிட்டேன். கால்மணி நேரமாக என் தொண்டைதண்ணி வத்தக் கத்த விட்டுவிட்டு... இப்ப வந்து கேளுங்க..." ஸ்பந்தனா சிணுங்கலுடன் கூறிக்கொண்டே வீட்டின் பின்புறமாக ஓடிச் செல்ல...

சற்று நேரம் மறைந்திருந்த மனதின் இன்ப நினைவுகள் மீண்டும் தலைதூக்கி... சம்யுக்தாவின் பார்வை அவளையும் அறியாமல் வாசுதேவன் இருந்த பக்கமாக திரும்பியது.

மனைவியின் பார்வையை எதிர்பார்த்துக் காத்திருந்தவனை போல அவளது பார்வை தன் மீது படிந்தவுடன்... ஒற்றை புருவம் உயர்த்தி வாசுதேவன் கேலியாக பார்க்க... சிவந்த முகத்துடன் பார்வையை திருப்பிக் கொண்டாள் ஸ்பந்தனா.

'திருட்டு ராஸ்க்கல்... இவ்வளவு நேரமாக என்னைத்தான் பார்த்துகிட்டு இருந்திருக்கார்...'

சம்யுக்தாவின் உள்ளத்திற்குள் இனம்புரியாத இன்பம் ஊற்றெடுக்கத் தொடங்க... ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்ட கால்களை மிகுந்த பிரயாசையுடன் தன் கட்டுக்குள் கொண்டு வர முயன்றபடி... வீட்டினுள் செல்ல தொடங்கிய மனைவியை விட்டு தன் பார்வையை விலக்காமல் வாசுதேவன் அமர்ந்திருப்பதை சம்யுக்தாவினால் உள்ளூர உணர முடிந்தது.

'இவர் இப்படியே பார்த்துக்கிட்டு இருக்கிறதை மத்தவங்க பார்த்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க...? கொஞ்ச நேரத்துக்கு முன்னால சுந்தரி சுவர்ணாக்காவை கேலி பண்ணின மாதிரி.. என்னையும் கேலி பண்ணமாட்டாங்களா? இவருக்கு இதெல்லாம் தெரியாதா...?'

"என் வீட்டுக்காரரை என் அன்பால எனக்கானவராக நான் மாத்தி இருக்கேன்... "கர்வத்துடன்... பெருமையாக... சற்று நேரத்துக்கு



முன்பாக சுந்தரியிடம் சுவர்ண பிரியா கூறியது... அந்த நேரத்தில் சம்யுக்தாவின் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது.

'நானும் என்னுடையவரை எனக்கானவராக மாற்றி இருக்கிறேன். இதில் மத்தவங்களோட கேலியை பத்தி நான் எதுக்காக கவலைப்படணும்...?' சம்யுக்தா உள்ளூர தோன்றிய நிமிர்வுடன்... வாசுதேவனை திரும்பிப் பார்க்க... அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்த வாசுதேவனின் பார்வையில் தோன்றிய மின்னல்... சம்யுக்தாவிற்குள் மின்சாரமாக பாய்ந்தது.

## 25

சரவிளக்குகளின் அலங்காரத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த கோவிலில் வீற்றிருந்த அம்பிகையின் திருமுகத்தை இருகரம் கூப்பி வழிபட்ட சம்யுக்தாவின் கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் திரையிட்டது. அம்பிகையின் அருள் முகத்தில் தெரிந்த தாய்மை சம்யுக்தாவின் இதயத்தை என்னவோ செய்ய... அவள் கைகூப்பி அம்பிகையை மானசீகமாக வேண்டத் தொடங்கினாள்.

"அம்மா... தாயே நினைவு தெரிந்த நாள் முதலாக நான் என்னுடைய தாயின் முகத்தையே பார்த்ததில்லை. ஆனால்... இன்று... உன்னுடைய

முகத்தில் நான் என் தாயின் தாய்மையை பார்க்கிறேன். இனி நானும் உன் மகள்தான் தாயே. உன் குலத்திற்கு வாழ வந்திருக்கும் உன் மகள்... என்னுடைய வாழ்க்கையை வளமாக்கி.. உன் அன்பும்... அருட்கடாட்சமும் என்றென்றும் எங்களை விட்டு விலகிவிடாமல் துணைநின்று காப்பாற்றம்மா..." கணவனின் அருகில் நின்று... கரம் குவித்து... அம்பிகையை கண்கொட்டாமல் பார்த்தபடியே மானசீகமாக அவளிடம் பேசிக் கொண்டிருந்த பேரனின் மனைவியை பெருமையுடன் பார்த்துவிட்டு... தன் மருமகளிடம் அவளை கண்களால் சுட்டிக் காட்டினாள் காமாட்சி.

ஆரஞ்சு வண்ண பட்டுச் சேலையில்... தலை நிறைய ஸ்பந்தனா நெருக்கமாக கட்டித் தந்திருந்த மல்லிகை மலர்ச்சரத்துடன்... காதுகளில் வைர ஜிமிக்கி... கழுத்தில் வைர அட்டிகை... மாலை... கைகளில் அதே வைர வளையல்கள் என பெரிய குடும்பத்தின் மருமகளாக குத்துவிளக்கின் சுடர்போல மாசுமருவற்ற அழகுடன்... ஆண்மைக்கு இலக்கணமாக கம்பீரமான தோற்றத்துடன் நின்றிருந்த வாசுதேவனுக்கு பொருத்தமான பெண்மகளாக... குல விளக்காக நின்றிருந்த சம்யுக்தாவை பார்த்துவிட்டு... அவர்கள் மேல் கண் பட்டுவிடாமல் இருப்பதற்காக அவர்கள் இருவருக்கும் மானசீகமாக திருஷ்டி கழித்தாள் வேதவதி.



"வீட்டுக்குப் போனவுடன் இவங்க ரெண்டு பேருக்கும் திருஷ்டி சுத்திப் போடணும் அத்தை..." பெருமை கலந்த கவலையுடன் கூறிய மருமகளை ஆறுதல் தரும் சிரிப்புடன் பார்த்தாள் காமாட்சி.

"அம்பாளுக்கு முன்னால... யாருடைய கண் திருஷ்டியும் நம்ம புள்ளைங்கள எதுவும் செய்துவிடாது வேதவதி..."

"அதுவும் சரிதான் அத்தை. நம்ம புள்ளைங்க அந்த அம்பாளோட கருணையினால... சந்தோஷமாக வாழ்ந்தால் சரி..."

"அதெல்லாம் நல்லதாகவே நடக்கும் வேதவதி. நீ கவலைப்படாம இரு..." காமாட்சி சில நாட்களாக மனதில் இருந்த கவலை மாறியவளாக திடமான நம்பிக்கையுடன் கூறினாள்.

அங்கு வந்தது முதலாக... வாசுதேவனுக்கும் சம்யுக்தாவிற்கும் இடையே நிலவி வந்த அன்னியோன்யத்தைக் கண்ட காமாட்சியின் மனதிற்கு நிறைவாக இருந்தது.

தன் ஆசை பேரனின் வாழ்வு... இனி எந்த விதமான சச்சரவுக்கும் இடம் இல்லாத வகையில்... சந்தோஷமாக மலர்ந்து விடும் என்கிற உறுதி மனதிற்குள் தோன்றியிருக்க... அதற்குக் காரணமான அம்பாளுக்கு மனதார நன்றி கூறினாள் காமாட்சி.

பூஜை முடிந்து... அய்யர் பிரசாத தட்டுடன் வர... அதனை வாசுதேவனிடமும் சம்யுக்தாவிடமும் கொடுக்கச் சொல்லிவிட்டு... சம்யுக்தா பயபக்தியுடன் அதனை வாங்கிக் கொள்வதை பெருமிதத்துடன் பார்த்து ரசித்தாள் அவள்.

"போகலாமா...?" மனைவியிடம் கேட்டபடியே அவள் கையில் இருந்த பிரசாதத் தட்டினை வாங்கிக் கொள்வதற்காக கை நீட்டிய வாசுதேவனிடம் சம்மதமாக தலையசைத்தாள் சம்யுக்தா.

அவள் அவ்வாறு தலையசைக்கும்போது... அவளது அசைவிற்கேற்ப ஆடி... சம்யுக்தாவின் கன்னங்களை கொஞ்சி மீண்ட ஜிமிக்கியை பார்த்த வாசுதேவனின் பார்வையில் ரசனை தெரிந்தது.

"பிரசாதத் தட்டை என்னிடம் கொடு சம்யுக்தா. வெயிட்டை தூக்கிகிட்டு உன்னால நடக்க முடியாது..." வாசுதேவன் மெல்லிய குரலில் கூறிக் கொண்டே மீண்டும் கை நீட்ட... அதைப் பார்த்த சுந்தரி சத்தமாக வாய்விட்டுச் சிரித்தாள்.

"நல்ல கதையா இருக்கு மாமா! தேங்காய் பழ தட்டைக் கூட உங்க பொண்டாட்டியால தூக்கிக்கிட்டு நடக்க முடியாதா...?"

சுந்தரியின் சத்தமான சிரிப்பையும்... கேலி பேச்சினையும் கண்ட அனைவரின் கவனமும் வாசுதேவன் தம்பதியினர் மீது பதிய... கோபத்துடன் சுந்தரியை முறைத்துப் பார்த்தாள் காமாட்சி.



"அம்மா திரிபுர சுந்தரி பெத்த புள்ளையவே தூக்க முடியாம... மாமியாரை தூக்க வெச்சுக்கிட்டு சொகுசா நிக்குற நீ... அடுத்தவங்களை கேலி செய்ய கூடாது ஆத்தா... போ... போய் உன் புள்ளையை முதல்ல தூக்கு..."

நக்கலும் நையாண்டியுமாக காமாட்சி கூறியதைக் கேட்ட அனைவரும் கொல்லென்று சிரித்துவிட... அவமானத்தில் கறுத்த முகத்துடன் மாமியாரிடம் இருந்த மகளை பிடுங்கிக் கொள்ளாத குறையாக வாங்கி தன் இடுப்பில் வைத்துக் கொண்டாள் சுந்தரி.

"நீ வா கண்ணு..." காமாட்சி சம்யுக்தாவை அணைத்தவாறே அழைத்துச் செல்ல... விடாப் பிடியாக மனைவியின் கையில் இருந்த பிரசாதத் தட்டினை வாங்கி தன் கையில் வைத்துக் கொண்ட வாசுதேவன்... மனைவியின் மற்றொரு புறமாக நெருக்கமாக நடந்த படியே அவளுடைய கரத்துடன் தன் கரத்தினை இறுக்கமாக பிணைத்துக் கொண்டான்.

கணவனின் அன்பும் அக்கறையும் மனதிற்கு இதத்தைத் தர... அவனது தோளோடு தோள் உரசியபடியே நடந்து சென்ற சம்யுக்தாவின் கண்களில்... வீட்டு வாசலில் நின்றிருந்த கப்பல் போன்ற கார் தென்பட... வேகமாக அனைவரையும் பின் தள்ளியவளாக ஓட்டமும் நடையுமாக சென்ற

சம்யுக்தா... வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்த சுந்தரத்தை கண்டவுன் ஓடிச் சென்று அவரை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

"எப்பப்பா வந்தீங்க.. ஐ மிஸ் யூ ஸோ மச்ப்பா... ஸோ... ஸோ... மச்... தேங்க்ஸ்... பார் கமிங்ப்பா..."

சம்யுக்தா மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டே தந்தையை இறுக்கமாக கட்டிக் கொள்ள, மகளது உச்சியில் அன்போடு முத்தமிட்டார் சுந்தரம்.

"ஐ ஆல்ஸோ மிஸ் யூ டா தங்கம். நல்லா இருக்கியாடா..." சுந்தரத்தின் குரல் பாசத்தில் நெகிழ்ந்தது.

"ஐம் பைன்ப்பா. ஆனா உங்களை பார்க்காம இருந்ததுதான் கஷ்டமாக இருந்துதுப்பா. என்னைப் பார்க்கணும்னு உங்களுக்கு தோணவே இல்லை யாப்பா. எனக்கு தினமும் உங்க நினைப்புதான்ப்பா..." சம்யுக்தாவின் குரல் அழுகையில் கரைய... இதமாக மகளை அணைத்துக் கொண்டார் சுந்தரம்.

"அதான் அப்பா வந்துட்டேன்ல கண்ணு. இப்பப் போய் அழலாமா? கண்ணைத் துடைச்சுக்கடா..."

மாமனாரின் நெகிழ்வையும்... மனைவியின் கண்ணீரையும் பார்த்துக் கொண்டே வந்த வாசுதேவனின் முகத்தில் அத்தனை நேரமாக தெரிந்த நெருக்கம் மாறி... வெறுமை தோன்றியிருந்தது.



வாசுதேவனைப் பற்றியிருந்த கரத்தை உதறி விட்டு... உடனிருந்த அனைவரையும் மறந்தவளாக மனைவி ஓடி வந்ததால் தோன்றிய ஏமாற்றம் கோபமாக மாற... கவனமாக மனைவியின் புறமாக மறந்தும் தன் பார்வையை திருப்பாதவனாக சுந்தரத்தைப் பார்த்து வரவேற்பாக தலையசைத்தான் வாசுதேவன்.

"வாப்பா சுந்தரம்..."

"வாங்க அண்ணா..."

"சுந்தரம்...வா...வா..."

காமாட்சி... வேதவதி... ஞானசம்பந்தன் என அனைவரும் மாறி மாறி வரவேற்று உபசரிக்க.. மகளை விட்டு விட்டு... மற்ற அனைவரிடமும் உபசாரமாக உரையாடிக் கொண்டே சுந்தரம் வீட்டினுள் சென்று விட...

கையில் பிரசாதத் தட்டுடன் நின்றிருந்த கணவனிடம் சென்று சிரித்த முகமாக கைகளை நீட்டினாள் சம்யுக்தா.

"பிரசாதத் தட்டை கொடுங்க. நான் கொண்டு போய் உள்ளே வெச்சுடறேன்..."

"ம்ப்ச்... வேண்டாம், ஸ்பந்தனா... இதைக் கொண்டுபோய் உள்ளே வெச்சிருடா..." மனைவியிடம் வெறுப்புடன் உறுமிவிட்டு... தன்னை கடந்து சென்ற தங்கையிடம் தட்டினை கொடுத்துவிட்டு...

வாசுதேவன் வேகமாக திரும்பி மறுபடியும் கோவிலுக்கு சென்றுவிட... அவன் சென்ற திசையையே திகைப்புடன் பார்த்தபடி நின்று விட்டாள் ஸ்பந்தனா.

"ஸ்பந்தனாக் கண்ணு... அங்க என்னடா பண்ற...? உள்ள வா..." காமாட்சியின் அக்கறையான குரலில் அழைக்க.. மனதைப் பிசையும் வேதனையுடன் திரும்பி வீட்டினுள் சென்ற சம்யுக்தா... நேராக சென்று தந்தையின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

வேதனையும் குழப்பமுமாக தவித்த மனதிற்கு தந்தையின் அருகாமை இதமளிக்க... வாடிய கொடியாக சுந்தரத்தின் தோளில் தலைசாய்த்துக் கொண்ட மகளது தலையை இதமாக வருடிக் கொடுத்தார் சுந்தரம்.

"அப்பாதான் வந்துவிட்டேனேம்மா.. இன்னமும் எதுக்கு இப்படி கோபமாக முகத்தை தொங்கப் போட்டுக்கிட்டு இருக்க...? சிரிச்ச முகமாக இருடா கண்ணு.."

தன் மனதின் வேதனையை... தாயாக இருந்திருந்தால் இந்நேரத்துக்கு இனம் கண்டு... அதற்கான தீர்வையும் சொல்லியிருப்பாளோ... என்கிற வலியுடன் வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் எழுந்து சென்று... கணவன் சென்ற திசையையே ஏக்கமாக



பார்த்துவிட்டு திரும்பி வந்து.. மீண்டும் தந்தையின் அருகில் அமர்ந்து கொண்டாள் சம்யுக்தா.

அனைவரும் இரவு உணவை முடித்துக் கொண்டு அவரவருக்கு கிடைத்த இடத்தில் படுத்து விட... உணவருந்தாமல் மருமகனுக்காக காத்திருந்த தந்தையைக் கண்ட சம்யுக்தாவின் முகத்தில் வருத்தம் நிறைந்தது.

"நீங்க சாப்பிடுங்கப்பா. அவர் வந்துடுவாரு. நீங்க டயத்துக்கு சாப்பிட்டு விட்டு டேப்லெட் போட்டாகணுமேப்பா... சாப்பிடுங்க..." சம்யுக்தா தந்தையிடம் மன்றாடிக் கொண்டிருக்க.. பேரனுக்காக வெளியே சென்று எட்டிப் பார்த்த காமாட்சியின் மனதிற்குள் எரிச்சல் தோன்றியது.

"என்ன மாதிரியான குணம் இது? தனக்காக பொண்டாட்டியும் அவளை பெத்தவனும் காத்திருப்பாங்கன்ற எண்ணம் இருக்க வேண்டாமா? சுந்தரம் வந்தவுடன் அவன்கிட்ட உட்கார்ந்து ரெண்டு வார்த்தை பேசாமக்கூட வெளியில போயிட்டானே? வாசு இப்படி நடந்துகிறது ரொம்ப தப்பு..."

"என்ன காமாட்சி.... வாக்கிங் போகிற மாதிரி குறுக்கும் நெடுக்குமாக நடந்துக்கிட்டு இருக்க..

"காமாட்சி கோபத்தில் குமுறிக் கொண்டிருப் பதை அறியாதவராக... வெகு நாட்களுக்கு பிறகு

பிறந்த மண்ணை மிதித்திருக்கும் குதூகலத்துடன் கூறிய கணவரை வெறித்து பார்த்தாள் காமாட்சி.

"ஆமா... உங்க வீட்டுல வகை வகையா நீங்க ஆக்கி வெச்சிருக்கிற சாப்பாட்டை மூக்கு முட்ட தின்னது செறிக்க மாட்டாம நான் வாக்கிங் போய்க்கிட்டு இருக்கேன். நீங்க வந்து என் இடுப்பை பிடிச்சு விடுங்க..."

"இல்ல காமாட்சி... நான் சும்மா விளையாட்டுக்கு..."

"ம்ம்... உங்க பரம்பரைக்கே எல்லாமே விளையாட்டாத்தான இருக்கும். ஆரம்பம் சரியாக இருந்தால் தானே... அதோட தொடர்ச்சியும் சரியாக இருக்கும். முதல் கோணல் முற்றும் கோணல்னு... பெரியவங்க தெரியாமலா சொல்லியிருக்காங்க...? உங்களை மாதிரிதான மனுசங்களோட சூழ்நிலைய புரிஞ்சுக்காம உங்க பேரனும் இருப்பான்...?"

"காமாட்சி... நான் என்ன சொன்னேன்..."

"நீங்க... சும்மா பேசிக்கிட்டே இருக்காம... கோவில் பக்கம் போயி உங்க பேரனை கூட்டிக்கிட்டு வாங்க. போங்க..."

மனைவியின் கோபத்திற்கான காரணம் புரியாதவராக... தன் நிலையை தானே நொந்த படியே திரும்பிய ஞானசம்பந்தனின் முகம்... பேரனின் வருகையை கண்டு விட்ட நிம்மதியுடன் மலர்ந்தது.



"இதோ... வாசுவே வந்துட்டான் காமாட்சி..." ஞானசம்பந்தன் உற்சாகமாக குரல் கொடுக்க... அவரை கண்களால் அடக்கிவிட்டு... பேரனின் கை பற்றி.. சற்று தொலைவிற்கு அழைத்துச் சென்று நிறுத்திய காமாட்சியின் பார்வை வாசுதேவனின் முகத்தை எரிப்பதைப் போல பார்த்தது.

"என்ன பாட்டி...?" புரியாதவனாக கேட்ட பேரனை... அதே மாறாத பார்வையுடன் முறைத்தபடி நின்றிருந்தாள் காமாட்சி.

"நானும் உன்கிட்ட அதைத்தான் கேக்கறேன் வாசு. உனக்கு என்ன அச்சு?"

"எனக்கா...? எனக்கென்ன பாட்டி...?"

"சும்மா மழுப்பாத வாசு. நானும் உன் நடவடிக்கைளை பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை..."

"என் நடவடிக்கையா... அதுக்கென்ன...?"

"இது வரைக்கும் நான் உன்னைப் பார்த்து குறைபட்டுக்கிட்டதே இல்ல வாசு. ஏன்னா. உன் நடத்தையில ஒரு நேர்மையும் நியாயமும் இருக்கும். ஆனா. இப்ப... உன் பொண்டாட்டி விசயத்துல அந்த நியாயம் இருந்த இடம் தெரியாம காணாம போயிருச்சே வாசு... அது ஏன்...?

"........."

"எனக்கு உன்னை நினைச்சு ரொம்ப ஏமாற்றமா இருக்கு வாசு. சம்யுக்தா என்ன தப்பு பண்ணிட்டான்னு... அந்தப் பொண்ணைப்போட்டு இந்தப் பாடு படுத்திக்கிட்டு இருக்க...?"

"நான் மட்டும் என்ன பாட்டி தப்பு பண்ணினேன். இப்ப நீங்க எதுக்காக என்மேல இவ்வளவு கோபப்படறீங்க...?"

"இல்ல வாசு, நீ செஞ்சுக்கிட்டு இருக்கிறது தப்புதான். இதை நான் ரொம்பத் தாமதமாக உனக்கு சுட்டிக்காட்டறதுக்காக... என்னை நீ மன்னிச்சுடு..."

"பாட்டி...?"

"ஆமா வாசு. நான் உன்கிட்ட இதைப்பத்தி முதலிலேயே பேசியிருக்கணும். ஆனா... புருசன் பொண்டாட்டிக்கு நடுவுல அவசரப்பட்டு நாம நுழைய கூடாதுன்னு தள்ளி இருந்துட்டேன்..."

"........"

"உன் அமைதியே நீ செய்யுறது சரியில்லன்னு காட்டிக் கொடுக்குதே வாசு. ஒரு பொண்ணு உன்னை நம்பி உன் வீட்டுக்கு வாழ வந்திருக்கும் போது... அதை கண்கலங்க வைக்கிறது தப்பு வாசு..."

"என் பொண்டாட்டி கண் கலங்கி நின்னா அது எனக்கும் வேதனையாத்தான் இருக்கும் பாட்டி. என் வேதனையை நீங்க புரிஞ்சுக்காம பேசறீங்களே...?



"உன் வேதனைக்கு நீதான் காரணம் வாசு. அது பாவம்... அறியாப்பொண்ணு. அப்பாதான் உலகம்னு வாழ்ந்த பொண்ணு. அதுக்கு நீதான்... அப்பாவாவும் அம்மாவாவும் இருந்து பார்த்துக்கணும்..." கோபத்துடன் சீறிய காமாட்சியை நிதானமாக நிமிர்ந்து பார்த்த வாசுதேவனின் முகத்தில் தெரிந்த எல்லையற்ற துயரத்தைக் கண்ட காமாட்சி... வாயடைத்துப் போனவளாக அப்படியே நின்று விட்டாள்.

"நான் தயாராக இருக்கிறேன் பாட்டி. அவளுக்காக... அப்பாவாக... அம்மாவாக... எல்லாமுமாக... இருக்க நான் தயாராக இருக்கிறேன் பாட்டி. ஆனால் சம்யுக்தா என்னை அப்படி எல்லா உறவுகளின் மொத்த உருவமாக ஏத்துக்க தயாராக இல்லையே பாட்டி. நான் என்ன செய்வது?" வாசுதேவனின் குரலில் வெறுமை நிலவியது.

"வாசு..."

"என்னை கல்யாணக் செஞ்சுக்கிட்டதால... அவளோட உறவுகளை... விருப்பு வெறுப்புகளை நான் ஒதுக்கிவிடச் சொல்லலை பாட்டி. ஆனா... அவளோட வாழ்க்கையில எனக்காக... தாலி கட்டின புருசனுக்காக... வாழ்நாள் முழுவதும் தொடரப் போகும் பந்தத்திற்காக... ஒரு சின்ன இடம் கொடுக்க சொல்லி கேக்கறேன் பாட்டி. அவளோட இதயத்தில்... எனக்காகவும் ஒரு இடம் ஒதுக்கச் சொல்லி கேக்கறேன்..."

"இல்ல வாசு...."

"காதலில் சிறிது பொறாமை உணர்வும் கலந்தே இருக்கும் பாட்டி. நான் சம்யுக்தாவை... மிக மிக அதிகமாக காதலிக்கிறேன். அவளும் என்னை அதைப் போலவே... அனைத்து உறவுகளுக்கும் மேலானவனாக நினைக்கணும்னு எதிர்பார்க்கிறேன். அந்த என் எதிர்பார்ப்பு பொய்யாகிப் போகும்போது... எனக்குள் தோன்றும் ஏமாற்றம் என்னை சுட்டுப் பொசுக்குகிறதே...? இந்த வேதனையை இந்த துயரத்தை நான் யாரிடம் சொல்லி ஆறுதல் தேடிக்க முடியும் பாட்டி..."

அனைத்து உறவுக்குமே ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்க தன் அந்தரங்கத்தை சொல்லி ஆறுதல் பெற முடியாமல் தவிக்கும் பேரனின் மன உணர்வுகளை புரிந்து கொண்டவளாக... அவனது தோளை தன் முதிய கரங்களால் ஆசுவாசமாக தடவிக் கொடுத்தபடி ஆறுதல் படுத்த முயன்றாள் காமாட்சி.

## 26

**கி**ராமத்து மண்ணிற்கே உரிய பசுமை கலந்த குளிர் காற்று இருவரின் உடலையும் இதமாக தழுவிச் செல்ல... குமுறும் எரிமலையாக நின்றிருந்த பேரனை... ஒரு நெடிய பெருமூச்சுடன் ஏறிட்டு பார்த்தாள் காமாட்சி.



"போனது போகட்டும் கண்ணு. இன்னும் கொஞ்ச நாள் பொறுமையாகக் காத்திரு. உன் பொண்டாட்டி உனக்கே உரியவளாக மெல்ல மெல்ல மாறிவிடுவாள். என் அனுபவத்தால் சொல்றேன் கண்ணு. நீ கொஞ்சம் பொறுமையாக போ கண்ணு..."

"........."

"இந்த வார்த்தையை நான் சம்யுக்தாவை பட்டும் மனசுல வெச்சிக்கிட்டு சொல்லலை வாசு. முக்கியமாக சுந்தரத்தை மனசுல வெச்சுத்தான் சொல்றேன். அவன் மகளோட வாழ்க்கை நல்லபடியாக இருக்கணும்கிற ஆசையால்தான் உயிரை கையில பிடிச்சுக்கிட்டு வாழ்ந்துக் கிட்டிருக்கான். உனக்கும் சம்யுக்தாவுக்கும் இடையில சுமுகமான உறவு இல்லேன்றது தெரிஞ்சுதுன்னா... அவன் உசிரையே விட்டுடுவான் கண்ணு..."

"நான் பார்த்துக்கறேன் பாட்டி. எதுவுமே அவருக்கு தெரிய வராது..."

"அப்படி நினைக்காத வாசு. புருசன் பொண்டாட்டி உறவு... முகம் பார்க்கிற கண்ணாடி மாதிரி. உங்க ரெண்டு பேத்தோட மனஸ்தாபத்தை ஒரே நொடியில மத்தவங்களால புரிஞ்சுக்க முடியும்... அதனால நீ நடந்ததையெல்லாம் மறந்துடு வாசு. சம்யுக்தாகிட்ட பாசமா நடந்துக்க..."

"முயற்சி பண்றேன் பாட்டி..."

"பொண்டாட்டி மேல பாசம் காட்டுறதுக்கு முயற்சியெல்லாம் பண்ணவேண்டிய தேவை இல்ல வாசு. சம்யுக்தா உன் பொண்டாட்டின்ற நினைப்பு உன் மனசுல இருந்தாலே போதும். பாசமும் அக்கறையும் தானாகவே வரும்..." காமாட்சி கூறிய விதத்தில்... வாசுதேவனின் முகத்தில் லேசாக சிரிப்பு தோன்றியது.

"நீ சுந்தரத்துக்கு மருமகன் மட்டும் இல்ல. மகனும் கூட... அவன் மேல அக்கறை இருக்க வேண்டாமா? உனக்காக அவன் இவ்வளவு நேரமாக சாப்பிடாம காத்துக்கிட்டு இருக்கான். உடம்புக்கு முடியாம இருக்கிறவன்... இப்படி பட்டினி கிடந்தா நல்லாவா இருக்கும்...?"

"என்னது...? மாமா இன்னும் சாப்பிடலையா...? ஏன் பாட்டி இதை முன்னாடியே என்கிட்ட சொல்லலை...?"

"சரி சரி... ரொம்ப அக்கறை... சக்கரைதான் போ. போய் உன் மாமனாரை சாப்பிடச் சொல்லு..."

வாசுதேவன் வேகமாக வீட்டிற்குள் செல்ல... பேரனின் இருவேறு குண இயல்புகளை உணர்ந்து கொண்ட வியப்புடன் அவனை பின் தொடர்ந்தாள் காமாட்சி.



அவனது இந்த குண நலன்களை புரிந்து... அதற்கேற்றாற் போல சம்யுக்தாவும் நடந்து கொண்டாலே... அவர்களுக்குள் இருக்கும் உறவு நெருக்கமாகி வரும் என்கிற எண்ணம் தோன்றியது அவருக்குள்.

"இவ்வளவு நேரமாக எங்க போய் இருந்தீங்க? அப்பா உங்களுக்காக சாப்பிடாம காத்திருக்காங்க..."

வேகமாக கணவனிடம் வந்து... அவனுக்கு மட்டும் கேட்டும் குரலில் கூறிய மனைவியை முகம் சுளிக்க பார்த்தான் வாசுதேவன்.

"மாமாதான காத்திருக்கிறார்? நீ இல்லையே..."

"நான்தான் தினமும் உங்களுக்காக சாப்பிடாம காத்திருக்கேனே? அதனால எனக்கு இது பழகி விட்டது... ஆனா அப்பா டேப்லெட் போடணுமில்ல...?"

வாசுதேவன் பேசி முடிக்கும் முன்பாக இடைமறித்து... இயல்பான வெகுளித்தனத்துடன் சம்யுக்தா தலை சாய்த்துக் கூறிய விதத்தில்... வாசுதேவனின் கோபம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தவிட்டது.

'உண்மைதானே...? நான் பாராமுகமாக இருந்தாலும் கூட இவள் தினமும் எனக்காக பசியுடன் காத்திருக்கத்தானே செய்தாள்? இதுவும் ஒரு வகை அக்கறைதானே...'

கனிந்த மனதுடன்... மீண்டும் காதல் துளிர்த்த இதயத்துடன் மனைவியின் இடையை அணைத்தவாறே வீட்டினுள் சென்ற வாசுதேவனின் மனதில் இருந்த ஏமாற்றம் மாறியது.

சம்யுக்தாவின் தலையில் அவள் சூடியிருந்த அடுக்கு மல்லிகை மலர்ந்து அவளை சுற்றிலும் தன் நறுமணத்தை பரவச் செய்திருக்க... மல்லிகையின் மணம் கொடுத்த மயக்கத்துடன் மாமனாரை நோக்கி நடந்த வாசுதேவனின் இதயம்... அன்றைய இரவுப் பொழுது கழியப் போகும் விதத்தை மனதிற்குள் கற்பனை செய்து பார்த்ததில்... வேகமாக துடிக்கத் தொடங்கியது.

"கோவிலில் நிறைய வேலையா மாப்பிள்ளை?" யதார்த்தத்துடன் அன்புடன் கேட்ட சுந்தரத்தை குற்ற உணர்வுடன் பார்த்து தலையசைத்து விட்டு... உணவிற்காக அமர்ந்தான் வாசுதேவன்.

"நீங்க சாப்பிட்டிருக்கலாமே மாமா? நேரத்துக்கு மாத்திரை போடாவிட்டால் உடம்பு என்னத்துக்காகும்...?" மனதிற்குள் தன்னைத் தானே நொந்து கொண்டபடி கேட்ட வாசுதேவனை சிரிப்புடன் பார்த்தார் சுந்தரலிங்கம்.

"உடம்பு கிடக்குது மாப்பிள்ளை? நாம சேர்ந்து சாப்பிட சான்ஸ் கிடைக்கிறதே எப்பவோ ஒரு முறைதான்.. அதையும் மிஸ் பண்ணிவிட்டு... இந்த உடம்பை பாதுகாத்து என்ன செய்ய...?"



"சேச்சே... அப்படியெல்லாம் சொல்லாதீங்க மாமா. நீங்க நல்லா இருந்தால்தானே நாங்க நிம்மதியாக இருக்க முடியும்...?" வாசுதேவனின் வார்த்தைகளை கேட்ட சுந்தரலிங்கத்தின் முகத்தில் விரக்தி கலந்த சிரிப்பு தோன்றியது.

"இல்ல மாப்பிள்ளை. நீங்க மாத்திச் சொல்றீங்க. நீங்க ரெண்டு பேரும் நல்லா இருந்தால்தான்... நான் நிம்மதியாக இருக்க முடியும்..."

சுந்தரலிங்கம் தன் மீது கொண்டிருந்த அன்பினை எண்ணி உள்ளூர நெகிழ்ந்த மனதுடன்... அதற்கு மேலும் பேசத் தோன்றாதவனாக உணவு உண்ணும் பாவனையில் குனிந்து கொண்டான் வாசுதேவன்.

"அம்மாடி சம்யுக்தா.... நீயும் அப்படியே உட்கார்ந்து சாப்பிடும்மா இன்னும் எவ்வளவு நேரம்தான் பசியோட இருப்ப..." காமாட்சி வாஞ்சையுடன் சம்யுக்தாவின் முன்பாக இலையை விரித்துப் போட... அமைதியாக தனது இடது கையால் மனைவியின் இலையில் உணவு வகைகளை எடுத்து வைத்த பேரனைப் பார்த்து உள்ளூர சிரித்துக் கொண்டாள் காமாட்சி.

உணவை உண்டு முடித்த பிறகு... மரியாதைக்காக சில நிமிடங்கள் மாமனாருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு எழுந்த வாசுதேவன்... எதிர்பார்ப்புடன் சம்யுக்தாவை பார்க்க..

அவளோ அவனைக் கவனத்தில் கொள்ளாதவளாக தந்தையை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சரி பாட்டி... நான் போய்ப் படுக்கிறேன். ரொம்ப டயர்டாக இருக்கு. அப்புறம் மாமா.. நீங்க...?"

"ஆமா வாசு. நானே சொல்லலாம்னு இருந்தேன். நீ சுந்தரத்தை கூட்டிக்கிட்டுப் போய் உன் ரூமிலேயே படுக்க வெச்சுக்க. இங்க கீழே இருக்கிற பெட்ரூம் எல்லாத்திலும் ஆளுங்க படுத்திருக்காங்க."

வாசுதேவன் கூறி முடிக்கும் முன்பாக முந்திக் கொண்டு கூறிய ஞானசம்பந்தனை... மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டவளாக முறைத்துப் பார்த்தாள் காமாட்சி.

'இந்த மனுசனுக்கு நேரம் காலமே தெரியாது. இவ்வளவு நேரம் வாயை மூடிக்கிட்டு இருந்ததைப் போல... இப்பவும் இருந்தால் என்ன...? இவரை யெல்லாம்...' மனைவி தன்னை மானசீகமாக பந்தாடிக் கொண்டிருப்பதை அறியாதவராக தன் கடமை முடிந்தது என்பவரைப் போல சென்று தன் படுக்கையில் சரிந்து கண்களை மூடிக் கொண்டார் ஞானசம்பந்தம்.

"சம்யுக்தா... நீ...?" வாசுதேவன் ஏமாற்றத்தில் சுருங்கிய முகத்துடன் ஏக்கத்துடன் கேட்க... மகளை கேள்வியாக பார்த்தார் சுந்தரம்.



"நான் அத்தை கூடவும் பாட்டி கூடவும் அவங்க பெட்ரூமில் படுத்துக்கறேன். நீங்க போய்ப் படுங்க. அப்பா... குட்நைட்ப்பா..."

சம்யுக்தா இயல்பாக கூறிவிட்டு... வேதவதி இருந்த படுக்கையறைக்குள் சென்றுவிட... சிணுங்கிய மனதுடன் மாமனாரை அழைத்துக் கொண்டு மாடியேறிய வாசுதேவனின் மனக் கண்ணில் அவன் கண்டிருந்த கற்பனை காட்சிகள் தோன்றி... அவனை கேலி செய்ய தொடங்கியது.

இதமான பறவைகளின் ஒலியோடு... அழகான கொலுசின் இன்னிசையும் சேர்ந்து ஒலிக்க... கத கதப்பான ஸ்பரிசத்தை உணர்ந்து கண்விழித்த வாசு தேவனின் முன்பாக... அன்று மலர்ந்த மலராக சிரித்த முகத்துடன் நின்றிருந்தாள் சம்யுக்தா.

"ச்சு..."

இரவெல்லாம் கண்ட கனவின் தொடர்ச்சிதான் இது என்று எண்ணி உச்சிக் கொட்டிவிட்டு திரும்பிப் படுத்த வாசுதேவனின் கரத்தில்... மீண்டும் கதகதப்பான மென்மையான கரத்தின் ஸ்பரிசம் தெரிய... நன்றாக கண்களை விரியத் திறந்து பார்த்த வாசுதேவனின் இதயம் ஒரு கணம் துடிப்பதை நிறுத்திவிட்டு... மீண்டும் துடிக்க தொடங்கியது.

வயலட் நிற கிரேப் சில்க் சாரியில்... அதே வண்ண பிளவுசுடன் வயலட் நிற கற்கள் பதித்த

ஜிமிக்கு... அட்டிகை.. ஆரம்... கை வளையல்கள் என பொருத்தமான அணிகலன்களோடு... அதிகாலை யிலேயே குளித்து... தலைமுடியை விரித்து விட்டிருந்ததினால்... தலைமுடியில் இருந்து சொட்டிய நீரின் ஈரம் இடையை பின்புறமாக நனைத்திருக்க...

வயலட் நிற புடவையின் இடையே தெரிந்த தந்த நிற இடுப்பு... கண்ணையும் கருத்தையும் சுண்டியிழுக்க... லேசாக நெகிழ்ந்திருந்த புடவையை கவனிக்காதவளாக... சம்யுக்தா கை உயர்த்தி காபியை ப்ளாஸ்க்கில் இருந்து டம்ளரில் ஊற்றும் போது தெரிந்த பெண்மையின் அழகு... வாசுதேவனின் உயிரை கரைத்துக் உருகவைத்துக் கொண்டிருக்க...

வாசுதேவனுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆண்மையின் போராட்டத்தை அறியாதவளாக கணவனை நெருங்கி... அவனுக்காக காபி டம்ளரை நீட்டிய மனைவியின் கன்னத்தில்... வேகமாக எழுந்து தன் இதழ்களை பதித்து விட்டு விலகினான் வாசுதேவன்.

"அப்பா... வெளியிலதான் இருக்காங்க..." வாசுதேவனின் இதழ்கள் தோற்றுவித்த இன்ப அவஸ்தையுடன் முணு முணுத்தவளை... அருகில் இழுத்து இறுக்கமாக அணைத்துவிட்டு பின் வேகமாக விலகி நின்று சிரித்தவனை செல்லமாக முறைத்தாள் சம்யுக்தா.



"திருட்டு ராஸ்க்கல்..." அவளது மெல்லிய முணு முணுப்பை ரசித்த வாசுதேவனின் முகத்தில் ஆண்மையின் கர்வம் தெரிந்தது.

"நேத்து நைட் நீ இங்க வந்திருந்தால் நான் திருட்டு ராஸ்க்கலா... இல்லை... முரட்டு ராஸ்கலான்னு தெரிய வெச்சிருப்பேன்... நீதான் வரலியே...? அப்புறம் நான் திருட்டு ராஸ்க்கலாத் தானே இருந்தாகணும்...?"

'எப்படி பேசறான் பார்...' சம்யுக்தா நானச் சிவப்புடன் மெல்ல திரும்பி தந்தை வருகிறாரா என்று பார்க்க... வாசுதேவன் திரும்பியிருந்த அவளது கன்னத்தில் மீண்டும் தன் இதழ் பதித்து விலகினான்.

"மாப்பிள்ளைக்கு காபி கொடுத்திட்டியா சம்யுக்தா?" கேட்டுக் கொண்டே வந்த தந்தையின் முகம் பார்க்க முடியாதவளாக... குங்குமமாக சிவந்த கன்னங்களுடன் அவருக்கு முதுகு காட்டி கணவனின் புறமாக திரும்பிக் கொண்ட சம்யுக்தாவின் கண்களில் கெஞ்சல் தெரிய... மனைவியின் கையில் இருந்த காபி டம்ளரை கையில் வாங்கிக் கொண்ட வாசுதேவனின் முகத்தில் குறும்பு சிரிப்பு தோன்றியது.

"இப்பதான் காபி கொடுத்துக்கிட்டே இருந்தாள். நீங்களும் வந்துட்டீங்க மாமா.. ஏன்

சம்யுக்தா... காபி கொஞ்சம் தித்திப்பாக இருக்குதா? வாசுதேவன் மின்னும் கண்களுடன் கேட்க.

"இல்லையே மாப்பிள்ளை. இனிப்பு சரியாகத் தான இருந்தது..." மருமகனின் கேள்விக்கு இயல்பாக பதிலளித்தார் சுந்தரம்.

"அப்ப... எனக்கு மட்டும். ஸ்பெஷலா ஏதாவது மாய மந்திரம் செய்தியா சம்யுக்தா...?" வாசுதேவனின் பார்வையில் மீண்டும் மின்னல் மின்ன... இதழ்களை பற்களால் அழுந்திக் கடித்தபடி திரும்பிய மனைவியை அழைத்து... காலி டம்ளரை அவளது கரம் தொட்டுக் கொடுத்தான் வாசுதேவன்.

'இவன் திருட்டு ராஸ்க்கலேதான...' அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாதவளாக சம்யுக்தா வேகமாக அறையை விட்டு வெளியேற.. தனக்குள் தோன்றிய சிரிப்புடன் உல்லாசமாக அறையை விட்டு வெளிவந்து.. கைகளை உயர்த்தி சோம்பல் முறித்த வாசுதேவனின் உள்ளம் அவனைப் பார்த்து கேலி செய்தது.

'இப்ப நீதான் அவபின்னாடி சுத்தற... ஆனா அவளுக்கு...?'

'சீக்கிரத்திலேயே அதுவும் தெரிந்துவிடப் போகிறது... அதுக்குள்ள அவசரம் எதுக்கு...'

வாசுதேவன்... தன் மனம் மீண்டும் குரல் கொடுப்பதற்கு முன்பாக... வெகு விரைவிலேயே



குளித்து உடைமாற்றிக் கீழே இறங்கிவர அவன் முன் தயக்கத்துடன் வந்து நின்றாள் சம்யுக்தா.

"என்ன...?" கேள்வியாக மனைவியின் முகம் பார்த்தா வாசுதேவனிடம்... வெளியே சென்று கொண்டிருந்த மற்ற பெண்களை பார்வையால் சுட்டிக் காட்டினாள் அவள்.

"எல்லாரும் மோட்டாரில் குளிக்க போறாங்க. நானும் போகட்டுமா? எனக்கு ஆசையாக இருக்கு..." சம்யுக்தாவின் குரலில் சிறுமியின் குதூகலம் தெரிந்தது.

"ஏய்.. நீதான் ஏற்கனவே குளிச்சிட்டியே...? அப்புறம் என்ன...?"

"இருக்கட்டுங்க. நான் இதுவரைக்கும் மோட்டாரில்... குளிச்சது இல்ல. அது பார்க்க... சின்ன ஸ்விம்மிங் பூல் மாதிரி இருக்குமாமே... நானும் போகட்டுமா?"

குழந்தைத் தனமான குறு குறுப்புடன்... ஏதோ ஒரு புதுவித அனுபவத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் கேட்டவளை... அழுத்தமாக பார்த்தான் வாசுதேவன்.

"இன்னிக்கு வேண்டாம் சம்யுக்தா. உனக்கு ஆசையாக இருந்தால் நாளைக்கு சாயந்திரமா குளிக்கலாம்..."

"என்னங்க இது? நான் இப்ப குளிக்கிறதுக்கு கேட்டால் நீங்க...?" சிணுங்கிய மனைவியை பார்த்த வாசுதேவனின் பார்வையில் ஏதோ ஒரு மாறுதல் தெரிய... அதைக் கண்டு அமைதியான சம்யுக்தா திரும்பி நடக்க.. அவளது கை பற்றி தடுத்து நிறுத்தினான் வாசுதேவன்.

"நீ இன்னிக்கு குளிக்க வேண்டாம். சும்மா போய் பம்ப் செட்டை பார்த்துவிட்டு மட்டும் வா. பாட்டியை உன்கூட கூட்டிக்கிட்டு போ... சரியா...?"

ஆனந்தமாக... இந்த அனுமதியாவது கிடைத்ததே என்கிற மகிழ்வுடன்... காமாட்சியோடு... சற்று தொலைவில் இருந்த பம்ப் செட்டினை நோக்கிச் சென்ற சம்யுக்தாவின் முகம் ஏமாற்றமாக சுளித்தது.

பெண்கள் அனைவரும் மார்பு வரை உயர்த்திக் கட்டிய பாவாடையுடன் குளித்துக் கொண்டிருக்க... சற்று தொலைவில் நின்றிருந்த ஆண்களின் கூட்டம். அவர்களை பாராதது போல பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது.

இதெல்லாம்... இயற்கை... என்பதைப் போல... அவர்களை கண்டுகொள்ளாதவர்களாக பெண்க ளின் கூட்டம் கேலியும் சிரிப்புமாக கும்மாளமிட்டுக் கொண்டிருக்க... அதற்கு மேலும் அங்கிருக்க மனமில்லாதவளாக திரும்பி நடந்தாள் சம்யுக்தா.



'பெங்களூரிலும் ஸ்விம்மிங் பூலில் குளிக்கும் பெண்களை ஆண்கள் ரசிக்கத்தானே செய்கிறார் கள்...?' சம்யுக்தாவின் உள்ளம் கேள்வி கேட்க... இப்படி அனைவரும் பார்க்க கும்மாளமிடுவது தன்னால் இயலாத காரியம் என்கிற உறுதியுடன் வீடு திரும்பிய சம்யுக்தா...

மனைவியை காமாட்சியுடன் அனுப்பி வைத்து விட்டு... அவர்களை பாதுகாப்புடன் கண்காணிப் பதற்கு ஏதுவாக... அவர்கள் நன்றாக தன் கண் பார்வை வட்டத்துக்குள் இருப்பது போன்றதொரு இடத்தில்... நாற்காலியை போட்டு அமர்ந்து.. மனைவியையே பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனை பார்த்துவிட்டு... அவனது பார்வை கொடுத்த பாதுகாப்பு உணர்வை உள்ளூர ரசித்தபடியே கணவனுக்கு தன் பதில் பார்வையை கொடுத்த படியே வீட்டினுள் சென்று மறைந்தாள்.

## 27

இஞ்சி பூண்டு வாடை காற்றில் கலந்து மிதந்து வந்து... நுகர்வோரின் வயிற்றுக்குள் பசியை உருவாக்க... காலை மணி பத்திற்கெல்லாம் பிரியாணியோடு.. அனைத்து உணவு வகைகளும் தயாராகிவிட... விருந்தினர் அனைவரும்.. வயிறார மனதார உணவருந்திட்டு... ஆங்காங்கே தத்தமது

மனதிற்கு நெருங்கிய உறவினர்களுடன் அமர்ந்து.. அடுத்த திருவிழா நாளை எதிர்பார்க்கும் எதிர் பார்ப்புகளை பரிமாறிக் கொண்டே.... வெற்றிலை பாக்குகளை மென்று சுவைத்துக் கொண்டிருந்தனர்.

"சரி மாப்பிள்ளை... நான் கிளம்பறேன்..." காற்றோட்டமாக வீட்டின் முன்பாக போடப்பட்டிருந்த நாற்காலிகளில் சுவர்ணபிரியா... அவருடைய கணவன் மற்றும் தன் குடும்பத்தினருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த வாசுதேவன் தன் அருகில் வந்து அமர்ந்த மாமனாரை திகைப்புடன் ஏறிட்டுப் பார்த்தான்.

"அதுக்குள்ள என்ன மாமா அவசரம்? இன்னும் ரெண்டு நாள் தங்கி இருந்துவிட்டு போகலாமே? நாங்க எல்லாரும் இன்று இங்கேயே தங்கிவிட்டு நாளைக்குத்தான் ஊருக்கு கிளம்புவோம் மாமா. அதுவரைக்காவது இருந்துட்டுப் போகலாமில்ல..." வாசுதேவனின் பார்வை சம்யுக்தாவின் வாடிய முகத்தில் ஆராய்ச்சியாக படிந்தது.

"ஆமாம்ப்பா" நீங்க இன்னும் கொஞ்ச நாள் எங்க கூட இருந்துட்டு போகலாம்ப்பா. அங்க போய் தனியாக.. என்ன செய்யப் போறீங்கப்பா. பிரிவின் ஆற்றாமையோடு கூறிய மகளைப் பார்த்த சுந்தரலிங்கத்தின் முகத்தில் மென்மை படர்ந்தது.



"எனக்கும் உன்கூட இருக்கணும்னு ஆசையாத் தான்டா இருக்கு. ஆனா.. நாளைக்கு ஒரு இம்ப்பார்ட்டண்டான போர்டு மீட்டிங் இருக்குடா. நம்ம கம்பெனி ஷேர் ஹோல்டர்ஸ் எல்லாரும் வந்துடுவாங்க... அந்த நேரத்துல போயிட்டு... இன்னும் ஒண்ணுரெண்டு வாரத்துல ஷீயூராக திரும்ப வர்றேண்டா... பிளீஸ்..." மகள் தன்னிடம் கூறிய அதே கெஞ்சுதலை... சுந்தரலிங்கமும் கூற... அவரை அதற்கு மேலும் தடுத்துக் கூற இயலாதவளாக கணவனைப் பார்த்தாள் சம்யுக்தா.

"அம்மாடி சம்யுக்தா. அப்பாதான் தன்னோட சூழ்நிலையை இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்றாருல்லடா... இப்ப போயிட்டு... இன்னொரு நாள் வரட்டும் கண்ணு. சிரிச்ச முகமாக சம்மதம் சொல்லுடா... ஆனா சுந்தரம். நீ அடுத்த தடவை வருகிறபோது ஒரு ரெண்டு மாசத்துக்காவது... நம்ம வீட்டுலேயே தங்கறமாதிரி ஏற்பாட்டோட வரணும்... சரியா..." காமாட்சி சம்யுக்தாவிற்கு சமாதானம் கூறியபடியே.... சுந்தரலிங்கத்தை கண்டிப்புடன் பார்க்க... சரண்டர் பானியில் கைகள் இரண்டையும் உயர்த்தி சிரித்தார் சுந்தரலிங்கம்.

"உங்க வார்த்தைக்கு மறுப்பேதும் இருக்கா அத்தை...? என்னால முடிஞ்சா.. கண்டிப்பாக நான் கொஞ்ச நாள் வந்து நம்ம வீட்டுல தங்கியிருந்துட்டுப்

போறேன்... எனக்கும் அது சந்தோசம்தான் அத்தை..."

சுந்தரத்தின் சிரிப்பு அனைவரையும் தொற்றிக் கொள்ள.. அரைமனதுடன்... சிணுங்சல் மாறாத முகத்துடன் தலையசைத்த மகளுக்கு சிரிப்பை மட்டுமே பதிலாகத் தந்துவிட்டு... காரில் ஏறி அமர்ந்தார் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கத்தின் கார் கண்பார்வையில் இருந்து மறையும் வரை கார் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவின் அருகே வந்து அவளது தோள்களை சிநேக பாவத்துடன் அனைத்துக் கொண்டாள் சுவர்ணபிரியா.

"கொஞ்ச நாளில் எல்லாம் பழகிவிடும் சம்யுக்தா. அதற்கப்புறம் வாசுதேவனாக உன்னை உன் அப்பா வீட்டுக்கு போகச் சொன்னாலும் கூட நீ போக மாட்ட... பாரேன்.."

சம்யுக்தா சின்ன சிரிப்புடன் சுவர்ணபிரியாவை பார்த்துவிட்டு அமைதியாக நின்றிருக்க... அவளது மனப் போராட்டத்தை புரிந்து கொண்ட சுவர்ணா சம்யுக்தாவை மேலும் இறுக்கமாக அணைத்துவிட்டு விலகி நின்றாள்.

"என்னால உன்னை புரிஞ்சுக்க முடியுது சம்யுக்தா. உன் அப்பாமேல நீ உயிரையே



வெச்சிருக்க... உங்க அப்பாவும் கூட அப்படித்தான் இருக்கிறார். அதனால அவரை பிரிஞ்சிருக்க முடியாம தவிக்கிற... சரியா...?" சுவர்ண பிரியாவின் பார்வை சம்யுக்தாவின் முகத்தில் சிந்தனையாக நிலைத்தது.

"உண்மைதான்க்கா.. எங்க அப்பதான் எனக்கு எல்லாமும்..."

"ஆனால்... நீதான் தனக்கு எல்லாமும் என்று ஒருவன் உனக்காகவே வாழ்கிறானே சம்யுக்தா? அவனைப் பத்தி நீ நினைச்சுப் பார்த்ததே இல்லையா...?"

"அக்கா...?"

"வாசுவைத்தான் சொல்கிறேன் சம்யுக்தா. நான் இங்கே வந்ததில இருந்து உங்க ரெண்டு பேரையும் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். அதற்காக... நான் உங்களை கண்காணிக்கிறேன்னு தப்பா நினைச்சுக்க வேண்டாம்..."

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லக்கா..."

"நான் உங்க ரெண்டு பேரையும் விட வயதில் பெரியவ சம்யுக்தா. கல்யாண வாழ்க்கையிலயும் கூட... நான் உங்களைவிட சீனியர். என்னால ஓர்ளவிற்கு உங்க ரெண்டு பேரோட மனநிலையையும் புரிஞ்சுக்கிற முடியுது. ஆனா நான் புரிந்து கொண்ட

விசயம்... என் மனசுக்கு சந்தோசத்தை கொடுக்கல சம்யுக்தா. ரொம்ப வேதனையாகத்தான் இருக்கு..."

"........."

"வாசுதேவன் ரொம்ப நல்லவன் சம்யுக்தா. எங்க சொந்தத்துக்குள்ளேயே அவனுக்கு பொண்ணு தர நீ நான்னு போட்டி போட்டாங்க. அவ்வளவு ஏன்... எங்க சொந்தக்கார பொண்ணுங்க பலபேர்... அவன் இதுநாள் வரைக்கும் எந்த பொண்ணையும் ஏறெடுத்தும் பார்த்தது இல்லை..."

"தெரியும்க்கா.. அவரே ஒருமுறை என்கிட்ட சொல்லியிருக்காரு..."

"ஆனா... அவன் சொன்னதை நீ புரிஞ்சுக்கிட்ட மாதிரி தெரியலியே... சம்யுக்தா? எனக்கு உங்களோட அந்தரங்க வாழ்க்கையை பற்றி பேசுகிற அளவுக்கு உரிமை இல்லதான். ஆனா உங்க ரெண்டு பேர் மேலயும் இருக்கற அக்கறை என்னை பேச வைக்குது சம்யுக்தா. என்னன்னு தெரியல.. உன்னை முதன் முதலாக பார்த்த போதே என் மனசுக்குள்ள உன்னை என் கூடப்பிறந்த தங்கையாக நினைச்சு பாசம் வெச்சுடேன்..."

"தேங்க்ஸ்க்கா.. எனக்கும் நீங்க அப்படித் தானக்கா...."



"அந்த அக்கறையில தான் நான் உன்கிட்ட இவ்வளவு நேரம் பேசிகிட்டு இருக்கேன். இது வரைக்கும் நான் யாரிடமும் இவ்வளவு உரிமை எடுத்துப் பேசினது கிடையாது..."

"பேசுங்கக்கா... நீங்க என்ன சொன்னாலும் நான் தவறாக எடுத்துக்க மாட்டேன்..."

"சம்யுக்தா... வந்து நான்.. என் கணிப்பு கரெக்டுன்னா இது வரைக்கும் உனக்கும் வாசுவுக்கும் இடையில... எதுவுமே... நடக்கலை... சரியா...?"

ஸ்வர்ணபிரியாவின் பார்வை சம்யுக்தாவின் முகத்தில் கேள்வியாக நிலைக்க... சம்யுக்தா அமைதியாக அவளது பார்வையை தவிர்த்துவிட்டு தலை குனிந்து கொண்டாள்.

"தப்பு சம்யுக்தா. நீ செய்யுறது ரொம்ப தப்பு. ஆயிரம்தான் பொண்டாட்டி மேல உயிரையே வெச்சிருந்தாலும்... எந்த ஒரு ஆண்மகனுக்கும் இப்படி நடந்துகிறது.. உள்ளூர அவங்களுக்கு ஒரு விதமான அவமானத்தை உருவாக்கும். அதுவே ஒரு எல்லைக்கு மேல போகும்போது... அதுக்கப்புறம்... நாமளே நினைச்சாலும் கூட நம்ம வாழ்க்கையை சரி செய்ய முடியாது..."

"அப்படி இல்லக்கா... நான்..."

"சம்யுக்தா... நான் இப்ப யார் மேலயும் குத்தம் சொல்றதுக்காக இப்படி சொல்லலை. உங்க ரெண்டு பேரோட வாழ்க்கையையும் சரி செய்ய வேண்டியது உங்க ரெண்டு பேரோட பொறுப்பும்தான். இதில் இருந்து யாரும் பின்வாங்க முடியாது. உனக்கு விருப்பமோ... இல்லையோ.. நீ ஒருவருடன் முறைப்படி உன் வாழ்க்கையை இணைச்சுக்கிட்ட அந்த வாழ்க்கையை பார்மாலிட்டிக்காக வாழாம.. மனதார விரும்பி வாழத் தொடங்கு சம்யுக்தா. உன் வாழ்க்கை நன்றாக இருக்கும். அதிலும்.. வாசுதேவன் மாதிரியான ராஜகுமாரனோடு நீ விரும்பி வாழப்போகிற வாழ்க்கை... நிச்சயமாக உனக்கு ஒரு சொர்க்கமாகத்தான் இருக்கும்..."

"அக்கா..."

"இப்ப.. நீ என்ன அக்கான்னு கூப்பிடறது உண்மையாக இருந்தால் நம்ம அடுத்த முறை சந்திக்கும்போது... நீ சந்தோசமாக வாழத் தொடங்கிவிட்ட நல்ல சமாசாரத்தை என்கிட்ட சொல்லு. நான் ரொம்ப சந்தோசப்படுவேன்..."

"......"

"இப்ப நான் உன்கிட்ட இருந்து எதிர்பார்க்கிற சந்தோசமான வாழ்க்கையைத்தான்... உங்க அப்பாவும் உன்கிட்ட இருந்து எதிர்பார்ப்பார் சம்யுக்தா. ஒருவேளை... உன் அம்மா இப்ப இருந்திருந்தாங்



கன்னா.. இப்ப நான் சொன்ன புத்திமதிகளை அவங்க உனக்கு சொல்லியிருப்பாங்க. நான் உன் அம்மா ஸ்தானத்துல இருந்து சொல்கிறதாக நினைச்சுக்க சம்யுக்தா... உன் வாழ்க்கையை நிறைஞ்ச மனசோட... சந்தோசமாக வாழ தொடங்கு சம்யுக்தா... நிச்சயமாக நீ தோத்துப் போக மாட்ட..."

"அக்கா..." சம்யுக்தா வார்த்தைகளற்ற உணர்வும் போராட்டத்துடன் சுவர்ணாவின் கரங்களை இறுக்கமாக பற்றிக் கொள்ள.. தன்னுடைய வார்த்தைகள் சம்யுக்தாவின் மனதிற்குள் பதிந்து விட்டதை புரிந்து கொண்ட சுவர்ண பிரியாவின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

"உன் புருசன் நம்ம ரெண்டு பேரையும் எப்படி பார்த்துக்கிட்டு இருக்கான் பாரு... நான் என்னமோ உன்னை வேணும்னு அழ வெச்சுட்டேன்னு நினைச்சு என்கிட்ட சண்டைக்கு வந்துடப் போறான் சம்யுக்தா. தயவு செய்து நீ உன் கண்ணை வேகமாத் துடைச்சுக்க..." சுவர்ணா பயத்தவளைப் போல கூற சலுகையாக அவளது தோளில் அடித்து சிரித்தாள் சம்யுக்தா.

"ஆனா ஒண்ணு மட்டும் உண்மை சம்யுக்தா. உன் ஆளு பயங்கர ரொமான்டிக்கான ஆளுதான் போ... நீ எங்க இருந்தாலும் சரி.. அவன் பார்வை உன்னை சுத்தி மட்டுமே இருக்கு... அந்த வகையில நீ கொடுத்து வெச்சவதான்..."

"அதுசரி.. அங்க பாருங்க... உங்க ஆளும் கூடத்தான் உங்களையே முழுங்கிடற மாதிரி பார்த்துக்கிட்டு இருக்கார்..." சம்யுக்தா கிண்டலுடன் சுவர்ணாவின் கணவனை சுட்டிக்காட்ட... வெட்கச் சிவப்புடன் சிரித்தபடி அவளை மீண்டும் அணைத்துக் கொண்டாள் சுவர்ணா.

"ம்ம்... நீயும் தேறிட்ட சம்யுக்தா.. இனி வாசுதேவன் பாடு திண்டாட்டம்தான் போ..."

இருவரும் சிரித்தபடியே திரும்பி நடக்க. அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் கண்களில் பொறாமை உணர்வு தெரிந்தது.

'என்னைத் தவிர... மத்த எல்லோர்கிட்டயும் சிரிச்சு சிரித்து பேசுவா என்னைப் பார்த்தால் மட்டும்...'

'டேய்... பொய் சொல்லாத வாசு... இப்போ தெல்லாம் உன்னை அவள் பார்க்கிற பார்வையில சிரிப்பு மட்டும் இல்லாம... வேற என்னென்னவோ இருக்கிறதே உண்மையிலேயே உனக்கு அது தெரியலயா...'

'தெரிஞ்சு என்ன பிரயோஜனம்... காரியத்துல ஒண்ணும் ஆகலயே...'

'ஆகும் வாசு.. பொறுமையா இரு. கல்யாணத்துக்கு முன்னால அவகிட்ட என்னென்னமோ வாக்கெல்லாம்



கொடுத்துவிட்டு... இப்ப இப்படி அலையுறது உனக்கே ஓவராத் தெரியலியா... '

'ஓவராகவா.. இப்ப கூட அலையலேன்னா... அப்புறம்...'

'அவ என் பொண்டாட்டி... அவமேல ஆசைப் படறதுல என்ன தப்பு இருக்கு...? அப்படி நான் ஆசைப்படலேன்னா... அதுதான் தப்பு...'

மனதிற்குள் அலைமோதிய எண்ணங்களில்... இறுதியாக தோன்றிய எண்ணத்தினால் தோன்றிய ரகசிய சிரிப்புடன் மனைவியை பார்த்த வாசுதேவனின் கண்களில் காதல் தெரிந்தது.

கணவனின் பார்வையை புரிந்து கொண்ட சம்யுக்தாவின் மை விழிகளில் மயக்கம் தெரிய... வாசுதேவனின் இதயத்தில் உல்லாசம் நிறைந்தது.

"சரி வாசு... நாங்க கிளம்பறோம்..." சுவர்ணா கூறியதின் பொருள்கூட அறியாதவனாக வாசுதேவன் சிரிப்புடன் தலையசைக்க.. அவனை ஒரு மாதிரியாக பார்த்தவாறே... அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கணவனுடன் கிளம்பி விட்டாள் சுவர்ணபிரியா.

சுவர்ணபிரியாவை தொடர்ந்து... விருந்தினர் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக விடைபெற்றுச் சென்று விட... இறுதியாக தங்கியிருந்த

வேலையாட்கள் அனைவரும் நிம்மதி பெருமூச்சுடன் வீடு தோட்டம் என அனைத்தையும் சுத்தம் செய்துவிட்டு தத்தமது இருப்பிடத்திற்கு சென்று விட....

திருவிழாவின் அலுப்பும் களைப்புமாக.. வீட்டில் அனைவருமே மாலை மயக்கும் வேளையிலேயே தத்தமது அறைக்குள் சென்று உறங்கி விட.... அத்தனை நாட்களாக நிலவிய கலகலப்புக்கு மாறான பேரமைதி அந்த வீட்டினுள் நிறையத் தொடங்கியது.

## 28

**மா**லைச் சூரியன் மறைந்து... முழு நிலவு மெதுவாக தன் முகம் காட்டி... தன் ஊர்வலத்தை தொடங்கியிருக்க.. வானம் இதமான பொன் நிறத்துடன் பிரசிக்கத் தொடங்கியது.

நிலவின் ஒளி... தென்னை மரத்தின் இலைகளின் ஊடாக பாய்ந்து பூமியில் வண்ண கோலங்களை உருவாக்கிக் கொண்டிருக்க... இரவு நேரத்தின் குளுமையான தென்றல் காற்றை ஆழமாக சுவாசித்த படியே மொட்டை மாடியின் கைப்பிடி சுவற்றில் சாய்ந்து நின்றிருந்த மனைவியை அவள் அறியாமல் அவளுக்கு பின்புறமாக வந்து நின்ற வாசுதேவனின் கண்கள் ரசனையுடன் பார்த்து ரசித்தது.



நிலவெளியில்... எல்லையற்ற வனப்புடன் நின்றிருந்த மனைவியை சுதந்திரமாக அளவெடுத்த வாசுதேவன்... அதற்கு மேலும் தாளமுடியாத தாபத்துடன் சம்யுக்தாவின் பின்புறமாக இருந்து அவளது இடையில் கைகொடுத்து அணைத்தபடி சம்யுக்தாவின் தலையில் சூடியிருந்த மல்லிகை மலரில் முகம் புதைத்துக் கொண்டான்.

"பம்பூ செட்டில் குளிக்கணும்ணு சொன்னியே.. இப்ப குளிக்கறியா...?" மனைவியின் காதுகளில் ரகசியமாக முணுமுணுத்த கணவனை விழி விரிய திரும்பிப்பார்த்த சம்யுக்தாவின் முகத்தில் குதூகலம் தோன்றியது.

"இப்பவா.. ஆனா இந்த நேரத்துல...?"

"நீ ஆசைப்பட்டயில்ல.. வா..." மனைவியின் கரம் பற்றி அழைத்து சென்ற வாசுதேவனின் கை... அவர்கள் வீட்டை கடந்து தோட்டத்திற்குள் சென்றவுடன் சம்யுக்தாவின் இடையை இறுக்கிக் கொண்டது.

"இந்த நேரத்தில தோட்டத்துல யாரும் இருக்க மாட்டாங்க... அதனால நீ ஃப்ரீயா குளிக்கலாம்..." வாசுதேவனின் இதழ்கள் மனைவியின் காதில் ரகசியம் பேச... அது உருவாக்கிய குறுகுறுப்பில் சிரித்தாள் சம்யுக்தா.

"கொஞ்சம் வெயிட் பண்ணு..." சம்யுக்தாவை காத்திருக்கச் செய்துவிட்டு வாசுதேவன் மோட்டாரை

உயிர்பிக்க... நதியின் பிரவாகமாக ஆர்ப்பரித்து கொட்டத் தொடங்கிய தண்ணீருக்குள் கை கொடுத்து ஆசையுடன் விளையாட தொடங்கிய மனைவியை ரசனையுடன் பார்த்தபடியே அவளருகில் வந்து நின்ற வாசுதேவனின் முகத்தில் தோன்றி யிருந்த இனம் புரியாத மாறுதலை கவனிக்காத வளாக... மெதுவாக நீர் நிரம்பிய தொட்டிக்குள் சிலிர்ப்புடன் இறங்கிய சம்யுக்தாவின் அருகே சென்று... மார்புக்கு குறுக்காக தன் கையை கட்டிக் கொண்டு... குளிக்கும் மனைவியை ஆசையுடன் பார்வையால் பருகத் தொடங்கினான் வாசுதேவன்.

'நான் குளிச்சிட்டு வர்றேன்... நீங்க....' கணவனின் பார்வையில் உடல் முழுவதும் சிவந்தவளாக கூறிய மனைவியைப் பார்த்து மறுப்பாக தலையசைத்த பிறகு வாசுதேவன் தானும் தொட்டிக்குள் இறங்கி... மனைவியின் இடையை அணைத்துக் கொள்ள... குளிரும் மயக்கமும் உடலை நடுங்கச் செய்ய கணவனின் அணைப்பில் விரும்பி அடங்கிக் கொண்டாள் சம்யுக்தா.

அதற்கு மேலும் தாங்க முடியாதவனாக... மனைவியை கரங்களில் அள்ளிக் கொண்டு கரையேறிய வாசுதேவன்.. இருளில் தனிமைக்குள் தஞ்சம் புக...

கணவனிடம் தன்னை ஒப்படைத்தவளாக அவனின் ஆண்மையின் தவிப்பிற்குள் தன்னை தஞ்சமாக ஒப்படைத்தாள் சம்யுக்தா.



சம்யுக்தாவை கண்டநாள் முதலாக... அந்த நொடி வரையிலும் அவளுக்காக ஏங்கிய தன் ஆண்மையின் தாகத்தை தணித்துக் கொண்டு திருப்தியுடன் அவளை விட்டு விலகிய வாசுதேவன்... மனைவியின் கன்னத்தில் இறுதியாக தன் ஆசை முத்தத்தை பதித்து விட்டு விலக....

பெண்மையின் முழுமையை புரிந்து கொண்டவளாக கணவனின் மார்பில் தலைசாய்த்து சரிந்து கொண்டாள் சம்யுக்தா.

"சம்யுக்தா..." வாசுதேவனின் குரல் கரகப்பாக மனைவியை அழைக்க லேசாக தலையை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தாள் சம்யுக்தா.

"ம்ம்...."

"இதுவரைக்கும் இப்படியொரு ஃபர்ஸ்ட் நைட்டை யாருமே கொண்டாடி இருக்க மாட்டாங்க..."

"ம்ம்...."

"நம்ம உறவை... இயற்கையெல்லாம் ஒண்ணாய் சேர்ந்து ஆசீர்வாதம் பண்ணியிருக்கு...."

"........"

"இந்த நாளை என் வாழ்நாள் முழுவதும் என்னால மறக்க முடியாது சம்யுக்தா, தேங்க்ஸ்...."

"எதுக்கு...."

"எனக்காக... என் கூட வாழ்ந்ததுக்கு..."

"ச்சு... இது என்ன பேச்சு..."

"இல்ல சம்யுக்தா.. உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்னு தோணுச்சு... அதான்..." வாசுதேவன் குனிந்து மனைவியின் உச்சந்தலையில் தன் முத்தத்தை பதிக்க... கணவனை மேலும் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள் சம்யுக்தா.

இரவெல்லாம் கதை பேசிவிட்டு... விடியும் தருவாயில் குளித்து விட்டு தங்களது அறைக்குத் திரும்பி கட்டிலில் சரிந்த கணவன் மனைவி இருவரையுமே அயர்வு அழுத்த... களைப்புடன் கண்மூடி உறங்கத் தொடங்கிய வாசுதேவன் தம்பதியினரை... காமாட்சியின் உரத்த குரல் அழைப்பு கண்விழிக்க செய்தது.

அவசரமாக கண்விழித்த வாசுதேவன்... தன்னுடைய அணைப்பில் அடங்கி உறங்கிக் கொண்டிருந்த மனைவியின் உறக்கம் கலைந்து விடாதவாறு மெதுவாக அவளை நகர்த்தி தலையணையில் படுக்கச் செய்துவிட்டு.. வேகமாக கதவைத் திறந்தான்.

"எம்புட்டு நேரமாக கதவை தட்டுறது வாசு? கீழே ஊர்ப் பெரியவங்க எல்லாரும் உனக்காக காத்திருக்காங்க.... வா..."



"கொஞ்சம் அசந்து தூங்கிக்கிட்டேன் பாட்டி..." சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்த சட்டைகளில் இருந்து ஒன்றை எடுத்து அணிந்த பேரனின் உறங்காத சிவந்த கண்கள் காமாட்சிக்கு உண்மையை உணர்த்த... அவளது மனதிற்குள் நிம்மதி நிறைந்தது.

"சம்யுக்தா தூங்கிட்டு இருக்கா பாட்டி....." வாசுதேவன் தயக்கத்துடன் காமாட்சியின் முகம் பார்க்க... பெருந்தன்மையுடன் புன்னகைத்தபடியே பேரனைப் பார்த்தாள் காமாட்சி.

"ஓடியாடி திரிஞ்ச களைப்புல புள்ள அசந்து தூங்குது வாசு. அதுபாட்டுக்கு தூங்கட்டும்... நீ வா..."

வாசுதேவன் நன்றியுடன் திரும்பி கீழே இறங்கிச் சென்று... அவனுக்காக காத்திருந்தவர் களின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டபடியே அவர்களுக்கு முன்பாக இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"கோவில் திருவிழா கணக்கு வழக்குகளை கொண்டு வந்திருக்கோம் தம்பி. நீங்க இன்னிக்கு சாயந்தரமே ஊருக்கு கிளம்புறதாக பெரியய்யா சொன்னாங்க அதான்... நீங்க இருக்கும் போதே கணக்கு பார்த்திரலாம்னு வந்தோம்..."

"அதனால என்ன பெரியப்பா. நீங்கள்லாம் இருக்கும் போது... நான் கணக்குப் பார்க்கணும்ங்கிற தேவை என்ன இருக்கு...?"

"இருந்தாலும்... வழக்கம்னு ஒண்ணு இருக்குல்ல..." வாசுதேவனின் மறுப்பை பொருட்படுத் தாதவராக... பெரியப்பா என்று அழைக்கப்பட்டவர் கணக்கு நோட்டினை வாசுதேவனின் கைகளில் கொடுத்தார்.

அவர் கொடுத்த நோட்டினை வாங்கி பிரித்த வாசுதேவன்... சில நொடிகளிலேயே அதில் கவனமாகி விட... அவன் கேட்ட சந்தேகங்களுக்கெல்லாம் மற்றவர்கள் விளக்கம் கூறி புரிய வைக்க... நேரம் போவது தெரியாதபடி கணக்குகளை வாசுதேவன் பார்த்து முடிப்பதற்குள்... சூரியன் மேலெழுந்து சுட்டெரிக்க தொடங்கியிருந்தான்.

"சரி தம்பி... நாங்க வர்றோம்..." பெரியவர்கள் அனைவரும் திரும்பிச் செல்ல... அப்போதுதான் மனைவியின் நினைவு வந்தவனாக வீட்டினுள் பார்த்தான் வாசுதேவன்.

பேரனின் கண்கள் சம்புக்தாவை தேடுவதை புரிந்து கொண்ட காமாட்சி... வாசுதேவனின் அருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

"சம்யுக்தா இன்றும் எந்திரிச்சு வரலை கண்ணு. புள்ளைய தொந்தரவு பண்ண வேண்டாம்னு...



ஸ்பந்தனாகிட்ட நான் தான் சொல்லியிருந்தேன்..." மற்றவருக்கு கேட்காத மெல்லிய குரலில் கூறிய காமாட்சியை பார்த்த வாசுதேவனின் கண்களில் வியப்பு தெரிந்தது.

"இன்னுமா எந்திரிச்சு வரல பாட்டி. சம்யுக்தா இப்படியெல்லாம் தூங்கிற ஆள் இல்ல பாட்டி..."

"களைப்பாக இருக்கும் வாசு. இதுக்குப் போய் இப்படி பதறலாமா...?"

"இல்ல பாட்டி... நான் போய் பார்த்துட்டு வர்றேன்..." வாசுதேவனுக்குள் இனம் புரியாத பயம் தோன்ற... எதனால் அந்த பயம் தோன்றுகிறது என்கிற குழப்பத்துடன் வேகமாக தங்களது அறைக்குச் சென்று உறங்கும் மனைவியை எழுப்புவதற்காக அவனது கரத்தின் மீது கை வைத்த வாசுதேவனுக்கு... தனது பயத்திற்கான காரணம் புரிந்தது.

அயர்ந்து உறங்குபவளைப் போல இறுக்கமாக கண்மூடி படுத்திருந்த சம்யுக்தாவின் உடல் நெருப்பாக கொதித்துக் கொண்டிருந்தது.

அவளைப் போர்த்தியிருந்த போர்வைக்கும் மேலாக.... அவள் மேல் இருந்து எழுந்த சூட்டின் வெப்பம் தாக்க... வாசுதேவன் காய்ச்சலின் மயக்கத்தில் படுத்திருந்த மனைவியை பயத்துடன் தொட்டு உலுக்கினான்.

"சம்யுக்தா... டேய்... இங்க... பாருடா... கண்ணைத் திறந்து பாரு சம்யுக்தா..." வாசுதேவன் பயமும் பரிதவிப்புமாக மனைவியை அள்ளி தன் மார்புடன் அணைத்துக் கொள்ள... சம்யுக்தாவின் உதடுகள் மெல்ல திறந்து... அவனது குரல் மெதுவாக வெளிப்பட்டது.

"அப்பா... ப்ளீஸ்ப்பா... அப்பா... நான்... என்னால... அப்பா... சம்யுக்தா தீனமான குரலில் .... கொண்டே தன் ஒரு கையை வெட்டி இழுக்கத் தொடங்க... அவளது வேதனையை தாங்க முடியாதவனைப்போல கண்களில் நிறைந்த கண்ணீரை துடைக்கவும் மறந்தவனாக... சிறு குழந்தையின் பதட்டத்துடன்... கீழே இருந்த பாட்டியை அழைப்பதற் காக ஓடினான் வாசுதேவன்."

"அம்மா... பாட்டி.. கொஞ்சம் இங்க வாங்களேன்.." வாசுதேவன் போட்ட கூச்சலில்... வாசலில் இருந்த காமாட்சியும்... சமையல் அறையில் இருந்த வேதவதியும் கைவேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவர... அவர்களிடத்தில் தான் கூற வந்ததையே சொல்ல வாய் வராதவனாக தவித்தான் வாசுதேவன்.

"வாசு என்னப்பா... என்னப்பா ஆச்சு...? சொல்லுப்பா... தனா அண்ணனுக்கு கொஞ்சம் தண்ணி கொண்டுவா..."



காமாட்சியின் குரலுக்கு... வேகமாக தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து ஸ்பந்தனா கொடுத்த தண்ணீரை மறுத்துவிட்டு காமாட்சியின் கரத்தைப் பற்றிக் கொண்ட வாசுதேவனின் கை நடுங்கியது.

"சம்யுக்தாவுக்கு காய்ச்சல் நெருப்பாக கொதிக்குது பாட்டி. அவளுக்கு அவளுக்கு தன் [illegible]ணர்வே இல்லை... ஃபிட்ஸ் வந்ததைப் போல [illegible]கையெல்லாம் வெட்டி இழுக்குது..."

வாசுதேவன் கூறி முடிக்கும் முன்பாக காமாட்சி பதறிப் போனவளாக மாடிப்படிகளில் ஓடத் துவங்க... வாசலில் நின்றிருந்த காரை நோக்கி ஓடினான் வாசுதேவன்.

அடுத்த பத்தே நிமிடங்களில் வாசுதேவன் காரில் சென்று அழைத்து வந்திருந்த மருத்துவர் கொடுத்த மருந்து மாத்திரைகளின் பலனாக... சம்யுக்தா கொஞ்சம் வேதனை குறைந்தவளாக உறங்கத் தொடங்க.... வாசுதேவனைப் பார்த்த மருத்துவரின் முகத்தில் கவலை தெரிந்தது.

"ஹை ஃபீவராக இருக்கு வாசு. இவங்களை உடனே ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியாகணும்..."

"நீங்க என்ன சொல்றீங்களோ.. அதுப்படி செய்யறேன் டாக்டர். என் சம்யுக்தாவை எப்படியாவது நீங்க குணமாக்கிக் கொடுத்தால் போதும்,.."

"சரி வாசு... நான் ஆம்புலன்சை வரச் சொல்லிடறேன்.." கூறிக் கொண்டே போனை கையில் எடுத்த மருத்துவரை தடுத்துவிட்டு... கட்டிலில் கிடந்த மனைவியை கைகளால் அள்ளித் தூக்கிக் கொண்டு... காருக்கு விரைந்தான் வாசுதேவன்.

மனைவியை பின்சீட்டில் படுக்க வைத்து விட்டு... அவளது தலையை தன் மடியில் தாங்கியபடி வாசு தேவன் அமர்ந்து கொள்ள... முன்புறம் மருத்துவரை அமர்த்திக் கொண்டு... காரைக் கிளப்பிய சார்லஸ்... அடுத்த ஐந்தாவது நிமிடத்திலேயே மருத்துவ மனையின் வளாகத்திற்குள் காரை கொண்டு சென்று நிறுத்த...

அந்த நொடியில் இருந்து... அந்த மருத்துவ மனை சம்யுக்தாவை தங்களது விருந்தாளியாக... ஏற்றுக் கொண்டு... அவளுக்கான மருத்துவத்தை தொடங்கி விட்டது.

## 29

மருத்துவ மனையின் வளாகத்தில் வாசுதேவனின் குடும்பத்தார் தவிப்புடன் காத்திருக்க.. அனைவரையும் பயத்தில் ஆழ்த்தி விட்டு... தான் இருந்த நிலையில் இருந்து மீண்டு வராதவளாக கண்மூடிக் கிடந்தாள் சம்யுக்தா.



ஒரே நினைவில் ஆழ்ந்து இருப்பவளைப்போல திரும்பத் திரும்ப – சம்யுக்தாவின் வாய் ஒரே ஒரு பெயரை மட்டுமே உச்சரித்துக் கொண்டிருந்தது.

"அப்பா...."

"ப்ளீஸ்ப்பா..."

"அப்பா..."

சம்யுக்தா இருந்த அறைக்குள் வாசுதேவன் மட்டும் அவளுடன் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்க... ஒவ்வொரு முறை அவள் அரற்றும் போதும்.. வாசு தேவனின் உயிர் துடித்து அடங்கியது.

"சம்யுக்தா..."

"அப்பா..."

"நான் வாசுடா... உன் வாசு. கண்ணை திறந்து பாருடா..."

"அப்பா... ப்ளீஸ்ப்பா..."

"சம்யுக்தா... என்னால முடியல சம்யுக்தா... கண்ணை திறந்து பாருடா..."

"அப்பா... ப்ளீஸ்ப்பா..."

"சம்யுக்தா... என்னால முடியல சம்யுக்தா... கண்ணை திறந்துபாரு. நீ என் உயிர்டா. நீ இல்லாம போனா.. என்னாலயும் வாழ முடியாதுடா..."

வாசுதேவன் சம்யுக்தாவின் கையை பிடித்துக் கொண்டு அவளது காதில் விழும்படி கதறிய கதறலில்... ஒன்று கூட அவளது மூளைக்கு சென்று எட்டாதவளாக... தன் போக்கில் அரற்றிக் கொண்டிருந்தாள் சம்யுக்தா.

வெகு நேரம் புலம்பிவிட்டு பின் மனைவியின் முகத்தையே ஆழமாக பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவன் ஒரு முடிவிற்கு வந்தவனாக உறுதியுடன் தன் செல்போனை கையில் எடுத்து... சுந்தரலிங்கத்தின் எண்களை அழுத்தினான்.

"நான் இப்பவே கிளம்பி வர்றேன் மாப்பிள்ளை..." மறுமுனையில் சுந்தரம் அழுதுகொண்டே பதற... சம்யுக்தாவின் கையை இறுக்கமாக பிடித்தபடி... அவளை கண் இமைக்கவும் மறந்தவனாக பார்த்தபடி அமர்ந்துவிட்டான் வாசுதேவன்.

சுந்தரலிங்கம் அன்று மாலையே மகளைப் பார்ப்பதற்காக துடித்துக் கொண்டு ஓடி வந்து விட... அவர் அறைக்குள் நுழைந்தவுடன் அவரது கரங்களில் மனைவியை ஒப்படைத்துவிட்டு அறையை விட்டு வெளிவந்த வாசுதேவனின் முகத்தில் வெறுமை நிறைந்திருந்தது.

"வாசு... ராசா... கவலைப்படாத கண்ணு. சம்யுக்தாவுக்கு சீக்கிரமாகவே சரியாகிவிடும் ராசா..."

"....."



"வெறும் காய்ச்சல்தானே தம்பி. சீக்கிரமாக குணமாகிவிடும். பயப்பட வேண்டாம் வாசு.

"........"

"என்னடா பேராண்டி இது...? நீ எவ்வளவு தைரியசாலின்னு நான் பெருமைப்பட்டுக்கிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா... ஒரு சாதாரண காய்சலுக்கு இப்படி பயந்து போய் உட்கார்ந்திருக் கிற... தைரியமாக இருடா..."

".........."

"அண்ணிக்கு ஒண்ணும் ஆகாதுண்ணா. அதான் டாக்டர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்காங்கள்ல... சீக்கிரமாவே க்யூர் ஆகிடுவாங்க..."

".........."

"கண்ணு... வாசு... ஒருவாய் காபியாவது குடிடா. காலையில இருந்து இப்படி கொலைப் பட்டினியாக் கிடக்கிறியே கண்ணு."

".........."

காமாட்சி... சத்யநாதன்... ஞானசம்பந்தம்... ஸ்பந்தனா... வேதவதி என்று அனைவருமே ஆறுதலும் தேறுதலும் சொல்லிக் கொண்டிருக்க... எவருக்குமே பதில் கூறாதவனாக வெறித்த

பார்வையுடன் அமர்ந்திருந்த வாசுதேவனை பயத்துடன் பார்த்தாள் காமாட்சி.

"வாசு... எனக்கு இப்ப சம்யுக்தாவை விட... உன்னை நினைச்சுதான் பயமாக இருக்குப்பா. வாய்திறந்து எதையாவது பேசுப்பா..." பேரனின் மடிமீது கரம் வைத்து... அவனுடைய கண்களை நேராகப் பார்த்தபடி கூறிய காமாட்சியின் நடுங்கிய குரலைக் கேட்ட வாசுதேவனின் முகத்தில் விரக்தி தோன்றியது.

"என்ன பேசச் சொல்றீங்க பாட்டி? நான் எதைப்பத்தி... யாரைப்பத்தி பேசறது...? என் உயிரே அவதான்னு நின்னச்சேன் பாட்டி. ஆனா.. ஆனா.. அவ என்னை ஏமாத்திட்டா. அவ மனசுக்குள்ள நான் இல்ல பாட்டி... அவ அப்பாதான் இருக்கார். அப்போ.. நான் இந்த வாசு...அவளுக்கு ஒண்ணுமே இல்லையா பாட்டி...?"

"சீச்சீ... வாசு என்னப்பா இது.. என்னென்னமோ பேசிக்கிட்டு இருக்க...? தப்பு வாசு... சம்யுக்தா இப்ப தன் உணர்வுலயே இல்லப்பா. காய்ச்சல் மயக்கத்துல எதையோ உளறிகிட்டு இருக்குது. அதைப்போய் பெரிசாக நினைச்சுக்கிட்டு நீ இப்படி மனசொடிஞ்சு போறது சரியில்ல கண்ணு..."

"தன் உணர்வு இல்லாத நேரத்தலயும் கூட... அவளுக்கு அவ அப்பாதான ஞாபகத்துல



இருக்கார்... என்னைப் பத்தி அவளுக்கு நினைப்பு இல்லையே பாட்டி...? ஒரே ஒரு தடவைகூட என் பேரை அவ சொல்லல பாட்டி..."

வாசுதேவனின் வார்த்தைகளில் மனைவிமீது அவன் கொண்டிருந்த காதலுக்கு அங்கீகாரம் கிடைக்காத வேதனை நிறைந்திருக்க... பேரனின் வேதனையை தணிக்கும் வகை அறியாதவளாக... அவனது முதுகை ஆறுதலாக தடவிக் கொடுத்தாள் காமாட்சி.

வேக நடையுடன் வந்த மருத்துவர்.. வாசுதேவனைப் பார்த்து சிநேகமாக சிரித்தபடியே சம்யுக்தாவின் அறைக்குள் நுழைய... கவலை படர்ந்த முகத்துடன் அவரைப் பின்தொடர்ந்து மனைவியின் அறைக்குள் நுழைந்தான் வாசுதேவன்.

காய்ச்சலின் வேகம் சற்று தணிந்தவளாக சோர்வுடன் படுக்கையில் சரிந்த கண்மூடி இருந்த சம்புக்தாவை பரிசோதித்துவிட்டு நிமிர்ந்த மருத்துவரின் முகத்தில் நிறைவு தெரிந்தது.

"குட்... இப்ப கொஞ்சம் தேறி இருக்காங்க வாசு. அவங்கப்பாவை பார்த்த சந்தோசமோ என்னவோ...?"

"........"

"இப்படியே இம்ப்ரூவ்மெண்ட் இருந்தால் நல்லா இருக்கும் வாசு. டேக்... கேர்... ஒகே..." மருத்துவர் தன் கடமையை செய்துவிட்ட நிறைவுடன் வெளியேறி சென்றுவிட... அறையை விட்டு வெளியேறுவதற்காக திரும்பி வாசுதேவனை சுந்தரலிங்கத்தின் குரல் தகுந்து நிறுத்தியது.

"மாப்பிள்ளை...."

"சொல்லுங்க மாமா..." அறை கதவில் வைத்த கையை எடுத்து விட்டு கேள்வியாக மாமனாரை திரும்பிப் பார்த்த வாசுதேவனை... தயக்கத்துடன் ஏறிட்டார் சுந்தரம்.

"நான் சம்யுக்தாவை கொஞ்சநாளைக்கு பெங்களூருக்கு கூட்டிக்கிட்டுப் போய் வெச்சிருந்துட்டு அனுப்பட்டுமா மாப்பிள்ளை? சம்யுக்தா.. அப்பா அப்பான்னு அனத்திக்கிட்டே இருக்குது. அங்க வந்தால் அதுக்கு கொஞ்சம் மாறுதலாக இருக்கும்னு எனக்கு தோணுது மாப்பிள்ள..."

வாசுதேவனிடம் இருந்து மாமனாரின் வார்த்தைகளுக்குப் பதிலாக.... ஒரு நெடிய பெருமூச்சு மட்டுமே வெளிவந்தது.

"பெங்களூரில் இருக்கிற நம்ம பேமிலி டாக்டரும் கைராசிக்காரர். சம்யுக்தாவுக்கு.... பர்தரா அவர்கிட்டயே ட்ரீட்மெண்ட்டும் எடுத்துக்கலாம்...."



"நீங்க இதைப் பத்தி சம்யுக்தாகிட்டயே கேளுங்க மாமா. அவ என்ன முடிவு எடுத்தாலும் எனக்கு சம்மதம்தான்..."

"அதுதான் காய்ச்சல்ல படுத்திருக்கே... மாப்பிள்ள...."

"இப்பதான் காய்ச்சலும் கொஞ்சம் சரியாகி இருக்கே. நீங்க கேளுங்க...." வாசுதேவன் பிடிவாதமாக கூறிவிட... வேறு வழியின்றி சம்யுக்தாவின் தோள் தொட்டு அவளை எழுப்பி அமரச் செய்தார் சுந்தரலிங்கம்.

"அம்மா சம்யுக்தா, நாம கொஞ்ச நாளைக்கு பெங்களூருக்கு போகலாம்மாம்மா?"

"போகலாம்ப்பா...." சுந்தரலிங்கம் கேட்ட அடுத்த நொடியே சம்யுக்தா சம்மதம் கூற.... அதைக் கேட்டுக் கொண்டிருந்த வாசுதேவனின் முகம் இறுகியது.

"நீங்க உங்க மகளை கூட்டிக்கிட்டு கிளம்புங்க மாமா. நான் நாளை காலை ஃபிளைட்டுக்கே டிக்கெட் புக் பண்ணிடறேன்..." வாசுதேவன் மனைவியை திரும்பிப் பார்க்கக்கூட மனமில்லாதவனாக வெளியேறி சென்றுவிட... அவனது கோபத்தை அறியாதவராக.... சோர்வுடன் படுத்திருந்த மகளின் தலையை தடவிக் கொடுத்தபடியே அவள் அருகில் அமர்ந்து கொண்டார் சுந்தரலிங்கம்.

"அம்மா.... சம்யுக்தாவை பெங்களூருக்கு கூட்டிக்கிட்டு போகச் சொல்லி இருக்கேன்ம்மா... கொஞ்ச நாள் அவ... அவங்க அப்பாவோட இருந்துட்டு வரட்டும்...."

"அதுவும் சரிதான் தம்பி. அவங்க அப்பாவோட ஏக்கம்தான் என் மருமகளை இப்படி படுக்க வெச்சிருக்குன்னு நினைக்கிறேன். தாராளமா போயிட்டு வரட்டும். நீங்க என்னங்க சொல்றீங்க....?" வேதவதி சத்யநாதனைப் பார்த்துக் கேட்க... அவரும் மனைவியின் கருத்தை மனப்பூர்வமாக அங்கீகரித்தார்.

ஒரு வழியாக.... மனைவியை அவருடைய தந்தையுடன் தன் குடும்பத்தினரின் ஒட்டு மொத்த அனுமதியோடு பெங்களூருக்கு அனுப்பி வைத்த வாசுதேவனின் மனதினை நன்றாக அறிந்து வைத்திருந்த காமாட்சியின் மனம் மட்டும் நிம்மதியின்றி தவித்தது.

"சம்யுக்தாவை எப்பப் போய் கூட்டிக்கிட்டு வரப் போற வாசு? அதோட உடம்பு குணமானவுடன் கூட்டிக்கிட்டு வந்திருப்பா... சம்யுக்தா இல்லாம வீடே வெறிச்சுன்னு இருக்கு..."

பட்டும் படாமல்... தன் உள் மனதின் பயத்தை வெளிக்காட்டாதவளாக கூறிய காமாட்சியை.. திரும்பிப் பார்த்த வாசுதேவனின் முகத்தில்.... உணர்வுகளை துடைத்துவிட்ட வெறுமை தெரிந்தது.



"அதை அப்ப பார்த்துக்கலாம் பாட்டி. இப்ப அதுக்கு என்ன அவசரம்? உங்க பேத்தி நல்லபடியா... உடம்பும்... மனசும் மாறி .... சாரி பாட்டி நாக்கு குழறிவிட்டது. உங்க பேத்தி நல்லபடியா உடம்பு தேறி குணமானதுக்கு அப்புறமா போய் கூட்டிக்கிட்டு வரலாம்."

வாசுதேவனின் வார்த்தைகளில் தெரிந்த அழுத்தமும் நிதானமும் காமாட்சியின் அடிவயிற்றை பயத்தில் சில்லிடச் செய்ய... பேரனின் பிடிவாத குணத்தை நன்றாக அறிந்திருந்த காமாட்சி.... பேரனை கேள்வியாக திரும்பிப் பார்த்தார்.

அவர் பயந்தது போலவே..... சம்யுக்தா உடல்நிலை தேறி எழுந்த பிறகும்... பலமுறை சுந்தரமும் சம்யுக்தாவும் மாறி மாறி போன் செய்த போதும்கூட.... பெங்களூர் செல்வதை ஏதாவது ஒரு காரணம் சொல்லி தள்ளி வைத்துக் கொண்டே இருந்த வாசுதேவன் பெங்களூர் செல்லவே இல்லை.

அலுவலக வேலையை முடித்துக் கொண்டு.... வீட்டிற்கு வந்து தன்னுடைய படுக்கை அறைக்குள் நுழைந்த வாசுதேவனை.... படுக்கை அறையின் வெறுமை வேதனையுறச் செய்தது.

தன்னையொத்த வயதுடைய நண்பர்களின் வாழ்க்கை அவர்களது மனம் விரும்பியவாறே நிறைவாக இருக்கும்போது... தன்னுடைய வாழ்க்கை

மட்டும் தனிமையிலேயே கழிந்து கொண்டிருப்பதை எண்ணி ஏங்கிய உள்ளத்தை எரிச்சலுடன் அடக்க முயன்று.... தன் முயற்சியில் தோற்றுக் கொண்டிருந்த வாசுதேவனை.... அவனுடைய செல்போன் அழைக்க... அதே எரிச்சலுடன் செல்போனை ஆன் செய்து காதில் வைத்தான் வாசுதேவன்.

"ஹலோ.... நான்தான்...." மறுமுனையில் இருந்து கேட்ட குரல் வாசுதேவனின் தனிமை உணர்வை அதிகரிக்கச் செய்ய.... தனக்குள் தோன்றிய ஆத்திரத்தை பல்லை கடித்து அடக்கிக் கொண்டான் அவன்.

"தெரியுது.... சொல்லு....." வாசுதேவனின் வெறுமையான குரலால் தாக்கப்பட்டவளாக.... மறுமுனையில் சில நொடிகள் அமைதியாக இருந்தாள் சம்யுக்தா.

"நான்.... நாளைக்கு அங்கே வருகிறேன்...."

"இதோ பார் சம்யுக்தா..... நீயாக விரும்பித்தான் பெங்களூர் போன. உன் விருப்பத்தைக் கேட்டுவிட்டு தான் நானாகவே உன்னை அங்கே அனுப்பினேன். அதனால... நீ உன் விருப்பம் இல்லாம இங்கே வர தேவையில்லை...."

"அப்படியெல்லாம் இல்லைங்க. நான் என்ன சொல்...."



"நீ ஒண்ணும் சொல்ல தேவையில்லை சம்யுக்தா. கல்யாணத்துக்கு முன்னால நான் உன்கிட்ட சொன்னது மாதிரி.... உன்னிடம் உன் விருப்பம் இல்லாம எந்த உரிமையையும் இதுவரைக்கும் நான் எடுத்துக்கலை. இனிமேலும் உரிமை எடுத்துக்க மாட்டேன். நீ உன் இஷ்டம் போல இருக்கலாம்...."

வாசுதேவன் தன் மனதின் ஆத்திரங்களை கொட்டித் தீர்த்துவிடும் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருக்க.... செல்போனின் மறுமுனையில் பலத்த நிசப்தம் நிலவியதை... சில நிமிடங்கள் சென்ற பிறகே வாசுதேவன் உணர்ந்து கொள்ள...

"சம்யுக்தா.... அம்மாடி..... என்னடா கண்ணு ஆச்சு.... சம்யுக்தா...." அந்த நிசப்தத்தை கலைத்துக் கொண்டு கேட்ட சுந்தரலிங்கத்தின் குரலைக் கேட்டு உள்ளூர பதறிவிட்டான் வாசுதேவன்.

"ஹலோ.... ஹலோ.... சம்யுக்தா.... மாமா... மாமா.... நான் பேசுறது கேட்குதா...? ஹலோ...." வாசுதேவனின் குரலுக்கு பதிலளிப்போர் யாருமற்ற பேரமைதி மறுப்புறம் எதிர்முனையில் நிறைந்திருக்க... பதட்டத்துடன் செல்போனின் தொடர்பை துண்டித்து விட்டு சம்யுக்தாவின் எண்ணிற்கு மறுபடியும் அழைத்த வாசுதேவனின் அழைப்பையும் கண்டு கொள்ள ஆள் இல்லாததைப் போல தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்த அழைப்பு மணியின்

ஒலியைக் கேட்ட வாசுதேவனின் உள்ளத்திற்குள் எல்லையற்ற கலக்கம் நிறைந்தது.

## 30

அறைக்குள் ஓடிய பேனின் ஒலியை தவிர.... வேறு சப்தங்களற்ற நிசப்தம் வாசுதேவனின் மனக்கலக்கத்தை அதிகரிக்கச் செய்ய.... கலக்கத்துடன் அறையை விட்டு வெளிவந்தான் வாசுதேவன்.

"இவளுக்கு என்னதான் ஆச்சு?.... ஏன் இப்படி என் உயிரை உருக்கிக் குடிக்கறதையே வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறா.....?"

வாசுதேவன் தனக்குள் கேட்டுக் கொண்ட கேள்விக்கு பதிலளிப்பதைப் போல அவனது செல்போனின் திரையில் சுந்தரலிங்கத்தின் எண்கள் ஒளிர.... அவசரமாக போனைக் காதில் வைத்தான் வாசுதேவன்.

"ஹலோ... மாமா.... சம்யுக்தாவுக்கு...?"

"சம்யுக்தாவுக்கு பயப்படறமாதிரி ஒண்ணும் இல்ல மாப்பிள்ளை. எல்லாம் நல்ல விசயம்தான். வந்து... மாப்பிள்ளை.... சம்யுக்தா.... நீங்க அப்பாவாகப் போறீங்க மாப்பிள்ளை... சம்யுக்தா கன்சிவ் ஆகி இருக்கா...."



"மாமா....!!!"

"வீட்டில பாட்டி.... அம்மா.... யாராவது பக்கத்துல இருந்தாங்கன்னா போனை அவங்ககிட்ட கொடுங்க மாப்பிள்ளை. இந்த நல்ல சமாச்சாரத்தை... முறைப்படி நான் அவங்ககிட்டயும் சொல்லிடறேன்..."

கவலை.... துக்கம்... கோபம்.... சந்தோசம்... என அத்தனை உணர்வுகளும் ஒரே நேரத்தில் வாசுதேவனின் உள்ளத்தில் ஆர்ப்பரித்து எழ.... திக்பிரமையுடன் அப்படியே நின்றுவிட்ட வாசுதேவனை... சுந்தரலிங்கத்தின் ஆனந்தக் குரல் தன் வசத்திற்கு வரச்செய்தது.

வாசுதேவன் அவசரமாக தன் செல்போனை காமாட்சியிடம் கொடுத்துவிட்டு சமையல் அறையில் இருந்த வேதவதியிடம் சென்று சம்யுக்தாவின் நிலையை அவருக்கு தெரியப்படுத்த... ஆனந்தமாக தன் கையை சேலை முந்தானையால் துடைத்துக் கொண்டே ஓடிச் சென்று மாமியாரின் கையில் இருந்த போனை வாங்கி சம்யுக்தாவிடம் பேசத் தொடங்கிய வேதவதியின் முகத்தில் குதூகலமும் பெருமிதமும் நிறைந்திருந்தது.

மருமகளிடம் போனைக் கொடுத்துவிட்டு.... அமைதியான முகத்துடன் நின்றிருந்த பேரனைப் பார்த்த காமாட்சியின் கண்களில் சிந்தனை படர்ந்தாலும்... ஒரு முடிவிற்கு வந்தவளாக பேரனைப் பார்த்தாள் அவள்.

"வாசு.... நாளைக்குக் காலையிலேயே நாம எல்லாரும் பெங்களூருக்குப் போகணும்ப்பா. சார்லசிடம் சொல்லிவிடு. நாம போய் சம்யுக்தாவை பார்த்துட்டு... அப்படியே கையோட அவளையும் நம்ம கூட கூட்டிக்கிட்டு வந்துரணும்..."

"பாட்டி..... இல்ல பாட்டி..." மறுப்பாக கூற வாயெடுத்த வாசுதேவனை தன் கை உயர்த்தித் தடுத்தாள் காமாட்சி.

"என் பரம்பரை வாரிசு... என் பேரன்... நல்லபடியா பொறக்கணும்னு நான் நினைக்கிறேன் வாசு. சம்யுக்தா தாயில்லாப் பொண்ணு. இந்த நேரத்துல தாய்க்குத் தாயா இருந்து அவளைத் தாங்க வேண்டியது நம்ம கடமை வாசு. ஒரு புருசனாக அப்படி நடந்துக்கறதுதான் உனக்கும் பெருமை...." காமாட்சி தன் முடிவே இறுதியானது என்பதைப் போல திரும்பி... தன் அறைக்குச் சென்று உடைகளை தயார் செய்யத் தொடங்க.... வேதவதியும் தனக்கும் தன் கணவனுக்குமான உடைகளை பெட்டிக்குள் அடுக்கத் தொடங்கிவிட்டாள்.

மறுநாளைய சூரியன் அஸ்தமிக்கும் முன்பாகவே பெங்களூர் சென்றுவிட்ட அனைவரும்... வீட்டிற்குள் நுழையுமுன்பாகவே... வேகமாக ஓடிவந்து காமாட்சியை கட்டிக் கொண்ட சம்யுக்தாவின் உடல் அழுகையில் குலுங்கியது.



"ச்சீசீ... கண்ணு. என்ன இது...? நீ எங்களை எல்லாம் எவ்வளவு சந்தோசப்பட வெச்சிருக்க தெரியுமா? இந்த நேரத்தில் நீ கண்ணீர் விடலாமா கண்ணு...." காமாட்சியின் முதிய கரங்கள் பேரனின் மனைவியை அனைத்து ஆசுவாசம் கொள்ளச் செய்ய... மெதுவாக நிமிர்ந்த சம்யுக்தாவின் கண்கள் ஆவலாக வாசுதேவனின் முகத்தில் நிலைத்தது.

மனைவியின் பார்வையை உணர்ந்தாலும் கூட... அவளது பார்வையை கவனிக்காதவளைப் போல வீட்டினுள் சென்று சுந்தரத்தின் அருகில் நின்று கொண்டான் வாசுதேவன்.

"நீ கவலைப்படாதே கண்ணு. எல்லாம் சரியாகி விடும். என் குட்டிப் பேரன் பிறந்து வந்து... இவன் மூஞ்சியிலேயே எட்டி உதைக்கும்போது... இவன் எப்படி முகத்தைத் திருப்பி வெச்சுக்கறான்னு நாமளும் பார்க்கத்தானே போறோம். நீ வா...."

சம்யுக்தாவின் வாடிய முகத்தைக் கண்டு காமாட்சி ஆறுதலாகக் கூற... அவர் கூறிய காட்சியை கற்பனையாக தன் மனக்கண்ணால் கண்ட மகிழ்வுடன் சிரித்தாள் சம்யுக்தா.

"சரி சுந்தரம்.... நாங்க எல்லாரும் நாளைக்கு காலையிலேயே சம்யுக்தாவைக் கூட்டிக்கிட்டு கிளம்பறோம். நீ சொன்ன சேதியை கேட்டவுடனேயே சந்தோசத்துல போட்டது போட்டபடி அப்படியே கிளம்பி வந்துட்டோம்... அதனால...."

இரவு உணவை முடித்துக் கொண்டு.... ஹாலில் அமர்ந்து அனைவரும் ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருக்கும் போது கூறிய காமாட்சியை தயக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்தார் சுந்தரம்.

"அத்தை.... வந்து.... சம்யுக்தா ரொம்ப வீக்கா இருக்கறதால.... டிராவல் பண்ணக்கூடாதுன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க. இல்லாவிட்டால்.... நானே இன்னிக்கு சம்யுக்தாவை பள்ளிகொண்டான் புரத்தில் கொண்டுவந்து விட்டுட்டு வர்றதாகத்தான் இருந்தேன்..."

"என்னடா சுந்தரம்..... இப்படிச் சொல்ற...?" காமாட்சியின் பார்வை யோசனையாக கல்லாக இறுகியிருந்த வாசுதேவனின் முகத்தில் படிந்து மீண்டது.

"ஆமாங்கத்தை. அவங்க சொன்னதைக் கேட்டு... எனக்கும் கொஞ்சம் வருத்தமாத்தான் இருக்கு. தாயில்லா என் பொண்ணுக்கு.... தாயுக்கு தாயாக நீங்களும் என் தங்கச்சியும் இருக்கும் போது... அவ இப்படி தனியாகத்தான் இருக்கணும்னு ஆண்டவன் விதிச்சுட்டானே... நான் என்ன செய்யட்டும்....?" சுந்தரலிங்கத்தின் கண்கள் கலங்க... அதைக் கண்ட சம்யுக்தாவின் விழிகளிலும் ஈரம் படர.... அவளை ஆறுதலாக அணைத்து தன் மடி சாய்த்துக் கொண்டாள் காமாட்சி.



"இதுக்குப் போய் இவ்வளவு கவலைப்படலாமா சுந்தரம்? இப்பதான் புள்ள காய்ச்சலில் கிடந்து எந்திரிச்சு வந்திருக்கு. அதுனால உடம்பு கொஞ்சம் தெம்பில்லாம இருக்கும். இன்னும் கொஞ்ச நாள் போனா... எல்லாம் சரியாகிவிடும். கவலைப்படாதே சுந்தரம். அதுவரைக்கும் நானும் உன் மாமாவும் இங்கயே தங்கியிருந்து சம்யுக்தாவை பார்த்துக்கறோம்..."

காமாட்சி சுலபமாக சுந்தரத்தின் கவலைக்கு தீர்வைக் கூறிவிட்டு சம்யுக்தாவுடனேயே தங்கியிருந்து அவளைக் கவனித்துக் கொள்ள.... ஆனால் அவள் கூறிய கொஞ்ச நாள்.... மட்டும் வராமலேயே போய்விட்டது.

வாசுதேவன் மறுநாளே தாய் தந்தையுடன் ஊர் திரும்பிவிட்டவன் அதன்பிறகு... அடிக்கடி பெங்களூர் சென்று சம்யுக்தாவை பார்த்துவிட்டு வந்தாலும்கூட... அவர்களுக்கிடையே அவர்கள் விரும்பிய நெருக்கம் மட்டும் இல்லாமலேயே போனது.

கணவனின் அன்பிற்காக ஏங்கிய காரணத் தினாலோ.... என்னவோ... சம்யுக்தாவின் உடல்நிலை முன்னேற்றமடையாமல்... பலவீனமாகவே இருந்து வந்தது. மிகத் தாமதமாகவே அதனை உணர்ந்து கொண்டவனாக... வாசுதேவன் தன் மனதின் காதலை மனைவிக்கு உணர்த்த முயன்ற போதோ....

சம்யுக்தா தாய்மையின் காரணமாக தன் உடலில் தோன்றியிருந்த மாற்றங்களுடன் போராடியபடி.... கணவனின் அன்பினை உணராதவளாக இருந்து விட்டாள்.

"மாப்பிள்ளை... சம்யுக்தா.... சம்யுக்தாவிற்கு...."

அதிகாலை மூன்று மணியளவில் அழைத்த செல்போனில் தெரிந்த மாமனாரின் எண்களைக் கண்டே பதறிப் போனவனாக போனை காதில் வைத்த வாசுதேவன்.... மறுமுனையில் கேட்ட சுந்தரலிங்கத்தின் பதட்டக் குரலைக் கேட்டு உறைந்து போனான்.

"இந்தா.... சுந்தரம்... போனை இப்படிக் குடு. நீயே இப்படி பயந்தால் எப்படி...? அய்யா வாசு... சம்யுக்தாவுக்கு பிரசவ வலி வந்திருச்சு. நாங்க ஆஸ்பத்திரிக்குக் கிளம்பப் போறோம். நீ பதட்டப் படாம அம்மாவை கூட்டிக்கிட்டு வாய்...." சுந்தரலிங்கத்தை அதட்டியபடியே போனை வாங்கிப் பேசிய காமாட்சியின் குரலையும் தாண்டி அலறிய சம்யுக்தாவின் குரல் வாசுதேவனின் காதுகளில் இறங்கி.... உயிரை உலுக்கியது.

"பாட்டி... அவரை வரச் சொல்லுங்க பாட்டி. நான் அவர்கிட்ட பேசனும் பாட்டி.... அவரை வரச் சொல்லுங்க... நான் அவரைப் பார்க்கணும்... அப்பா... ப்ளீஸ்ப்பா. நான் அவர்கிட்ட போகணும்ப்பா. நான்



ஹாஸ்பிடலுக்கு வரமாட்டேம்ப்பா... அவர்கிட்ட போகணும். அவரைப் பார்க்கணும்... எனக்கு பயமா இருக்கு...."

சம்யுக்தாவின் அலறல் குரல் கேட்டுக் கொண்டே இருக்க..... அடுத்த நொடியே போனை அணைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான் வாசுதேவன்.

"அம்மா.... சம்யுக்தாவிற்கு டெலிவரி பெயின் வந்துருச்சாம். நான் இப்பவே கிளம்பறேன். நீங்க சார்லஸ் வரவும்.... கிளம்பி வாங்க...."

"நாங்களும் உன்கூடவே வந்துடறோம் வாசு.... ஒரு அஞ்சு நிமிசம் வெயிட் பண்ணுடா...." வேதவதி அவசரமாக கூறிய குரல் காற்றில் தேய..... அதற்குள் வாசுதேவனின் கார் அவர்களது வீட்டின் காம்பவுண்டிற்கு வெளியே சீறி பாய்ந்து சென்று கொண்டிருந்தது.

"சம்யுக்தா.... ஐ லவ் யூ டா.... என்னை மன்னிச்சுரு. நான் நான்... பாவி... உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்..."

"ஆண்டவா.... என் சம்யுக்தாவிற்கு எதுவும் ஆகிவிடக்கூடாது. அவ நல்லபடியா இருக்கணும். நான் அவகூட இன்னும் நூறு வருசத்துக்கு சந்தோசமா வாழணும். என் இறைவா எங்களுக்கு துணையாக இரு...."

வாசுதேவனின் மனம் தன்னை சபித்தபடியே.... இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருக்க.... உன்மத்தம் பிடித்தவன் போல.... புயலாக பறந்து சென்ற காரை ஆஸ்பத்திரியின் வாசலில் நிறுத்திவிட்டு இறங்கி.... கார்க்கதவை பூட்டவும் மறந்தவனாக ஓடிய வாசுதேவனை.... சிரிப்புடன்... தன் கையில் ரோஜாப் பூக்குவியலாக.... வெண்ணிற மென்மையான துண்டினால் சுற்றப்பட்டு இருந்த.... வாசுதேவனின் அழகிய மகளை அணைத்தபடியே வரவேற்றாள் காமாட்சி.

"வாசு... வா... வா.. இங்க பாரு.... உன் மகளை! அச்சு உரிச்சாப்புல உன்னை மாதிரியே இருக்கா பாரு....! ராஜாத்தி... உங்க அப்பா வந்துட்டான் பாருடா...." காமாட்சி பெருமையும் பூரிப்புமாக நீட்டிய மகளை ஏறெடுத்தும் பாராதவனாக மனைவி இருந்த அறைக்குள் நுழைந்தான் வாசுதேவன்.

பிரசவ வேதனையை அனுபவித்து முடித்திருந்த சோர்வும் களைப்புமாக வாடிய மலர்ச்சரத்தைப் போல கண்மூடிப் படுத்திருந்த வேதனையை உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாக வாசுதேவனின் கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர்.... சம்யுக்தாவின் கையில் விழுந்து தெரித்தது.

வாசுதேவன் மெதுவாக கட்டிலின் ஓரத்தில் அமர்ந்து மனைவியின் வலது கரத்தை எடுத்து தன்



இரு கரங்களுக்குள் அடக்கிக் கொண்டு.... அதில் தன் இதழ் பதிக்க....

கணவனின் ஸ்பரிசத்தை உணர்ந்து கொண்டதைப் போல.... உடல் சிலிர்த்து அடங்க... வேகமாக கண்விழித்த சம்யுக்தா....

அடுத்த நொடி..... தன் வேதனை அனைத்தையும் மறந்தவளாக எழுந்து கதறிக் கொண்டே கணவனின் மார்பில் சாய.... அவளை தன்னுடன் இறுக்கிக் கொண்ட வாசுதேவனின் அன்பான முத்தம்.... மனைவியின் கன்னத்தில் ஆசையுடன் பதிந்தது.

"ரொம்ப கஷ்டப்பட்டுட்டியாடா? ஐ லவ் யூடா.... ஐ லவ் யூ... அண்ட்.... ஐம் ஸாரிடா செல்லம்..." வாசுதேவனின் கை மனைவியை மேலும் இறுக்கமாக அணைத்துக் கொள்ள...."

அறைக் கதவை லேசாக தட்டிவிட்டு.... அறைக்குள் நுழைந்த காமாட்சியின் முகத்தில் நிறைவும் நிம்மதியும் தோன்றியது.

"பார்த்தியா சம்யுக்தா....? உன் புருசன் அவனோட பிள்ளையைக்கூட பார்க்காம நேராக உன்கிட்ட வந்து உட்கார்ந்துக்கிட்டான். இப்ப என் பேத்தி அவன்மேல கோபமா இருக்கா. அப்பனோட கோபம் மகளுக்கும் இருக்கும் தானே...?" காமாட்சி சலுகையாக வாசுதேவனை கோபித்துக் கொள்ள.

வாசுதேவன் ஆசையாக கைகளை நீட்டி... பூக்குவியலாக இருந்த மகளை வாங்கி... தன் மடியில் வைத்துக் கொண்டான்.

தந்தையின் மடியில் படுத்த மறுகணமே... வாசுதேவனின் மகள்... தன் பிஞ்சுக் கரங்களால் தந்தையின் ஆட்காட்டி விரலை இறுக்கமாக பற்றிக்கொள்ள... பெற்ற தந்தைக்கும் அவனது மகளுக்கும் இடையே நிலவும் ஆத்மார்த்தமான அன்புப் பிணைப்பை உணர்ந்து கொண்டவனாக... தனது மறு கரத்தால் மனைவியை அணைத்து அவளது நெற்றியில் இதழ் பதித்தான் வாசுதேவன்.

கணவனின் அன்பினை பரிபூரணமாக தனதாக்கிக் கொடுத்த மகளை பாசத்துடன் வருடியபடியே... கணவனின் தோளில் நிம்மதியாக சாய்ந்து கொண்டாள் சம்யுக்தா.

Email : shree7hills@gmail.com
Cell : 8526631660


காதல் வெண்புறா...
கையில் சேருமோ...
விஜி பிரபு